# வழுக்கு நிலம்

டாக்டர். ரா. சீனிவாசன்,
எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்டி.,

அணியகம்
5, செல்லம்மாள் தெரு,
செனாய் நகர், சென்னை - 600 030.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வழுக்கு நிலம்

ரா. சீனிவாசன்

அணியகம்
5, செல்லம்மாள் தெரு,
செனாய் நகர்,
சென்னை – 600 030
தொலைபேசி : 644 96 30

முதற் பதிப்பு : 1960

இரண்டாம் பதிப்பு : 1978

மூன்றாம் பதிப்பு : 1998

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | வழுக்கு நிலம் |
| ஆசிரியர் | : | ரா. சீனிவாசன் |
| பொருள் | : | புதினம் |
| விலை | : | ரூ. 50.00 |
| தாள் | : | 16 kg. டெம்மி |
| அச்சு | : | 10 புள்ளி |
| பதிப்பகம் | : | அணியகம்,<br>5, செல்லம்மாள் தெரு,<br>செனாய் நகர்,<br>சென்னை - 600 030<br>தொலைபேசி : 644 96 30 |
| ஒளிஅச்சு | : | எல்கேஎம் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 017 |
| அச்சகம் | : | நெல்சன் அச்சகம்,<br>சென்னை - 600 029. |

வாழ்க்கை ஒரு சிலருக்கு — ஏன் பலருக்கு வழுக்கு நிலமாகத் தான் இருக்கிறது. அதில் நின்று நிலைக்கும் முயற்சியே வாழ்க்கையில் போராட்டமாகவும் முயற்சியுமாக வும் அமைகிறது.

# முன்னுரை

'வழுக்கு நிலம்' இது ஒரு நிகழ்ச்சிச் சித்திரம். ஒரே ஒரு நிகழ்ச்சி; அதை மையமாக வைத்து எழுதப்பட்டது.

மணமான வாழ்வு; அதன் சீர்குலைவுக்கு வரவுக்கு மீறிச் செலவு செய்வது; அதனால் அன்பு சிதைகிறது. பெண் கணவனின் வருவாய்க்குத் தக்கபடி வாழவேண்டும். அதுதான் குடும்பம் மகிழ்வு கொள்வதற்கு வழி என்றார் வள்ளுவர்.

பெண்கள் சிக்கனமாக வாழ்கிறார்கள்; தவறு செய்பவர் இந்தக் கதையில் கணவன்தான்.

கடன் வாங்குவது அது ஒரு தீய பழக்கம்; அதை மையமாக வைத்து எழுதப்பட்ட கதை இது.

இதில் வரும் 'சிவராமன்' உண்மைப் பாத்திரம் என்று கூறினால் அது மிகையாகும்; அப்பாத்திரம் உண்மை; இப்படியும் வாழ்கிறார்கள் என்பது உண்மை.

அவன் வழுக்குகிறான்; ஆனால் விழவில்லை; நிமிர்ந்து வாழ்கிறான். அதைச் சித்திரிக்கும் கதை.

இது இரு முறை பல்கலைக்கழகத்தில் பட்ட வகுப்புக்குப் பாடமாக வைக்கப்பட்டது. இலக்கியத் தரம் வாய்ந்த எழுத்து என்பதால் மதிக்கப்பட்டது.

இதன் சிறப்புக்கு நடை அடிப்படை; தூய தமிழில் எளிய சொற்களைக் கொண்டு நடைமுறை வாழ்க்கையைச் சித்திரித்துத் தருகிறது. எழில் மிக்க நடை என்ற பாராட்டைப் பெற்றுள்ளது. நிகழ்ச்சிச் சித்திரம்.

**ரா. சீனிவாசன்**

# வழுக்கு நிலம்

## 1

**வெ**ளியில் காற்றும் மழையும் போட்டி போட்டுக் கொண்டு அடித்துக்கொண்டிருந்தது. வீட்டின் சுவர்களெல்லாம் சாரலால் நனைந்துகொண்டிருந்தன. சன்னல் கதவுகளெல்லாம் 'டபார்' 'டபார்' என்று அடிக்கடி அடித்துக் கொண்டிருந்தன. பார்வதி சன்னல் கதவுகளை ஒவ்வொன்றாக மூடினாள். மழைத்தண்ணீர் வெளியே 'சொட்டு' 'சொட்டு' என்று விழுந்து கொண்டிருந்தது. அந்த நீர்த்துளிகளோடு இரண்டு கண்ணீர்த் துளிகளும் கீழே விழுந்து தெறித்தன.

வெளியே கதவு தட்டும் ஒலி முதலில் கேட்கவில்லை. பிறகு சிறிது நேரத்தில், 'பார்வதி! பார்வதி!' என்று கூப்பிடும் குரல் கேட்டது. தம் கணவர்தாம் வந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட பார்வதி கையில் 'திக் திக்' என்று எண்ணெய் அதிகமாக இருந்ததால் எரிந்து கூத்தாடிக்கொண்டிருந்த ஹரிக்கேன் விளக்கைத் தாங்கியவண்ணம் கதவைத் திறந்தாள்.

சிவராமன் சட்டையெல்லாம் நனைந்திருந்தது. வரும் பொழுதே போட்டிருந்த சட்டையைக் கழற்றத் தொடங்கினான்.

உள்ளே இருந்து ஒரு கைத்துண்டு ஒன்று கொண்டு வந்து கொடுத்தாள். உடம்பெல்லாம் துடைத்துக்கொண்டு சட்டையை மாற்றிக் கொண்டான். தலையை மட்டும் சரியாகத் துடைக்காமல் அப்படியே கையால் தள்ளிக் கொண்டான்.

"என்ன, காப்பி போட்டிருக்கிறாயா?"

"இதோ போடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு அடுப்புப் பற்ற வைக்கச் சென்றாள்.

அடுப்பில் படுத்திருந்த கருப்புப்பூனையின் கண்கள் மினுமினுத்துக் கொண்டிருந்தன. சட்டென்றெழுந்து ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டுத் தன்னை எழுப்ப வந்ததை மிகவும் வெறுப்பதைப் போல் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போயிற்று.

சிவராமன் வாயில் பற்றவைத்த சிகரெட்டு கருகிச் சாம்பலாகி விட்டது.

"என்ன! உங்கப்பாவிடமிருந்து ஏதாவது..."

"கடிதம் வந்தது. அதெல்லாம் இப்பொழுது ஒன்றும் அனுப்ப முடியாது" என்று கண்டிப்பாக எழுதியிருக்கிறார்.

"மடையன்" என்று முணுமுணுத்துக் கொண்டே கொண்டு வந்த காப்பியை அப்படியே வீசி எறிந்தான்.

மறைந்திருந்த கருப்புப்பூனை ஓடோடியும் வந்து அதை நக்கிக் குடிக்க ஆரம்பித்தது.

"நாளைக்குக் காலையில் மூட்டை கட்டு!"

அவளுடைய கண்களிலிருந்து விழலாமா வேண்டாமா என்று தேங்கிக் கிடந்த அந்த இரண்டு துளிகளும் ஒன்றன்பின் ஒன்றாகக் கீழே விழுந்தன.

"அவர் கொடுக்காவிட்டால் நான் என்ன செய்ய முடியும்?"

"அப்பொழுது உன் வாழ்வைப் பற்றி அந்த மடையனுக்கு..."

பார்வதி விக்கி விக்கி அழுதாள்.

"அழுகிறாயா, அழு. போ. உன் அப்பாவிடத்தில் சொல்லி அழு. அன்று கலியாணத்திலே பத்தாயிரம் தருவதாகச் சொன்னானே, அந்தச் சொல்லைக் காப்பாற்ற வேண்டாமா? போ. பத்தாயிரத்தோடு வந்து சேரு. இல்லாவிட்டால் இங்கே எட்டிப் பார்க்காதே. கட்டு. மூட்டை கட்டு."

பேசாமல் கற்சிலையைப் போல அசையாமல் நின்றாள் என்று கூறினால் அவ்வளவு பொருத்தமாக இருக்காது. கற்சிலைக்கு அவளைப் போன்ற உணர்ச்சி யிருக்க முடியாது. விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"போ! என்முன் நிற்காதே. போ! நான் வெளியே போகிறேன். கதவைத் தாளிட்டுக் கொள்!" என்று சொல்லி விட்டுக் கண்ணாடியின் முன் நின்று தலையை வாரிக் கொண்டான். தலை நன்றாகப் படிவதற்கு, "வாசலைன்" எண்ணெய் போட்டுப் படிய வாரிக்கொண்டான். முகத்திற்குக் குளிர்ச்சிக்காக 'ஸ்நோ' பூசிக்கொண்டு பவுடர் பூசி அது தெரியாமல் இருப்பதற்காகக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான். அவன் போட்டிருந்த 'ஓபன் சர்ட்டுக்குப்'

பொத்தான்களைக் கண்ணாடிமுன் நின்று மாட்டிக் கொண்டான்.

“ஏய்! மூதேவி! அழுதுகொண்டிரு. நான் வரக் கொஞ்சம் நேரமாகும்” என்று கூறிவிட்டுக் ‘காபூல்’ செருப்பைக் காலில் மாட்டிக்கொண்டு வெளியே போனான். அவன் சென்று மறையும் வரையும் அவன் கால் செருப்பு எழுப்பிய ‘டக் டக்’ என்ற ஒலி அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த ஒலி நின்றதும் அவள் வெளியே சென்று கதவைத் தாளிட்டு உள்ளுக்கு வந்தாள்.

வெளியே மழை நின்றிருந்ததால் எங்கும் அமைதி குடி கொண்டிருந்தது. அவ்வப்பொழுது ஊர் நாய்கள் குலைத்துக் கொண்டிருந்தன. நிலா வெளிச்சமாக இருந்ததால் திடீரென தெரு விளக்குகள் அணைக்கப்பட்டன. இருந்தாலும் மழைக் காலமாக இருந்ததால் அவ்வப்பொழுது மேகங்கள் சூழ்ந்து இருண்டு கொண்டிருந்தன. நீர் நிறைந்த குட்டைகளில் எல்லாம் தவளைகள் ஓய்வில்லாமல் கத்திக் கொண்டிருந்தன. தெருவில் அணைந்துவிட்ட விளக்குக் கம்பத்தின்மீது கோட்டான் ஒன்று உட்கார்ந்து கொண்டு தன் கடுமையான குரலைக் காட்டிக்கொண்டிருந்தது.

உள்ளே சென்ற பார்வதி நேரே கட்டிலின்மீது தொப்பென்று விழுந்தாள். நீளமாக இருந்த அவள் உடம்பு குட்டையாக ஆகிவிட்டது என்று சொல்லும்படி கால்களை முடக்கிக்கொண்டு ஒடுங்கிக் கிடந்தாள். விக்கி விக்கி அழுதாள். உடம்பெல்லாம் வியர்வையால் நனைந்துவிட்டது. “அம்மா!” என்று வாய்விட்டு அழுதாள்.

சிறிது நேரம் பொறுத்துக் கண்களை அகலத் திறந்து பார்த்தாள். சுவரில் மாட்டியிருந்த படம் கண்ணுக்குத் தெரிந்தது. கலியாணத்தன்று எடுத்த படம் அது. கணவரும் தானும் மாலையிட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்த படம். இன்னும் அதைச் சிறிது உற்றுப் பார்த்தாள். அந்தப் படத்திலாவது அன்பு என்பது இருக்கிறதா என்று ஆராய்ந்தன அவள் கண்கள். மேலைநாட்டுப் பாணியில் அணிந்திருந்த ‘சூட்டு’ புதிதாக வாங்கிய ‘பூட்டு’ கொஞ்சங்கூட மடிப்புக் கலையாத ‘கோட்டு’ இவற்றின் மீது போட்டிருந்த ரோஜா மாலை. ஆம், அன்று ரோஜா மலரைப் போலத்தான் விளங்கினார். அதன் இதழ்கள் உதிர்ந்து போவதைப்போல் அவர் அன்பும் மெல்ல' உதிர்ந்து விட்டதோ என்று அந்தப் படத்தை மீண்டும் பார்த்தாள். அதைக் கையில் எடுத்துக்

கொண்டு பார்க்க வேண்டும் என்ற ஆசை. ஆனால் அந்தப் படம் உயரத்தில் மாட்டியிருந்தது. அதை எடுக்க முயற்சி செய்யவில்லை.

அதற்குக் கீழே அவருடைய படம் மட்டும் தனியாக இருந்த ஒன்று மாட்டியிருந்தது. அவர் தலையில் இருந்த சதுரமான தொப்பி நூதனமாக இருந்தது. உடம்பு முழுவதும் கருப்பு கவுனால் மூடப்பட்டிருந்தது. கையில் ஏதோ சுருளாகக் கடிதம் ஒன்று இருந்தது. அந்தப் படத்தைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டாள். பட்டமளிப்பு விழாவிற்குப் போயிருந்த போது எடுத்துக்கொண்ட படம் என்று அவர் சொல்லியபோது அவள் உள்ளம் அடைந்த மகிழ்ச்சியை இப்பொழுது எண்ணிப் பார்த்தாள். அந்தப் படத்தை மறுபடியும் சுவரில் மாட்டினாள். "பத்தாயிரம்" என்று வாய்விட்டுச் சொல்ல ஆரம்பித்தாள். "ஆம், இதைத் தொடமுடியாது. இதன் விலை பத்தாயிரம். அந்தப் பட்டத்தின் விலை பத்தாயிரம்" என்று அவள் உள்ளத்தில் எண்ணங்கள் தோன்றலாயின.

அவளுடைய தந்தையாரின் கவனம் வந்தது. அவரைப் போன்ற கொடியவர் இந்த உலகத்திலேயே இல்லை என்று அந்த நேரத்தில் பட்டது. ஏன் அவருக்குப் பத்தாயிரம் கொடுப்பதாகச் சொல்லவேண்டும். பிறகு அதைக் கொடுக்காமல் என்னைத் தவிர்க்கவிடவேண்டும்.

"பாரு! உனக்குத் தெரியாதா நம் வீட்டு நிலவரம்! இருக்கிற சொத்து எல்லாம் விற்றுக் கொடுத்து விட்டால் நாங்கள் எங்கே நிற்பது. உன் அண்ணனைப் படிப்பிக்க வேண்டாமா? நாங்கள் ஓட்டைக் கவிழ்த்துக் கொண்டு தான் தெருத் தெருவாக..."

"அப்பொழுது என் அவருக்குச் சொல்ல வேண்டும். படித்தவர்; பட்டம் பெற்றவர்; இதைப்போல வரன் கிடைக்காது; எப்படியாவது இதை முடிக்கவேண்டும் என்று ஏன் திட்டமிட வேண்டும்?"

"வேண்டாம். நம்ம ஊர் பக்கமே என் தம்பிக்குக் கொடுத்துவிட்டால் அவன் தங்கமாக வைத்திருப்பானே."

"வைத்திருப்பான். அவள் நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட வேண்டும் என்று உனக்கு எண்ணமில்லையா? பாரு! நீயே சொல்லு. அம்மாவுக்கு இந்தப் பட்டிக்காட்டிலேயே உன்னைக் கொடுத்து உன் வாழ்வைப்..."

"பாழாக்க நினைக்கவில்லை. இனிமேல் எனக்குத் தெரியாது. நீயும் உன் மகளும் எப்படியாவது போங்கள். பட்டணத்திலே படித்த மாப்பிள்ளைக்குக் கொடுத்தால் சீரு சிறப்புச் செய்யாவிட்டால் சும்மா இருப்பார்களா? அவன் பத்தாயிரம் கேட்பானே. எங்கே வச்சிருக்கீங்க?"

"நீ ஒன்று. மூன்றுமுடி போட்டுவிட்டால் அப்புறம் எப்படியாவது ஆகுது. குறுக்கே குறுக்கே பேசாதே. நான் எப்படியாவது ஏற்பாடு செய்து விடுகிறேன்."

இந்தப் பேச்சுகளெல்லாம் பார்வதியின் கவனத்துக்கு வந்தன. திருமணச் சந்தையிலே தான் விலை கூறப்பெற்ற வரலாறெல்லாம் அவள் கவனத்திற்கு வந்துகொண்டிருந்தன.

கடிகாரத்தின் முள் 'டக் டக்' என்று ஒலித்துக் கொண்டிருந்தது. 'கிரீச்' என்ற ஒலியோடு ஒரு சுண்டெலி ஓடி மறையத் தொடங்கியது. இந்த இரண்டொலிகளைத் தவிர வேறு ஒலி யொன்றும் பார்வதிக்குக் கேட்கவில்லை. கடிகாரம் மணி பன்னிரண்டு அடித்தது.

சிவராமனின் சீற்றம் கவனத்துக்கு வந்தது. "நாளைக்கு வீட்டைவிட்டுப் போ. போ, உன் தந்தையிடம் போய்ச் சேர். பத்தாயிரத்தோடு வந்து சேர். இல்லாவிட்டால் இந்த இடத்தில் உனக்கு இடமில்லை" என்று சொல்லிய அந்தச் சொற்கள் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

அவளுக்கு மயக்கம் வருவது போன்ற உணர்ச்சி தோன்ற ஆரம்பித்தது. அந்த வீடே ஒரு சுற்றுச் சுற்றுவதைப் போன்றிருந்தது. அவள் பழகிய இடமெல்லாம் அவளை விட்டுப் பிரிய மறுப்பது போன்று இருந்தது. அவரும் தானும் மகிழ்ச்சியாகப் பழகிய அந்த அறையின் மூலை முடுக்கு களெல்லாம் கவனத்துக்கு வந்தன.

"பாரு! என்னைக் கொஞ்சம் பாரு! என்ன இருந்தாலும் இவ்வளவு வெட்கம் கூடாது. நானும் படிக்கிறபோது எவ்வளவோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் பழகியதில்லை. அவர்களிடத்தில் இல்லாத ஒரு தனித்தன்மை இந்த வெட்கம்தான். அதுதான் உன் பெருமையை..."

"பாரு! நம்மை இனி யாரும் பிரிக்கமுடியாது. நீ இந்த வீட்டில் அடியெடுத்து வைத்ததிலிருந்து இந்த வீடே கலகலப்பாக இருக்கிறது,. நீ இல்லாத வீடு நிலவில்லாத வானம் போல் தான் வெறிச்சென்று இருக்கும்."

இன்னும் இதைப் போன்ற காட்சிகளும் பேச்சுகளும் அவள் உள்ளத்தில் மாறிமாறி வந்து சுற்றிக்கொண்டிருந்தன. சன்னலருகில் வந்து நின்றாள். "அதோ பார்! விண்ணிலே நிலவு எவ்வளவு குளிர்ச்சியாக இருக்கிறது" என்று சுட்டிக்காட்டித் தான் சூட்டியிருந்த முல்லைப் பூக்களை முகர்ந்துகொண்டு அந்த வெண்ணிலாவிலே.... அதற்குமேல் அவள் கற்பனை செல்லாமல் நின்றுவிட்டது. 'பத்தாயிரம்' என்ற சொற்களைச் சொல்லத் தொடங்கியது.

பார்வதியை விட்டு அந்த வீடு பிரிவது போன்ற உணர்ச்சி அவளுக்குத் தோன்ற ஆரம்பித்தது. அடுப்பங்கரைக்குப் போய்த் திறந்திருந்த தவலையின் மீது தட்டு ஒன்று கொண்டு மூடினாள். அவள் கழுவி வைத்த கிண்ணங்கள் எல்லாம் பளிச்சென்று வெளுத்திருந்தன. அவை தன் நிலைமையைப் பார்த்துச் சிரிப்பது போன்றிருந்தன. அங்கே கவிழ்ந்திருந்த வெள்ளிச் சாமான்களும், 'எவர் சில்வர்' பாத்திரங்களும் "எங்களுக்கு இருக்கிற மதிப்புக்கூட உனக்கில்லையே! பெண்ணாகப் பிறந்தால் உள்ள மதிப்போடு பணமதிப்பும் சேர்ந்தால்தானே உனக்கு மதிப்பு" என்று சொல்வது போல இருந்தது. அந்த வெள்ளிச் சாமான்கள் பீரோ கட்டில் இவை யெல்லாம் தான் வரும்பொழுது உடன் வந்தது அவள் கவனத்துக்கு வந்தது. இவையெல்லாம் சீர் என்ற பெயரால் அங்கே சீர் பெற்று இருந்தன. ஆனால் தன் வாழ்வு மட்டும் சீர் பெறவில்லையே என்ற எண்ணம் அவளுக்கு வருத்தம் தந்தது.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் ஒலித்துக்கொண்டே இருந்தது. தனக்குப் பழக்கமான அந்தக் கருப்புப் பூனை ஒரு எலியைக் கண்டு விட்டது. அதையே பார்த்துக் கொண்டு ஓரமாக ஒதுங்கி உட்கார்ந்து கொண்டிருந்தது. கடிகாரம் மணி ஒன்று அடித்தது. கதவு தட்டும் சப்தமும் கேட்க ஆரம்பித்தது. அந்த நேரத்தில் அவர் குரல்தானா என்று கேட்டுக்கொண்டு கதவு திறக்கவேண்டும் என்பதற்காகக் கதவருகில் வந்து சிறிது நேரம் தயங்கினாள். "யாரது" என்று தன் மெல்லிய குரலில் சிறிது உரத்துக் கேட்டாள்.

"நான்தான் திற" என்று பதில் வந்தது.

சிவராமன் வீட்டிற்குள் நுழைந்ததும் கதவை அவனே தாளிட்டான்.

"இவ்வளவு நேரம் பொறுத்து வருகிறீர்களே! எங்கே போய் வருகிறீர்கள்."

"இந்தக் கேள்வியைக் கேட்க உரிமை இனி உனக்குக் கிடையாது."

வாய் திறவாமல் படுக்கச் சென்றுவிட்டாள்.

சிவராமன் மட்டும் சிறிதுநேரம் ஏதோ சிறிய புத்தகம் ஒன்றைப் புரட்டிக்கொண்டு இருந்தான். கையில் ஒரு பென்சில் வைத்துக்கொண்டு ஏதோ குறித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்ப்பதும் ஏதோ குறித்துக் கொள்பவனாகவும் இருந்தான். ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தவனைப் போல் அதையே பார்த்துக்கொண்டு அவ்வப்பொழுது அதில் ஏதோ கோடு போட்டுக் கொண்டிருந்தான், விளக்கிலிருந்த எண்ணெய் குறைந்து விட்டதால் சிறிது குதித்து ஆடி அடங்கிவிட்டது. உள்ளிருந்த எலி எப்படியோ அந்தப் பூனையின் கண்களுக்குப் பட்டுவிட்டது. சட்டென்று பாய்ந்து அதை அப்படியே கவ்விக்கொண்டு சன்னல் வழியாக அந்தப் பூனை மெல்ல நடந்து வெளியே சென்றது. விளக்கு அணைந்தது. இருள் சூழ்ந்தது.

## 2

காலையில் வழக்கம் போல் பார்வதி தன் கடமைகளைச் செய்யத் தொடங்கினாள். ஒரு தட்டில் நான்கைந்து இட்டளிகளும் சிறு கிண்ணத்தில் சட்டினியும் கொண்டு வந்து வைத்தாள். ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்த சிவராமனின் முன்னால் மௌனத்தைக் கலைப்ப தற்காக "சாப்பிடுங்கள்" என்று சொல்லி அந்தத் தட்டை வைத்தாள்.

"வேண்டாம், நீ சாப்பிடு. சாப்பிட்டுவிட்டு உங்கள் வீட்டுக்குப் புறப்படு."

"எங்கள் வீட்டில்தான் நான் இருக்கிறேன்."

"உங்கப்பனுக்குக் கடிதம் எழுதி உன்னை அழைத்துப் போகச் சொல். அவன் எப்பொழுது பத்தாயிரம் கொண்டு வந்து தருகிறானோ அப்பொழுதுதான் நீ இங்கே."

"அடியெடுத்து வைக்க வேண்டும். அவன் இவன் என்று மரியாதை யில்லாமல் பேசவேண்டாம். என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். அவரைச் சொல்ல..."

"எனக்கு உரிமை கிடையாது. ஆமாம். அன்று எங்கள் வீடேறித் திருமணப் பேச்சை எடுத்துப் பேசியது யார்? ஏன் அப்பொழுது பத்தாயிரம் தருகிறேன் என்று சொல்ல வேண்டும்? வேறு எந்த இடத்திலும் கிடைக்காமலா உங்களிடத்தில் பெண் கேட்க வந்தோம்? சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுவது யோக்கிய முள்ளவர் களுக்குக் கடமையாகும். இதையாவது உணர்த்த நீ உன் தாய் வீட்டிற்குப் போய்த்தான் தீர வேண்டும். நான் படித்ததால் ஏற்பட்ட கடன் போதாதென்று கலியாணத்துக்கு ஏற்பட்ட கடன் எல்லாம் என்னால் கொடுக்க முடியாது. முதலில் பணம், பிறகுதான் வாழ்க்கை. பணமில்லாமல் வாழ முடியாது. பெரிய இடம் என்று நம்பி ஆடம்பரமாகக் கலியாணம் செய்தேன். அந்தக் கடன்காரர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. முதலில் உன்னை அழைத்துப் போகச் சொல்லிக் கடிதம் எழுது. பிறகு பேசலாம்" என்று சொல்லி விட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு செய்தித்தாள் தான் படிக்கத் தொடங்கினான்.

வெளியே 'டாக்ஸி' வண்டி வந்து நின்ற சப்தம் கேட்டுப் பத்திரிகையைக் கீழே வைத்துச் சாய்வு நாற்காலியை விட்டு எழுந்து வெளியே வந்தான். பார்வதிக்குத் தன் தந்தை வந்து விட்டார் என்ற மகிழ்ச்சி ஒருபுறம்; அந்தச் சமயத்தில் இவர் ஏதாவது முரட்டுத்தனமாகப் பேசிவிட்டால் என்ன செய்வது என்ற கவலை மற்றொருபுறம். அதனால் அவளும் வெளிப் புறத்தில் விரைந்து வந்து நின்றாள்.

"வா அக்கா! இப்பொழுதான் வருகிறாயா! அவர் வரவில்லையா?'' என்று தனியே வந்து இறங்கிய தன் தமக்கையை மிகவும் ஆவலாகச் சென்று வரவேற்றான்.

"இல்லை. அவரை பம்பாய்க்கு மாற்றிவிட்டார்கள்" என்று சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த பையிலிருந்து டாக்ஸிக்குச் சில்லரை எடுத்துக் கொடுத்தாள். முற்றம் பெருக்கிக் கொண்டிருந்த வேலைக்காரி பெட்டியும் படுக்கையும் கொண்டுவந்து வைத்தாள்.

வீட்டில் மறுபடியும் கலகலப்பு ஏற்பட்டது. அந்த இட்டளித் தட்டைக் கொண்டுவந்து பார்வதி அந்த அம்மையாரின் முன்னால் வைத்தாள்.

"அக்கா! சாப்பிடுங்கள்."

"தம்பிக்குக் கொண்டுவந்து வை."

மறுபடியும் மற்றொரு தட்டில் இட்டளி கொண்டு வந்து வைத்தாள். அவனும் ஒன்றும் மறுக்காமல் சாப்பிடத் தொடங்கினான்.

"அக்கா! மாற்றலைப்பற்றி அத்தான் ஒரு கடிதமும் எழுதவில்லையே!"

"திடீரென்று மாற்றி விட்டார்கள். அரசாங்கம் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை ஏற்றுக்கொண்டதால் தலைமைக் காரியாலயத்தில் வேலை அதிகமாம். அதற்குத்தான் அவரை மாற்றிவிட்டார்கள்."

"அங்கே நிரம்ப செலவாகுமே."

"வீடு கிடைப்பதுகூட கஷ்டம் என்று சொல்கிறார். சில மாதங்கள் முடிந்ததும் மாற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு தான் போயிருக்கிறார்."

கூடத்திலிருந்த புதிய கண்ணாடி பீரோ தென்பட்டது.

"இது மிகவும் நன்றாக இருக்கிறது. புதிய அமைப்பாகவும் இருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டே கை கழுவ எழுந்தாள்.

"அக்காவுக்குக் காப்பி கொண்டுவந்து கொடு."

பார்வதி இரண்டு வெள்ளிக் குவளைகளில் காப்பி கொண்டு வந்து வைத்தாள்.

"இந்த வெள்ளிக் குவளையும் பார்வதி கொண்டு வந்ததுதானே!"

"ஆமாம்" என்று மிகச் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

"காப்பியில் சர்க்கரை அதிகம்" என்று அவன் தமக்கை சொல்லிக்கொண்டே குடிக்க ஆரம்பித்தாள்.

கடிகாரம் ஒன்பது மணி அடித்தது.

சிதறிக் கிடந்த பத்திரிகைத் தாள்களை அடுக்கி வைத்தான். பீரோவைத் திறந்து அதில் நலுங்காமல் இருந்த கோட்டும் சட்டையும் கால்சட்டையும் எடுத்துப் பக்கத்திலிருந்த மேசைமீது வைத்தான்.

அவன் குடிக்காமல் வைத்துவிட்டுப் போன காப்பி குவளையைக் கொண்டுவந்து பார்வதி கொடுத்தாள்.

"எடுத்துக் கொண்டு போய்க் கொட்டு. எனக்கு வேண்டாம். அக்கா வந்தவுடன் அவர்களுக்கு ஏன் நம் வீட் நிலைமை தெரியவேண்டும் என்று அடங்கிவிட்டேன்."

அந்தச் சொற்கள் பார்வதிக்கு ஓரளவு ஆறுதல் கொடுத்தது. அவர் தெரிந்து சொன்னாரோ இல்லையோ 'நம் வீடு' என்று சொல்லிய அந்தச் சொற்கள் அவளுக்கு ஆறுதல் கொடுத்தது. தம் தமக்கையின் முன்னால் தன்னைக் காட்டிக் கொடுக்காமல் நடந்து கொண்ட கண்ணியத்தைக் கண்டு அவள் பெரிதும் ஆச்சரியம் அடைந்தாள். ஒன்றும் பேசாமல் அந்தக் குவளையை மேசை மேல் வைத்துவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள்.

"பார்வதி! மரியாதையாகச் சொல்கிறேன். அந்தக் காப்பியை எடுத்துக்கொண்டு போ. இங்கே வைக்காதே."

அந்தக் காப்பி குவளையை எடுத்துக் கொண்டாள். பிறகு சமையல்கட்டுக்குப் போய்த் தன் கடமைகளில் மனம் செலுத்த முற்பட்டாள். வெளியே தெருவில், 'முள்ளங்கி' 'முள்ளங்கி' என்று கூவி விற்றுக்கொண்டு போன ஒரு குரலைக் கேட்டாள். அடுப்பங்கரையை விட்டு வெளியே வந்தாள்.

சிவராமனின் தமக்கை தன் பெட்டியிலிருந்த சரிகை சில்க் புடவைகளை வரிசையாக அடுக்கிக் கொண்டிருந்தாள். அவள் கணவன் எடுத்துக் கொடுத்த 'ஜார்ஜ்ஜட்' புடவையை எடுத்து மடிப்புக் கலையாமல் அடுக்கி வைத்தாள். அவற்றைப் பூச்சி பொட்டு கெடுக்காமல் இருக்க ரசகர்ப்பூரங்களை அங்கங்கே போட்டு வைத்துக்கொண்டிருந்தாள். அந்தப் பெட்டியிலிருந்த தன் கணவரோடு தான் பிடித்துக் கொண்டிருந்த போட்டோ புடவையின் கீழ் இருந்தது. அவர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டும் தான் நின்று கொண்டும் இருக்கும் அந்தக் காட்சியில் அப்படியே சிறிது நேரம் மெய்ம்மறந்து இருந்தாள். அவள் அணிந்திருந்த புடவையின் சரிகை நன்றாகப் படத்திலும் பளிச்சென்று தெரிவதைப் பார்த்தாள். அந்தப் புடவையைப் பற்றிக் கவனம் வரவே அந்தப் படத்தை அப்படியே பெட்டியில் வைத்துவிட்டு அந்த மைசூர் சில்க் புடவையை எடுத்து மடிப்புக் கலையாமல் இருக்க அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

இதைக் கவனித்தும் கவனிக்காமலும் பார்வதி வெளியே கூடையில் இறக்கி வைத்த முள்ளங்கியின் விலையைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தாள். விவாதம் ஒருவிதமாக முடிவாகி அந்தக் கூடையை விட்டு முள்ளங்கிக் கற்றை இரண்டு வெளியேறி இவள் கைக்கு வந்தன, இவள் கையிலிருந்த காசு இரண்டணாவும் அவள் கையில் போயிற்று.

"அம்மா! கூடையைக் கொஞ்சம் பிடியுங்கள்."

"இவ்வளவு பாரத்தை ஏன் சுமக்கிறாய். கொஞ்சமாக வாங்கி வருவதுதானே."

அந்தக் கூடை தலையில் ஒருவாறு தூக்கி வைக்கப் பட்டது. கழுத்திலிருந்த ஒரு மெல்லிய நரம்பு வெளியே தெரியும் வண்ணம் அந்தச் சுமையை அவள் தூக்கிச் சென்ற காட்சி அவள் மறைந்த பின்பும் மறையாத காட்சியாக அவள் உள்ளத்தில் பதிந்தது.

"எல்லாம் வயிற்றுக்குத்தான்" என்று அவள் சொல்லிய இறுதிச் சொற்கள் காதில் ஒலித்துக்கொண்டே இருப்பன போல் இருந்தன.

"பார்வதி! பார்வதி!" என்று கூப்பிடுங் குரல் கேட்டு அந்த முள்ளங்கியை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் போனாள்.

"இது எல்லாம் உனக்கு வாங்கத் தெரியுமா? எப்படிப் பழகிக் கொண்டாய்?"

"எல்லாம் தானாகப் பழக்கமாய் விடுகிறது அக்கா!"

"அதுக்குத்தான் ஒரு மாமியார் இருக்க வேண்டும் என்பது. உன்னால் எப்படிக் குடித்தனத்தைக் கவனித்துக் கொள்ள முடியும். கஷ்டம்தான். என்ன செய்வது. நீ கொடுத்து வைத்தது அவ்வளவுதான். எங்கள் அம்மா இருந்தால் உனக்கு இந்த மாதிரி வேலை யெல்லாம் இருக்காது."

சிவராமனின் தாயாரின் படம் மங்கலாகக் காட்சியளி துக் கொண்டிருந்தது. அதைத் துடைத்துப் பல மாதங்கள் ஆனது போல் மங்கிக் கிடந்தது. அதற்குப் பக்கத்தில் மீசையை முறுக்கி விட்டுச் சந்தனப் பொட்டு வைத்துக் கொண்டிருந்த அவன் தந்தையாரின் படமும் அதைப் போலவே துடைப்பாரற்று மாட்டிக் கிடந்தது.

"இப்படிக் கொடு நான் அரிந்து கொடுக்கிறேன்."

பார்வதி அரிசி எடுக்க உள்ளறைக்குச் சென்றாள். அங்கே கண்ணாடியின் முன்னால் சிவராமன் தலைவாரிக் கொண்டு நின்றான். அவன் அணிந்திருந்த நீல நிற 'டை' அவன் சிவப்பு முகத்திற்கு அழகு கொடுத்தது. அவன் கிராப்புப் பின் பக்கமாகத் தள்ளிக்கொண்டு வாரிக்கொண்டிருந்தான். ஒருசில மயிர் படியாமல் இருந்ததால் 'வாசலைன்' பூசிப் படிய வாரிக் கொண்டிருந்தான். அப்படியும் அவனையும் எதிர்த்து ஒரு

பக்கம் தூக்கிக்கொண்டிருந்தது. 'இமாலயா' என்று போட்டிருந்த வெள்ளை நிறப் புட்டியிலிருந்து ஸ்நோ எடுத்துப் பூசிக் கொண்டிருந்தான். 'முகப்பரு' வந்த இடத்தின் வடுவை மறைக்கச் சிறிது தேய்த்துக்கொண்டிருந்தான்.

பார்வதி தன் வேலையில் கவனம் செலுத்தினாலும் தன் பார்வையை அவன்மீது செலுத்தாமலில்லை.

கண்ணிறைந்த தன் கணவனின் அழகை உவகையோடு கண்டு மகிழ்ந்தாள். முன்னாலெல்லாம் ஆபீசுக்குப் போகும் போது "பாரு! இங்கு வா!" என்று கூறி அன்போடு அணைத்துக்கொள்ளும் அவன் கரங்கள் இப்பொழுது 'டை'யைச் சரிப்படுத்துவதிலேயே இருந்தன.

உள்ளே அறையில் பழம்பானையில் இருந்த அரிசியை ஆழாக்கில் அளந்து போட்டுக்கொண்டு மறுபடியும் சமையலறைக்குத் திரும்பினாள். சிவராமன் வெளியே சென்ற போது நடந்த 'பூட்சு' சப்தம் கேட்டது.

"அக்கா! வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்ற அவன் இறுதிச் சொற்களும் காதில் விழுந்தன.

அவன் தமக்கை அரிந்து வைத்த முள்ளங்கிகளை அடுப்பில் கொதித்துக்கொண்டிருந்த பருப்புச் சட்டியில் போட்டாள்.

"பார்வதி! உன் அண்ணன் படித்துக்கொண்டிருந்தானே பாஸ் ஆகி விட்டானா?"

"பரீட்சை எழுதியிருக்கிறார். அநேகமாகப் பாஸ் செய்து விடுவேன் என்றுதான் சொல்கிறார்."

"அவன் திருமண விஷயத்தைப் பற்றி அப்பா என்ன சொல்கிறார்?"

"செங்கல்பட்டில் பெரிய மிராசுதார் மகளாம். நிறையச் சொத்து இருக்கிறது."

"ஒரே மகள் என்று சொல்லு."

"ஆமாம். அப்படித்தான் சொல்லுகிறார்கள். அவள் பத்தாவது மூன்று முறை எழுதியும் பாஸ் ஆகவில்லையாம். இல்லாவிட்டால் மேல்படிப்புப் படிக்க வைத்திருப்பார்கள். அவள் அப்பா இன்னும் ஒருமுறை எழுதிவிடு என்று வற்புறுத்துகிறாராம்."

"ஆமாம், முயற்சி செய்தால் பாஸ் செய்துவிடலாம்."

"ஆமாம். அவள் அப்பாகூட எவ்வளவோ முயற்சி செய்தார். பரீட்சைத்தாள் எங்கெங்கே போயிருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்குச் சென்னைக்குக் கூட வந்திருந்தார். ஆனால் ஒன்றும் பயனில்லை."

"நான் அந்த முயற்சியைச் சொல்லவில்லை. படித்தால் பாஸ் ஆகலாமே என்று சொன்னேன்."

"ஆங்கில பாடத்தில்தான் ஒவ்வொரு முறையும் தோல்வி ஏற்படுகிறதாம். இனிமேல் முடியாது என்று தீர்மானம் செய்து விட்டாளாம்."

"போகட்டும். அதிகமாகப் படித்தால்கூடக் குடும்பத்திலே அடக்க ஒடுக்கமாக எங்கே குடித்தனம் செய்யப் போகிறார்கள்."

படிக்காவிட்டால் கூட ஒரு சிலர்க்கு அடக்கம் என்பது இருப்பது இல்லை என்று சொல்லவந்தவள் ஒருகால் அவர்களையே சுட்டுவதாகக் கொண்டால், தவறாக நினைத்துக் கொள்வார்களே என்று சொல்லாமல் நிறுத்தி விட்டாள்.

"அந்த இடம் பெரிய இடமாயிற்றே என்றுதான் எங்கள் அப்பா கொஞ்சம் அச்சப்படுகிறார்."

"அதற்கென்ன உங்கள் அப்பா கெட்டிக்காரர். எப்படியாவது முடித்துவிடுவார்."

'அப்பா கெட்டிக்காரர்' என்ற சொற்கள் பார்வதிக்கு எட்டிக்காய் போல் இருந்தன. அந்தக் கெட்டிக்காரத்தனத்தால் தானே தன் கணவருக்குத் திருமணம் ஆனபிறகு கொடுக்கிறேன் என்று சொன்ன பத்தாயிரத்தைக் கொடுக்க வில்லை என்ற நினைவு பார்வதிக்கு வந்தது. உலகத்தில் கெட்டிக்காரத் தனத்தாலேயே எதையும் சாதித்து விடமுடியும் என்று நினைப்பது தவறு என்று அவள் மனம் சொல்ல ஆரம்பித்தது.

அதற்குள் வெளியே ஓர் ஆள் வந்து நின்றான். சைக்கிளில் வந்திருக்கிறான் என்பது அவன் அடித்த மணியிலிருந்தே தெரிய வந்தது.

"ஐயா இருக்கிறாரா?" என்று நிரம்ப மரியாதையோடு கேட்க ஆரம்பித்தான்.

இதைப்போலப் பலர் வந்து கேட்பது பார்வதியின் சமீப கால வாழ்வில் சாதாரணமாக இருந்தது. சிவராமனின் தமக்கை எழுந்து வெளியே வந்தாள்.

"என்னப்பா? என்ன வேண்டும்?"

"என்ன வேண்டும்? இரண்டுமாதமாக இழுத்தடிக்கிறார். கோட்டுத்துணி வாங்கி இரண்டு மாதம் ஆகிறது. இந்த மாதமாவது பாக்கியைச் செலுத்துவார் என்று எங்கள் எசமானர் கேட்டுவரச் சொன்னார்."

"தம்பி சாயுங்காலம் வரும், அப்பொழுது வா!"

"எத்தனை சாயுங்காலம். எத்தனை காலைப்பொழுது" என்று முணுமுணுத்துக் கொண்டே அவன் சைக்கிள் ஏறி அந்த இடத்தை விட்டு நீங்கினான்.

அவன் போகும் வரை அவன் தமக்கை அங்கேயே நின்றாள்.

"எல்லாம் அம்மா செய்த கெட்ட பழக்கம்தான். படிக்கிற காலத்தில் கேட்கும்போதெல்லாம் பணம் செலவுக்குக் கொடுத்ததனால் வரவுக்கு மீறிச் செலவு செய்கிறான்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அந்த இடத்தை விட்டு வீட்டுக்குள் சென்றாள்.

பார்வதி இலையில் சோறு பரிமாறி வைத்திருந்தாள்.

"அக்கா! சாப்பிடுங்கள்!" என்று சொல்லி மணை ஒன்று போட்டுக் குவளையில் நீர்மொண்டு வைத்தாள்.

கை கழுவிக்கொண்டு வந்து உட்கார்ந்தாள்.

"இந்த மாதிரி குடித்தனம் நடத்தினால் குடும்பம் குட்டிச்சுவராகத்தான் போகும்" என்று கசப்பான சொற்களைச் சொல்லிக்கொண்டே இலையில் இருந்த சோற்றைப் பிசையத் தொடங்கினாள்.

வீட்டின் பக்கத்தில் ஒரு குடிசை ஒன்று ஓலைகள் பாதியில்லாமல் வெறும் சுவராக இருந்த ஒன்று பார்வதியின் கவனத்துக்கு வந்தது. அந்தக் குடும்பத்தில் அவள் கணவன் கடன்காரனாக ஆகி அதே கவலையால் நோய் வாய்ப்பட்டுத் துன்பப்பட்டுக்கொண்டிருந்த காட்சி அவள் கவனத்திற்கு வந்தது. அவள் குழந்தையோடு பார்வதியினிடம் அடிக்கடி வந்து, "அம்மா குழந்தை அழுகிறது. கொஞ்சம் சோறு இருந்தால் ரசம் போட்டுக் கொடுங்கள்" என்று அடிக்கடி கேட்கும் அந்தப் பரிதாபகரமான காட்சி கவனத்துக்கு வந்தது.

ஆனால் அவன் கடன்காரர்களைக் கண்டு அஞ்சி மெலிந்து விட்டான். தன் கணவன் அஞ்சாமல் அவர்களை அஞ்ச வைக்கும் திறமையால் உடல் மெலியாமல் இருக்கிறார் என்று அவள் அறிவு அவளுக்கு உண்மை உணர்த்தத் தொடங்கியது.

"நான் என்னக்கா செய்ய முடியும்?"

"எல்லாம் குடித்தனம் நடத்தும் பெண்களிடம்தான் இருக்கிறது. நீ அவனைக் கண்டித்திருக்க வேண்டும். வீண் செலவு செய்யாமல் தடுக்க வேண்டும். நாங்கள் அப்படிக் குடித்தனம் நடத்தினால் நகை நட்டு நிலம் வீடு இதெல்லாம் வாங்கி இருக்க முடியுமா? அவர் சம்பளம் வாங்கி அப்படியே சல்லிக் காசுகூட எடுக்காமல் கொடுத்து விடுகிறார். அதைத் திறமையாகச் சேர்த்து வைத்து ஒரு வீடு வாங்க முடிந்தது. இவன் வாங்குகிற சம்பளத்தை இவன் போக்கிலே செலவு செய்ய விட்டு விடுகிறாய். இது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை'' என்று சொல்லி வறுத்து வைத்திருந்த வாழைக்காய் வறுவலைப் பிடித்தமாக உண்ணத் தொடங்கினாள்.

அவள் சாப்பாட்டை முடித்ததும் பார்வதியும் தன் உணவைச் சீக்கிரம் முடிக்க முற்பட்டாள். சாப்பிடும்பொழுது சோறு புரைக்கை ஏறியது. "அம்மாதான் என்னைப்பற்றி நினைக்கப் போகிறார்கள். வேறு யார் நினைக்கப் போகிறார்கள்" என்று அவள் மனம் எண்ண ஆரம்பித்தது.

பக்கத்திலிருந்த பானையிலிருந்து காய்ச்சி ஊற்றிய வெந்நீரைக் குடிக்க ஆரம்பித்தாள். கை கழுவிக்கொண்டு சாப்பிட்ட இடத்தைச் சுத்தம் செய்துவிட்டுப் பெருக்கித் தள்ளி விட்டுச் சட்டிப் பானைகளின் மீது தட்டுகள் போட்டு மூடி விட்டுக் கூடத்திற்கு வந்தாள்.

தழையை மெல்வது போல அவன் தமக்கை வெற்றிலை போட்டுக் கொண்டு புதிய வாரப்பத்திரிகை ஒன்று புரட்டிக் கொண்டிருந்தாள். வெள்ளை வெளேர் என்றிருந்த தலையணையில் பச்சை நூலால், 'நல்லிரவு' என்று போட்டிருந்தது. அந்தத் தலையணையைக் கொண்டு வந்து புதிய பாய் ஒன்றையும் கொண்டு வந்து, ''படுத்துக் கொள்ளுங்கள். உண்ட இளைப்பு வண்டியில் வந்தவர்களுக்கு உண்டு'' என்று சொல்லி அதனை விரித்துப் போட்டாள். சிகப்பு நீலம் போட்ட கோடுகள் அந்தப் பாயை அலங்கரித்தன.

## 3

சிவராமன் வழக்கம் போல் நேரங்கழித்து வராமல் அன்று மாலை சீக்கிரம் வீட்டுக்கு வந்தான். கையில் ஒரு பொட்டலம் இருந்தது. வரும்பொழுதே, "அக்கா!" என்ற குரலோடு வீட்டுக்குள் நுழைந்தான். தமக்கையும் தம்பியின் வருகையைக் கண்டு அவன் கையிலிருந்த பொட்டலத்தைக் கண்டாள். "என்னடா இது!" என்று கேட்ட வண்ணம் அதைக் கையில் வாங்கினாள்.

"உனக்காகத்தான் வாங்கி வந்திருக்கிறேன்."

அதை வாங்கி வைத்துவிட்டு உள்ளே யிருந்து குவளையில் காப்பி கொண்டுவந்து கொடுத்தாள்.

அதை வாங்கிக் குடித்தான்.

"உனக்காகத்தான் வாங்கி வந்தேன். பிடித்திருக்கிறதா பார்."

இப்பொழுது அவனைக் கண்டிக்க அவள்நா எழுந்தாலும் மனம் எழவில்லை.

"சீக்கிரம் சமையல் செய்து வை. இன்று நல்ல சினிமாப் படம் ஒன்று வந்திருக்கிறது."

"தமிழ்ப் படமா?"

"ஆங்கிலப் படம். உனக்கு விளங்காது. இரண்டாவது ஆட்டம். நீ வர முடியாது." என்று சொல்லிக்கொண்டே அவன் உடுத்திருந்த ஆபீஸ் உடையைக் களைந்து எட்டு முழம் வேட்டி ஒன்றைக் கட்டிக்கொண்டு மெல்லிய உட்சட்டை ஒன்றைப் போட்டுக்கொண்டு கையில் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

அதில் எழுந்த புகை, வளையம் வளையமாகச் சுற்றிச் சென்றுகொண்டிருந்தது. அந்த வளையமான புகையைப் போலவே அவன் எண்ணங்களும் வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்தன.

"இந்தப் பழக்கத்தை யெல்லாம் விட்டுவிடக் கூடாதா? எல்லாம் உன் அம்மா கொடுத்த செல்லம்தான். கேட்கும் பொழுதெல்லாம் மறுக்காமல் பணம் கொடுத்ததால்தான் இந்த மாதிரிப் பழக்கங்கள் எல்லாம் செய்துகொண்டாய். உங்கள் அத்தானிடம் ஒரு சின்ன பொடி போடுகிறதைக் கூட நீ பார்க்க முடியாது" என்று சொல்லிக்கொண்டே அவன்

குடித்து வைத்த குவளையை எடுத்து வைத்து அடுப்பங் கரைக்குச் சென்று சமையல் வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள்.

"அந்த வீட்டில் தனக்கு என்று ஏதேனும் வேலை இருக்கிறதா?" என்று எண்ணிய வண்ணம் பார்வதி ஆழ்ந்த சிந்தித்துக்கொண்டிருந்தாள். நேற்றைய தினம் "வீட்டை விட்டுப் போ" என்று சீற்றத்தோடு பேசிய சொற்கள் என்னவோ மேலானதாக இருப்பதைப்போல உணர ஆரம்பித்தாள்.

அவன் தமக்கை, வீட்டு விளக்குகளை யெல்லாம் துடைத்து எண்ணெய் ஊற்றிக்கொண்டிருந்தாள். "இந்த வீட்டிற்கு மின்சாரம் போடக்கூடாதா! அப்பா கட்டி முடித்ததோடு சரி. அதற்கப்புறம் ஒன்றும் செய்யாமல் இருக்கிறாய்" என்று சொல்லிக்கொண்டே அவற்றை ஒருபுறம் வைத்தாள்.

"பார்வதி! விளக்கு வைக்கப் போகிறது. வீடு பெருக்காமல் என்ன செய்துகொண்டிருக்கிறாய். ஓ! நாவல் படிக்கிறாயா!" என்று உரத்துப் பேசத் தொடங்கினாள்.

"நாவலா! என் வாழ்வைவிட அவ்வளவு சுவை அதில் இருக்குமா?" என்று சொல்ல வந்தவள் வாய் திறவாமல் இருந்து விட்டாள்.

வீடு பெருக்கும் தொழிலாவது கிடைத்ததே என்று கொஞ்சம் திருப்தி கொண்டாள். கையில் துடைப்பம் எடுத்துக் கொண்டு போட்டிருந்த பாயைச் சுருட்டி 'நல்லிரவு'தலையணையை உள்ளறையில் கொண்டுபோய் வைத்தாள். உள்ளறையைப் பெருக்கிவிட்டுக் கூடத்திற்கு வந்தாள். அவள் கட்டியிருந்த பச்சைப்புடவை அவள் மாநிறத்திற்கு அழகு கொடுத்தது. என்றாலும், சிவராமனின் கண்கள் அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவன் கையிலிருந்த சிகரெட்டு முனையை ஒரு தட்டுத் தட்டிவிட்டு வாயில் வைத்து ஓர் இழுப்பு இழுத்தான். அவன் விட்ட புகை மறுபடியும் வளைந்து வளைந்து சென்று மறைந்தது. சட்டை ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டான்.

"வெளியே போய்வருகிறேன். சமையல் சீக்கிரம் ஆகட்டும்."

சிவராமன் வெளியே போனதும் சிகரெட்டுச் சாம்பலை யெல்லாம் சீராகப் பெருக்கி யெடுத்தாள்.

“இந்தத் தட்டுகளை யெல்லாம் கழுவி வை” என்று அடுக்களையிலிருந்து உத்திரவு வந்தது.

சில தட்டுகளையும் கிண்ணங்களையும் துலக்கிக் கழுவி வைத்தாள். அந்தப் பொட்டலத்திலிருந்த புடவையைப் பார்க்க வேண்டும் என்ற சின்ன ஆசை ஒன்று அவள் உள்ளத்தில் தோன்றியது. ஆனால் அந்த ஆசைக்கே இடம் வைக்காமல் அந்தச் சேலையைப் பிரித்துப் பார்க்காமலேயே அவள் பெட்டியில் வைத்துவிட்டதைப் பார்த்து அந்த எண்ணத்தையும் கைவிட்டு விட்டாள்.

“தம்பிக்கு முட்டை ‘ஆம்லெட்’ என்றால் நிரம்பவும் பிரியம்” என்று சொல்லிக்கொண்டு சில முட்டைகளை உடைத்துக் கிண்ணத்தில் ஊற்றத் தொடங்கினாள்.

“அம்மாவை விடாப் பிடியாகத் தொந்தரவு செய்வான். அவளும் இதெல்லாம் செய்து வைப்பாள். அருமை அறிந்து நடந்து கொள்வதுதான் பெண்களுக்குப் பெருமை” என்று சொல்லிக்கொண்டே வெங்காயம் அறுத்து ஒரு கிண்ணத்தில் போட்டாள்.

“எங்களவர் இப்படி யெல்லாம் கேட்டுச் சாப்பிடமாட்டார். போட்டதைச் சாப்பிட்டு விட்டுப் பேசாமல் எழுவார்” என்று வழக்கம் போல் தன் கணவரின் பெருமையைக் கொஞ்சம் அளந்து பேசினாள்.

“எண்ணெய் அவன் உடம்புக்கு ஆகாது. நெய் கொண்டு வா” என்று சொல்லி அவளே அங்கிருந்த நெய்ப் பாத்திரத்தில் இருந்த நெய்யைக் கடாயில் கொஞ்சம் ஊற்றினாள்.

பார்வதி அழுவதா படுக்கையிலாவது போய் விழுவதா என்று தெரியாமல் சிறிது நேரம் திகைத்து இருந்தாள். ஒரே நாளில் இவ்வளவு பெரிய மாறுதலை எதிர்பார்க்கவில்லை. தனக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுவதற்கோ யாரும் இல்லையே என்ற ஒரு சிறு வருத்தம் அவள் உள்ளத்தில் இடம் பெற்றது.

சிவராமன் வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

“அக்கா! சமையல் ஆகிவிட்டதா?” என்று சொல்லிக் கொண்டே சமையலறைக்குள் வந்தான்.

“உட்காரு” என்று சொல்லித் தட்டைக் கழுவி வைத்தாள். அங்கே நிற்பதா கூடாதா என்று தெரியாமல் சிறிது நேரம் நின்றாள் பார்வதி. சிவராமன் தன்னிடம் வெறுப்பாக நடந்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாது என்ற

காரணத்தால் அந்த அறையை விட்டு வெளியே வந்து விட்டாள்.

"இன்று சமையல் நன்றாக இருக்கிறது" என்ற சொற்கள் மட்டும் சற்றுத் தொலைவில் இருந்த பார்வதியின் காதுகளில் விழுந்தன. இந்தச் சொற்கள் முதலில் அந்த வீட்டில் அடியெடுத்து வைத்துத் தான் முதன் முதலில் சமையல் செய்து பரிமாறிய அந்த நாளில் கேட்டது கவனத்திற்கு வந்தது.

விளக்கு வெளிச்சத்தில் சுவரில் ஒரு பல்லி ஒன்று அசையாமல் இருந்த காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அதன் வாலை மட்டும் கொஞ்சநேரம் பொறுத்து அது அசைத்துக்கொண்டிருந்தது. அதற்கு எதிரில் மற்றொரு பல்லி எதிர்நோக்கி வந்து கொண்டிருந்தது. ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு விளையாடிக்கொண்டிருந்த காட்சியைப் பார்த்துக் கொண்டே கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

சிவராமன் கைகழுவிக்கொள்ளச் சமையலறையிலிருந்து எழுந்தான். அவள் ஒருத்தி கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருக் கிறாள் என்பதையும் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை. ஏதோ பார்வதியின் நிழல் மட்டும் அங்கு இருப்பது போன்ற உணர்ச்சியே அவனுக்குத் தோன்றியிருக்க வேண்டும். அவன் மறுபடியும் கண்ணாடியின்முன் நின்று தன்னை அலங்கரித்துக் கொள்ளும் அரும்பணியில் ஈடுபட்டான்.

"பார்வதி! சாப்பிட வா" என்று கூப்பிடும் குரல் கேட்டது.

சரி! என்ன செய்வது என்று தெரியாமல் தவித்த பார்வதிக்குச் சாப்பிடும் தொழிலாவது கிடைத்ததே என்பதில் திருப்தி கொண்டவளைப் போல், "இதோ வந்து விட்டேன்" என்று வாய்விட்டுப் பேசக்கூடிய சந்தர்ப்பத்தை முழுவதும் பயன்படுத்திக் கொண்டது போலவே அந்தப் பதில் சிறிது உரத்த நிலைமையில் இருந்தது.

பார்வதி உள்ளே போவதற்குள் அவன் தமக்கை வெளியே வந்து கொண்டிருந்தாள். அவளும் சாப்பிட்டு அந்த இடத்தை விட்டு எழுந்து வருவதுபோல் இருந்தது வாயை முன்தானையால் துடைத்துக்கொண்டு வந்த காட்சி.

"இருக்கிறதைப் போட்டுக்கொண்டு சாப்பிடு" என்று சொல்லிய வண்ணம், அவள் சமையலறையை விட்டு வெளியில் வந்து கொண்டிருந்தாள்.

அவ்வளவு உரிமையாவது கிடைத்ததே என்ற திருப்தியோடு அவள் சமையலறைக்குச் சென்றாள்.

சாப்பிட்டது குறைவாக இருந்தபோதும் நேரம் மட்டும் கொஞ்சம் அதிகமாகவே ஆயிற்று. வேறு வேலை இன்னது செய்வது என்று தெரியாத காரணத்தால் அதிலேயே கொஞ்ச நேரம் போககுபவளைப் போல மெதுவாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

“அக்கா! வருகிறேன். ஒரு மணிக்கெல்லாம் வந்து விடுகிறேன்” என்று அவன் குரலும் வெளிக்கதவு சாத்தும் சப்தமும் ஒன்றாகக் கேட்டது.

வெளியே கூடத்தில் பெட்டியில் வைத்திருந்த புடவையின் அழகை விரித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். ‘வயலட்’ நிறத்தில் ஓரமில்லாமல் அழகாக இருந்த அந்தப் புடவை பார்வதியின் கண்களைக் கவர்ந்தது. தண்ணீர் குடிக்கச் செல்வதைப் போல அந்தப் புடவையைப் பார்த்து விடவேண்டும் என்ற ஆசை எழுந்தது. அதற்காக அடுப்பங்கரையை நோக்கி அந்தக் கூடத்தின் பக்கம் வந்தாள்.

நல்ல காலமாகப் பிரித்த புடவையை மடித்து வைக்கப் பார்வதியின் உதவி தேவையாக இருந்தது.

“பார்வதி இதைக் கொஞ்சம் பிடி.”

அதன் மென்மையான தன்மையைத் தொட்டு உணர முடிந்தது. அதன் நீலநிறம் வானத்தின் நீலத்தைப் போலக் களங்கமில்லாமல் விளங்கியது. மங்கலாக இல்லாமல் பளிச்சென்று இருந்தது. விளக்கொளியில் இன்னும் அது எடுத்துக் கொடுத்தது.

“இது உன் மாநிறத்துக்கு எடுக்காது”

ஆமாம் என்று சொல்லுவதா மறுத்துப் பேசுவதா என்று பார்வதியின் மனம் விரைவில் முடிவுகட்ட முடியாமல் திண்டாடியது.

சும்மா இருப்பது நல்லது என்ற சித்தாந்தத்திற்கு வந்தவளைப் போல் ஒன்றும் பதில் பேசாமல் இருந்து விட்டாள். தண்ணீர் குடிக்க வேண்டிய அவசியம் இல்லாததால் மறுபடியும் தன் உள்ளறைக்குச் சென்று படுத்துக் கொண்டாள். தலையணையின் மீது தலை வைத்துப் படுத்தாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. அப்பா பணம் கொடுக்காதது தன்னுடைய தவறா என்று சிந்திக்கத் தொடங்கினாள். அவர் இந்த வேளையில் எங்கே

போயிருப்பார் என்ற கேள்வி விடாமல் அவளுக்கு எழத் தொடங்கியது. "எனக்கு ஆங்கிலப் படமே பிடிக்காது. படம் என்றால் மொழி விளக்கமாகத் தெரியவேண்டும். நம் நாட்டுச் சில பண்பாடு அதில் பொருந்தி இருக்க வேண்டும். நமக்குப் புறம்பான நாகரிகத்தையோ பண்பாட்டையோ இலக்கியத்திலாவது சரி சினிமாப் படத்திலாவது சரி நாம் முழுவதும் அனுபவிக்க முடியாது" என்று அவர் முன்னெல் லாம் சொன்ன சொற்கள் அவள் கவனத்துக்கு வரத் தொடங்கின.

வீட்டில் விளக்குகள் அணைக்கப் பெற்றன. கூடத்தில் எரிந்துகொண்டிருந்த அரிக்கேன் விளக்கு இறுதியில் அணைக்கப்பட்டது. அவன் தமக்கை கூடத்திலேயே படுத்துறங்கினாள். சிறிது நேரத்தில் தூக்கம் அவளைக் கவ்வியது என்பது அங்கே ஏற்பட்ட அமைதியால் தெரிந்தது. உள்ளறையில் எரிந்து கொண்டிருந்த படுக்கையறை விளக்கின் வத்தியைச் சிறுகப் பண்ணினாள். அதன் ஒளியில் 'நல்லிரவு' என்று எழுதிய தலையணை வெண்மையாகக் காட்சியளித்தது. அது ஏதோ வேதனை உண்டாக்குவது போல் இருந்தது. அந்த எழுத்துக்களை அவளால் உற்றுப் பார்க்க முடியவில்லை. சன்னலின் வழியாக வானை நோக்கி மின்னும் விண்மீன்கள் ஏன் மின்னுகின்றன என்று சிந்திப்பவளைப் போல் அவற்றை உற்று நோக்கினாள். தன் தனிமையைப் பார்த்து அவை சிரிப்பன போல அவளுக்குத் தோன்றியது. நிலா அழகாக இருந்தது. ஆனால் அவ்வழகு நிலா அவளுக்கு வேதனையையே கொடுத்தது.

"பிரிந்தவரை வாட்டுவதேன் வெண்ணிலாவே" என்று எப்பொழுதோ எங்கேயோ படித்த பாட்டின் ஓர் அடி அவளுக்குக் கவனம் வர ஆரம்பித்தது. வானின் நிலவைவிட வையகத்தின் இருளே சூழ்ந்திருந்தால் எவ்வளவோ மேல் என்று அவள் எண்ணினாள். அப்பா பணம் கொடுக்கவில்லை என்றால் என்மீது வெறுப்புக் காட்டலாம். ஆனால் ஒவ்வொரு இரவும் ஏன் வீட்டில் தங்கக்கூடாது? அவர் எங்கே போயிருப்பார்? அவர் யாரோடு பழகலாம். ஏன் ஒருநாளைப் போல பலநாள் நேரங்கழித்து வீடு திரும்ப வேண்டும் என்று இன்ன பிற எண்ணங்கள் அவள் உள்ளத்தில் தோன்ற ஆரம்பித்தன. ஒருகால் எந்தப் பெண்ணோடாவது உறவு இருக்குமா? கேட்டால் அதைக் கேட்க எனக்கு உரிமை கிடையாது என்கிறார். அவர் நடத்தையில் தவறலாம்; என்னிடத்தில் அன்பு செலுத்தாமல் இருக்கலாம். ஆனால் அவர் நடத்தையைப் பற்றி நான் தெரிந்து கொள்வதற்குக் கூட

எனக்கு உரிமை கிடையாதா என்றெல்லாம் அவள் மனம் எண்ண ஆரம்பித்தது.

"அக்கா" என்று குரல் கொடுத்தது கேட்டது. அவன் தமக்கை எழுந்த பாடிலலை என்பது மீண்டும் மீண்டும் கதவு தட்டுவதிலிருந்து தெரிந்துகொண்டாள். போகலாமா வேண்டாமா என்று அவள் மனம் இப்படியும் அப்படியுமாக இருந்தது. மீண்டும் கதவு தட்டும் ஒலி கேட்டுக் கதவைத் திறந்தாள். சிவராமன் வாயிலிருந்து ஒரு சொல்லும் வரவில்லை. கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்து உள்ளறையில் படுக்கச் சென்றாள். அவன் தன் அறையில் தங்கி விட்டதை அந்த அறையின் சன்னலகள் திறந்து வைத்ததிலிருந்து தெரிந்து கொண்டாள். மறுபடியும் சிறு விளக்கின் வெளிச்சத்தில் 'நல்லிரவு' தலையணை அவள் கண்களில் பட்டன. அந்த எழுத்துக்கள் கண்களில் படாமலிருக்க அதை எடுத்து வீசி எறிந்துவிட்டு வலிய தூங்க ஆரம்பித்தாள்.

## 4

"ஏன் சாமி இரண்டு மாதமாக இழுத்தடிக்கிறீர்கள். இது நியாயந்தானா?" என்று நீதிபதியின் முன்னால் நியாயம் எதிர்பார்க்கிற குற்றவாளி கூட இவ்வாறு கேட்க மாட்டான். அது நியாயமில்லை என்பது தெரிந்துகொண்டு தான் இவ்வாறு கேட்டான். வேறு இதைவிடக் கடுமையான சொற்களைச் சொல்ல முடியாதபடி அவன் நா அடக்கத்தை மேற் கொண்டது. இவ்வாறு கேட்பது பால்காரனின் பழகிய குரலாக இருந்தது.

"என்ன சாமி! இந்த மாதிரி ஒவ்வொரு வீட்டிலும் இழுத்தடித்தால் நான் மாட்டுக்குப் பிண்ணாக்கு வாங்க முடியுமா வைக்கோல் வாங்கித் தீனிபோட முடியுமா இது எல்லாம் நன்றாக இல்லை" என்று மேலும் அடுக்கிக் கொண்டே பேசிய சொற்கள் காதில் ஒலித்துக் கொண்டி ருந்தன. பார்வதி கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். சூரியனின் கதிர்கள் சன்னல் வழியாக நுழைந்து வீட்டின் மூலை முடுக்குகள் எல்லாம் ஒளி பரப்பி இருளைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

"ஏழு மணி வரையும் தூங்கினால் வீடு பாழாக வேண்டியதுதான்" என்று கனத்த குரலில் கண்டித்துக் கொண்டிருந்த சிவராமனின் தமக்கையாரின் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

"மூதேவி காலெடுத்து வைத்ததிலிருந்து எல்லாம் கஷ்டந்தான்" என்று சலிப்போடு சிவராமன் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

"அவள் என்னடா செய்வாள். எல்லாம் நீ கொடுக்கிற உரிமைதான். பட்டிக்காட்டிலே காக்கை எழுவதற்கு முன்னால் எழுந்து நீர் தெளித்துக் கோலம் போட்டு வந்த பெண் இங்கே..."

"கோலங் காட்டுகிறாள்."

"ஆமாம். நான் இங்கே வந்து தங்காவிட்டால் அவள் என்ன கற்றுக் கொள்ள முடியும்? எல்லாம் நாம் கொடுக்கிற மரியாதையிலேதான் வீட்டுக்கு வருகிற மருமகள் நடந்து கொள்வாள். நான் என்னமோ வேண்டாம் என்று தான் தலைப்பாடாக அடித்துக்கொண்டேன். நீதான் அது நல்ல இடம்; இருக்கப்பட்ட குடும்பம் என்றெல்லாம் பேசி நீ கடைசியிலே தீவினையைத் தேடிக் கொண்டாய். அவரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஜாதகம் சரியாக இல்லை என்று அவர் சொன்னால் நீ கேட்காமல் போய் விட்டாய். அவள் ஜாதக ராசிதான் உன் கையிலே வருகிற பணம் நிற்காது என்று நன்றாக அவரும் சொன்னாரே. இல்லாவிட்டால் நம் அப்பா இருந்தபோது ஒரு கடன்காரன் நம்வீட்டு வாசற்படியிலே நிற்பானா? சோப்புப் பெட்டி ஸ்நோ வாசலைன் இந்த மாதிரிப் பொருள்கள்தாம் நிறைய அடுக்கி வைத்திருக்கிறாள். இதற்கெல்லாம் நீ செலவு செய்துவிட்டு இப்பொழுது கடன்காரர் முன்னால் கவலைப்படுகிறாய்."

"என்ன சாமி! எப்பொழுது வரச்சொல்லுகிறீர்?" என்று நயமான குரலில் இவன் எப்பொழுதோ காலங் குறிப்பிட்டது போலும் அதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு கேட்பவன் போலும் அந்தப் பால்காரன் கேட்ட கேள்வி அமைந்தது.

"சும்மா அடிக்கடி கேட்காதே. அடுத்த மாதம்" என்று கண்டிப்புக் கலந்த குரலில் சிவராமனின் பதில் வந்தது.

"எத்தனை அடுத்த மாதமோ" என்று வெளியே வந்து முணுமுணுத்துக் கொண்ட ஒலி பார்வதியின் காதில் கேட்டது.

பார்வதி வெளியே வந்தாள். என்ன வேலை இருக்கிறது செய்வதற்கு என்ற சிந்தனையில் சுறுசுறுப்பில்லாமல் வெளியே வந்தாள்.

"மணி எட்டாகிறது. இப்பொழுது எழுகிறாய். வீடு குட்டிச்சுவர் ஆனாற் போலத்தான்" என்று அடுக்கு மொழியில் அளந்துகொண்டே யிருந்தாள்.

"எழுந்து நான் என்ன செய்வது?" என்று துணிவாகக் கேட்டாள் பார்வதி.

"பார்த்தாயாடா எதிர்த்துப் பேசுவதை! பெரியவர்கள் சின்னவர்கள் என்பதை மறந்து பேசுகிறாள்."

"எழுந்து கூடமாட வேலை செய்வது. இந்த வீட்டு எசமானி ஆகிவிட்டாய் என்ற திமிரா? எழுந்து நான் என்ன செய்வது என்று கேட்க அவ்வளவு துணிச்சலா? ஏன் சும்மா இருக்கிறீர்கள் இதைப்போலக் கேளுங்கள்'' என்று தமக்கைக்குச் சிவராமன் வழி சொல்லிக் கொடுப்பதைப் போல் இந்தப் பேச்சில் சுவை காணத் தொடங்கினான்.

"ஆமாம். துணிச்சல்தான்; எல்லாம் நீ கொடுத்த அதிகாரம் தான். நானும் பார்க்கிறேன். நான் வந்த நாளாக முகத்தில் சிடுசிடுப்பைத் தவிர கலகலப்பில்லை. வாய்விட்டுச் சிரித்து நான் பார்க்கவில்லை. மனம்விட்டுப் பேசி நான் கேட்கவில்லை. நான் என்ன உங்கள் வீட்டுச் சோற்றுக்கு வந்தேனா? துணிக்கு வந்தேனா? அப்படித்தான் திக்கற்று வந்துவிட்டால்கூட இவளிடத்தில் ஒரு நாள்கூடக் குப்பை கொட்டமுடியாது" என்று முகாரி ராகத்தில் வசை மாறி பொழியத் தொடங்கினாள்.

"சீ கழுதை வாயை மூடு" என்று வாயை மூடிக் கொண்டிருந்த பார்வதியை நோக்கிச் சீறினான்.

பார்வதியால் இனி அடங்கிக் கிடக்க முடியவில்லை.

"நான் சொல்லியதில் என்ன தவறு இருக்கிறது. உங்களிடத்தில் எனக்கென்ன வருத்தம் இருக்கிறது. அவர் என்னிடத்தில் காரணமில்லாமல் கோபம் கொண்டு நடந்து வருகிறார். அதற்குத்தான் நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நான் சிரித்து மகிழக்கூடிய வாழ்வு எனக்கு இப்பொழுது இல்லை. அதனால் நான் அமைதியாக இருக்க வேண்டியிருக்கிறது. நான் செய்து வந்த வீட்டு வேலைகளையும் என்னைச் செய்ய விடாமல் நீங்களே செய்து வருகிறீர்கள். அதனால்தான் எழுந்து நான் என்ன செய்வது

என்று கேட்டேனே தவிர உங்களிடத்தில் நான் ஏன் வருத்தம் கொள்ளப் போகிறேன். விருந்தினராக வந்த உங்களிடத்தில் நான் ஏன் வம்பு வைத்துக் கொள்ளப் போகிறேன்."

"நானா விருந்தினள். பார்த்தாயாடா! இன்று வந்து நாளைக்குப் போகிறவளிடத்தில் எனக்கு என்ன இருக்கிறது என்று சொல்லுகிறாள். இதுதானே அவள் கருத்து! வேண்டாம். இப்பொழுதே அவருக்கு ஒரு தந்தி கொடு. இனி அரை நாழிகையும் இந்த வீட்டில் தங்கமுடியாது. என்னை விருந்தினர் என்று சொல்லிப் பிரித்து வைத்து விட்டாள். நேற்று வந்தவளுக்கு இவ்வளவு அதிகாரம் யார் கொடுத்தது. என்ன இதையெல்லாம் கேட்டுக்கொண்டு நீ சும்மா இருக்கிறாய்."

"இல்லை. சிகரெட்டு வாயில வைத்திருக்கிறேன். எப்படி நான் பேசுவது? சிகரெட்டைப் பிடித்து முடித்து விட்டுப் பிறகு கருத்துரை வழங்குகிறேன்" என்று சாவதானமாகப் புகையை விட்டுக் கொண்டிருந்தான். அதன் சாம்பலைத் தட்டிவிட்டுத் தன் தலைமைப் பேச்சை முடிக்கத் தொடங்கினான்.

"ஆகவே, இரண்டு பேச்சாளர்களும், மிகச்சிறந்த முறையில் பேசினீர்கள். கருத்துப் பஞ்சமும் சொல்வளமும் நிறைந்த உங்கள் உணர்ச்சிமிக்க பேச்சைக் கேட்டுப் பாராட்டுகிறேன். ஆனால் இந்தப் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கூடியிருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் கூட்டத்திற்குத் தலைமை வகித்த நானே பொதுமக்களின் வாரிசாகவும் இங்கே உட்கார வேண்டியதாக ஏற்பட்டது. செயலாளர் இல்லாத காரணத் தால் இங்கே பேச்சில் கலந்துகொண்ட பேச்சாளர்களுக்கும் தலைவர் அவர்களுக்கும் என் மனப்பூர்வமில்லாத நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு கூட்டத்தை இனிது முடிக்கிறேன்."

"ஏன் கைதட்டாமல் சும்மா கேட்டுக்கொண்டிருக் கிறீர்கல்" என்று சிறிது உரத்த குரலில் சொல்லத் தொடங்கினான்.

பார்வதி அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் சிறிது நேரம் தயங்கினாள். சே! இவ்வளவு பேச்சு வளர்ந்ததற்குத் தான் காரணமாக இருக்கக்கூடாது என்று எணணிய வண்ணம் அந்த இடத்தை விட்டுப் புழக்கடைக்குப் போய் கிணற்றிலிருந்த நீரை இழுத்துத் தொட்டியில் நிரப்பிக்

கொண்டிருந்தாள். பிறகு, செடிகளுக்கு அந்த நீரை ஊற்றத் தொடங்கினாள்.

"ஏன் அக்கா! அவள் சின்னவள்; அனுபவமில்லாதவள். அவள் சொல்லுவதற்கு நீ வருத்தப்படலாமா. அவளுக்கு உன்னிடத்தில் ஒருவித மனக்குறைவும் இல்லை" என்று சாவதானமாகப் பேசிக்கொண்டிருந்த சொற்கள் பார்வதியின் காதில் பட்டன.

பார்வதி தோட்டத்தில் தொட்டிகளில் இருந்த செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள். உலர்ந்த தன் நெஞ்சில் யாரோ குளிர்ந்த நீரை ஊற்றிக் குளிர்விப்பது போல் அவளுக்குத் தோன்ற ஆரம்பித்தது.

அங்கே வந்து மூன்று நாட்கள் கூட ஆகவில்லை. ஆனால் முப்பது நாட்கள் தங்கிவிட்டதைப் போன்ற பழமை அவன் தமக்கைக்குத் தோன்ற ஆரம்பித்தது.

"நானும் சொன்னேன். அவரோடேயே வந்து விடுகிறேன் என்று. அவர் கேட்டால்தானே! அங்கே யாரும் உனக்குப் பேச்சுத் துணையிருக்க மாட்டார்கள். உன் தம்பி வீட்டில் கொஞ்சநாள் இரு என்றார். அவர் சொல்லாவிட்டால் நான் ஏன் வருகிறேன்" என்று பழைய பல்லவியை வேறு ராகத்தில் பாடினாள்.

ஆள் தலை காட்டாமல் ஒரு குரலும் கடிதமும் உள்ளே விழுந்தன.

"தபால்" என்று சொல்லிவிட்டு ஒரு கடிதம் உள்ளே போட்டுவிட்டு அவன் வழக்கம் போல் அடுத்த வீடுகள் தேடி நடந்தான்.

"பார்வதியின் பேருக்கு வந்திருக்கிறது."

"எங்கிருந்து?"

"எல்லாம் அவள் அப்பாவிடமிருந்து."

இந்தச் சொல் மட்டும் தோட்டத்திலிருந்து வந்து கொண்டிருந்த பார்வதியின் காதில் பட்டது. அந்தக் கடிதம் பார்ப்பதில் அவளுக்கு அவ்வளவாக ஆர்வம் இல்லை.

"இந்தா உங்கள் அப்பா எழுதி யிருக்கிறார்."

கடிதத்தை எடுத்துக் கொண்டு உள்ளறைக்குப் போனாள்.

சிறிது நேரம் பொறுத்துச் சிவராமனும் உட்சென்றான்.

"என்ன ஏதாவது நம்பிக்கை இருக்கிறதா?"

ஒன்றும் பேசாமல் இருந்தாள்.

"சரி. அவன் வழிக்கு வரமாட்டான். நான் முடிவாகச் சொல்வது இதுதான். அந்தப் பணம் பத்தாயிரம் வரவில்லை என்றால் என்னால் குடித்தனம் செய்ய முடியாது. இறுதியாக எழுதிவிடு. பத்தாயிரம் தருவதாகச் சொன்ன சொல்லைக் காப்பாற்றச் சொல். இல்லையானால் உன்னை வைத்துக் கொண்டு காலத்துக்கும் காப்பாற்றச் சொல்."

சிவராமன் வேலைக்குப் போனதும் தன் அப்பாவுக்குக் கடிதம் எழுதுவதற்குப் பார்வதி முனைந்தாள்.

## 5

"நலம் தெரிவிக்கவும் என்று ஒவ்வொரு கடிதத்திலும் நீர் எழுதி வருகிறீர். உண்மையில் என் நலத்தில் உங்களுக்கு அக்கரை இருக்குமானால் பத்தாயிரத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். இல்லாவிட்டால் என்னை வந்து அழைத்துப் போகவும்" என்ற பகுதியை எல்லோரும் கேட்குமாறு வாய்விட்டுப் படித்தார் பார்வதியின் தந்தை சிவக்கொழுந்து.

"இந்தச் சிவக்கொழுந்தா இந்த மிரட்டலுக்குப் பயப்படுகிறவன். அவன் வைத்து வாழாவிட்டால் நான் ஹைகோர்ட்டுவரை போய் ஒருகை பார்த்துவிட மாட்டேனா!"

"பார்த்து விடுவீர்கள். அப்பொழுதே நான் சொல்ல வில்லையா! உங்கள் திறமையெல்லாம் வியாபாரத்திலே காட்டுங்கள்; திருமணத்திலே காட்ட வேண்டாமென்று"

"ஆமாம், ஆயிரம் பொய்சொல்லி ஒரு கலியாணத்தை நடத்தி வை என்பார்களே! நான் என்ன ஒரு பொய்தானே சொன்னேன்."

"சரிதான். நீங்கள் ஆயிரம் பொய்சொல்லியிருந்தால் நம்ம பெண்ணுக்குக் குழி தோண்டி வைக்க வேண்டியது தான். ஒரு பொய்க்கே இந்த நிலைமை என்றால் ஆயிரம் பொய் வேறு சொல்ல வேண்டுமா! சொல்லுவீர்கள்."

"சரிதான்! அவன் கிடக்கிறான். அவன் சோறு போடா விட்டால் நம்ம வீட்டிலே கிடக்கிறாள். அவன் போடுகிற பிடிச் சோற்றுக்கு நம்ம ஆஸ்தியிலே பத்தாயிரம் அவனுக்குக் கொடுக்க வேண்டுமா? நாய் தின்று விட்டுப் போகுது அவன்

அவளுக்குப் போடுகிற சாப்பாடு. என்னமோ படித்த பையனாச்சே என்று பார்த்தால்..."

"அதுதான் அவன் விடாப்பிடியாக இருக்கிறான். நீங்கள் ஏன் சொல்ல வேண்டும்?"

"ஆமாம், நான் சொன்னேன். சுரைக்காய்க்கு உப்பு இல்லை என்று. கலியாணம் ஆகட்டும்பா' ஏதோ பார்த்துப் பெண் மேலே எழுதிவைக்கிறேன் என்று சொன்னேன். பத்தாயிரம் அவன் கேட்டான். சரிதான், பார்க்கலாம் என்று சொன்னால் அதை அப்படியே கெட்டியாகப் பிடித்துக் கொண்டால் அது அவன் தப்புதான். நாங்கள் கூட வியாபாரத்திலே எவ்வளவோ சொல்லுகிறோம். அப்படியே கொடுத்துவிட முடியுமா? பைத்தியக்காரப் பையன்!"

"நீங்கள் கெட்டிக்காரர்தான். யாருக்குக் கொடுக்கப் போறீங்க. நம்ம பெண்ணுக்குத் தானே! அவன் மனசும் திருப்தியடையட்டுமே. அவனுக்குப் பணமா கொடுக்கா விட்டாலும் நம்ம பெண்மேலே ஏதாவது சொத்து எழுதி வைத்து விடுங்கள்."

"பின்னே மகனைப்பற்றி உனக்கென்ன அக்கரை. மகளுக்கு எழுதிவைத்துவிட்டு நானும் என் மகனும் நடுத் தெருவில் நிற்கவேண்டியதுதான்."

"என்னப்பா! என்னையும் நடுச்சந்திககுக் கொண்டு வந்து விட்டீர்கள்" என்று சிவக்கொழுந்தும் அவர் மனைவியும் பேசிக்கொண்டிருந்த பேச்சின் இடையில் அவர்கள் மகன் மாணிக்கம் குறுக்கிட்டான்.

"எல்லாம் உன் தங்கையைப் பற்றித்தான்."

"என்னப்பா! தங்கை என்ன எழுதியிருக்கு."

"பணம் பத்தாயிரம் அவள் அத்தானுக்கு எழுதி விட்டு நாம் நடுத்தெருவில் நிற்க வேண்டுமாம்."

"என்னப்பா! ஏதாவது எழுதி வைத்து விடுவது தானே. அவர்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்று தானே நாம் விரும்பவேண்டும்."

"அதற்கு நம் நிம்மதியைக் கெடுக்கவேண்டுமா?"

"உலகமே அப்படித்தான்'பா. ஒருவர் நிம்மதியாக வாழவேண்டுமானால் மற்றவர் நிம்மதி குலையவேண்டும். இருவரும் நிம்மதியாக வாழ உலகம் இன்னும் கற்றுக் கொள்ள வில்லை."

"சரிதான், வீட்டைப் பற்றிப் பேசு என்றால் உலகத்தைப் பற்றிப் பேசுகிறான்" என்று குறுக்கிட்டாள் அவன் தாய்.

"வீடுதான் உலகம். உலகம்தான் வீடு."

"தலைதான் வால்; வால்தான் தலை. அதைப்பற்றி யெல்லாம் உன்னிடம் கேட்கவில்லை."

"அப்பா! ஆண்பெண் இருவரும் இரண்டு கண்கள். ஒரு கண்ணைப் பாழாக்கிவிட்டு மற்றொரு கண்ணுக்கு ஒளி கொடுக்கலாம் என்பது தவறான எண்ணம். இரண்டு கண்களையும் ஒன்றாகவே கருதவேண்டும்."

"சரிதான். தங்கள் அறிவுரை கேட்டு நடக்கவேண்டிய காலத்தில் தங்களைக் கூப்பிட்டுக் கேட்கிறேன். போய் உன் வேலையைப் பாரு" என்று சொல்லிவிட்டு அந்தக் கடிதத்திற்கு என்ன எழுதலாம் என்று யோசனை செய்து கொண்டிருந்தார்.

"என்ன செய்வது. அவளும் கண்டிப்பாக எழுதியிருக் கிறாளே!"

"ஆமாங்க. ஏதாவது ஆறுதலாக எழுதுங்க. அதுவே இரவும் பகலும் கவலையாக இருக்குது. ஏதாவது செய்து கொள்ளப் போகிறாள்."

"நான் மட்டும் அவனுக்கு ஒன்றும் கொடுக்க முடியாது. அதனாலே என்ன ஆனாலும் சரி! அவன் அவளை வைத்து வாழாவிட்டால் ஜீவனாம்சத்துக்கு வழி நான் தேடி வைக்கிறேன், அவளைப் போய் அழைத்துக் கொண்டு வந்து விட்டால் அவன் தானாக வழிக்கு வருகிறான்."

இந்தத் தீர்மானத்துக்கு வந்தவராக அவர் தன் பேனாவை எடுத்து எழுதத் தொடங்கினார்.

"அதுவும் சரியான யோசனைதான். அங்கேயே விட்டு வைத்ததனால்தான் அவனும் அவளிடம் அது மாதிரி நடந்து கொள்கிறான்,"

"அது மட்டுமில்லை. அவன் அக்கா வேறு அங்கே வந்திருக்கிறாள். எல்லாம் அவள் சொல்லிக்கொடுக்கிற பாடம் தான்."

"மாணிக்கம்! இதைத் தபாலில் போட்டு விட்டு வா."

"இன்னும் இரண்டு நாளிலேநானும் பட்டணம் போகப் போகிறேன். தங்கையை அழைத்து வருகிறேன்."

"என்னப்பா! தங்கையை அழைத்துக் கொண்டு வரப் போகிறீரா, வேண்டாம். வாழ இருப்பவளைத் தாழச் செய்து விடாதீர்கள்."

"நீ சும்மா இரு. சில நாள் அவள் இங்குத் தங்கி இருக்கட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்."

அந்தக் கடிதத்தைப் போடுவதா வேண்டாமா என்ற சிந்தனையில் மாணிக்கம் ஆழ்ந்து விட்டான்.

## 6

பொழுது போவது மிகவும் அரிதாக இருந்தது. திடீரென்று காலம் மெல்லப் போவது போல பார்வதிக்குத் தோன்றியது. திருமணம் நடந்து இங்கே வந்த நாட்களாகப் பொழுது மிகவும் விரைவாகப் போய்க் கொண்டிருந்தது. மிக அதிகமாக வேகமாகக் காலம் சென்று விட்ட காரணத்தால் தான் காலதேவன் இப்பொழுது காலத்தை மெல்ல இயக்குவது போல் அவளுக்குத் தோன்றியது. 'காலண்டரில்' இருந்த தேதி கிழிபடாமல் அப்படியே இருப்பது போல் தோன்றியது. அவளுக்கு வந்த மன எரிச்சலில் அதில்இருக்கும் காகிதங்களை யெல்லாம் மடமட என்று கிழித்துக் காலத்தைத் தள்ளி வைத்து விடலாமா என்று எண்ணினாள். கடிகாரத்தைப் பார்த்தவுடன் அதில் இருக்கின்ற முள்ளும் மெல்லவே அசைந்து சென்றது. கையாலாவது பிடித்துத் தள்ளி உதவலாமா என்று கைகள் துடித்தன. வெளியே பொழுதைப் பார்த்தாலும் அதுவும் மெல்லவே மாறுவதாக அவளுக்குத் தோன்றியது. மனம் எரிச்சலாக இருந்தது. அங்கே இருந்த பழைய பத்திரிகைகள் எல்லாம் படித்துப் பழகிப் போன பத்திரிகைகளாக இருந்தன. பேசுவதற்குத் துணை யாரேனும் கிடைப்பார்களா என்று அவாவியது அவள் உள்ளம். சண்டை போடுவதற்கு வேண்டுமானால் அவர் தமக்கை இருக்கிறார் என்ற எண்ணம் வந்தது. சும்மா இருப்பதைவிட சண்டையாவது போடலாமா ஏதாவது பேசி வம்புக்காவது இழுக்கலாமா என்ற எண்ணமும் தோன்ற ஆரம்பித்தது. அந்த வீடு முழுவதும் பார்த்துப் பழகிப் போன வீடாகக் காட்சியளித்தது. உயரமாக நின்றிருந்த பீரோவும் அதில் இருந்த கண்ணாடியும் எல்லாம் பழைய உருவங்களாகவே விளங்கின. கண்ணாடி முன்னால் நிற்கின்ற தன்னுருவமும் மிகப் பழகிய முகமாக இருந்தது. புதுமையற்று மிகவும் மந்தமாக விளங்கியது. களையிருந்த தன் முகத்தில்

களைப்பே தென்பட்டது. உணர்ச்சியற்ற மரமாகவாவது பிறக்கக் கூடாதா என்று எண்ணத்தொடங்கினாள். அதுகூட வெளிச்சத்தை நாடித்தான் வாழ்கிறது. கூடத்தில் மாட்டியிருந்த படங்களை யெல்லாம் உடைத்துப் போட்டு விடலாமா என்று கூட அவள் மனம் எண்ணத் தொடங்கியது. அப்படிப் பார்த்த படங்களையே பார்த்துக் கொண்டிருப்பது என்பதில் வெறுப்பு ஏற்பட்டது. ஏன் வீணாகப் படம் பிடித்து வைக்கிறார்கள் என்று ஆராயத் தொடங்கினாள். என்றோ திருமணம் நடந்தது. அந்தப் படத்தைப் பார்த்துப் பார்த்து இப்பொழுது அவளுக்குச் சலித்துப் போய் விட்டது. இதேபோல எப்பொழுதுமா நிற்கவேண்டும். மனித உள்ளத்தில் எத்தனையோ மாறுதல்கள், வளர்ச்சிகள். உருவத்தில் எவ்வளவோ மாற்றங்கள். இந்தப் படங்கள் மட்டும் ஏன் மாறாமல் இருக்கின்றன. அவற்றை அவளால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. நல்ல வெயிலில் நின்று அந்தச் சூட்டையாவது அனுபவிக்கலாமா என்று அவள் எண்ணினாள். சே! பைத்தியக்காரி என்று மற்றவர்கள் நினைக்கக் கூடும். பைத்தியக்காரியின் நிலைமை எவ்வளவோ மேல். அவள் வாய்விட்டுச் சிரிக்கலாம்; ஓ வென்று அழலாம். அந்த உரிமை எனக்கு இருக்கிறதா? இல்லை, ஏன் உணர்வு என்பது எனக்கு இருக்க வேண்டும்? உணர்வுள்ள மனிதராகப் பிறந்த பிறகு உணர்வையெல்லாம் அடக்கி எப்படி வாழ முடியும்? இதைப் போன்ற எண்ணங்கள் பல வேகமாக அவள் மனத்தில் வந்து குவிந்துகொண்டிருந்தன. அவற்றை அடக்கி வைக்க முடியாத காரணத்தால் சன்னல் வழியாக நின்று வேடிக்கையாவது பார்க்கலாம் என்று எண்ணியது அவள் மனம். அவள் மனம்போன வழி கால்களும் பின் தொடர்ந்தன.

தெருவிலும் சுறுசுறுப்பு இருந்ததாகத் தெரியவில்லை. சில நாட்களுக்கு முன் தெருவில் முள்ளங்கி விற்றிருந்த அந்தப் பெண்ணின் உருவம் மனதில் வர ஆரம்பித்தது. சுமை நிறைந்த உடை; அதைத் தூக்க முடியாமல் தூக்கிய அந்த நிலைமை; அவள் கழுத்தில் அதன் அடையாளமாக ஓடிய பச்சை நரம்பு; இறுதியில் எல்லாம் வயிற்றுக்குத் தான் என்று சொல்லிய அந்தச் சொற்கள் அவள் கவனத்துக்கு வந்தன.

"எல்லாம் வயிற்றுக்குத்தான்" இல்லை என்று அவள் மனம் வாதாட ஆரம்பித்தது. எங்கள் வீட்டில் எனக்குச் சோறு இல்லையா? சோறுபோட மறுப்பார்களா? அதே போல அவருக்குச் சோற்றுக்கு வழியில்லாமலா பணம் கேட்கிறார்.

இல்லை. அவள் சொல்லியது தவறு என்ற எண்ணம் தோன்ற ஆரம்பித்தது. 'இல்லை' அவள் சொல்லத் தெரியாமல் சொல்லியிருக்கிறாள். நாகரிகமாகச் சொல்லி இருக்கிறாள். வாழ்க்கையின் தேவைகள் வெறும் உணவு மட்டுமில்லை. வயதுக்கும் சூழ்நிலைக்கும் மனித மனத்திற்கும் ஏற்றவாறு அவ்வப்பொழுது எழும் வேட்கைகளைத்தான் 'அவள் எல்லாம் வயிற்றுக்குத்தான்' என்று சுருக்கமாகச் சொன்னாள்.

மனிதர் வாழாமல் இருக்க முடியாது. வாழ்வதற்கு அவ்வப்பொழுது தூண்டுதல்கள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. வயதுக்கும் காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற தூண்டுதல்கள் உண்டாகிக் கொண்டுதான் இருக்கின்றன. சிலவற்றை வாய்விட்டுச் சொல்ல முடியும். சிலவற்றைச் சொல்ல முடியாது. அதைத்தான் அவள் நாகரிகமாக 'எல்லாம் இந்த வயிற்றுக்காகத்தான்' என்பது அவளுக்குத் தெளிவாகத் தோன்றிற்று.

சன்னல் அருகில் உட்கார்ந்தாள். கம்பிகளுக்கு வெளியே உலகம் இருந்தது. அங்கே சிட்டுக்குருவியொன்று சுற்றிச் சுற்றித் தன்னிச்சைபோலப் பறந்து சென்றது. வண்ணக்கிளி ஒன்று தன் இணைக்கிளியோடு வானில் பறந்து கண்ணுக்கெட்டாத் தூரத்திற்கு மறைந்து சென்றது. ஆனால் இந்த மனித இனத்தின் வேகம்தான் மெல்ல அசைவதுபோல் அவளுக்குத் தோன்றியது.

அவள் சிந்தனையை அந்தச் சிட்டுக்குருவியைப் போலப் பறக்கவிட விரும்பினாள். ஆனால் அந்தச் சிட்டுக்குருவி போலப் பறக்காவிட்டாலும் அதைப் போலவே புறப்பட்ட இடத்திற்கே சுற்றிச் சுற்றி வந்தது.

வெளியே சைக்கிள் மணியொன்று கேட்டது. அதோடு 'போஸ்ட்' என்ற ஒலியும் கேட்டது. அடங்கியிருந்த மனம் ஆவலின் எல்லையை அடைந்து விட்டது. சட்டென்று சுறுசுறுப்புப் பிறந்தது. இரண்டில் ஒன்று என்ற திடசித்தம் ஏற்பட்டது. ஒன்று இங்கே இருந்து வாழ்வது. இல்லா விட்டால் அதைப்பற்றி எண்ணுவதற்குள் அவள் அந்தக் கடிதத்தைக் கையில் வாங்கினாள்.

மிக விரைவாக அவள் பார்வை அதன்மீது சென்றது. மேலே பார்வதி என்ற பெயர் இல்லாமல் இருந்தது. 'சிவகாமி' என்ற பெயர் இருக்க அவள் சிந்தனை கலைந்தது. சிவராமனின் தமக்கைக்கு அவர் கணவர் பம்பாயிலிருந்து எழுதிய கடிதம் அது என்பது நிதானமாகப் பார்த்த பிறகு

தான் விளங்கிற்று. பம்பாய் முத்திரையும் அதில் பொறிக்கப் பெற்றிருந்தது.

"என்ன! கடிதம் ஏதேனும் வந்ததா? என்று அதிகார அடிப்படையிலே அவன் பேச்சு எழுந்தது.

"ஆம், கடிதம் ஒன்று வந்திருக்கிறது."

"என்ன எழுதியிருக்கிறான் அந்த மடையன்?"

"இந்தா" என்று நீட்டினாள் அந்தக் கடிதத்தை. "என்ன எழுதியிருப்பார்; மகளே! நலம். நலம் தெரியபடுத்தவும். உன் நாத்தனார் எப்பொழுது வீட்டை விட்டு ஒழிவாள். எல்லாம் ரகசியமாகத் தான் எழுதியிருப்பார்கள். நமக்கு ஏன் அதெல்லாம் வேண்டாம்."

"மடையன் என்ன எழுதுவான். வந்து அழைத்துப் போக மாட்டேன் என்று எழுதியிருப்பான். காட்டு அதை" என்று நீட்டியிருந்த கடிதத்தைப் பார்த்தான். வேகம் குறைந்து விட்டது.

"அத்தான் எழுதியிருக்கிறாரு. அவசரப்பட்டு விட்டேன்."

"சரிதான். புது இடம் பாரு. அவருக்குக் கடிதம் எழுதாமல் இருக்க முடியாது. அவருக்குச் சதா உன் மேலேதான் தம்பி அடித்துக்கொண்டிருக்கும். மைத்துனன் அனுபவமில்லாதவனாயிற்றே! ஆபீசிலே எதிர்த்துப் பேசாமல் இருப்பது எப்படி என்று அவனுக்குத் தெரியாதே என்று அப்பொழுது சொல்லிக்கொண்டிருப்பார். இப்பொழுதும் உனக்கு ஏதாவத புத்திமதி சொல்லியிருப்பாரு" என்று சொல்லிக்கொண்டே அந்தக் கடிதத்தை வாங்கினாள். அதைப் பலரறிய படிக்கலாமா! தனியே படிக்க வேண்டிய ஒன்றா என்று தெரியாமல் சிறிது நின்றாள். சரி! தம்பியும் கேட்கட்டுமே என்ற தயவால் படிக்கத் தொடங்கினாள். "அன்பும் பிரியமும்" அதற்குமேல் வாய்விட்டுப் படிக்காமல் நிறுத்தினாள்.

"ஆமாம்'கா. அவர் கையெழுத்துக் கிறுக்கெழுத்துத் தான். நிதானமாகப் படித்துக்கொள்" என்று அந்த இடத்தை விட்டு விலகிச் சென்றான். அவன் அந்த இடத்தை விட்டுப் போய் விட்டதால் மேலே வாய்விட்டுப் படிப்பதை நிறுத்திக் கொண்டாள். கண்களும் மனமும் அந்த எழுத்துக்களின் கருத்துக்களோடு உறவாடின.

"மடையன் என்ன எழுதுவான்" அந்தச் சொற்களுக்கு உயிர் இருப்பதுபோல் பார்வதிக்குத் தோன்ற ஆரம்பித்தது. காதில் ஒலித்துக் கொண்டே இருந்தன. "வந்து அழைத்துப் போக மாட்டேன் என்று எழுதியிருப்பான்" இந்த ஒலி அதனோடு இயங்கி எதிர்ஒலி செய்து கொண்டிருந்தது.

"அழைத்துப் போகாவிட்டால் நானே போகிறேன். ஏன் போகக்கூடாது" என்று எண்ணியவளாய் அந்த வீட்டில் நடக்கும் நடைமுறைகளில் மனம் இல்லாதவளாக இருந்தாள்.

வெளியே சைக்கிளின் மணியொன்று அடிக்கும் சப்தம் கேட்டது. சிவராமன் வெளியே சென்றான்.

"நாளைக்கு ஆபீசில் சாயுங்காலம் சந்திக்கிறேன்."

"அச்சா! நான் வர்ரான்" என்று பதில் குரல் கேட்டது.

உள்ளே திரும்பியதும் சிவராமன் கவலை தோய்ந்தவனாகக் காணப்பட்டான். விடாமல் சிகரெட்டுப் புகையை இழுத்துக்கொண்டிருந்தான். அந்தப் புகையாவது உட்சென்று உள்ளத்தில் உள்ள கவலையைப் போக்குமா என்ற எண்ணத்தோடு இழுப்பவன் போல் இருந்தது அவன்நிலை. புகை மட்டும் வெளியே வந்தது. கவலை உள்ளே அழுந்திக் கிடந்தது.

வைரம் போன்று இருந்த அவன் மனம் கவலையால் இளகிவிட்டது என்றுதான் சொல்லமுடியும்.

"பாரு!" என்று கொஞ்சம் கனிவோடு கூப்பிட்டான்!"

அழுதுகொண்டிருந்த கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவள் கண்களில் புத்தொளி உண்டாயிற்று. உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்தாள். சிறிது தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"உன்னிடத்தில் ஒன்று கேட்கப் போகிறேன்" அவள் உள்ளம் குளிர்ந்தது. மகிழ்ச்சி முகத்தில் பிறந்தது. ஆனால் அவர் என்ன கேட்கப் போகிறார் என்பது அவளால் எதிர்பார்க்க முடியவில்லை. கடுமையான புயலுக்குப் பின் இவ்வளவு அமைதியும் ஏற்படுமா என்று எண்ண ஆரம்பித்தாள். ஓய்வில்லாக் கடல் அலைகள் சிறிது ஓய்வு கொள்வதுபோலிருந்தது.

அவனுடைய விழிகளைத் தன் விழிகளால் அளந்து பார்த்தாள்.

"எனக்கு இப்பொழுது ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது" மனம் திடுக்கிட்டது. அவன் பேசிய கடுஞ்சொற்களெல்லாம் பாசி போலச் சிறிது சிறிதாக மனத்தை விட்டு நீங்க ஆரம்பித்தன.

"என்ன சொல்லுங்கள்?"

"அவசரமாக ஐந்நூறு ரூபாய் வேண்டும்; அதற்கு உன் தங்கச் சரடு வேண்டும்; விற்றுவிடப் போகிறேன்." சிறிது நேரம் தயங்கினாள்; அவள் தந்தை கண்முன் வந்து நின்றார். அவர், "ஏன் கொடுத்தாய்?" என்று கேட்டால் என்ன பதில் சொல்வது என்ற எண்ணம் வந்தது. அடுத்த வினாடி அந்தக் கேள்விக்குப் பதில் தேடாமல் தன் கைகள் சென்றன. அதற்குள் வெளியே கார் வந்து நின்ற சப்தம் கேட்டது.

"உங்கள் அப்பா வந்திருக்கிறார்" கழற்றிய சரடு கையில் வைத்திருந்தாள். அதைத் தயங்காமல் அவன் கையில் கொடுத்தாள்.

"வேண்டாம்; உன் கழுத்திலேயே போட்டு வை" என்று சொல்லிவிட்டு விரைவில் வெளியே வந்தான். அதை மறுபடியும் கழுத்தில் போட்டுக் கொண்டு பார்வதியும் வெளியே வந்தாள்.

"வா, அப்பா" என்று சொல்லி வரவேற்றாள்.

"மாப்பிள்ளை, ஆபீஸுக்குப் போகவில்லையா?"

"இன்று விடுமுறை" என்று சொல்லிவிட்டுச் சரியாக நின்று பேசாமல் அவன் உள்ளே போய்விட்டான்.

பார்வதி, அவர் கொண்டு வந்த கைப்பையை எடுத்து உள்ளே வைத்தாள். அவர் அந்த டாக்ஸியின் அளவுக் கருவியைத் தன் மூக்குக் கண்ணாடி போட்ட கண்களால் ஒரு பார்வை பார்த்தார். மூன்று ரூபாய் நாலணா கொடுத்தார். அதை அவன் கொஞ்ச நேரம் எண்ணிப் பார்த்தான். தயங்கி நின்றான்.

"என்னப்பா! ஏன்?

"ஒன்றுமில்லைங்க..."

"ஏதாவது போட்டுக் கொடுத்தனுப்புப்பா. அதுக்குத் தான் நிற்கிறான்" மனம் வராமல் அணா நாலு எடுத்துக் கொடுத்தார்.

அவன் அதிருப்தியோடு "மறுபடியும் சும்மா போகணும்..." என்று சொல்லிக்கொண்டு அந்த இடத்தை

விட்டு நீங்கினான். கார் 'விர்ர்' என்ற ஒலியோடு வேகமாகப் புறப்பட்டது. கார் நின்ற இடம் வெறிச்சென்றிருந்தது. அவர் வீட்டின் அறையில் போடப்பட்டிருந்த கை உடைந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். கூடத்தில் மாட்டியிருந்த 'கோட் ஸ்டாண்டில்' தன் மேல் துணியை எடுத்துக் கலைந்த மடிப்பு ஒன்று சேராமல் மாட்டி வைத்தார். அந்தக் கோட்முளையின் முனை அவர் குடுமியைப் போல் நீட்டிக் கொண்டிருந்தது. சிவராமனுக்கு அவரிடம் பேசலாமா வேண்டாமா என்ற சிந்தனை சிறிது அவன் எண்ணத்தில் இடம் பெற்றது. அடுப்பங்கரையில் அக்காவிடம் அவர் வந்திருக்கும் செய்தியைச் சொன்னான்.

"அவள் அப்பா வந்திருக்காரு."

"வராமல் என்ன.. ஏதாவது பட்டணத்திலே வியாபார விஷயமா வந்திருப்பார். சத்திரம்போல் இங்கே தங்க வந்திருப்பார். ஏதாவது மூட்டை முடிச்சு..."

"மூட்டையும் இல்லை; முடிச்சும் இல்லை. வியாபார விஷயமாக வரவில்லை. மகளை அழைத்துப் போக வந்திருக்கிறார்"

"திடீரென்று ஏன் அழைத்துப் போகவேண்டும். ஆடி மாதம் வர இன்னும் இரண்டு மாதம் இருக்கிறதே."

"இல்லையக்கா. பார்வதி கடிதம் எழுதியதன்பேரில் தான் வந்திருக்கார்."

"பார்த்தாயா! நான் சொல்லவில்லை! நான் வந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. பூனைமாதிர இருந்து வந்து அழைத்துப் போகுமாறு கடிதம் எழுதி விட்டாள்."

"இல்லை! நான்தான் எழுதச் சொன்னேன்."

"பார்த்தாயா! எல்லாம் நீயேதான் காரணம். அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள். அவன் தமக்கை தங்க இடையூறாக இருப்பதால்தான் மனைவியை அனுப்பி வைக்கிறான் என்று சொல்ல மாட்டார்களா? எனக்கு ஏன் இந்தத் தொல்லை? என்னை வண்டி ஏற்றி அனுப்பிவிடு. அவருக்கு ஒரு தந்தி கொடு. ஸ்டேஷனில் வந்து இருக்கச் சொல்."

"சே! நீ ஒண்ணு. எப்பப் பார்த்தாலும் ஏதாவது நினைத்துக் கொண்டு மனதை அலட்டிக் கொள்கிறாய்."

"பின் ஏன் திடீரென்று வரவேண்டும்?"

"அது அப்புறம் சொல்கிறேன், அவரிடம் பேச எனக்கு விருப்பம் இல்லை. நீ போய் விசாரி."

"என்னடா வெட்கம்? எங்களவர் அந்தக் காலத்திலே எவ்வளவு தாராளமா நம்ப அப்பாகிட்டே பழகுவாரு. மாமனார் மருமகன் என்று யாருமே சொல்ல மாட்டார்கள்."

"வெட்கத்துக்காக இல்லை. விருப்பம் இல்லை."

"இருந்தாலும் வீடு தேடி வந்திருப்பவரிடம் பேசாதிருப்பது மரியாதை அல்ல!"

"மரியாதை! கவுரவம்; அதை அவர் முதலில் காப்பாற்றி இருக்கவேண்டும்."

"என்னடா! எனக்கு ஒன்றும்..."

"விளங்காது. பிறகு விளங்க வைக்கிறேன். நீ போய் வந்தவரை விசாரி. அதற்குத்தான் உன்னிடம் சொல்ல வந்தேன்."

சிவகாமி அடுப்பங்கரையினின்று, தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் தொழிலாளி போல முகத்தில் தோன்றிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள். கை கழுவிக்கொண்டு கூடம் நோக்கி வந்தாள்.

"வாருங்கள்! எப்பொழுது வந்தீர்கள்? இப்போது தான் வந்தாற் போலிருக்குது."

புழுக்கமான அறையில் மின்விசிறி சுற்றியது போல இருந்தது அவருக்கு.

"இப்பொழுதுதான் வந்தேன். அவரை பம்பாய்க்கு மாற்றி விடுவார்கள் என்றார்களே, மாற்றலாகி விட்டதா?" அதைப்பற்றி அக்கரை இல்லாவிட்டாலும் பேசவேண்டும் என்பதற்காகக் கிடைத்த முதல் விஷயம் அதுதான்.

"மாற்றி விட்டார்கள். பார்வதி! உள்ளே போய் அப்பாவிற்குக் காப்பி கொண்டுவா."

வாசற்படியில் நின்றுகொண்டிருந்த பார்வதி சமையலறைக்குச் சென்றாள்.

என்றும் இல்லாத கனிவு அச்சொற்களில் இருந்தது. சமையலறையில் சிவராமன் உட்கார்ந்து கொண்டு தன் எண்ணத்தில் ஆழ்ந்தவனாய்க் கிடந்தான்.

"உன் அப்பா ஏன் வந்தார்? அழைத்துப் போக வந்தாரா?"

"தெரியவில்லை. இனிமேல்தான் தெரியும். உங்களுக்கு நகை தேவை என்கிறீர்களே?"

"அதுதான் யோசிக்கிறேன்?"

"நான் ஏற்கனவே தொலைத்து விட்டதாகச் சொல்லி விடுகிறேன். இதை வாங்கிக் கொள்ளுங்கள்" என்று பதில் எதிர்பார்க்காமல் அதைக் கழற்றிக் கொடுத்துவிட்டு அடுப்பிலிருந்த காப்பியைக் குவளையில் ஊற்றி விரைவாக எடுத்துச் சென்றாள்.

"பார்வதி!" என்று கூப்பிடுங்குரலைக் காதில் போட்டுக் கொள்ளாதவளைப் போலக் கூடத்திற்கு வந்தாள். அதை ஆற்றிக் கொடுத்தாள்.

"பார்வதி வீட்டை விட்டு வந்ததும், வீடே வெறிச்சென்று ஆகிவிட்டது. அதுமட்டுமில்லை. மாணிக்கத்திற்கும் பெண் பார்க்க வேண்டும். தங்கை போய்ப் பார்க்காமல் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று பிடிவாதம் செய்கிறான். அதற்குத்தான் பார்வதியை அழைத்துப் போகலாம் என்று வந்தேன். நல்ல காலமாக ஆக்கிப் போடுவதற்கு ஆள் இல்லை என்ற கவலையும் இல்லை. நீங்களும் இருக்கிறீர்கள்."

இதைக் கேட்ட பார்வதியின் உள்ளம் வேதனை அடைந்தது. நாகரிகம் என்னும் பெயரால் பேசும் நல்ல வார்த்தைகளை அவளால் கேட்டுக்கொண்டிருந்த முடிய வில்லை. உண்மைக் காரணத்தை ஏன் உடைத்துச் சொல்லக் கூடாது என்று துடித்தாள். அவள் முகத்தில் ஏற்பட்ட சுளிப்பு அவள் உள்ளக் கசப்பை எடுத்துக் காட்டியது.

நேரே விர்ரென்று உள் அறைக்குச் சென்றாள். "உங்களை நான் ஒன்று கேட்கிறேன்."

"உன் உள்ளத் தூய்மையைக் கண்டு பாராட்டுகிறேன்."

"உங்கள் பாராட்டுதல் இந்த நேரத்தில் தேவை இல்லை."

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"உள்ளத்தில் உறுதி வேண்டும் என்கிறேன்."

"எதற்கு?"

"நேரே அவரிடம் போங்கள். பத்தாயிரத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்து விடுங்கள். பத்தாயிரம் பெற்று என்னை அழையுங்கள். இல்லை - தீர்மானமாக என்னை இப்பொழுதே பணமில்லாமல் ஏற்றுக் கொள்ளுங்கள். அதுவுமில்லை

யென்றால் நிரந்தரமாக என்னை எங்கள் வீட்டிற்கு அனுப்பி விடுங்கள்,"

அந்தச் சொல்லில் உறுதி காணப்பட்டது. நெகிழ்ந்த அவன் உள்ளம் இறுகி உரம் பெற்றது போன்ற உணர்வு அவனுக்கு உண்டாயிற்று. கையிலிருந்த சிகரெட் துண்டை வீசியெறிந்தான். மனிதத் தன்மை ஏதோ தன் உடலில் தோன்றியதைப் போன்று நிமிர்ந்து எழுந்தான்.

"சரி" என்று சொல்லிவிட்டு நேரே கூடத்திற்கு வந்தான்.

அவனோடு பேசுவோம் என்ற நம்பிக்கை இல்லாத காரணத்தால் தைரியமாக இருந்த அவருக்கு இது வியப்பை உண்டாக்கியது. அவன் அந்த விஷயத்தைக் கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று சிறிது தயங்கினார். அவனோடு எப்படியாவது பேசாமல் இருக்க வேண்டும் என்பதற்காகச் சிவகாமியிடமே சிந்தையைப் பறி கொடுத்தது போன்று தொடர்ந்து விடாமல் பேசினார்.

"அதனால்தான் வந்தேன். ஊரில் எல்லோரும் நலம் தான். மழைகூட கொஞ்சம் நன்றாகத்தான் பெய்தது. நாற்றெல்லாம் கிளம்பிப் பயிர்கள் நன்றாகத்தான் வந்திருக்கிறது"

எதிரேயிருந்த நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டான். நேரே அவர் முகத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்தான்.

"நீங்கள் திருமண ஏற்பாட்டின்போது சொத்து எழுதி வைக்கிறேன் என்றீர்களே! அதைப்பற்றி உங்கள் கருத்து..."

"கருத்து, எழுதிவைக்க வேண்டும் என்பதுதான்."

"பின் ஏன் இன்னும் செய்யாமல் இருக்கிறீர்களா?"

"சந்தர்ப்பம் சரியாக இல்லாததால்தான். அதைப் பற்றி இப்பொழுதென்னப்பா அவசரம், நிதானமாகப் பார்த்துக் கொள்ளலாம்."

சிவராமனுக்குத் தான் கடன்காரர்களுக்குச் சொல்லும் பதில் போல் தோன்றியது. அவை நம்பிக்கையற்ற சொற்கள் என்பது அவன் தன் சொந்த அனுபவத்திலேயே அறிந்த உண்மையாக அவனுக்கு நன்கு விளங்கியது.

"அதெல்லாம் முடியாது. சொன்ன சொல்படி...."

"நான் கீழ்ப்படிய வேண்டுமா? அவசரப்படாதே தம்பி! உன் உழைப்பாலே நீ சாப்பிடுவது தான் கவுரவம். அதுதான்

உனக்குப் பெருமை. அதை விட்டு விட்டுப் பிறர் சொத்தை எதிர்பார்த்துத்தான் பிழைப்பேன் என்று நீ வற்புறுத்தினால்..."

"நாய்வாலை திருத்தலாம். நாற்பது வயதிற்கு மேற்பட்டவரைத் திருத்த முடியாது" என்று சொல்லி அந்த இடத்தைவிட்டு எழுந்தான். பார்வதிக்கு இந்த முடிவு பிடிக்கவில்லை. மறுபடியும் அவள் விழிகள் அவன் விழிகளைச் சந்தித்தன. மீண்டும் ஏதோ ஒரு கேள்வி கேட்பது போல் இருந்தது. அந்தப் பார்வையில் ஒரு பெரிய வினா அமைந்திருந்தது.

"இதுதான் முடிவு. மறுபடியும் உன் மகளை அனுப்பும் போது பத்தாயிரத்தோடு அனுப்பு" அதற்குமேல் அவன் வாயிலிருந்து சொற்கள் பிறக்கவில்லை. வெளியே வந்து நடையில் ஏற்பட்டிருந்த சாய்வு நாற்காலியின் சாய்ந்து கொண்டான்.

நேரே பார்வதி வீட்டிற்குள் தன் அறைக்குச் சென்று பெட்டி மூட்டை எல்லாம் கட்டத் தொடங்கினாள். அவள் அவற்றை யெல்லாம் எடுத்துக்கொண்டு வந்து கூடத்தில் வைத்தாள்.

"புறப்படுங்கள், அப்பா!" என்று சொல்லிக் கூடத்தில் மாட்டி வைத்திருந்த மேல் துணியை எடுத்துக் கொடுத்தாள்.

"என்னம்மா, அவசரம். நிதானித்துப் போனால் போச்சு." அப்பொழுதுதான் சிவகாமி சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

"ஆமாம், என்ன பார்வதி அவசரம்! இரண்டு நாள் நிதானமாகத் தங்கிவிட்டுப் போகலாம். போனதுமேவா அண்ணனுக்குப் பெண் பார்க்கப் போகிறாய்? அலுத்து வந்தவர் கொஞ்சம்கூட அயர்ச்சி போக்க வேண்டாமா?"

சிறிது நேரம் பார்வதி சும்மா இருந்தாள்.

"இதோ பாரு சிவகாமி! பார்வதியை அழைத்துக் கொண்டு போய் ஆடி மாதம் போனதும் அனுப்பிவிடுகிறேன். அப்பொழுது உன் தம்பியைக் கொஞ்சம் அனுப்பி வை. வந்து அழைத்து வந்து விடுகிறான்."

"அக்கா! நான் போய் வருகிறேன். இருந்து அவரைக் கவனித்துக் கொள்ளுங்கள்."

அவரும் அந்த மேல் துணியை எடுத்துப் போட்டுக் கொண்டு தேய்ந்து போன செருப்பில் காலை மாட்டிக் கொண்டார்.

"இருந்து போவதற்கு நேரமில்லை. வேலையெல்லாம் அப்படி அப்படியே போட்டுவிட்டு வந்துவிட்டேன்."

"எனக்கு மனம் ஒன்றும் சரியாக இல்லை." சிவகாமியும் வீட்டு வெளிப்புறம் வரையில் தொடர்ந்தாள்.

"ஏய்! ரிக்ஷா!"

வண்டி வந்து நின்றது. மூட்டை பெட்டிகளை எடுத்து வைத்தாள். அந்தக் காட்சியில் தொடர்பில்லாதவனைப் போலக் காணப்பட்டான் சிவராமன்.

ரிக்ஷா அந்த இடத்தை விட்டு அகன்றது. வீடு வெறிச்சென்று விளங்கியது. தமக்கையோடு சிவராமன் அதிகம் பேசவில்லை.

## 7

அவனால் வீட்டில் அடைபட்டிருக்க முடியவில்லை. அந்த வீட்டில் இருக்க வேண்டிய அவசியமே தோன்றவில்லை. வேளைக்குச் சாப்பிடுவதற்கு ஓர் இடம் வேண்டும். அதற்கு அதுதான் சரியான இடம் என்பதைத் தவிர அவனுக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை.

மணிபர்சில் இருந்த ரூபாய் ஐந்நூற்றோடு வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

"அக்கா! இன்று சாயுங்காலம் விரைவில் திரும்பி வந்து விடுவேன்" என்று வீட்டை விட்டு வெளியே புறப்பட்டான். இரவெல்லாம் ஏதேதோ குறித்துக் கொண்டிருந்த சிறு புத்தகத்தைப் பத்திரமாக ஜேபியில் போடடுக் கொண்டான். வெளியே வந்து நின்று தயங்கினான். அந்த வீட்டுக்குப் பழக்கமான கருப்பு பூனை குறுக்கே ஓடிற்று. மறுபடியும் வீட்டிற்குள் சென்றான்.

"அக்கா! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா."

"இப்பொழுதுதானே குடித்துவிட்டுப் போனாய்."

"பூனை குறுக்கே வந்தது."

"எல்லாம் ஜாதகப் பலன்தான். எதிலும் நீ முன்னுக்கு வர முடியவில்லை."

"எனக்கு என்னமோ நம்பிக்கை இருக்கிறது. போகிற இடத்தில் வெற்றிதான். அப்புறம்...?"

"அப்புறம் என்ன?"

"ஒன்றும் இல்லை. பிறகு சொல்கிறேன்." அன்று அவன் தலை சரியாக வாரி விடாமல் இருந்தான். பழைய புஷ் கோட் ஒன்று போட்டுக்கொண்டிருந்தான். சட்டையின் உள் ஜேபியில் ஐந்நூறு ரூபாய் நோட்டுகளை மடித்து எடுத்து வைத்தான்.

"ஏதுடா அந்தப் பணம்?"

"அது ஆபீஸ் பணம். அதைக் கட்டுவதற்கு ஒருவர் கொடுத்துவிட்டுப் போனார்."

மறுபடியும் வெளியே வந்து நின்றான். சிறிது நேரம் சகுனம் பார்த்து நின்றான். ஒரு சகுனமும் வரவில்லை என்ற திருப்தியோடு பஸ் நிலையம் நோக்கி நடந்தான்.

சிவராமன் சென்றதும் சிவகாமிக்குப் பொழுது போவது பெரிய சிக்கலாகிவிட்டது. இருக்கிற துணிகளை யெல்லாம் துவைத்து உலர்த்தினாள். வீட்டை இரண்டு முறையும் பெருக்கிப் பார்த்தாள். சண்டை போடுவதற்குக்கூட அக்கம் பக்கத்தில் அதிகம் வீடுகள் இல்லாமலிருந்தது.

"நாம் ஏன் இங்கு அகப்பட்டுக் கொண்டோம்" என்ற எண்ணமே தலையெடுத்து நின்றது. பேசாமல் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் பம்பாய்க்கே போய்விட் டிருந்தால் அங்கே புதிய மனிதர்களைச் சந்திக்கும் வாய்ப்பாவது கிடைக்குமே. ஏன்தான் நான் இங்குத் தங்க இசைய வேண்டும். வந்தேனே...வந்த இடத்திலாவது நிம்மதி ஏற்பட்டதா? அவன் குடும்பத்தைச் சரிவர நடத்தக் கூடாதா? அந்தக் காலத்திலே அவசரப்பட்டு ஒப்புக் கொண்டான். அவரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். சொத்து ரிஜிஸ்தர் செய்து கொடுக்காமல் கல்யாணம் ஒப்புக்கொள்ளாதே என்று. அது எப்படி நம்பாமல் வற்புறுத்துவது என மறுத்துப் பேசினான். இப்போது துன்பப்படுகிறான்..." அவன் வாழ்க்கையின் நிலைமையை அளக்கத் தொடங்கியது அவள் மனம். அதே சமயம் உலைக்கு வேண்டிய அரிசியை அளந்தன அவள் கைகள். அதிலிருந்த கல் மண் இவற்றைப் பொறுக்கிக்கொண்டி ருந்தாள். வெளியே இருந்து சிட்டாய்ப் பறந்து ஒரு தபால் கடிதம் 'தொப்' என்று உள்ளே வந்து விழுந்தது. அதை

எடுப்பதற்குள் தபால் சேவகன் நான்கைந்து வீடுகள் கடந்து விட்டான்.

பம்பாய் முத்திரை போட்டிருந்தது. அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்.

"பம்பாய் நகரம் மிகப் பெரிய நகரம். நான் வசிக்கும் இடம் ஒரு மூன்றாவது அடுக்கு மாடியில் ஓர் அறை. இதைப் போலத் தனித்தனி அறைகளில் குடும்பத்தோடு சென்னையிலிருந்து வந்தவர்கள் வந்து தங்கி இருக்கிறார்கள். உன்னையும் அழைத்து வந்து விடலாம் என்றுதான் நினைக்கிறேன். நீ உன் தம்பியிடம் சொல்லி அவனை விடுமுறை எடுத்துக்கொண்டு உன்னை அழைத்துக்கொண்டு வரச் சொல்லவும். இல்லாவிட்டால் பம்பாய்க்கு வருகிறவர் களோடு பெண்கள் பெட்டியில் ஏற்றி அனுப்பச் சொல்லவும். நாளும் தேதியும் குறிப்பிட்டால் நான் ஸ்டேஷனில் நீ வரும் வண்டிக்கு வந்து காத்திருப்பேன்."

அந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டுப் பம்பாய்க்குப் போவதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

"நமக்கு ஏன் இந்தத் தொல்லை? பார்வதியோ ஊருக்குப் போய்விட்டாள். ஆடிமாதம் தான் அனுப்பப் போவதாகச் சொல்லிப் போயிருக்கிறார். அதுவரையிலும் யார் தம்பிக்குச் சோறு சமைத்துப் போடுவது? ஹோட்டல் சாப்பாடு அவனுக்கு ஒத்துக் கொள்ளாதே!... வீட்டை இப்போதே கவனிப்பதில்லை. நானும் போய்விட்டால்.... அவனைக் கேட்பதற்கே ஆள் இல்லாமல் போய்விடும். ஆடிமாதம் போனால் மட்டும் இவன் அழைத்து வந்தால் தானே. ஏது..? பெருந் தொல்லையாகி விட்டதே! படிக்கும்போதுதான் வீண் செலவு செய்தான்! கல்யாணம் ஆன பிறகு சரியாகப் போய்விடுவான் என்று எதிர்பார்த்தது வீணாகப் போய் விட்டது. என்ன படிப்பு. என்ன தன்மை. எல்லாம் அம்மா கொடுத்த செல்லம்தான். அந்தக் காலத்திலே நான் ஏதாவது கேட்டால்கூட தம்பிக்குச் சட்டை தைத்துக் கொடுக்கப் பணம் வேண்டும். ஏதோ செலவு இருக்கிறது அதற்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கடிந்து அவன் பக்கமே பேசிவந்தாள். அதன் விளைவுதான் இப்பொழுது அவனைப் பின்தொடர்ந்து இருக்கிறது. வீட்டுக்கு வந்த மருமகளாலாவது சீர்படுவான் என்று பார்த்தால் அவள் சீர்படுவதே அருமையாக இருக்கிறது. எந்தப் பணத்தை இவன் வாரிச் செலவு செய்து விட்டுத் திண்டாடுகிறேனோ அந்தப் பணத்தின் அடிப்படையை வைத்தே அவளையும் திண்டாட

வைக்கிறான். என்ன செய்வது. குறைகள் நூறு இருக்கலாம். என்னைத் தவிர வேறு யார் அவனுக்கு ஆறுதலாக இருக்கப் போகிறார்கள். நானும் பம்பாய் போய்விட்டால் அங்கே மட்டும் மனம் சமாதானமாக வாழ முடியுமா...? இங்கே வந்து ஒன்றையும் கவனிக்காமல் இருந்திருந்தால் இவனைப் பற்றிச் சிந்தித்துத் துன்பப்பட வேண்டிஇருக்காது. அந்த ஆசாமியும். "ஆக்கிப்போட நீ இருக்கிறாய்" என்று சொல்வதற்கு இடம் இருந்திருக்காது. அவனும் துணிச்சலாக அவளை அனுப்பியிருக்க மாட்டான். எல்லாவற்றிற்கும் நான்தான் காரணம், எப்படியும் நான் போவதற்கில்லை" என்று அவள் உள்ளம் எண்ண ஆரம்பித்தது.

சாயுங்காலம் பால்காரன் வந்து தெருவில் மாடு கட்டிக் கறக்கக் கன்றுக்குட்டியைப் பிரித்து வைத்தான். இளங்கன்று துள்ளிக் குதித்து ஓடிக்கொண்டிருந்தது. அது அவன் கையை விட்டு ஓட முயன்றது. அதைக் கெட்டியாகப் பிடிக்கா விட்டால் மருண்டு கட்டுக் கடங்காமல் எங்காவது போகும் வண்டியில் அகப்பட்டுக் கொள்ளும் போல் இருந்தது. தாயினிடமும் அக்கன்று செல்ல முடியாமல் தடுக்கப்பட்டு இருந்தது. அந்தப் பால்காரனின் நிலைமையைப் போல் தன்நிலை இருப்பதாக அவள் மனம் ஏனோ அவ்வாறு நினைக்க ஆரம்பித்தது. அந்தக் கடிதத்திற்கு என்ன பதில் எழுதுவது என்று தெரியாமல் அதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தாள். எதற்கும் தம்பி வரட்டும்; வந்தால் அவனையும் கலந்து எழுதலாம் என்ற கருத்தோடு வீட்டுக் கடமைகளில் கவனம் செலுத்தினாள்.

மாலை மணி ஏழு அடித்தது. இருள் மங்கியிருந்த நேரம். கூடத்தில் இருந்த படத்தின் முன்னால் சிறு விளக்கு ஒன்று ஏற்றிக் கொண்டிருந்தாள். அதன் வத்தியைக் கைவிரலால் சிறிது தள்ளிக்கொண்டிருந்தாள்.

"அக்கா! காப்பி போட்டிருக்கிறாயா?" போட்டிருந்த காப்பியைக் கொண்டு வந்து கொடுத்தாள். அவன் முகம் நிரம்பவும் சோர்வுற்றிருந்தது. தலைமயிரெல்லாம் சிதறிக் கிடந்தது. நடையிலிருந்த சாய்வு நாற்காலியை அவனே இழுத்துக் கூடத்தில் போட்டுக் கொண்டான். அதில் அவன் உடலைப் போட்டான் என்று சொல்லக் கூடிய அளவுக்கு அவன் மனம் களைத்திருந்தது. அந்த உடலுக்கும் அவன் மனத்துக்கும் யாதொரு தொடர்பும் இல்லாதிருந்ததைப் போன்றிருந்தது.

கொண்டு வந்த காப்பியைச் சுவைத்துச் சாப்பிடாமல் அப்படியே வாங்கிக் குடித்துவிட்டான்.

"போன விஷயம் என்ன ஆச்சு தம்பி? ஏதோ..."

"போன விஷயம் போய்விட்டது."

"நீ சொல்வது விளங்கவில்லையே; ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?"

"அந்தப் பர்சில் இருந்த பணம் அத்தனையும் பறி கொடுத்து விட்டேன்."

"யாராவது ஜேபியிலிருந்து..?"

"எப்படியாவது வைத்துக்கொள். பணம் போய்விட்டது அவ்வளவுதான்."

"ஏண்டா ஜாக்கிரதையாகப் போக வேண்டாமா? இந்தக் காலத்திலே பஸ் ஏறினால் பணத்தை உள் ஜேபியில் அல்லவா வைத்துப் போகவேண்டும்?"

"போகிற பணம் எங்கே வைத்தாலும் போகும். அதை யாரும் தடுக்க முடியாது. எல்லாம் என் துரதிருஷ்டம் தான்."

"அப்பவே சொல்லலை நான். உன் ஞாதகம் சரியா இல்லை. அவர் சொன்னது சரியாப் போச்சு. அவன் சம்பாதிக்கிறது அவன் கையிலே நிற்காது என்று பலமுறை சொல்லியிருக்கிறார். அதன்படிதான் ஆய்விட்டது."

வீடு சிறிது நேரம் சில்லென்று இருப்பதுபோல் இருந்தது. வீடு வெறிச்சென்றிருந்தது. தன் தமக்கையின் முகத்தைப் பார்த்தான். அதிகநேரம் பார்த்துக்கொண்டு இருக்க முடியவில்லை. பார்வதியின் முகத்தை நினைத்துப் பார்த்தான். அந்த வடிவம் அவன் உள்ளத்தில் இருந்து பேசுவது போல் இருந்தது."

"இந்தா தங்கச் சரடு" என்று எடுத்துக் கொடுத்தாள் அந்த விழிகள் அசையாமல் இவனையே பார்த்தன.

"ஏன் தயங்குகிறீர்கள்? பெற்றுக்கொள்ளுங்கள்"

"வாழ்க்கை ஒரு சூதாட்டம். பத்தாயிரத்திற்கு உன்னைப் பணயமாக வைத்துள்ளேன்" என்று அந்த உருவத்திற்கு அவன் பதில் சொல்லத் தொடங்கினான்.

படுக்கையில் புரண்டான். தூக்கம் வரவில்லை. நாளைக்கு ஆபீசுக்கு வரச் சொன்னோமே வந்தால் அவனுக்கு என்ன பதில் சொல்லுவது? என்ன பதில் சொல்வது? சொல்லத் தெரியாது. இல்லை சொல்லத் தெரியாது. அவன் அசையாமல் பார்ப்பான். நான் அவனை விழித்து விழித்துப்

பார்ப்பேன். அப்படியே அவனும் இருப்பான். நானும் சும்மா இருப்பேன்.

"பணம் எங்கே? எப்பொழுது கொடுக்கிறாய்? எப்பொழுது கொடுக்கிறாய்?" என்பான். "நாளைக்கு" என்று வழக்கமான பதிலைச் சொல்லுவேன்.

"முடியாது. வைத்துவிட்டு மறுவேலை பார்."

"இல்லை. நீ என்னை எது வேண்டுமானாலும் செய்து கொள்" அவன் என் சொக்காயைப் பிடித்து இழுப்பான். நானும் அவனிடமிருந்து திமிருவேன். இரண்டு பேரும் தெருவில் சண்டை. அவன் தன் கையிலிருக்கும் கனத்த பிரம்பால் ஓங்கி அடிப்பான். ஆம். ஓங்கி அடிப்பான். நெற்றியில் ரத்தம் கரைபுரண்டு ஓடும். எங்கே என் கைக்குட்டை, கட்டு ஒரு கட்டு, என் தலையில் அவமானச் சின்னம். நெற்றியில் ஏன் காயம்? எங்கே அடிபட்டது? பதில் சொல்ல முடியாது...

இதைப் போன்ற எண்ணங்கள் அவன் மனத்தில் தோன்றிக் குழம்பிக் கொண்டிருந்தன.

வளைந்த மூக்கு, நீண்ட சட்டை, கழுகின் பார்வை, அரையில் விசிறியைப் போன்று மடிப்புடைய பைஜாமா. கையில் அசைந்துகொண்டிருக்கும் ஒரு கனத்த பிரம்பு. அவ்வளவும் சேர்ந்த உருவம். நேற்று சிவராமனைச் சந்தித்த அந்த உருவம் அவன் மனக்கண் முன் நின்றது. வட்டியும் அசலும் எல்லாம் பைசல் செய்து விடுகிறேன் என்று சொன்ன கெடுவுக்கு அந்த காபூலிக்காரன் கேட்டால் என்ன பதில் சொல்வது என்ற கவலையில் ஆழ்ந்தான். "சாப்பிடவா" என்று கூப்பிட்ட சிவாகமியின் உரத்த குரல் கேட்டது.

கனவு கலைக்கப்பட்டவன் போல் விழித்து எழுந்தான். "போனால் போகிறது. அந்த ஐந்நூறு ரூபாய்க்காகவா கவலைப்படுகிறாய். ஆயுள் இருந்தால் இதைப்போல எத்தனையோ ஐந்நூறு சம்பாதிக்கலாம். எழுந்திரு. சாப்பிடு."

"எனக்குப் பசி இல்லை. நீ சாப்பிடு."

"வேளைக்குச் சாப்பிடாவிட்டால் உடம்பு என்னத்திற்கு ஆகும்? சாப்பிட்டால் சாப்பிடு. இல்லாவிட்டால் எனக்கு இங்கே என்ன வேலை இருக்கிறது?"

"எனக்குப் பசி எடுக்கவில்லை என்றால் சும்மா தொந்திரவு கொடுக்கிறாய்."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ ஊரு எல்லாம் சுற்றிவிட்டு ஓட்டலில் எல்லாம் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வருகிறாய். தண்டத்துக்காவது அரிசிபோட்டு வீணாகுது. நாளைக்கு வேலைக்காரிக்குக் கொட்டித் தொலைக்க வேண்டும்."

"அப்பப்பா. உன் தொல்லை பொறுக்க முடியவில்லை." கிண்ணியைக் கழுவி அதில் சோறு போட்டாள். அதை ஒன்றும் பாதியுமாகப் பிசைந்து சாப்பிட்டான்.

"ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறாய்? உங்கள் மாமனாரைக் கேட்டு ஏதாவது கொடுக்கச் சொல்லிச் சுற்றிலும் இருக்கிற கடனைக் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருக்கக் கூடாதா?"

"சரிதான். அந்த மடையனுக்கு அவ்வளவு அறிவு ஏது? என் கஷ்டம் அவனுக்கு எங்கே தெரியப் போவுது?" என்று சொல்லிய வண்ணம் அவன் வாயில் சிகரெட்டுப் பற்ற வைக்கத் தொடங்கினான். அவன் நினைவு பார்வதியின் மீது சென்றது. அவள் இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பாள் என்ற கற்பனையில் அவன் மனம் ஓட ஆரம்பித்தது.

## 8

அவன் கற்பனைக்கு ஏற்றவாறு அவளும் தன் தாயின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருந்தாள்.

"அம்மா! அவர்மீது ஒன்றும் தவறு இல்லை."

"என்னடி! பணம் கொடுக்காவிட்டால் என்ன. உன்னை வைத்துக்கொண்டு வாழக்கூடாதா?"

"அம்மா! இன்றைய பெண்களின் வாழ்க்கை பணத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது."

"எங்கள் காலத்திலே..."

"உங்கள் காலத்திலே பெண்களுக்கு மதிப்பு இருந்தது. வீடு தேடிப் பெண் கேட்டார்கள். பெண் கொடுத்தால் போதும் என்றிருந்தார்கள். இப்பொழுது...?"

"பணம் கொடுத்தால் போதும் என்கிறார்கள்."

"அவர்மீது என்னம்மா தவறு இருக்கிறது? அப்பா ஒரு வார்த்தை சொன்னதால்தானே அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டார்."

"அவர்தான் பிடிவாதக்காரராக இருக்கிறாரே. நீ அவரிடம் அப்பாவின் பிடிவாதத்தை எடுத்துச் சொல்லக் கூடாதா?"

"எடுத்துச் சொன்னால்தான் என்னமமா பலன்? சுற்றிலும் கடன் சூழ்ந்திருக்கும்போது என் பேச்சு எப்படி எடுக்கும்? அவர் பணத்திற்காகப் படுகிற கஷ்டம்...!

"சரிதான்! இந்த முரட்டு மனுஷனும் லேசில் திருந்தக் கூடியவர் அல்ல. பார்க்கலாம்; எப்படியாவது சரிப்படுத்த லாம். அண்ணன் வருகிற நேரம்... கிண்ணியெல்லாம் கழுவி வை."

பார்வதி எழுந்தாள். அகலமான கூடத்திற்கு வந்தாள். அவரும் நானும் திருமணத்தின் போது எடுத்த படம் கூடத்தில் மாட்டியிருந்தது. அதைச் சற்று உற்று நோக்கினாள். ஏதோ மறுபடியும் அவரோடு தொடர்ந்து வாழ்வது போன்ற உணர்வு ஏற்பட்டது. அன்புக் கரத்தால் தன் கைகளைப் பிடித்து அவர் மெல்லக் கிள்ளியது நினைவிற்கு வந்தது. நிழற்படம் பிடிக்கும் போது தன் கைவிரலைத் தடவிக் கொடுத்த அந்த மென்மையான நிகழ்ச்சி; சட்டென்று வந்த நாணத்தை உள்ளடக்க வந்த சிரிப்பைத் தான் அடக்கிக் கொண்ட அந்த நிகழ்ச்சி கவனத்திற்கு வந்தது. சீவி வாரிய அவனுடைய பளபளத்த கிராப்பும், இறுகக் கட்டிய 'டை'யும் சிலைக்குச் செதுக்கி வைத்தது போன்ற அழகிய நெற்றியும் மலர்ந்த கண்களும் கொண்ட உருவம் அவள் கவனத்திற்கு வந்தது. அந்த உண்மையான வடிவம் முழுவதையும் அந்த நிழற்படத்தால் காட்ட முடியாது என்பதை உணர்ந்தாள். நிழற்படம் எல்லாம் வெறும் நிழல்தான். உண்மையான வடிவம் உள்ளத்தில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்தாள்.

அதே கூடத்தில் நாலு பேர் மத்தியில் தன் தந்தை அவருக்குக் கொடுத்த சீர் வரிசைகள் எல்லாம் கவனத்திற்கு வந்தன. பத்தாயிரம் மதிப்புள்ள சொத்தை எழுதிக் கொடுக்கிறேன் என்று அப்பா சொன்னதும் அவள் கவனத்திற்கு வந்தது. ஏன் இப்போது கொடுக்கத் தயங்குகிறார்? காரியம் முடிந்துவிட்டது. இனி எப்படிப் போனால் என்ன என்ற கொள்கை அவரிடம் இருப்பதை அவள் உள்ளம் வெறுக்கத் தொடங்கியது. அண்ணன் வரும் நேரம் என்று சொல்லியது கவனத்திற்கு வந்தது.

பெட்டியின் கீழ் இருந்த 'எவர் சில்வர்" கிண்ணங்களைக் கழுவ எடுத்தாள். அண்ணனாவகு அப்பாவுக்குச் சொல்லக்

கூடாதா என்று அவள் மனம் எண்ண ஆரம்பித்தது. அண்ணன் கல்லூரியில் படித்துப் பண்பு கொண்டவனா யிற்றே. அவனாவது எனக்காகப் பேசக் கூடாதா? அப்பொழுது திருமணத்திற்கு எவ்வளவு ஆர்வமாக வேலைகளைக் கவனித்தான். அவருக்கு என்று அவனே நேரிற் கடைக்குச் சென்று உயர்ந்த ரக 'சூட்' துணிகளை யெல்லாம் எடுத்துக் கொடுத்தானே. அத்தானோடு மனமகிழ்ச்சியோடு அளவளாவி மகிழ்வானே. அன்று எங்களை வழிவிட வந்த போது ரயில்நிலையம் வரை வந்தது போதாது என்று அடுத்த ஸ்டேஷன் வரை வந்து வழிவிட்டுச் சென்றானே. வண்டியில் இருந்து இறங்கும்போது அவன் பிரிவதற்காக விட்ட கண்ணீரை நான் பார்க்கப் போகிறேனே என்பதற்காகச் சட்டென்று கைக்குட்டையால் மறைத்துக் கொண்டானே. அவ்வப்போது அவன் எழுதி வந்த கடிதங்களில் அறிவுரை கூறாத கடிதம் இருக்காது. அவன் கணக்குப் படிப்பவன் என்றாலும் திருக்குறள் போன்ற நூல்களைப் படிப்பவனா யிற்றே. தங்கையின் உள்ளத்தை அறியும் ஆற்றல் அவனுக்கு இல்லாமல் வேறு யாருக்குத்தான் இருக்க முடியும் என்றெல்லாம் அவள் மனம் எண்ண ஆரம்பித்தது.

"நல்ல இடத்தில் கொடுக்க வேண்டும். எனக்குச் சல்லிக்காசு வைக்கவேண்டாம். படித்தவனுக்கே அவளைக் கொடுக்கவேண்டும். பட்டிக்காட்டில் அவளைத் தள்ளி அவள் வாழ்வைப் பாழ்படுத்தவேண்டாம்" என்று சொல்லிக் கொண்டிருந்த அந்தச் சொற்கள் அதே அடுப்பங்கரையில் தன் காதில் விழுந்த அந்த நிகழ்ச்சி அவள் கவனத்திற்கு வந்தது. ஒருகால், அப்பா பணம் கொடுக்காதது அண்ணனுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

அவன் பெரும்போக்காக நடந்து கொள்கிறவன். இதையெல்லாம் ஏன் கேட்டுத் தெரிந்து கொள்ளப் போகிறான். பள்ளிக்கூடத்துப் புத்தகத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் நன்றாகத் தெரியும் அவனுக்கு. ஆனால், வீட்டில் கூடத்தில் என்ன இருக்கிறது என்பது அவனுக்குத் தெரியாது. பக்கத்து வீட்டில் யார் குடியிருக்கிறார்கள் என்றால் பார்த்துத்தானே சொல்ல முடியும். அவனுக்கு எப்படி அப்பாவின் பேச்செல்லாம் தெரியப் போகிறது. ஏன் அண்ணனிடம் நானே இதெல்லாம் கேட்கக் கூடாது. அவனுக்குச் சிரித்துப் பேசத் தெரியுமே அல்லாமல் சிந்திக்கத் தெரியாதே. எல்லாம் இங்கிருந்து கொண்டு போய்விடலாம் என்று ஏளனம் செய்வானே தவிர என் பேச்சின் உள்ளக்

கருத்தை அவன் ஏன் ஆழ்ந்து சிந்திக்கப் போகிறான். அப்படி அவன் சிந்திப்பதாக இருந்தாலும் நானே எப்படி இதையெல்லாம் கேட்க முடியும். அம்மாவோடு தாராளமாக எதையும் பேசலாம். அண்ணனிடம் இதையெல்லாம் நான் எடுத்துச் சொல்ல முடியுமா என்று சிந்தித்த வண்ணம் பார்வதி அந்தக் கிண்ணிகளைக் கழுவி எடுத்து வைத்தாள்.

அண்ணனை எதிர்பார்த்திருந்த அவள் கண்கள் அவள் அப்பாவைத்தான் கண்டன. வரும்போதே மிக்க மகிழ்ச்சி கொண்டவர் போல் விளங்கினார்.

"எல்லாம் வெற்றிதான். அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்" என்று சொல்லிய வண்ணம் பிய்ந்து போன அந்தச் செருப்பை வெளியே விட்டு வீட்டுக்குள் நுழைந்தார். ஆவலாக அந்தச் செய்தி கேட்க அம்மா ஓடினாள்.

"என்ன சொன்னார்கள். பெண்ணுக்குச் சீர் வரிசை யெல்லாம்...."

"சிறப்பாகச் செய்வதாகச் சொன்னார்கள். நம்ம பையன் பரீட்சையிலே முதல் வகுப்பிலே தேர்ந்து விட்டான் என்ற செய்தி கேட்டு அவர்கள் நிரம்ப மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்கள் நல்ல செல்வாக்கு உடையவர்கள். அவருக்குத் தெரிந்த ஒரு நண்பர் கூட அவருடைய தயவால்தான் தேர்தலில் ஜெயித்தாராம். அவர் சொன்னால் எல்லா ஆபீசரும் கேட்பார்களாம். அவர் நினைத்தால் எந்த உத்தியோகமும் நம்ம பையனுக்குக் கிடைத்துவிடும் என்று சொல்லுகிறார்கள்."

"நல்லதாப் போச்சு. அந்தப் பெண் கூட கொஞ்சம் படிச்சிருக்கிறதாகக் கேள்வி."

"கொஞ்சம் என்ன, ஒரே வகுப்பில் பல வருஷங்கள் படித்த பெருமையும் அவளுக்கு உண்டு" என்று குறுக்கே பேசலாம் என்று நினைத்த பார்வதிக்கு ஏனோ அச்சொற்களை அடக்கிக் கொண்டாள்.

"பார்வதி! நீதான் முதலில் அந்தப் பெண்ணைப் போய்ப் பார்க்க வேண்டும். உனக்குப் பிடித்தால் எங்களுக்குப் பிடித்தாற் போல்தான்."

அந்த மகிழ்ச்சி கலந்த சொற்களைக் கேட்ட பார்வதி யின் உள்ளம் தன் கவலையை மறந்தது. இனி வருங்காலம் தன் வீட்டை அலங்கரிக்கப் போகின்ற அணணியின் உருவத்தைப் பற்றிக் கற்பனை செய்யத் தொடங்கினாள். அந்த வீட்டில் தன்

அண்ணியின் மெல்லடிகள் வந்து கால் வைப்பது போலவும் திருமகள் வந்து குடிபுகுவது போல்வும் அவள் உள்ளம் எண்ணத் தொடங்கியது. அண்ணியின் அழகான திருவுரு வத்தை அவள் நெஞ்சில் ஓவியமாகத் தீட்டத் தொடங்கினாள்.

இனி அவள் அண்ணன், அண்ணியின் பின்னாலேயே சுற்றிக்கொண்டிருக்கும் காட்சி; நேரங் கழித்து வீடு திரும்பும் தன் அண்ணன் சீக்கிரம் வீடு திரும்புவதும், புத்தகங்களோடு விளங்கும் தன் அண்ணன் இனி அந்தப் புத்தகங்களுக்கு விடுமுறை கொடுத்து வாழ்வை நேரில் உணரும் அந்த அறிவு மிக்க வாழ்வும் ஆகிய இவற்றையெல்லாம் எண்ணி மகிழ்ந்தாள்.

வீடே இனி மங்கலமாக விளங்கப் போகிற அந்த இன்பக் காட்சியை அவள் மனம் எண்ணிக் கொண்டிருந்தது.

"அம்மா! இந்தப் பெண்களே பொல்லாதவர்கள். அப்பா! எனக்குத் திருமணமே வேண்டாம்" என்று சில சமயங்களில் பேசிவந்த அண்ணன் எப்படி மாறுவான் என்று எண்ணுவதில் அவளுக்கு ஒருவகை திருப்தி இருந்தது.

"அப்பா! அண்ணி கருப்பா, சிகப்பா?"

"அதைக் கேட்க மறந்து விட்டேன். அதை எல்லாம் நீயே பார்த்துத் தெரிந்து கொள்ளேன். இதெல்லாமா எனக்கு வேலை! ஏதோ நல்ல இடமா, பையன் முன்னுக்கு வர முடியுமா, அதற்குத் தகுந்த இடமா! இது தானேம்மா முக்கியம்."

அதற்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியாமல் பார்வதி திகைத்தாள்.

அதற்குள் கையில் புதிய வாரப்பத்திரிகை ஒன்றை ஏந்தியவனாய் வீட்டுக்குள் நுழைந்தான் அவள் அண்ணன். விரைவாகச் சென்று அதைப் பார்க்க முன் வந்தாள். முற்றத்திலேயே அவனைச் சந்தித்தாள்.

"என்ன புத்தகம் அண்ணா? அது."

"உனக்கு விளங்காதம்மா. 'சினிமா விசிறி' என்று சொல்லுவார்கள்

"சரிதான். ஒரு விஷயமும் சுவாரஸ்யமாகக் கிடைக்கா விட்டால் இந்த சினிமா நடிகர்களுடைய வாழ்க்கை வரலாறு, நடிப்பு வகைகள், அவர்களின் விருப்பு வெறுப்புகள் இதையே

ஒரு பெரிய காவியமாகப் படிக்கிறார்கள். அந்த மாதிரி வகையிலே நீயும் பரீட்சை முடிந்ததும் மாறி விட்டாயா?"

"இல்லை, பார்வதி! அவர்கள் வாழ்க்கையே ஒரு நாவல் போல் சில சமயங்களில் அமைந்து விடுகிறது. நாவலில் வரும் பாத்திரங்களாகவே மாறி விடுகிறார்கள். அதனால் தான் சுவாரஸ்யமாக இருக்கிறது."

"அண்ணா! உனக்கு ஒரு முக்கியமான செய்தி சொல்லப் போகிறேன். எனக்கு என்ன அண்ணா தரப் போகிறாய்?" என்று குழந்தை போலப் பேச ஆரம்பித்தான்.

"நீ கேட்கும் பரிசு!"

"உண்மையாகவா, அண்ணா! என்று கேட்ட அவள் குரலில் குழந்தைமையும் அன்பும் ஊறிக் கிடந்தது. தானும் அண்ணனும் சின்ன வயதில் சிறு வீடுகட்டி விளையாடிய அந்தப் பருவத்திற்குப் போய்விட்டவளைப் போலக் காணப்பட்டாள். மேலாடை போட்டுத் திருமணம் ஆகிவிட்ட அந்தப் பருவத்தை மறந்து பாவாடை கட்டிய சிறு பெண் போல அவள் பேச்சு அமைந்திருந்தது.

"சொல்லட்டுமா!"

"சொல்லித் தொலையேன்."

"நம்ம வீட்டுக்கு அண்ணி வரப் போகிறாள்."

"அண்ணியாவது, கிண்ணியாவது, உனக்கு ஒன்றும் வேலை இல்லை."

"உண்மையாகத்தான் அண்ணா. அப்பா ஏற்பாடுகள் எல்லாம் செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறார். அண்ணியை முதல் முதலிலே நீ பார்க்க முடியாதண்ணா. நான் போய்ப் பார்த்த பிறகுதான் நீ பார்க்கலாம். எனக்குப் பிடித்தால் தான் நீ பார்க்கலாம்."

"யார்? அந்தச் செங்கல்பட்டு மிராசுதார் பெண் தானே? அப்பா கிட்டே எனக்கு ஏதாவது உத்தியோகம் பார்த்து வைத்து விடுகிறேன் என்று சொல்லி இருப்பான்."

அதற்குள் கூடத்திலிருந்து வந்த தந்தையும் பேச்சில் குறுக்கிட்டுக் கலந்து கொண்டார்.

"ஆமாம். அதனால்தான் ஏற்பாடு செய்தேன். எடுத்த வுடனே நானூறு ரூபாய் சம்பளத்திலே கெஜட்டட் ஆபீசர் வேலை வாங்கித் தருவார். அப்புறம் நகை நட்டு சீர் வரிசை சொத்து நிலம் எல்லாம் சேர்ந்து முப்பதினாயிரத்திற்குப் பஞ்சம் இல்லை."

"அப்பா! ஒன்று தங்கைக்கு நீங்கள் கொடுப்பதாகச் சொல்லிய பத்தாயிர ரூபாய் சொத்து எழுதி வைத்தால் தான் என் திருமணப் பேச்சை எடுக்க நான் ஒப்புக்கொள்ளுவேன். தங்கையின் மங்கலமான வாழ்வுதான் முதலில் நான் விரும்புவது. என்னைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று பலமுறை வற்புறுத்தியிருக்கிறேன். நீங்கள் என் திருமணப் பேச்சைப் பயன்படுத்திக்கொண்டு தங்கையை இங்கு அழைத்து வந்து விட்டீர்கள். முதலில் தங்கையின் சிந்தும் கண்ணீரை நிறுத்தி அவள் வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்" என்று வெடுக்கென்று பேச ஆரம்பித்தான்.

"அவன் கிடக்கிறான் மடப்பயல். அவனுக்கு இளைத்த வர்களா நாம். அவன் நினைத்தபடி பணம் இங்கே என்ன கொட்டியா கிடக்குது கொடுக்க?" என்று வீறாப்புக் கலந்த குரலில் பேசத் தொடங்கினார்.

பார்வதியின் உள்ளம் உவகை கொண்டது. தன் அண்ணன் தன்னிடம் காட்டும் தன்னலமில்லா அந்தத் தூய்மையைக் கண்டு வியந்தாள். இனித் தன்வாழ்வைச் சூழ்ந்திருக்கும் கருமுகில்கள் அகன்று பளிச்சென்று விளங்கும் என்று உணர ஆரம்பித்தாள்.

"அது மட்டும் இல்லை; அப்பா! அவன் உத்தியோகம் வாங்கிக் கொடுப்பான் என்ற காரணத்துக்காக அவன் பெண்ணை மணக்க நான் சம்மதிக்க மாட்டேன்."

"சரிதான். உன் திறமையை நம்பி அதற்காக எந்த உத்தியோகமும் உனக்குக் காத்துக் கிடக்கவில்லை."

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. கூலி வேலை செய்து எனக்குப் பிழைக்கத் தெரியும். அதற்காக ஒருவரிடமும் சுயமதிப்பை நான் இழக்க விரும்பவில்லை. அவன் வாங்கிக் கொடுக்கிற உத்தியோகத்திற்காக அந்தப் பெண்ணை மணக்க எனக்குச் சம்மதம் இல்லை."

"சரி. நீ போய்ச் சாப்பிடு. நிதானமாகப் பேசுவே."

பார்வதி சமையலறையில் கழுவி வைத்த கிண்ணத்தை எடுத்துவைத்துச் சோறு போட்டாள்.

"அண்ணா! நீ தீவிரமாகப் பேசுவது...."

"உனக்குப் பிடிக்கவில்லையா?"

"இல்லே அண்ணா! தீவிரமாகப் பேசுகிறவர்கள் தாம் தம் கொள்கைகளை மிகத் தீவிரமாக விட்டு விடுகிறார்கள். நீ

இந்தத் திருமணத்தை மறுப்பதில் நியாயமில்லை. வேண்டு மானால் உனக்குப் பெண் பிடிக்கவில்லையென்றால் மறுத்து விடு. அது நியாயம். அது உன் விருப்பம். எனக்கு சொத்து வேண்டாம் அவர்கள் பார்த்து எனக்கு உத்தியோகம் தர வேண்டாம் என்று சொல்வது அது உன் கையில் இல்லை. உலகம் அந்த உரிமையை உனக்குக் கொடுத்து உன்னை வாழ வைக்க முன் வராது. ஏழையாய்க் கூலியாய் இரந்துண்ணும் வாழ்வை வேண்டுமானால் இந்த உலகம் கொடுக்க முன்வரும். அதனால் வரும் நன்மையை வேண்டாம் என்று சொல்லாதே அண்ணா!"

அவள் பேசி முடிப்பதற்கும் அவன் சாப்பிட்டு முடிப்பதற்கும் சரியாக இருந்தது.

"சரி! உன் அறிவு எனக்குத் தேவையாயிருக்கும் பொழுது வந்து கேட்டுக் கொள்கிறேன்" என்று சொல்லிய வண்ணம் எழுந்து கை கழுவிக் கொண்டான்.

"அம்மா! இன்று தீர்மானமாகச் சொல்கிறேன். எனக்கு உத்தியோகம் வருவது எல்லாம் சேர்ந்து முப்பதினாயிரம் கிடைக்கும் என்று அப்பா சொல்வதற்கெல்லாம் நான் ஒப்புக் கொள்கிறேன். முதலிலே தங்கைக்கு எழுதி வைக்க வேண்டிய சொத்தை எழுதி வைக்கச் சொல். அப்புறம்தான் என் திருமணத்திற்கு நான் ஒப்புக்கொள்வேன்."

"நானுந்தான் அவரிடம் வற்புறுத்தி வருகிறேன். அவர் கேட்டால்தானே."

"சரிதான். நான் என் மகளுக்குச் சொத்துப் பத்தாயிரத்தை இப்பொழுது எழுதி வைத்துவிட்டால் அவர்கள் எப்படி இவனுக்குப் பெண்ணைக் கொடுப்பார்கள். எதைப் பார்த்து அவர்கள் இவனுக்கு இவ்வளவு சிறப்புச் செய்வார்கள். இதெல்லாம் தெரியாமல் இவன் பேசுகிறான். எல்லாம் இவன் எதிர்காலத்தைப் பார்த்துத்தான் நான் எதுவும் செய்யாதிருக்கிறேன். பார்வதிக்கு என்ன தெரியும்! அவன் கேட்டனுப்பினால் இவள் கேட்கிறாள். அவளுக்கு மட்டும் நீ சிறப்பாக வாழ்வதிலே விருப்பம் இல்லையா? உன் திருமணம் ஆன பிறகு உங்கள் விருப்பம் போல் செய்யுங்களேன். நானா வேண்டாம் என்கிறேன். அது வரையிலும் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். அப்புறம் நீ வேண்டியதை எழுதி வையேன். நானா வேண்டாம் என்கிறேன்!"

உள்ளறையில் பார்வதி தன் அண்ணன் வாங்கிவந்த 'சினிமா விசிறி' பத்திரிகையில் இருந்த படங்களைப் பார்த்துக்

கொண்டிருந்தாள். அதன் பக்கங்களைப் புரட்டிக் கொண்டு விதவிதமாக உடுத்திக் கொண்டிருந்த நடிகைகளின் ஆடை அலங்கார அழகை ஆராய்ந்து கொண்டிருந்தாள். அப்பா சொன்ன சொற்கள் காதில் விழுந்து கொண்டிருந்தன.

இருளிருந்த இடத்தில் திடீர் என்று வெளிச்சம் உண்டானது போல் இருந்தது. வெளியே சன்னலை எட்டிப் பார்த்தாள். வானத்தில் முகில்கள் மூடாமல் எங்கும் வெட்ட வெளியாக நீலவானம் விளங்கியது. வெண்முகில்கள் அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தன. நிலவு தன் தண்ணிய கதிர்களை வீசிக் கொண்டிருந்தது. தன் உள்ளத்தில் பெருஞ்சுமை நீங்கியது போல் இருந்தது. தன் எதிர்கால வாழ்வை மறைத்திருந்த திரை சிறிது விலகியது போல இருந்தது. திரைக்கு அப்புறம் இருள் சூழ்ந்துகொண்டிருந்த காரணத்தால் திரையை விலக்கிப் பார்த்தால் என்ன பயன்! அங்கு வெளிச்சம் இருந்தால்தானே, திரையை விலக்கிப் பார்த்தால் பயன் உண்டு. வாழ்வின் பாதை இனித் தெளிவாக அமைந்து கிடந்தது போல் விளங்கியது. இதுவரையிலும் தன் தந்தையைப் பற்றிக் கருதியது அவ்வளவும் தவறு என்று அவள் மனம் எண்ண ஆரம்பித்தது.

அறையில் கடிகாரத்தில் மணி பத்து அடித்தது. வீடு அமைதியுற ஆரம்பித்தது. அவள் தன் அண்ணனின் தூய அன்பையும் தந்தையின் கடமையுணர்ச்சியையும் எண்ணி மகிழ்ந்தாள். அவள் உள்ளத்தில் இருந்த சுமையெல்லாம் நீங்கி ஓய்வு பெறுவதைப் போல அவளும் கவலையில்லாமல் பிறகு தூங்க ஆரம்பித்தாள். சன்னலில் வந்த மெல்லிய காற்று அவளைத் தட்டித் தூங்க வைப்பது போல் இருந்தது. அதற்குத் தாலாட்டுப் பாடுவது போல் கடிகாரத்தின் அசைவு அசைந்து கொண்டிருந்தது.

## 9

விழித்து எழுந்ததும் தனக்காகப் பொழுது விழித்துக் காத்துக் கொண்டிருப்பதை அப்பொழுத தான் சிவராமன் உணர்ந்தான். அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்த காப்பியின் மீது அவன் பார்வை சென்றது. விரிக்காமல் மடித்துக் கிடந்த நாள் செய்தித்தாள் அப்படியே கிடந்தது. அதைப் படிக்க வேண்டும் என்ற எண்ணமும் அவனுக்குச் செல்லவில்லை. எழுந்ததும் பரபரப்பாகச் செய்தித்தாளைத் தேடும் அவன்

கைகள் அதனை அன்று தொடவும் விழையவில்லை. காப்பியை எடுக்கச்சென்ற அவன் கைகளும் மெல்லவே எடுத்தன. அதில் சூடில்லாமல் ஆறி இருந்ததை எதிர்த்து அவன் மனம் புரட்சி செய்ய விரும்பவில்லை.

என்றும் ஆபீசைப்பற்றி அதிகம் எண்ணாத அவன் மனம் அன்று ஆபீசைப்பற்றியே எண்ண ஆரம்பித்தது. அவன் வேலை செய்யும் அதே அறையில் டைபிஸ்டு சாரதா 'டைப்' அடிக்கும் அந்தக் காட்சி அவன் மனக்கண் முன் அப்படியே வந்து நின்றது. மிகச் சுறுசுறுப்பாக அவள் கை விரல்கள் அசைவதும் அவள் கருவிழிகள் ஆழ்ந்து அதில் கவனம் செலுத்துவதும் அவன் கவனத்தை விட்டு அகலவில்லை. அதே சமயத்தில் ஆபீசுக்கு வெளியே நின்று அந்த ஈட்டிக்காரன் பேசும் பதற்றமான பேச்சு ஒவ்வொன்றும் ஈட்டி பாய்வது போலத் தோன்றியது. இல்லை. நாளைக்குத் தருகிறேன் என்று சொன்னால் என்ன? அவன் கேட்க மாட்டானே! அவன் வளைந்த மூக்கும் கூரிய விழிகளும் அச்சுறுத்துவது போல அவன் மனத்துக்குப்பட்டது. அந்த நிலைமையில் சாரதாவின் முன்னால் அவனால் அவமானப்பட்டால் என்ன செய்வது என்ற சிந்தனையில் ஆழ்ந்தான்.

அன்று ஆபீசில் உட்கார்ந்திருந்த சிவராமனுக்கு அன்று காலையில் தோன்றிய அச்சத்தோடு அன்றைய ஆபீசு வேலை துவக்கம் ஆக ஆரம்பித்தது. மேலே சுற்றிய மின் விசிறியின் காற்றின் அசைவினால் ஒரு சில காகிதங்கள் மேலெழுந்து பறக்க முயற்சித்தன. அவற்றை ஒருங்கே அடுக்கி அதன்மீது கண்ணாடிக் கல் ஒன்றை எடுத்து வைத்தான். அதில் இருந்த பூ வடிவம் தீட்டப் பெற்ற சித்திரத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனம் அந்தக் குறிப்பேடுகள் மீது செல்லவில்லை என்பது அவ்வேடுகள் இருந்த இடத்தை விட்டு அசையாமல் இருந்ததால் தெரிந்தது.

காக்கி சட்டை அணிந்த 'பியூன்' ஒருவன் அவ்வப் பொழுது உள்ளே தனியறையிலிருந்து அடிக்கும் மணியோசை கேட்டு உட்சென்று கையெழுத்திட்ட குறிப்பேடுகளை எடுத்து வருவதும் கொண்டு போய் வைப்பதுமாக இருந்தான். மற்றைய நேரங்களில் வெளியில் போட்டிருந்த பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு நிம்மதியாகக் கண்களை மூடிக் கொண்டிருந்தான். அவன் போட்டிருந்த நாமத்தைக் கண்டால் உண்மையில் அவன் தூங்குகிறானா கண்மூடித் தியானம் செய்கிறானா என்று சொல்ல முடியாத நிலைமையில் இருந்தது. அடிக்கடி

மணியோசை கேட்டு அவன் விழிக்க வேண்டியிருந்ததால் கண்கள் சிறிது சிவந்திருந்தன. அவன் கையில் கசங்கி மடித்துக் கிடந்த செய்தித்தாள் அவன் கோட்டைப் போலவே கசங்கிக் கிடந்தது. அதைப் படிக்கும்பொழுது மட்டும் கொஞ்சம் சுறுசுறுப்பு அவனிடத்தில் தோன்றுவது போலக் காணப் பட்டது. மற்றைய நேரத்தில் அதை மடித்து அவன் கோட்டு ஜேபியில் போட்டு வைத்தான்.

மற்றும் சில குமாஸ்தாக்கள் அவரவர் தம் தொழிலைச் செய்த வண்ணம் இருந்தார்கள். தலைமைக் குமாஸ்தா தணிகாசலம் தன் புருவத்தை உயர்த்திய வண்ணமிருந்தார். ஆங்கிலோ இந்திய மாது ஒருத்தி டைப் எந்திரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து டைப் அடித்துக் கொண்டிருந்தாள். அவள் வாயிதழ்களில் பூசியிருந்த சிகப்பு நிறம் பளிச்சென்று தோன்றியது. அது சிறிதும் கலையாதபடி வாயை மூடிய வண்ணம் அவ்விரு இதழ்களும் ஒன்றையொன்று தழுவி யிருந்தன. வியர்வையால் கழுத்தில் இருந்த பவுடர் கலைந்து பார்க்க அருவருப்பாகத் தோன்றியது. கையில் அணிந்திருந்த சிறிய கடிகாரமும் கையோடு ஒட்டிக் கிடந்தது. சிலுவை தொங்கிக் கொண்டிருந்த மெல்லிய தங்கச் சங்கிலி மார்பில் மின்னிக் கொண்டிருந்தது. டைபிஸ்டு சாரதாவும் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். இந்த ‘டைப்’ அடிக்கும் எந்திரத்தின் ஒலிகள் மாறி மாறி அச்சமில்லாமல் ஆரவாரஞ் செய்து கொண்டிருந்தன. அவ்வப்பொழுது இடை இடையே அவை அமைதி கொள்ள ஆரம்பித்தன.

சிவராமனின் சிந்தனை அன்று மாலை ஈட்டிக்காரன் வந்தால் என்ன செய்வது என்பதைப் பற்றிச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவனுக்கு இருப்புக் கொள்ள வில்லை. தான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தான். வெளியே முற்றத்திற்கு வந்தான். ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துப் பிடித்தான். அதை விரைவில் பிடித்து முடித்து விட்டு மறுபடியும் தன் இடத்தில் வந்து உட்கார்ந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பியூன் அவனருகில் வந்தான்.

“ஐயா! சேட்ஜி உங்களைப்பார்க்க உள்ளே வரலாமா என்று கேட்கிறார். அவர் வெளியே நிற்கிறார்.”

அந்தப் பக்கத்தில் இருந்த டைப் எந்திரத்தைப் போலவே அவன் இதயம் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. கொலைக்

குற்றம் செய்தவர் எதிர்பார்த்தபடி தூக்குத் தண்டனை கிடைத்தால் எந்த நிலைமையை அடைவார்களோ அந்த நிலைமையை அடைந்தவனைப் போல அவன்முகம் வெளுத்து விட்டது. நெற்றியில் சில வியர்வைத் துளிகள் துளிர்க்க ஆரம்பித்தன. போட்டிருந்த உட்சட்டை நனைந்ததைப் போன்ற உணர்வு அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தது.

பியூன் அவர் கொடுத்தனுப்பிய 'விசிடிங் கார்டைக் கொடுத்தான். அதை நிதானமாக உற்றுப் பார்த்தான். அவனை யறியாமல் ஒரு பெருமூச்சு விட்டான். எதிரே அந்தப் பியூன் இல்லாதிருந்தால் அந்தப் பெருமூச்சோடு 'அப்பாடா' என்ற சொல்லும் வாய்விட்டு வெளிவந்திருக்கும். மின் விசிறியின் காற்றுக் கொஞ்சம் சில்லென்றிருந்தது. நனைந்த வியர்வை உலர ஆரம்பித்தது.

"வரச்சொல்" என்று கூறி அலமாரியில் இருந்த குறிப்பேடு ஒன்றை எடுத்து மேஜைமேல் வைத்தான்.

வெள்ளை ஜுப்பாய் அணிந்து தலையில் ஒரு தொப்பியோடு விளங்கிய பம்பாய் வியாபாரி ஒருவர் உள்ளே நுழைந்தார். பக்கத்தில் இருந்த சிறு நாற்காலியைச் சுட்டிக் காட்டி அதில் உட்காருமாறு அவரிடம் சொன்னான். அவர் புன்முறுவல் பூத்த வண்ணம் அந்த நாற்காலியில் அமர்ந்தார்.

"பாருங்கள்! உங்கள் ஏட்டைத்தான் எடுத்து வைத்திருக் கிறேன். இன்று சாயுங்காலம் மேனேஜர் கையெழுத்தாகித் தபாலில் அனுப்பி விடுவோம். கவலையில்லாமல் போகலாம்" என்று அமைதியாகச் சொன்னான்.

"வருகிறேன். நன்றி" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தினின்று எழுந்து அவர் போய்விட்டார். அவர் வெளியே போனதும் அந்தக் குறிப்பேட்டை எடுத்து அலமாரியில் வைத்தான்.

"எதற்கு இப்படி நடுங்கவேண்டும். என்ன தலையா போய் விடும். பார்த்துக் கொள்ளலாம். அவன் வட்டிக்குத் தானே கடன் கொடுத்தான். கேட்டால், இருந்தால் கொடுக்கப் போகிறேன், இல்லாவிட்டால் பிறகு தருவதாகச் சொன்னால் போகிறது" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு சிறிது தைரியம் கொண்டான்.

பிறகு மனத்தை ஒருவாறு தைரியஞ் செய்து கொண்டான். ஆபீஸ் குறிப்பேடுகளை எடுத்து வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்யத் தொடங்கினான். எப்படியும் அவன்

சாயுங்காலம்தான் வருவான். அதற்குள் முக்கியமான வேலைகளைச் செய்து முடித்து விட்டு வீட்டிற்குச் சீக்கிரம் கேட்டுக்கொண்டு போகலாம் எனத் தீர்மானித்தான். அவ்வப் பொழுது அவன் எழுதிய குறிப்புக்களைப் பியூன் வந்து எடுத்துக் கொண்டு போனான்.

மணிபர்சில் இருந்து இரண்டணா எடுத்துக் கொடுத்து "காப்பி வாங்கி வா" என்று கூறி அனுப்பினான். சிறிது நேரத்திற்கெல்லாம் காப்பி மேஜைக்கு வந்தது. அதை அவன் குடித்து விட்டுக் கண்ணாடிக் குவளையை மேஜை மேல் வைத்தான். பிறகு இடத்தைவிட்டு வெளியே வந்தான். வெளியே முற்றத்தின் கைப்பிடிச் சுவரில் சாய்ந்த வண்ணம் சிகரெட் பற்ற வைக்கத் தொடங்கினான். புகையை வாய் நிறைய இழுத்து மொத்தமாக விட்டான். வெளிப் பக்கத்தில் அவன் பார்வை விழுந்தது.

வேகமாகச் சில கார்கள் "ஹார்ன்" அடித்துக் கொண்டு வருவதும் போவதுமாயிருந்தன. பாதிரிப் பெண்கள் சிலர் உடம்பு முழுவதும் மூடிக் கொண்டு ஒரே மாதிரி நடந்து சென்றனர். சொறி பிடித்த நாய் ஒன்று தெருவோரமாய் ஒதுங்கி நடந்து சென்றது. அங்கே ஒரே குப்பையாகக் கிழிந்த கடிதங்களும், பக்கத்திலிருந்த அரச மரத்தின் உதிர்ந்த இலைகளும் குவிந்து கிடந்தன. அங்கு விழுந்து கிடந்த துண்டுச் சிகரெட்டைச் சோம்பேறிப் பையன் பற்ற வைத்துக் கொண்டிருந்தான். அவன் கட்டியிருந்த வேட்டி காவியேறிப் போயிருந்தது. அவன் முகம் எண்ணெய்ப் பசையோடு மந்தமாக இருந்தது. அதற்குப் பக்கத்தில் இருந்த கட்டிடத்தின் ஒதுக்கமான மேட்டில் உட்கார்ந்திருந்த ஆள் மீது அவன் பார்வை சென்றது. அவனுடைய பார்வை சிவராமனின் ஆபீஸ் வாசற்படியை நோக்கிய வண்ணம் இருந்தது. சட்டென்று சிவராமன் சிறிது பின்பக்கம் ஒதுங்கினான்.

வேறு வழியில்லை. தனக்காக அவன் காத்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்தான். ஆம் என்று சொல்லுவது போல் அரச மரத்தின் இலைகள் காற்றால் அசைந்து சலசலத்தன. அந்த மரத்திலிருந்து விழுந்த சில இலைகளோடு கடுதாசிகள் ஒரு குப்பையாக ஒதுங்கிக் கிடந்தன. அந்தக் குப்பையின்மீது வெற்றிலை பாக்கு மென்று உமிழ்ந்த கறை இன்னும் சரியாகக் காயாமல் மினுமினுத்துக் கொண்டிருந்தது.

சிவராமனுக்கு இன்னது செய்வது என்று தெரியவில்லை. கையிலிருந்த துண்டு சிகரெட்டைக் கீழே போட்டான். அதன்

சாம்பல் சிதறிக் காற்றில் பறந்தது. அவன் எண்ணமும் இன்னது செய்வது என்று தெரியாமல் சிதறியது. மறுபடியும் தன் மேஜை அருகில் போய் நாற்காலியில் உட்கார்ந்தான். அந்த மேஜை மேல் இருந்த குறிப்பேடுகள் சலனமில்லாமல் கிடந்தன. அவனுடைய உள்ளமும் உணர்ச்சியற்ற இயந்திரத்தைப் போல மறுத்துப் போய் இருந்தது. வாழ்க்கை கசந்து விட்டது.

சாரதாவின் டைப்மிஷின் மட்டும் அடித்துக் கொண்டே இருந்தது. அவ்வப்போது வரியின் முடிவில் தள்ளும் போது சிறிது நிறுத்தி அதன் பிடியைத் தள்ளுவதும் பக்கம் முடிந்ததும் மாற்றுவதுமாக இருந்தாள். அடுத்த ஏடுகளைக் குண்டூசியால் குத்தி வைத்து ஒழுங்குபட வைத்துக் கொண்டிருந்தாள். நெறித்த புருவத்தோடு தலைமைக் குமாஸ்தா ஏதோ ஆழ்ந்து சிந்திப்பவரைப் போலக் காணப்பட்டார். அவ்வப்போது அடித்துக் கொண்டிருந்த “கூப்பிடு மணியைக்” கேட்டு ஆபீஸ் சேவகன் உள்ளே வருவதும் போவதுமாக இருந்தான்.

சிவராமனுக்கு வேலைமீது கவனம் ஓடவில்லை. ஏதோ பொருளற்ற பார்வையோடு ஆபீசைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் விழிகளுக்குப் புதிதாக வேலைக்கு வந்த காரணத்தால் சாரதாவினிடம் இருந்த சுறுசுறுப்பும், வேலை செய்து மறுத்துப் போன தலைமைக் குமாஸ்தாவின் பொறுமையும், இயந்திரம் போலக் கூப்பிட்ட மணிக்கு உட்சென்று வெளிவந்து கொண்டிருந்த ஆபீஸ் சேவகனின் கடமை உணர்ச்சியும், ஒழுங்காக ஓய்வு சாய்வில்லாமல் இயங்கிக் கொண்டிருந்த கடிகாரத்தின் ஓட்டமும் எல்லாம் இயற்கையாய் அமைந்துவிட்டவை போலத் தோன்றின. அவர்கள் செய்யும் வேலைகளில் தனக்கும் ஒன்றும் தொடர்பு இல்லாததைப் போல் அவனுக்குத் தோன்றியது.

அவனுக்கு என்ன பதில் சொல்வது என்பதில் அவன் சிந்தனை ஆழ்ந்தது.

கடிகாரம் யாரையும் கேட்காமல் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. மணி ஐந்து அடிப்பதை நோக்கி அதன் முள் இயங்கிக் கொண்டிருந்தது. அது சாதாரணமாகத் தன் நடையிற் சென்றாலும் தலைமைக் குமாஸ்தாவைத் தவிர மற்றவர்கள் அனைவருக்கும் அது மெதுவாகவே இயங்கு வதைப் போல் இருந்தது. அவருக்கு வயதின் காரணமாகவும் கடமையே பொழுது போக்கு என்ற கொள்கையின் காரணமாகவும் அந்தக் கடிகாரம் ஒழுங்காகத்தான் போகிறது என்ற எண்ணம் தோன்றியிருக்கலாம்.

மணி ஐந்தடித்தது. ஐந்து சம்மட்டிகளைக் கொண்டு தாக்கியது போன்று இருந்தது. ஆபீஸைவிட்டு வெளியே போக வேண்டுமே! போனால் அவனைச் சந்திக்க வேண்டுமே என்ற எண்ணமும் 'அதைத் தொடர்ந்து அச்சமும் அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தன. மேனேஜரின் கதவு தாளிடப்பட்டது. தலைமைக் குமாஸ்தா உட்கார்ந்திருந்த இடத்தில் அவர் கோட்டு மட்டும் இருந்தது. பழக்கமாக அவர் அதை அங்கே விட்டுவிட்டுச் செல்லும் பழக்கத்தில் அவர் அதை அங்கே விட்டுச் சென்றார் என்பது அவனுக்குத் தெரியும். அவர் போய்விட்டார் என்பதை அவரை விட்டுப் பிரிந்திருந்த கோட்டின் தனிமை எடுத்துக் காட்டிற்று. ஆங்கிலோ இந்தியமாதின் 'டக்' 'டக்' என்று நடந்து சென்ற ஒலியும் கேட்டுக் கொண்டிருந்தது. ஆபீஸில் இருந்த குமாஸ்தாக்கள் அனைவரும் அறையை விட்டு வெளியே சென்றனர். சிவராமன் மட்டும் அப்பொழுதுதான் ஏதோ முக்கியமான வேலைகள் செய்பவன் போல் சில குறிப்பேடுகளைத் திறந்து அதைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

ஆபீஸ் பியூன் சன்னல் கதவுகளையெல்லாம் மூடத் தொடங்கினான். ஒனறு இரண்டு மட்டும் விட்டு வைத்தான். காற்றுப் போக்கிகளுக்குக் கட்டப்பட்டிருந்த கயிறுகளை அவிழ்த்துவிட்டான். அறையின் கதவுகள் ஒவ்வொன்றாக மூடப்பட்டன. அவன் பார்த்த பார்வைகள் வெளியே போ என்று சொல்லாமல் சொல்லுவதைப் போல இருந்தது. கடிகாரத்தின் இரண்டு கைகளும் தன்னிடத்திலிருந்தபடியே அவனை எழுப்பித் தள்ளுவன போல் அவனுக்குத் தோற்ற மளித்தன.

சாரதாவும் அந்த இடத்தைவிட்டு எழுந்து விட்டாள் என்பதையும் அடங்கிவிட்ட டைப் இயந்திரத்தின் அமைதியிலிருந்து தெரிந்து கொண்டான். சிறிது நேரத்திற் கெல்லாம் கண்ணாடியிருந்த தனியறைக்குச்சென்று தலையெல்லாம் சரி செய்துகொண்டு வேலை செய்த அலுப்பே முகத்தில் காட்டிக் கொள்ளாமல் அவள் பக்கத்தில் வந்து நின்றதை அவன் சிறிது நேரம் கவனிக்கவில்லை.

"ஏன் சார்! இன்னும் வெளியே போக மனம் வரவிலலையா?" — கேட்டது சாரதாவின் குரல்தான் என்பதை உணர்ந்து கொண்டான்.

"ஆமாம். உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். உங்களைப் போல...."

அதற்குமேல் அவன் ஒன்றும் தொடர்ந்து பேசாமல் நிறுத்தி விட்டான்.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள். தொடர்ந்து சொல்லி விடுங்கள். வேலை எளியது என்று சொல்லப் போகிறீர்கள். அவ்வளவு தானே."

"இல்லை. வாழ்க்கை எளியது. கவலையற்ற வாழ்க்கை." என்று அவனையும் அறியாமல் மனத்திலிருந்த தொல்லையையும் மறந்து காத்துக் கொண்டிருந்த கடன்காரனையும் மறந்து ஏதோ உள்ள எழுச்சியால் இந்தச் சொற்களைச் சொன்னான்.

"உங்களுக்கு மட்டும் குழந்தையா குட்டியா! எழுந்திருங்கள். குறிப்பிட்ட நேரத்திற்குமேல் ஆபீசில் இருக்கக் கூடாது. இது முக்கியமான கொள்கையாக இருக்க வேண்டும். ஒரு சிலர் பள்ளிகூடத்துப் பையன் வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டு வருவதைப் போல் குறிப்பேடுகளை வீட்டுக்கும் கொண்டு போகிறார்கள். எதிலும் ஒரு வரையறை வேண்டும். ஐந்தடித்தால் எழுந்துவிட வேண்டும்" என்று அவளும் பலநாள் பழகியவளைப் போல் முற்றுப் புள்ளியில்லாமல் பேசத் தொடங்கினாள்.

பேசுவது சாரதாதானா என்று அவனுக்கு ஐயம் தோன்ற ஆரம்பித்தது. தொழிலில் கண்ணுங் கருத்துங் கொண்டு யாரிடமும் பேசாமல் கோடு போட்டதைப் போலத் தன் கடமைகளை ஆற்றிவரும் சாரதாதானா இவ்வாறு பேசுவது என்று எண்ணத் தொடங்கினான்.

அவளையே அவனுக்கு வட்டிப் பணமாவது கட்ட ஏதாவது கடன் கேட்டு விடலாமா என்ற அற்ப யோசனை தோன்ற ஆரம்பித்தது.

"நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன் மறுக்க மாட்டீர்களே!"

இவ்வாறு பேசும்பொழுது சிவராமனும் சாரதாவும் தவிர வேறு யாரும் இல்லை என்பது அங்குச் சுற்றிக் கொண்டிருந்த மின் விசிறி சுற்றும் சிறு ஒலியைத் தவிர வேறு ஓசை இல்லாத காரணத்தால் தெரிந்தது. சட்டென்று சாரதாவின் முகம் சிவந்து விட்டது. உடம்பிலிருந்த இரத்த வோட்டம் சிறிது வேகமாக ஓடுவதைப் போல இருந்தது. நாணத்தின் எல்லை அவள் நாணித் தலை கவிழ்ந்த நிலையில் இருந்து தெரிந்தது.

அவள் ஒன்றும் எதிர்பேசாமல் இருந்தாள். அவனுக்கு ஏன் அவளைக் கேட்டோம் என்று ஆகிவிட்டது.

அதற்குள் அந்த பியூன் சிறிது கனைக்கத் தொடங்கினான். அந்தக் கனைப்பில் ஏதோ ஒரு தனிப்பொருள் இருந்ததைப் போல சாரதாவுக்குத் தோன்றியது.

சிவராமன் இருந்த இடத்தைவிட்டு எழுந்தான். ஆபீஸ் குறிப்பேட்டை எடுத்து வைத்துவிட்டு வெளியே புறப்படத் தொடங்கினான். படிகட்டு இறங்கும் நிலையில் அவனுடைய கால்கள் அடியெடுத்து வைக்க மறுத்துவிட்டன. அப்படியே அசைவற்றுச் சிறிது நேரம் நின்று விட்டான்.

"தொடராத கதையைப் போல எதிலும் அப்படி அப்படியே நின்று விடுகிறீர்களே."

"கதையின் தொடர்ச்சியைக் கொண்டு போக முடியாததால்தான்."

"ஏன் கதையமைப்பில் பெரிய சிக்கல் ஏதேனும்...."

"எவ்வளவோ சிக்கல்கள். வெளியே எதிர்க் கட்டிடத்தின் ஓரத்தில் நின்று கொண்டிருக்கிறானே அவன்தான் என் கதையில் இப்பொழுதைய சிக்கல்."

சாரதா வெளியே எட்டிப் பார்த்தாள். கையில் கனத்த பிரம்பொன்று வைத்து அசைத்துக்கொண்டிருந்த காபூலி வாலாவைக் கண்டாள். தானே முயன்று கற்றுக்கொள்கிற கணக்கைப் போல் தெளிவாகி விட்டது.

"அவனுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்?"

"இப்பொழுது வட்டி மட்டும் முப்பது ரூபாய் கொடுத்தால் அவன் போய்விடுவான்."

சட்டென்று தன்னுடைய கைப்பையிலிருந்து முப்பது ரூபாய் — மூன்று நோட்டுகளை எடுத்துக் கொடுத்தாள்.

கனவில் வாழ்கிறோமா என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றவில்லை. சாரதா கொடுப்பது உண்மையான நோட்டுகள்தாம் என்று நன்றாகத் தெரிந்தன. அந்த ஈட்டிக் காரன் சாதாரணப் பொருளாக அவன் மனத்தில் காட்சி யளித்தான்.

அவன் கால்களில் ஒரு புதிய உணர்வு தோன்ற ஆரம்பித்தது. டிக்கட் கொடுப்பதற்காக நிறுத்தப்பட்ட பஸ்

திடீரென்று புறப்படுவது போல இருந்தது அவன் நடையின் வேகம்.

நன்றி கலந்த உணர்வோடு அவளைப் பார்த்தான். ஏதோ ஒன்று கலந்த உணர்வோடு அவள் விழிகள் இவனைச் சந்தித்தன. அதற்குள் ஆபீஸ் கதவுகளை மூடி விட்டு 'கல்' 'கல்' என்ற சாவியோசையோடு ஆபீஸ் பியூன் படிகட்டு நோக்கிக் கீழே நடந்தான். அவனுக்கு அவன் படிக்கும் பத்திரிகையின் நிகழ்ச்சிகளில் ஒன்றைப் போலவும் சனிக்கிழமை இரண்டாவது ஆட்டம் எப்பொழுதாவது சென்று பார்க்கும் காதல் கட்டத்தின் காட்சிகளில் ஒன்றைப் போலவும் அவனுக்கு விளங்கியிருக்க வேண்டும். அதனால் தான் கீழேபோய் அவர்களை மீண்டும் பார்க்காதவனைப் போல ஒருவமுறை பார்த்துவிட்டு மெல்ல நடந்து சென்றான்.

ஆபீஸ் மாடி அறையை விட்டுத் தரையில் சிவராமன் இறங்கி வந்ததும் அப்பொழுதுதான் அவனைச் சந்திக்க வந்ததைப் போல அந்த ஈட்டிக்காரன் முன்வந்து குறுக்கே நின்றான்.

"இந்தா முப்பது ரூபாய் வட்டிக்கு வைத்துக்கொள்" என்று சொல்லிக் கொடுத்தான். தபால் கடிதம் கொடுத்து விட்டுச் சைக்கிளில் ஏறிச்செல்லும் தபால்காரனைப் போல பற்றில்லாமல் சென்றுவிட்டான். நகரத்தின் கூட்டத்தோடு கூட்டமாக அவனும் ஒருவனாகக் கலந்து விட்டான். வழக்கம் போல் கார்கள் வருவதும் போவதுமாக இருந்தன. எதிரேயிருந்த அச்சகத்தார் வேலை விட்டுவிட்ட படியால் வரிசை வரிசையாகத் தொழிலாளர்கள் சுறுசுறுப்பாக வீடு நோக்கி நடந்தார்கள்.

தன்னோடு பக்கத்தில் சாரதா நின்று கொண்டிருந்ததை அவன் மறக்கவில்லை.

"உங்கள் பணத்தை...."

"அதைப்பற்றிக் கவலையில்லை. நிதானமாகக் கொடுங்கள்."

சாரதா பஸ் நிலையத்தை நோக்கி நடந்தாள். சிவராமனும் அவளோடு பின் நடந்தான். பிராட்வே சந்திப்பில் வண்டிகள் நெருங்கிச் சென்று கொண்டிருந்தபடியால் இருவரும் சிறிது நேரம் நிற்கவேண்டியிருந்தது. அங்கேயிருந்த வெள்ளைச் சட்டைப் போலீஸ்காரன் தடுத்து நிறுத்தினான். பிறகு சிறிது நேரம் பொறுத்து வழிவிட்டான். அதில் நடந்து

சென்றவர்கள் கவலையில்லாமல் மெதுவாக நடந்து சென்றனர். சிவராமனும் சாரதாவும் சட்டக் கல்லூரியின் நடை பாதையை அடைந்து விட்டார்கள். அந்த நடைபாதையில் ஒருவன் ஜோசியம் சொல்லிக் கொண்டிருந் தான். அவன் சொல்லுவதையெல்லாம் கேட்டுக்கொண்டு ஒன்றும் சொல்லாமல் தலையையசைத்துக் கொண்டு சுமார் முப்பது வயதுள்ள ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அதற்குப் பக்கத்தில் ஓர் அம்மையார் அடுத்துக் கேட்பதற்குப் பொறுமையாக உட்கார்ந்து கொண்டிருந்தார். அவன் முன்னால் கைரேகைகள் போட்ட படம் ஒன்று இருந்தது. அவன் நெற்றியில் குங்குமப் பொட்டுச் சிறிது அகலமாக வைத்துக் கொண்டிருந்தான். மங்கலான நிறமுடைய பழைய கோட்டு ஒன்று அவன் போட்டிருந்தான். அவன் உட்கார்ந்த இடத்திற்குப் பக்கத்தில் சிறிது தொலைவில் சில சட்டிப் பானைகள் கல்லடுப்பின்மீது அங்கொன்றும் இங்கொன்று மாகக் கிடந்தன. கறுப்பு நிறமுடைய குழந்தையொன்று கிழிந்த மூங்கில் தட்டியில் அமைதியாகப் படுத்துத் தூங்கி கொண்டிருந்தது. அக்குழந்தையின் தாய் சுள்ளிகளை எடுத்து அடுப்பு எரித்துக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் எந்த எண் பஸ் ஏறவேண்டும்?"

"ஒன்பது பத்து எதில் வேண்டுமானாலும் போகலாம்."

"நானும் பதினைந்தாம் எண் பஸ்தான் ஏறவேண்டும். பஸ் நிலையம் வரையில் உங்களோடு துணையாக வருகிறேன்."

"அதற்கப்புறம்" என்று சொல்லிவிட்டுச் சட்டென்று பேச்சை மாற்றத் தொடங்கினாள்.

"இன்னும் கொஞ்சம் இருந்தால் அந்த சைக்கிள்காரன் அந்தக் காரில் மோதியிருப்பான்" என்று சற்று வேகமாகத் திரும்பிய சைக்கிளைச் சுட்டிக் காட்டிப் பேசினாள்.

அவள் பத்தாம் எண் பஸ்ஸில் ஏறினாள். அவள் ஏறிய சிறிது நேரத்திற்கெல்லாம் அதுவும் நகர்ந்தது. சிவராமன் 15-ஆம் எண் பஸ் நிலையம் நோக்கி நடந்தான்.

## 10

**பா**ர்வதியின் மனம் உவகையில் ஆழ்ந்தது. தானும் சிவராமனும் நடத்தும் இல்லற வாழ்வின் நன்மைகளையும் இன்பத்தையும் எண்ணி அவள் மனம் மிகவும் இலேசாக

இருந்தது. மறுபடியும் அவள் மனம் சென்னையில் தன் கணவன் அகத்தை நோக்கிப் பறந்து சென்றது. அவர் ஆபீசுக்குச் சென்று வரும்பொழுது முன்னெல்லாம் வாங்கி வரும் புதிய சேலைகளும் சில்க் ஜாக்கட் துணிகளும் அவள் கவனத்துக்கு வந்தன. களைத்து அலுத்து வரும் அவர் முன்னால் காப்பிக் குவளையை முன்கொண்டு நீட்டினால் அவர் விடும் புகையைப் போல் அவர் மனம் எவ்வளவு இலேசாக இருந்தது என்பதை அவள் எண்ணிப் பார்த்தாள். மறுபடியும் தொண்டு செய்ய அவள் மனம் அவனைச் சுற்றி வந்து நின்றது.

"ஏன் எப்பொழுது வந்தாய் பார்வதி?"

"பணம் பத்தாயிரம் என் பெற்றோர்கள் கொடுத்து விடுவார்கள். நம் வாழ்வு இனிப் பழையபடி பொலிவடையும்."

"ஓகோ! இந்தச் செய்தி சொல்லவா நீ வந்தாய்?"

"ஆம். எங்கள் அப்பாவும் அண்ணனும் பேசிக் கொண்டார்கள். அதை உற்றுக் கேட்டேன். அதைச் சொல்லத்தான் ஓடோடி வந்தேன்."

"பார்வதி! இங்கே வா!" அவன் அன்புக்கரங்கள் அவளை அணைக்கச் சென்றன.

பார்வதி அப்படியே உள்ளம் குழைந்தாள்.

"இன்று நானும் உங்களோடு படத்துக்கு வரட்டுமா!"

"ஓ! இதோ. சீக்கிரம் தயாராகி விடு. இனிமேல் உனக்கு ஒருவித தொல்லையும் கொடுக்க மாட்டேன். உனக்கு நிரம்ப கஷ்டம் கொடுத்து விட்டேன். உன் மனத்தை மிகவும் நோகச் செய்து விட்டேன் பார்வதி! என்னை மன்னித்து விடு. நான் என்ன செய்வது. என் பணக்கஷ்டம் உன்னை இப்படி யெல்லாம் நோகச் செய்து விட்டது. உங்கள் அப்பாவும் தங்கமானவர். அவர் மனத்தை அறியாமல் அவசரப்பட்டு ஏதோ சொல்லி விட்டேன். அவர் நல்ல எண்ணம் உடையவர். பார்வதி! ஓகோ நீ இல்லையா உன் நெஞ்சை ம்டடும்தான் அனுப்பி வைத்தாயா?"

"ஆமாம். பார்வதி வருவதற்குக் கொஞ்ச நேரம் ஆகும். சில நாட்களில் வந்து விடுவாள். அதற்குள் விரைவாக இந்தச் செய்தியைச் சொல்ல நான் ஓடோடி வந்தேன்."

இவ்வாறு பார்வதியின் மனம் எண்ண ஆரம்பித்தது. அந்த எண்ணத்தில் தன்னை மறந்தவளாகப் படுக்கையை விட்டு எழாமலே இருந்தாள்.

"எட்டு ஆகியும் தூக்கமா" என்று தட்டி எழுப்பிய பிறகுதான் தனக்கு முன்னால் தன் அன்னை நிற்பதை உணர்ந்தாள்.

கண்களை விழித்து அகலமாகப் பார்த்தாள்.

"என்ன பார்வதி! இன்று அப்பாவோடு நீயும் புறப்பட வேண்டும்."

"அண்ணன்கூட வரவேண்டும். அப்பொழுதுதான் நானும் போவேன்."

"முதல்முதலில் அண்ணன் போகக்கூடாது. அது நமக்குப் பழக்கமில்லை."

அதற்குள் பல்துலக்கிக் கொண்டிருந்த மாணிக்கமும் கையில் பிரஷ்ஷோடு அந்தப் பக்கம் வந்தான்.

"பார்வதி! நீ போ. நீ பார்த்து விட்டு வந்தால் போதும்."

"அம்மாவைப் போல நீயும் சுத்த கருநாடகமாக இருக்கிறே அண்ணா!"

"இல்லை. நான் யாருக்கும் தெரியாமல் அந்தப் பக்கம் போகிறாப் போல எப்படியும் பார்த்து விடுவேன்."

"அது தெரியும் அண்ணா! 'அண்ணி' உன்னைப் பார்க்க வேண்டுமே. அதற்காகத்தான் உன்னையும் வரச் சொல்லுகிறேன்."

"சரி! அப்பா குறுக்கிடாமல் இருந்தால் வருகிறேன்." இருந்த சரிகை போட்ட புடைவையை எடுத்துக் கட்டிக் கொண்டாள். காப்பி நிறப் புடைவைக்கு ஈடு செய்வது போலச் சாம்பல் நிற ஜாக்கட் உடுத்துக் கொண்டாள். கண்ணாடியின் முன் நின்று தலையை வாரிக்கொண்டு நெற்றியில் சிவந்த பொட்டு இட்டுக் கொண்டாள். இன்னும் தனக்குப் பழக்கமான ஒப்பனையெல்லாம் செய்து கொண்டாள்.

"ஏன் தங்கச் சங்கிலி எங்கே?" என்று கேட்ட வண்ணம் அந்த அறைக்கு அவள் அன்னை வந்தாள்.

"அப்பா செய்த அவசரத்திலே அங்கேயே பெட்டியில் வைத்து வந்து விட்டேன்."

"சரிதான். அப்பாவுக்குத் தெரிந்தால் எரிந்து விழப் போகிறார்" என்று சொல்லிய வண்ணம் தன் கழுத்தில் இருந்த சங்கிலியை மகள் கழுத்தில் போட்டு வைத்தாள்.

மாணிக்கமும் புதிதாகப் பட்டம் பெற்ற விழாவிற்குத் தைத்து வைத்திருந்த 'சூட்டை' இப்பொழுது போட்டுக் கொண்டு கண்ணாடியின் முன்னால் வந்து நின்றான்.

"எப்படி! பார்வதி!"

"அப்படியே அண்ணி சொக்கி விழுந்து போய் விடுவாள்."

"அப்பொழுது நீதான் தண்ணீர் தெளித்து எழுப்ப வேண்டும்."

அதற்குள் அவன் தந்தை அந்தப் பக்கம் வந்தார்.

"ஏன்'டா! நீ கூடவா வரப் போகிறாய்?"

"இல்லேப்பா 'போட்டோ' ஒன்று பிடித்துக் கொள்ளப் போகிறேன். அதற்குத்தான்."

"ஏன் அண்ணா! நீ வரவில்லையா! அப்பா! அண்ணா வையும் வரச்சொல் அப்பா!"

"சரிதான் வந்து தொலை. இதிலே வேறு பொய் சொல்ல வேண்டுமா?"

அவனும் ஒன்றும் பேசாமல் புறப்பட்டான். வெளியே காத்துக் கொண்டிருந்த மாட்டு வண்டியில் மூவரும் ஏறி உட்கார்ந்தார்கள்.

மாட்டு வண்டி, 'கல் கல்' என்ற ஒலியோடு புறப்பட்டது. சாலையோரத்தில் ஓங்கியிருந்த மரத்தின் நிழல் சாலையில் பரவி எங்கும் குளிர்ச்சியாக இருந்தது. அந்தக் குளிர்ச்சி நிறைந்த சாலையில் வண்டி போகும்பொழுது ஏதாவது சினிமா பாட்டு ஒன்று பாடலாமா என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் அப்பா பக்கத்தில் இருந்ததனால் வாய் மூடிக் கொண்டான்.

மெல்ல ஆடி அசைந்து அவ்வண்டி சென்றது. தொட்டிலில் குழந்தையை வைத்து ஆட்டுவதுபோல இருந்தது அவ்வண்டியின் அசைவு. ஆடி அசைந்து வரும் யானையைப் போல வைக்கோல் வண்டி ஒன்று சிறிது தூரத்து இருந்த பாலத்தின் வழியாக வந்து கொண்டிருந்தது. அதன் உயரத்தில் உட்கார்ந்திருந்த ஆள் யானையின் பிடரியின்மீது உட்கார்ந்து செல்லும் பாகனைப் போலக் காட்சியளித்தான். வயலில்

வேலை செய்யும் விவசாயப் பெண்கள் வாயில் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு கலகல என்ற ஒலியோடு ஆரவாரமாக நடந்து சென்றனர். இடுப்புவரையில் துணியைச் சுற்றித் தலைப்பாகையை ஒன்றும் பாதியுமாகக் கட்டிக் கொண்டு சாலைஓர மரநிழலில் பொழுதுபோவதே ஒரு சிறந்த கலை என்ற தத்துவத்திற்கு விளக்கம் தருவது போல ஒரு சிலர் உட்கார்ந்திருந்தார்கள்.

வண்டியில் பூட்டியிருந்த பழுப்புநிற எருது எவ்வளவு வேகமாக ஓட்டினாலும் அது தன் சொந்த நடையில் நடந்து சென்றது. அதன் கொம்பில் சுற்றியிருந்த சதங்கை அந்த வண்டி செய்யும் தடதட என்ற ஒலிக்கு ஏற்றவாறு தாளம் போடுவது போல் இருந்தது.

இடையிடையில் அவர்கள் பேசிக்கொண்டே வந்த பேச்சு அந்த வண்டியின் ஒலியோடு சேர்ந்து இயங்கியது. கூட்டுச் சாலைக்கு வண்டி வந்தது என்பது அங்கே ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த புளியமரங்களே சான்று பகரச் சொல்லி யிருந்தால் சொல்லியிருக்கும்.

வண்டியும் நின்றது. வழக்கமாக பஸ் நிற்குமிடத்தில் வண்டியிலிருந்து இம்மூவரும் இறங்கினர். அவர்களோடு ஏறிய ஒரு தோல் பெட்டியும் கைப்பையும் கீழே இறங்கின.

ஓங்கி உயரமாக வளர்ந்திருந்த ஒரு புளிய மரத்தின் நிழலில் உட்கார்ந்தார்கள். அதன் கனத்த வேர்களே உட்காருவதற்கு ஒரு சிறு மணையைப்போல அமைந்திருந்தன. அதன் பக்கத்தில் பாழடைந்த கோவில் ஒன்று தன் பழைய வரலாற்றின் பழமையை எடுத்துச் சொல்லுவது போலச் சாய்ந்து கிடந்தது. அதிலேயிருந்து சரிந்த ஒரு சில கற்கள் வருவார் போவார் உட்காருவதற்கு எனப் போடப்பட்ட விசிப்பலகையாக அமைந்தன. செம்பட்டைத் தலையோடு சிறுவன் ஒருவன் கையில் ஒரு கோல் வைத்துக் கொண்டு செங்கோல் ஏந்திய அரசனைப் போல விளங்கினான். அவன் குடிகளாகிய ஆடுகளும் மாடுகளும் அவன் சொற்படி கேட்டு நடந்தன.

செங்கற்பட்டு நோக்கிச் செல்லும் பஸ்ஸின் மீது இவர்கள் கண்ணோட்டம் சென்றது. எதிர்பார்த்த சில நிமிஷங்களில் பஸ் வந்தது. டிரைவரின் பார்வை இவர்கள் மீது விழுந்த காரணத்தால் பஸ் நின்றது. மூவரும் ஏறிய பிறகு தன் வழக்கமான இரைச்சலோடு புறப்பட்டது.

பார்வதிக்கு இந்தப் பயணம் உல்லாசத்தைக் கொடுக்கா விட்டாலும் உற்சாகத்தைக் கொடுத்தது. சென்னையில் தன் கணவன் வீட்டில் அண்மையில் இருந்த வாழ்வின் சோர்வை மறக்க இது ஒரு மாறுதலாக அமைந்திருந்தது. தான் உட்கார்ந்திருந்த சன்னலின் வழியாக வழியில் சிறு குன்றுகள் சில காட்சியளித்தன. வறண்டு கிடந்த அந்தக் குன்றுகளில் ஆங்காங்கே சிறு முட்செடிகள் காணப்பட்டன.

பஸ் செங்கல்பட்டை அடைந்து விட்டது என்பதை வழியில் வந்த ஒரு பெரிய ஏரி அறிவுறுத்தியது. சாலையின் இருபக்கமும் ஆங்காங்கே ஓங்கி வளர்ந்திருந்த தென்னை மரங்கள் பச்சைப் பசேல் என்று காட்சியளித்தன. பஸ் நிலையத்துக்கு வந்து நின்றது. அதற்குமேல் தொடர்ந்து செல்லும் விருப்பம் அதனிடத்தில் இல்லை என்று அறிவிப்பது போல அங்கேயே நின்றுவிட்டது.

"சாமி! ஏறுங்க வண்டியில்" என்று சொல்லிய வண்ணம் மெலிந்த உருவத்தோடு கையில் சவுக்கு வைத்துக்கொண்டு நின்றிருந்த ஓர் ஆள் பணிவோடு வரவேற்றான்.

"கீழை வீதிக்குப் போகவேண்டும் என்ன கேட்கிறாய்?"

"பத்தணா கொடுங்க சாமி?"

"எட்டணா தருகிறேன்."

வண்டி புறப்பட்டது. 'டக் டக்' என்ற சப்தத்தோடு தார் போடாத சந்து வழியாகச் சென்றது.

"இங்கே தான் நிறுத்தப்பா!"

ஒரு பெரிய மாடி வீட்டின் முன்னால் நின்றது. மாடி வீட்டுக்கு உரியவர் என்பதைத் தெரிவிப்பது போன்று தொந்தியசைய முந்தி ஒருவர் வந்து வரவேற்றார்.

"வாங்க! வாங்க! முன்னாடியே தெரிந்திருந்தால் காரை அனுப்பி வைத்திருப்பேனே!"

வண்டிக்காரன் சில்லறையை வாங்கிக்கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

வீட்டிலிருந்த வேலையாள் ஒருவன் வந்து பெட்டியை எடுத்து உள்ளே வைத்தான். கூடத்திலிருந்த 'சோபா' ஒன்றில் மாணிக்கமும் அவன் அப்பாவும் உட்கார்ந்தார்கள். முதன் முதலில் மணமகளை நேரே பார்க்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்வதி வீட்டு உள்ளறைக்குச் சென்றாள்.

"மீனா! மாப்பிள்ளை வீட்டார் வந்திருக்கிறார்கள்" என்று பெண்ணின் தாயின் குரல் கேட்டது.

அப்பொழுதுதான் மீனாட்சி கண்ணாடிமுன் நின்று அவசரமாகத் தன்னை ஒப்பனை செய்து கொண்டிருந்தாள். பார்வதி மீனாவின் தாயை முதலில் சந்தித்தாள்.

"ஏன்! அம்மா வரவில்லையா?"

"வீட்டைப் பார்த்துக் கொள்ள அம்மா நின்று விட்டார்கள்."

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒப்பனை முடிந்ததும் பார்வதியின் வருங்கால அண்ணி பார்வதியிருந்த இடத்திற்கு வந்து நின்றாள். பார்வதி அவளைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள்.

அழகின் வடிவம் என்றால் இவளைத்தான் சொல்ல வேண்டும் என்று அவள் மனம் எண்ண ஆரம்பித்தது. தான் பார்த்த சினிமா நடிகைகளின் முகவெட்டோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டாள். உண்மையில் அண்ணன் பாக்கியசாலி தான் என்று அவள் மனம் முடிவு கட்டியது.

அங்கே விரித்துப் போடப்பட்ட பாயில் மீனாட்சி உட்கார்ந்தாள். பார்வதியும் பக்கத்தில் சிறிது தள்ளி உட்கார்ந்தாள்.

"ஏன் அக்கா! கார் பஸ் நிலையத்துக்கு வரவில்லையா?"

மெல்லிய குரலில் பார்வதியிடம் சொல்லிய சொற்கள் இவை.

"வருகிறவரை அப்பா காத்துக்கொண்டிருக்கவில்லை."

தட்டில் சிற்றுண்டியும் குவளையில் காப்பியும் முன்னால் வைக்கப்பட்டன.

"சாப்பிடக்கா!"

அதைச் சாப்பிட்டுக் கொண்டே அண்ணன் இருந்த கூடத்தைப் பார்வதி பார்த்தாள். கதவு திறந்திருந்த அதன் வழியாக மாணிக்கத்தின் பார்வைகள் இங்கேயே சுற்றி வட்ட மிடுவதைப் பார்வதி உணர்ந்து கொண்டாள். அவன் பார்வைக்குத் தடையாகத் தான் இருக்கக்கூடாது என்று சற்று ஒதுங்கி உட்கார்ந்து கொண்டாள். அண்ணியின் பார்வையும் அண்ணன்மீது விழுந்து கொண்டிருந்ததை நுட்பமாக உணர்ந்து கொண்டாள். கூடத்தில் அவர்கள் பேசிக் கொண்டிருந்த பேச்சுரையும் காதில் விழுந்து கொண்டிருந்தது.

"ஆனி மாதத்தில் முடித்து விடலாம்."

"அதற்கென்ன! உங்கள் சவுகரியப்படி செய்யுங்கள்."

"கலியாணமெல்லாம் நாங்களே இங்கேயே நடத்தி விடுகிறோம்."

"ஆகா! உங்கள் விருப்பம்."

"நீங்களும் நகை நட்டு எல்லாம் ஒன்றும் அதிகம் செய்ய வேண்டியதில்லை, இருபதினாயிரம் போதும்."

"அதற்கென்னங்க. எங்கள் மருமகளுக்குத்தானே போடப் போகிறோம்."

இச்சொற்களைக் கேட்டவுடன் பார்வதிக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் வருங்கால வாழ்வில் மறுபடியும் இருள் சூழ்வது போல இருந்தது. எப்படியும் அண்ணன் தன்னைக் கைவிட மாட்டான் என்ற நம்பிக்கையும் உள்ளத்தில் எழுந்தது.

"என்ன செய்வது! பெரிய இடம். அந்த இடத்தில் இதைக் கூட செய்யாவிட்டால் மதிப்பு என்ன இருக்கும். மாணிக்கத்திற்கு அவள் மனைவியாக வாய்க்க வேண்டு மானால் இதையாவது செய்ய வேண்டாமா" என்று அவள் மனம் எண்ண ஆரம்பித்தது.

"என்ன அக்கா! அப்படியே சாப்பிடாமல் வைத்திருக் கிறாய்! மெல்ல முடியவில்லையா?"

"விழுங்க முடியவில்லை" என்று சொல்லிய வண்ணம் பக்கத்திலிருந்த குவளையில் இருந்த நீரைச் சிறிது அருந்த ஆரம்பித்தாள்.

## 11

அன்று மூன்றாவது சனிக்கிழமை. விடுமுறை நாள். மனம் சுறுசுறுப்பாக இல்லை. ஆபீசுக்குப் போகவேண்டிய கடமையுமில்லை. அதனால் அதைச்சுற்றியெழும் சுறுசுறுப்பும் கடமையுணர்வும் அன்று இல்லை. நிதானமாகவே பொழுது போய்க் கொண்டிருந்தது. சில சமயத்தில் பொழுது அப்படியே தேங்கி நின்றுவிடுவதைப் போன்ற உணர்வும் தோன்ற ஆரம்பித்தது. சிவராமனுக்குத் தன் விருப்பப்படி பொழுதைப் போக்குவதற்கு ஒன்றும் தோன்றவில்லை. அன்று வந்த செய்தித் தாளின் .அரசியல் செய்திகளை ஆவலாகப் படித்தான். ஆனால், அடுத்துத் தொடர்ந்து வாரக் கட்டுரைகளைச் சில

விட்டுவிட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாகப் படித்தான். படித்ததையே திருப்பித் திருப்பி இரண்டாம் முறையும் படித்தான்.

பிறகு, அந்தச் செய்தித்தாள்கள் மூலைக்கு ஒன்றாய்ச் சிதறிக் கிடந்தன. சாறு பிழிந்து எறியப்படும் சக்கையைப் போல் அவை சிதறிக் கிடந்தன. அவன் மனமும் அந்தப் பத்திரிகைத் தாள்களைப் போலவே பலவகையிலும் சிதறுண்டு கிடந்தது.

அன்றாடத் தேவைக்கும் பொழுது போக்குக்கும் தேவையான பணம் இல்லையே என்ற வாட்டம் ஒருபுறம்; சிகரெட்டுக் கடைக்காரனிடத்தில் கடன் வைப்பதென்றால் அவன் கடையையே மூடிவிட வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டான் என்பது ஏற்கனவே இவனுக்குத் தெரிந்த விஷயம். காலி பெட்டிகளின் அலங்காரத்தால்தான் அந்தச் சிறு வெற்றிலை பாக்குக்கடை நடைபெற்று வருகிறது என்பதும் தெரியும். அதனால்தான் சிகரெட்டுக்குக் காசு இல்லை என்றாலும் கடன் கேட்க வழி தோன்றாமல் இருந்தது. முதலில் சிகரெட் ஒன்றாவது கிடைத்தால் போதும் என்ற நிலைமைக்கு வந்தவனைப் போலக் காணப்பட்டான். ஒருவகையான வெறி பிடித்தவனைப் போன்ற மனநிலைமையில் தான் இருப்பதை அவனே உணர ஆரம்பித்தான்.

அடுக்களைக்குச் சென்று காப்பியாவது குடிக்கலாம் என்று சென்றான்.

"அக்கா! காப்பி போட்டிருக்கிறாயா?"

"இதோ போடுகிறேன்"

வாழ்க்கை மந்தமாக இருந்தது. வேலைக்காரி பழங்கந்தல் புடைவை கட்டிக்கொண்டு துடைப்பம் ஒன்றால் பெருக்கிக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் அம்மைவடு நிறைய இருந்தது. பார்ப்பதற்கே அருவருப்பாக இருந்தது. வீடு வெறிச் சென்றிருந்தது. மேலே கூரையில் சில ஒட்டடை காற்றில் அசைந்துகொண்டிருந்தன. ஒரு சில அப்படியே விழுந்து விடுவது போலத் தொங்கிக் கொண்டிருந்தன. இருந்தாலும் ஒரு சில மெல்லிய நூல்கள் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தன. மனம் சோர்ந்து விட்டாலும் ஏதோ சில நம்பிக்கைகள் மனிதனை வாழவைக்கின்றன என்று சில எண்ணங்கள் அவன் மனத்தில் ஓட ஆரம்பித்தன.

"அக்கா! சில்லறை ஏதாவது இருக்கிறதா?"

"எல்லாவற்றையும் ஒழித்து விடு. நீ சம்பாதிப்பது சிகரெட்டுக்குக் கூட போதாது போல இருக்கிறதே!"

"என்ன செய்வது. சிகரெட்டு அலவன்ஸ் என்று ஏதாவது கொடுத்தால்தானே!"

பழம் பானையின் பக்கத்தில் வைத்திருந்த சில்லரைக் காசு சில எடுத்துக் கொடுத்தாள்.

பெருக்கிக் கொண்டிருந்த வேலைக்காரி துடைப்பத்தை ஓரமாக வைத்தாள்.

"இந்தா, ஒரு பெட்டி 'பெர்க்ளி' சிகரெட்டு வாங்கி வா" என்று அந்தச் சில்லரைக் காசில் சிலவற்றை எடுத்துக் கொடுத்தான்.

சிறிது நேரத்தில் சிகரெட்டுப் பெட்டி அவனிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது. அப்புறம்தான் அவனுக்கு உற்சாகம் வந்தது போன்று இருந்தது.

"ஏதாவது கடிதம் வந்ததா?"

"இன்னும் ஒன்றும் வரவில்லை. போய்ச் சேர்ந்ததும் கூடக் கடிதம் போடவில்லையே."

"போய்ச் சேராமல் எங்கே போய் இருப்பார்கள். சேர வில்லை என்று இருந்தால் தானே கடிதம் போடவேண்டும்."

"போகட்டும். போய் ஒரு மாதத்திற்கு மேல் ஆகிறதே இன்னும் ஒரு தகவலும் எழுதவில்லையே. ஆடி மாதம் போனதும் போய் அழைத்து வந்துவிடு."

"கிடக்கிறாள். நான் போய் அழைத்து வரமாட்டேன். இப்பொழுது ஒன்றும் அவசரமில்லை."

"அவள் அண்ணனுக்குப் பெண் பார்க்க அழைத்துப் போனார்கள். திருமணம் ஏற்பாடு ஆனதும் அனுப்பி விடுவார்கள். எதற்கும் நீ ஒரு கடிதம் போடு. எப்பொழுது அனுப்புகிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம்."

"அக்கா! அவர்கள் அழைத்துப் போகவில்லை. நான் தான் அனுப்பிவைத்தேன். உண்மையைச் சொல்லுகிறேன். கலியாணத்துக்கு முன்னால் மகள்மீது பத்தாயிரம் மதிப்புள்ள சொத்து எழுதி வைக்கிறேன் என்று சொன்னார். அவர் சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை. அந்தச் சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என்பதை வற்புறுத்த அனுப்பி யிருக்கிறேன். பணம் இல்லையென்றால் அவளை நான் அழைத்து வரப் போவதில்லை."

“அதெல்லாம் நியாயம் இல்லை. அவர் பணம் கொடுக்காமல் இருப்பதற்காக உன் வாழ்வை நீ பாழாக்கிக் கொள்வதா?”

“பாழாகிவிட்டது. பாழ்பட்ட வாழ்வு இனிச் சீர்பெற வேண்டுமானால் கட்டாயம் பணம் வேண்டும். பணம் மிகுதியாக இருந்தாலும் வாழ்வு பாழாகிவிடும்; இல்லையென்றாலும் வாழ்வு அழிந்துவிடும்.”

“உன்னைச் சித்தாந்தம் கேட்கவில்லை. சீரோடு வாழச் சொல்லுகிறேன். போன பணத்தைக் காப்பாற்றியிருந்தால் போதுமே. பிறர் சொத்தை நம்பி உள்ளதையும் ஒழித்து விட்டாய். படிப்புப் படித்ததற்கு அடையாளமா இது?”

“ஆமாம். மாமனார் சொத்தை எதிர்பார்ப்பதுதான் மாணவர்கள் படிப்பு முடிந்ததும் உலகத்தைப் பார்த்துக் கற்றுக் கொள்ளும் முதல் பொருளாதாரப் பாடமாக இருக்கிறது. இதுதான் மொத்தமாகப் பணம் வருவதற்குச் சரியான வழி.”

“சரிதான். அப்படியானால் எனக்குத் திருமணம் ஆகும் பொழுது அப்பா எனக்கு என்ன கொடுத்தார்? நீ எனக்கு என்ன கொடுக்கப் போகிறாய்?”

“என் கடனில் உனக்குப் பாதி தருகிறேன் அக்கா.”

சிவகாமிக்குச் சிரிப்பு வந்தது. அவனும் சிரித்துவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தான்.

“சிகரெட்டுப் பிடித்ததும் கொஞ்சம் உற்சாகம் உண்டானது போல் தெரிந்தது. மீதியிருந்த சிகரெட்டுகளை மறுபடியும் ஒருமுறை எண்ணிக்கொண்டான். இன்னும் எத்தனை தடவைக்கு வரும் என்று மனத்திலேயே கணக்குப் போட்டுக் கொண்டான். பிறகு, அதைப் பத்திரமாக எடுத்து மேசைமேல் வைத்தான்.

அதற்குள் வெளியேயிருந்து ஒரு தபால் கடிதம் உள்ளே எட்டிப் பார்த்தது. இவனும் அதை ஆவலாக எதிர் நோக்கினான். இவன் பெயருக்கு என இட்டிருந்த முகவரி இவனையே பார்ப்பது போல் இருநத்து. இவன் விழிகளும் அதைச் சந்தித்தன. இவன் கைக்கு வந்ததும் அந்தக் கடிதம் இவனிடம் பேசத் தொடங்கியது. அது அவன் மாமனாரின் குரலாக இருந்தது. அவனுக்கு அதைக் கேட்க விருப்பமில்லை. இருந்தாலும் அவன் கண்கள் அவ்வெழுத்துக்களை உற்றுப் பார்த்தன.

"மாணிக்கத்துக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகி விட்டது. நீயும் முன்னதாக வந்திருந்து திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைக்க வேண்டியது."

அதன் உண்மை வடிவம் மறையும்வரை அந்தக் கடிதத்தைக் கசக்கித் தூர எறிந்தான். அது கொஞ்ச தூரத்தில் சென்று விழுந்து அசையாமல் கிடந்தது. அதைப் பற்றியும் அவன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

அதோடு அழகான எழுத்தில் மற்றொரு கடிதம் அவன் கண்களுக்குப்பட்டது. முத்து முத்தாக எழுதியிருந்த எழுத்துக்கள் அவள் சில சமயங்களில் சிந்தும் கண்ணீர்த் துளிகளைக் கவனப்படுத்தின.

"என் அண்ணன் திருமணத்தின் போது உங்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என நம்புகிறேன்."

அதை அப்படியே அதே மேல் உறையில் போட்டு வைத்தான். அதைப் பத்திரப்படுத்த வேண்டுமென்ற எண்ணமோ, வீசி எறிய வேண்டுமென்ற வெறுப்போ அவனிடம் உண்டாகவில்லை. அது அவன் மேஜைமேல் இருந்த பல கடிதங்களோடு ஒன்றாகக் கலந்து கிடந்தது.

திருமணத்துக்குப் போவதா வேண்டாமா என்ற சிந்தனையில் ஆழ்வதற்கு அவன் மனம் இடங்கொடுக்க வில்லை. அதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவுமில்லை. அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு அமைந்துவிட்டான். அதைவிடச் செலவுக்குப் பணம் எங்கே கேட்டால் கிடைக்கும் என்பதிலேயே அவன் மனம் சென்றது.

சாய்வு நாற்காலியில் சாய்ந்து வரிசையாக அடுக்கப் பட்டிருந்த சில வெள்ளிக் குவளைகளின் மீது நாட்டம் கொண்டான். பளிச்சென்று வெள்ளை வெளேர் என்று அவை காட்சியளித்தன. அவற்றிற்குப் பூசியிருந்த முலாம் சிறிது கூடக் கெடாமல் இருந்தது. திருமணத்திற்குக் கொடுக்கப்பட்ட பரிசுகள் சில என்பதை அறிவுறுத்துவன போல அவை இருந்தன. சில வரிசை என்ற பெயரால் வரிசையாக இருந்தன. அவை இவனைப் பார்த்துச் சிரித்து இவனிடம் பேசுவன போல் இருந்தன. "ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறாய்? செலவுக்குத்தானே பணம் வேண்டும். நாங்கள் இருக்கிறோம் உனக்கு உதவ. எங்களை மார்வாடிக் கடைக்கு மட்டும் கொண்டு போகாதே. அவன் உனக்கு அவ்வளவு அதிகமான பணம் கொடுக்கமாட்டான். கொடுக்கின்ற பணத்திற்கு வட்டி

வேறு ஆகிவிடும். கடனால் நாங்கள் முழுகிப் போகிற வரையில் காற்றுப் புகாத பாழடைந்த அறையிலே போட்டு வைப்பான். யாருக்கும் பயன்படாமல் நாங்கள் வாழ வேண்டிவரும். நாங்கள் பிறந்தபோது இந்த நோக்கத்தோடு பிறக்கவில்லை. வாழ்க்கையில் மற்றவர்களுக்குப் பயன்படவேண்டும் என்றுதான் பிறந்தோம். பெண்கள் காப்பி குடிக்கும்பொழுது அவர்கள் வாயிதழ்ச் சுவையை நாங்கள் நுகரும் பேறு பெற்றிருக்கிறோம். அதே போல ஆண்களின் இதழும் பட்டு அவர்கள் முத்தமும் பெற்றுப் பெருமை அடைகிறோம். சிலர் எங்களைச் சுவைக்காமல் தூக்கிக் குடிக்கின்றவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் சுவை பயப்பதில்லை. இதற்காகப் பிறந்திருக்கின்ற எங்களை, எங்கள் பெருமை யறியாத மார்வாடியின் கையில் ஒப்பிக்காதே. அவன் நாங்கள் உண்மையான வெள்ளிதானா என்று தட்டிப்பார்ப்பான். அதற்குமேல் எங்களைப் பற்றிக் கருதமாட்டான். எங்களைச் சிறையில் போடுவது போல் இருட்டறையில் போட்டு வைப்பான். நாங்கள் உங்கள் மணவாழ்வை அலங்கரிக்கக் கொடுக்கப்பட்ட பரிசுகள். நீயும் பார்வதியும் வாழும் இல்லற வாழ்வுக்கு நல்ல துணைவர்களாக இருக்க வந்தோம். உங்களுக்கு வாழ்க்கைப்பட அனுப்பப்பட்ட எங்களை நீ பிரிப்பது நியாயமா? உங்கள் வாழ்க்கை பிரிந்த வாழ்க்கை ஆகி விட்ட காரணத்தால் எங்களையும் உங்களைவிட்டுப் பிரிக்க நினைப்பது நியாயமா?" என்று கேட்பன போல அவை இவனுக்குத் தோற்றமளித்தன.

"இவ்வளவு தூரம் எதிர்த்தா பேசுகிறீர்கள்; உங்களை விற்றுத் தொலைத்து விடுகிறேன்" என்று சொல்லுபவனைப் போல் அவற்றை உற்றுப் பார்த்தான்.

உயர்விலும் தாழ்விலும் மனங்கலங்காத சான்றோர்களைப் போல அவை சிரித்துக்கொண்டே இருந்தன. கொஞ்சங்கூடக் கருகாமல் வெள்ளை வெளேர் என்று காட்சியளிப்பதில் அவை பின்வாங்கவில்லை. அதற்காகச் சிறிதுகூட வருத்தப்பட்டன என்று சொல்ல முடியாமல் நின்ற நிலையிலேயே இருந்தன.

இரண்டு வெள்ளிக் குவளைகளை எடுத்துத் தனியே பிரித்து வைத்தான். சிரித்துக் கொண்டிருந்த பற்களுள் இரண்டைப் பிடுங்கித் தனியே வைத்தது போல இருந்தது. அந்தக் குவளைகளுக்கு மத்தியில் இடைவெளி கொஞ்சம் விடப்பட்டிருந்தது. அந்த வரிசைக்கு அது அழகைக் கெடுத்தது.

மற்றைய குவளைகளும் நாங்களும் இந்த இடத்தைவிட்டு வெளிக் கிளம்ப வேண்டியதுதான் என்று சொல்லுவதைப் போல இருந்தது அவையிருந்த சோகக் காட்சி. அதைச் சிறிதும் பொருட்படுத்தாதவனைப் போல கண்ணாடி முன் நின்று தலையை வாரிக் கொண்டான். ஒப்பனை முடிந்ததும் அந்த இரண்டு குவளைகளையும் ஒரு பத்திரிகைப் பழந்தாளில் மடித்து அவற்றை ஒரு பையில் போட்டுக் கொண்டான். மேஜைமேல் இருந்த சிகரெட்டுப் பெட்டியை ஜேபியில் எடுத்து வைத்துக் கொண்டான்.

வெளியே போனதும் கதவை மூடிய சப்தம் கேட்டுத் தாழ்ப்பாள் போட்டுக் கொள்ளச் சிவகாமி வெளியே வந்தாள். அவன் சிறிது நேரத்தில் தெருக்கோடியடைந்ததும் உள் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு உள்ளறைக்கு வந்தாள். அங்கே ஒரு மூலையில் சுருண்டு உருண்டு கிடந்த கசங்கிய கடிதத்தை எடுத்தாள். ஏதாவது முக்கியமான ரசீதாக இருக்கும் என்று அதைப் பிரித்துப் பார்த்தாள். குப்பையில் கிடக்க வேண்டிய கூட்டும் பொருளா மேஜைமேல் வைக்க வேண்டிய முக்கியமான கடிதமா என்பதற்காகப் படித்தாள்.

சீக்கிரம் கலியாணம் நடக்கும். பார்வதி வந்து சேருவாள் என்ற நம்பிக்கை பிறந்தது. அதை எடுத்துப் பத்திரமாக மேஜைமேல் வைத்தாள்.

## 12

வீட்டில் ஆரவாரமும் சுறுசுறுப்பும் கலந்து இருந்தன. திருமணத்திற்கு முன்னால் பொதுவாக ஏற்படும் புதுமையும் உற்சாகமும் பார்வதியின் வீட்டில் பொங்கி எழுந்தன. புத்தம் புதிய உடைகள் தைப்பதில் மாணிக்கம் உற்சாகம் காட்டினான். அவர்கள் சொல்லிய பொன் நகைகள், வைரம் இழைத்த கழுத்தணி இவற்றைச் செய்வதைப் பற்றிய ஆராய்ச்சிகள் எழுந்தன. அவற்றை விளக்கும் நகைப் புத்தகங்கள் நான்கைந்து வீட்டில் இடம் பெற்றன. இவற்றை யெல்லாம் செய்வதற்கு நிலங்கள் சில விற்கப்பட்டன. பணம் இருபதினாயிரம் ஒருவாறு சமாளிக்கப்பட்டது. பரந்துகிடந்த நிலங்கள் மின்னும் அணிவகைகள் செய்ய உதவப்பெற்றன. வாழ்வின் உயிர்நாடியாக இருந்த நிலங்கள் அழகுப் பொருள்களை ஆக்கப் பயன்பட்டன.

பார்வதி தன் அண்ணியின் கழுத்தை அலங்கரிக்கப் போகும் கழுத்தணியின் புதிய அமைப்பில் தன் மனத்தைப் பறி கொடுத்தாள். அந்த ஏடுகள் காட்டிய கோடுகள் புதுப்புது அணிவகைகளின் அழகைக் காட்டின. காஞ்சிபுரத்திலிருந்து புதுவகையான ஓரங்கள் அமைந்த பட்டுப் புடைவைகள் வீட்டில் துணிக்கடையொன்றையே அமைத்து விடக் கூடிய அளவில் வந்து குவிந்தன.

"மாங்காய் வடிவம் போட்ட கழுத்தணி அழகுடையது" என்றாள் தாய்.

"இல்லை. உதயசூரியன்தான் இப்போது புதுமை என்று அண்ணி என்னிடம் சொன்னாள்."

"சரி. அப்படியே செய்துவிட்டால் போகிறது."

"என்ன! மாப்பிள்ளையிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா?" என்று கேட்டுக் கொண்டே பார்வதியின் தந்தை வீட்டிற்குள் நுழைந்தார்.

"மாப்பிள்ளைதான் நம் வீட்டிலேயே உருவாகிக் கொண்டு இருக்கிறானே" என்றாள் வேடிக்கையாக, அவள் தாய்.

"இவனைப் பற்றிப் பேசவில்லை. நம் மருமகனைப் பற்றி. அவன் திருமணத்திற்கு வருவது பற்றி ஒன்றும் பதில் எழுத வில்லையா?"

"அவனுக்கு மன வருத்தம் இருக்கும்போது எப்படி வருவான்?"

"அதற்கு....? அவன் வராவிட்டால் அவமானமாக இருக்காதா?"

"அதற்காகவாவது நீங்கள் ஏதாவது செய்ய வேண்டாமா?"

"இந்தச் செலவில் எப்படி அவனுக்கு ஏற்பாடு செய்வது? காடு கழனி விற்று இந்தக் கல்யாணத்திற்கு நகைகள் செய்ய வேண்டியிருக்கிறது. பெரிய இடமாயிற்றே! என்ன செய்வது? எல்லாம் அவனுக்கு நிதானமாகச் செய்தால் போச்சு."

"ஆமாம். செய்து வைப்பதற்கு என்ன வைத்திருக் கிறீர்கள்? எல்லாவற்றையும் தான் விற்று ஒழித்து விட்டீர்களே...?"

"பொறு. எல்லாம் நம் பையன் அந்த வீட்டு மருமகனாகி விட்டால் அந்த வீட்டுச் சொத்தே நம் பையனது தானே.

அதற்குப் பிறகு யார் கேட்க முடியும்? ஒரே மகள். மருமகன் இட்டதுதானே அந்த வீட்டில் இனிச் சட்டமாக முடியும்...? அவன் நினைத்தால் பிறகு எதையும் செய்யலாம். நாம் செலவு செய்வது இருபதினாயிரம்தானே, பிறகு அவன் ஐம்பதினா யிரத்திற்கு அதிகாரி ஆகிவிடுவானே. இந்தப் பட்டிக்காட்டிலே நம் மகன் காரிலே வந்தால் நமக்குத்தானே பெருமை. ஊரிலே உள்ளவர்கள் எல்லாம் சரியான இடத்திலே சம்பந்தம் செய்து கொண்டோம் என்று பாரட்டினால் பெருமை நமக்குத்தானே? மாணிக்கம் மாணிக்கம்தான். நான் ஒன்றும் வைக்கா விட்டாலும் அவனே எல்லாம் செய்துவிடுவான். பார்வதி என்றால் அவன் அப்படியே உயிர்விட்டு விடுவான்."

"இதெல்லாம் எப்படி விளங்கும் மருமகனுக்கு? நீங்கள் இவ்வாறு இருபதினாயிரம் செலவு செய்கிறீர்கள் என்றால் மருமகனுக்கு மனவருத்தம் ஏற்படாதா? நமக்குக் கொடுப்பதற்கில்லை.... மகன் திருமணத்திற்கு மட்டும் வாரி இறைப்பதற்கு இருக்கிறது என்று சீறி விழமாட்டானா?"

"என்ன செய்வது. நிதானமாகத்தான் செய்திகளைத் தெரிவிக்க வேண்டும். மைத்துனன் மாணிக்கம் என்றால் அவனுக்கு அளவு கடந்த அன்பாயிற்றே. அவன் நல்வாழ்வு பெறுவதைக் கண்டு அவன் மனம் ஒன்றும் கருகமாட்டான். மாணிக்கமே கடிதம் எழுதினால் கட்டாயம் திருமணத்திற்கு வருவான். அவன் மனமும் ஓரளவு குளிரும்."

இந்தப் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிருந்த பார்வதியின் உள்ளம் குளிர்ந்தது.

"அவர், திருமணத்திற்குக் கட்டாயம் வந்தாக வேண்டும். இல்லாவிட்டால் அண்ணன் மனம் புண்படும். எதிர்காலத்தில் அண்ணன் செய்யக்கூடிய உதவி கிடைக்காமல் போய் விட்டாலும் போய்விடும். அண்ணன் மனம் வருத்தப்பட்டால் பிறகு அவரோடு பேசுவது கூட இல்லாமல் போய் விடும். பிறகு என்னுடைய வாழ்வைச் சிந்திக்கப் போகிறவர் யார் இருக்கப் போகிறார்கள்.....? இரண்டு பேருக்கும் பகைமை வளர்ந்தால் இடையில் நான்தானே துன்பப்பட வேண்டும்? என்ன இருந்தாலும் அவர் கலியாணத்திற்கு வராமல் இருக்கக்கூடாது. என்றும் பகையை வளர்த்து ஒரு செயலைச் செய்யக் கூடாது. மறுபடியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத்தானே ஆகவேண்டும்? அதனால் இப்போது ஏற்பட்ட மனக்கசப்பால் வராமல் நின்றுவிடக்கூடாது. அப்பா பணம் கொடுக்கவில்லை யென்றால் அண்ணன் கலியாணத்திற்கு வராமல் இருப்பதில்

என்ன நியாயம் இருக்கிறது? அண்ணன் யாருக்கும் ஒரு வித தீங்கும் செய்யவில்லையே. மைத்துனன் என்ற உறவு காட்ட வில்லையென்றாலும் பழகிய தோஷத்திற்காகவாவது அவர் கட்டாயம் வந்து தீர வேண்டும். பணம் கொடுக்கவில்லை யென்றால் என்னை அனுப்பி வைத்தது போதாதா? என்னோடு வாழ மாட்டேன் என்று பேசலாம்; அதில் உறுதி யாக இருப்பேன் என்று நெஞ்சு உரம்கொண்டு பேசலாம். அந்த நெஞ்சு உரம் கொள்வது மட்டும் இயற்கையா? வாழ்வைப் பாழாக்கிக் கொள்வதா?" என்று தனக்குத்தானே சிந்திக்கத் தொடங்கினாள்.

சில பழைய நினைவுகள் வந்து ஏதோ பதில் சொல்வது போல் இருந்தன.

"பார்வதி! கதவைத் தாளிட்டுக் கொள். வர நேரமாகும்" என்று சொல்லி நேரம் கழித்து வந்த இரவுகள் அவளுக்குக் கவனம் வர ஆரம்பித்தன.

"இதைப்பற்றிக் கேட்க உனக்கு உரிமை கிடையாது. வாழ இங்கே உரிமை இல்லையென்றால் என் வாழ்வைப் பற்றிக் கேட்க உனக்கு யார் உரிமை கொடுத்தது" என்று பலமுறை பதற்றமாகக் கேட்டது கவனத்திற்கு வந்தது.

"கட்டிய கணவனைத் தடுத்துக் கேட்க உரிமை இல்லையாம். அத்தகைய வாழ்வு இருந்து என்ன, இல்லாவிட்டால் என்ன என்ற காரணத்தால்தானே நானே அந்த இடத்தை விட்டு வரத் துணிவு கொண்டேன். கணவனின் ஒழுக்கத்தைக் கண்டிக்கும் உரிமை இல்லாமல் மனைவி என்ற பெயர் எனக்கு எப்படி ஏற்கும்? தமிழ் நாட்டில் பிறந்த பெண்ணுக்கு அந்த உரிமைதானே அடிப்படை. வெறும் பணத்தின் தேவைக்காக என்னை அனுப்பிவிட்டார் என்றால் அதை நான் பொறுக்கலாம். இரவு நேரங்களில் அவர் தனிப்பட்ட வாழ்வுக்கு நான் தடையாக இருக்கிறேன் என்ற காரணத்தால் என்னை அனுப்பிவிட்டாரா? சே.... இருக்காது. அத்தகைய ஒழுக்கம் அவரிடத்தில் இருக்க முடியாது. பணத்தின் தேவைதான் அவர் குணத்தைக் கெடுத்து விட்டது. மனிதனின் பண்பு சிறக்க வேண்டுமானால் அவனிடத்தில் முதல் தேவையான பணம் இருக்க வேண்டும். பணம்தான் பண்பை வளர்ப்பது. நல்லொழுக்கத்திற்கு வித்தாகும். அன்பு வளரப் பணம் தேவை" என்று அவள் மனம் எண்ண ஆரம்பித்தது.

முன்னால் சிதறிக் கிடந்த நகைப் புத்தகங்களை எடுத்து ஒருபுறம் வைத்தாள். அவற்றின் அட்டைகள் கூட

அலங்கரிக்கப்பட்டிருந்தன. பெரிய புத்தகங்கள் சில; சிறிய புத்தகங்கள் சில; வெறும் ஏடுகள் சில இப்படிப் பலவாகச் சிதறிக் கிடந்த புத்தகங்களை அடுக்கி வைத்தாள். பிரித்த புடைவை ஒன்றை எடுத்து மடித்து வைத்தாள்.

அதற்குள் வெளியே போயிருந்த மாணிக்கம் வீட்டிற்குள் வந்தான். அவனுடைய பேச்சு, நடை இவற்றில் சுறுசுறுப்பு அமைந்திருந்தது. அவன் முக்கிய மனிதனாகக் காணப் பட்டான்.

"அப்பா உனக்கு ஏதாவது நகை செய்கிறாரா பார்வதி!"

"இல்லை அண்ணா. அண்ணிக்குச் செய்தால் போதாதா! அவருக்கு இருக்கிற கஷ்டத்திலே செய்ய வேண்டியதெல்லாம் சீராகச்செய்து முடித்தால் அதுவே போதும்."

"ஆமாம்.... எல்லாம் அவளுக்குப் போதும்....? அதனால்தான் இருக்கிற தங்கச் சங்கிலியைக்கூட அங்கேயே வைத்து விட்டாள். எதைப் போட்டுக் கொள்ளப் போகிறாளோ!...." என்றாள் தாய்.

"ஏன்....? அவருக்கு ஒரு கடிதம் எழுதினால் அவர் கொண்டுவந்து கொடுத்து விடுகிறார்....?"

"அவர் வருவதே நிச்சயமில்லையே! மாணிக்கம் நீயாவது ஒரு கடிதம் எழுது. வரும்போது தங்கச் சங்கிலி கொண்டு வரச் சொல்லி எழுது."

உண்மையைச் சொல்லி விடலாமா என்று துணிந்தாள் பார்வதி. அவசரப்பட்டுப் பயன் இல்லை என்று சும்மா இருந்தாள்.

"சரி! எழுதுகிறேன். பார்வதி! நீயும் ஒரு கடிதம் எழுது. அதில் தங்கச் சங்கிலியை வரும்போது கொண்டு வரச் சொல்லி எழுது."

"சரி, எழுதுகிறேன். நீ அந்த விஷயம் எழுத வேண்டாம். எழுதினால் நன்றாக இருக்காது. கலியாணத்திற்கு வரச் சொல்லி மட்டும் நீ எழுது."

"சரி, சரி" என்று சொல்லி அவன் கொண்டுவந்த புதிய 'சூட்டுகளை' எடுத்துப் பெட்டியில் அடுக்கி வைக்க ஆரம்பித்தான். இந்தச் சங்கிலிக்கு என்ன பதில் சொல்வது என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். போக்கடித்து விட்டேன் என்று சொன்னால் அவர்கள் நம்ப மாட்டார்கள் எங்கே

வைத்தேன் என்று கவனம் இல்லை என்று சொல்லலாமா? இல்லை.... உண்மையில் அவர் படும் கடன் தொல்லைக்குக் கொடுத்து விட்டேன் என்று சொல்லலாமா என்று பலவித எண்ணங்கள் அவள் மனதைச் சூழ்ந்தன.

## 13

"நல்லவர்கள் தாம் உலகில் நன்மை செய்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. தீமை செய்பவர்கூட சிலசமயம் பிறர்க்கு நன்மை செய்து விடுகிறார்கள். அந்த ஈட்டிக்காரன் அவருக்காகக் காத்திருக்கவில்லையென்றால் 'அவர்' என்னிடம் அந்த உதவியை எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியமில்லை. கெட்டவர்களும் வாழ்க!" என எண்ணுபவள் போல சாரதாவின் மனம் ஈட்டிக்காரனை வாழ்த்தத் தொடங்கிற்று. அதே சமயம் ஈட்டி போல் வாட்டும் அவன் கொடிய போக்கையும் அவள் மனம் கண்டித்தது. அவள் முன்னால் 'டைப்' எந்திரத்தின் கருவிகளை அவள் விரல்கள் ஆட்டி வைத்தன. அவள் கைவிரல்கள் எந்திரம் போலத் தாமாகத் தம் தொழிலைச் செய்து வந்தாலும் அவள் மனம் முழுவதும் அதில் ஈடுபடவில்லை. அவ்வப்போது எந்திரத்தின் அசைவு ஓயும் போதெல்லாம் அவள் கண்கள் கடைக் கண்ணால் 'அவன்' உள்ளத்தைப் பருக அவாவுவதைப் போல் தாவின.

சிவராமனின் சிந்தனையெல்லாம் அன்று வந்த கடிதத்தின் மீது சுற்றிச் சுற்றிச் சென்றது. திருமணத்திற்குப் போவதா வேண்டாமா என்ற கேள்விக்குப் பதில் தேடுவதற் காக அவன் சிந்தனை அந்தக் கடிதத்தோடும் கடந்த கால வாழ்க்கை நிகழ்ச்சிகளோடும் தொடர்பு கொண்டிருந்த வண்ணம் இருந்தது.

"மைத்துனன் மாணிக்கம் நல்லவன்தான். அவன் என்னுடன் அன்பு கொண்டவன்தான். நன்றாகத்தான் பழகினோம். அவன் கல்லூரியில் சேர்ந்து படிக்க நானும் எவ்வளவோ உதவினேன். அவர்கள் வீட்டிற்குப் போனாலும் அவன்தானே எனக்கு உற்ற நண்பனாக இருந்தான். அவன் திருமணத்திற்குப் போகாவிடில் நன்றாக இராது" என்று எண்ணியது அவன் மனம். ஆனால்.... அவன் கடந்த கால வாழ்க்கை நிகழ்ச்சிகள் அவன் எண்ணப் போக்கினின்றும் தடுத்தன.

'ஆபீஸ் பியூன்' வழக்கம் போல் குறிப்பேடுகளைக் கொண்டு வருவதும் போவதுமாய் இருந்தான். மானேஜர் கூப்பிடும் மணி ஓசைக்கு, உள்ளே செல்வதும் ஓரிரண்டு குறிப்பேடுகளைக் கொண்டு வருவதுமாக இருந்தான். அவன் உள்ளே போனாலும், வெளியே வந்தாலும் அவன் கையிலிருந்த பத்திரிகை, அடக்க ஒடுக்கமாக அவன் உட்காரும் பெஞ்சியின் கால்களினிடையே விழுந்து கிடந்தது. அவ்வப் போது அதை எடுத்துப் பிரித்துப் படிப்பதும் மூடி வைப்பதுமாக இருந்தான். அதில் இருக்கிற அத்தனைச் செய்திகளையும் படித்துவிட்டதால் மீண்டும் படிக்க வேறு ஒன்றும் இல்லாததால் அதையே திருப்பித் திருப்பிப் புரட்டினான். ஏதாவது படிக்காமல் விட்டுவிட்டோமா என்ற சந்தேகத்தோடு அதை மீண்டும் மீண்டும் புரட்டிப் பார்த்தான். படிப்பதற்கு அதில் ஒன்றும் இல்லை என்ற நிலை வந்தவுடன் அதைச் சலிப்போடு கீழே போட்டான். ஆனால், அவ்வப்போது ஆபீஸ் கிளார்க்குகள், "என்னப்பா, இரவு ராணி என்ன சொல்லுகிறாள்" என்று கேட்டவண்ணம் அதை ஓசியில் வாங்கிப் படித்துக் கிழிக்காமல் திருப்பிக் கொடுத்தார்கள்.

சிவராமன் எப்படியும் திருமணத்திற்குப் போவதில்லை என்ற உறுதிக்கு வந்தவனைப் போலக் காணப்பட்டான். இடையிடையே அவன் தமக்கை சிவராமன் கலியாணத்துக்குப் போக வேண்டிய அவசியத்தைப் பற்றிக் கூறியது அவன் நினைவுக்கு வந்தது. அவன் மனத்தேக்கம் போல வேலையிலும் தேக்கம் இருந்தது. மேஜைமல் குறிப்பேடுகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கடுக்காகக் காணப்பட்டன. அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துப் படிப்பதும் அதில் எழுத வேண்டிய குறிப்புகளை மெதுவாக எழுதுவதுமாக இருந்தான்.

திருமணத்திற்குப் போய்விட்டால், தான் எடுத்த கொள்கை என்ன ஆவது? பிறகு மாமனாருக்கு மிக எளிய வனாய்த்தானே ஆக வேண்டும்? பணம் பத்தாயிரம் வந்து சேர வழி என்ன.....? என்று இடையிடையே எண்ணங்கள் தோன்றின.

மாலை வந்தது. வேலை முடிந்தது. இடத்தைவிட்டு எழுந்தான். சாரதாவும் தொடர்ந்தாள். ஆபீஸ் பியூனும் கவனித்தான். ஆபீஸ் கதவுகளை அடைத்து மூடுவதில் ஈடுபட்டாலும் அவன் மனம் மட்டும் இவர்கள் உறவை ஆராயத் தொடங்கியது. ஒன்றும் இல்லாமல் இரண்டு பேரும்

ஒன்றாகப் போகமாட்டார்கள் என்று அவன் கண்ட அனுபவம் அவனுக்கு அறிவுறுத்திற்று.

"சாரதா! நீதான் என் மனக் கவலை மாற்றும் மருந்தாக விளங்குகிறாய்."

"அத்தகைய பாக்கியம் நான் பெற்றிருந்தால்...."

"ஏன்! நீ நேற்றுப் பணம் கொடுத்து உதவாதிருந்தால் என் நிலைமை என்ன ஆகியிருக்கும்?"

அப்பொழுதுதான் அவள் தன் நிலையை ஒருவாறு உணரத் தொடங்கினாள். அவசரப்பட்டால் எதுவும் கெட்டு விடும் என்று பழகிப் போன கருத்து அவளைத் தொடர்ந்து பேசாமல் தடுத்தது.

தொடர்ந்து பேசாவிட்டாலும் அவனைப் பின் தொடர்ந்து நடப்பதில் அவள் பின்வாங்கவில்லை. வழக்கம் போல் அவர்களைப் பிரிக்கும் பஸ்நிலையம் வந்தது.

சிவராமனும் சாரதாவும் நெருங்கி நடந்த நடையைக் கண்டால் யாரும் இவர்கள் கணவன் மனைவியர் என்று சொல்லாதிருக்க மாட்டார்கள். ஆனால், அவள் கழுத்தில் இல்லாத தாலியால் அவர்கள் இளங் காதலர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று கதை படிப்பவர்கள், சினிமா பார்க்கிறவர்கள் நிச்சயம் முடிவு கட்டிவிடக் கூடிய நிலையில் இருந்தார்கள். உரிமையோடு ஆண்களோடு பெண்களும் சரிசமானமாக நடப்போம் என்று நடக்கும் கணக்கற்ற தம்பதிகளில் இவர்களும் ஏன் ஓர் இணையாக இருக்கக் கூடாது? என்று சிலர் எண்ணக்கூடும். ஆனால், நாணம் அச்சம் என்பது எல்லாம் வெறும் மடவார்க்கே என்ற கொள்கையோடு நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் கொண்டவளாக விளங்கினாள் சாரதா. உடம்பை மூடுவதைத் தன் முழுக் கடமை எனக்கொண்டிராத அவள் உடுத்தியிருந்த 'சில்க்' புடைவை அவள் கவர்ச்சிக்குக் காரணமாயிருந்தது. சுற்றி நடந்தவர்களிடம் ஒரு விழிப்பை உண்டு பண்ணியது. அவள் சென்று மறையுமட்டும் அவளையே ஒரு சிலர் பார்க்காமல் பார்த்தனர். அந்தப் பார்வையில் எதிர் எதிராக வந்த இரண்டு வாலிபர்கள் மோதிக் கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. "ஸாரி" என்ற சொல் இருவரையும் சமாதானம் செய்து வைத்தது. அங்கிருந்த துணிக் கடையிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த ஒரு வாலிபன் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து அவன் ஆராய்ச்சியையும் தூண்டிவிட்டது

சாரதாவின் தோற்றம். சாரதாவையும் சிவராமனையும் மாறி மாறிப் பார்த்தன அவன் விழிகள். கூட்டத்தின் மறைவில் அவ்வுருவம் மறைந்துவிட்டது. சிறிது நேரம் பின் தொடரவும் செய்தது. அவர்கள் பின்னாலேயே நடந்தது அத்தனியுருவம்.

வழக்கம் போல், பஸ் நிலையத்தை அடைந்தார்கள். சாரதாவின் வருகையை அறிந்த 'பஸ் டிரைவர்' போகத் துடித்துக் கொண்டு இருந்த பஸ்ஸைச் சிறிது நிறுத்தி அவள் ஏறிய பிறகு, "சரி போய்த் தொலை" என்று சொல்லுபவனைப் போல் அமுக்கி வைத்திருந்த விசையை நெகிழவிட்டான்.

சிவராமனும் அந்த இடத்தை விட்டுப் பதினைந்தாம் எண் நிலையம் நோக்கி நடந்தான். அந்த நிலையத்தில் இவனுக்காகக் காத்துக் கிடந்தது 'சிவப்புப் பெண்'. "அடேயப்பா! இந்த பஸ்ஸுக்கு 'சிவப்புப் பெண்' என்று பெயர் வைத்திருக்கிறானே" என்று அந்த மேதாவிகளைப் பாராட்டத் தொடங்கினவனைப் போலச் சிறிது நேரம் அதில் இடமின்மையைக் கடிந்து கொண்டான்.

இவனைப் பின்தொடர்ந்த உருவம் இவன் ஏறிய பஸ்ஸில் ஏறி இவன் பக்கத்தில் உட்காரத் தொடங்கியது.

"என்ன மாணிக்கம்! எப்போது வந்தாய்....?"

"நான் காலையில் வந்தேன். ஹோட்டல் தாசப் பிரகாசில் தங்கி இருக்கிறேன்."

"ஏன்....? வீட்டுக்கு வரக் கூடாது?"

"வீட்டில் நீ இருக்க மாட்டாய் என்றுதான் வரவில்லை. கலியாணத்திற்குத் துணி எடுக்க வந்தேன். எதிர்பாராத விதமாக...."

"என்ன... ஏதாவது விபத்து ஏற்பட்டுள்ளதா?"

"இல்லை உன்னைச் சந்தித்தேன்."

"சரி, வீட்டுக்குப் போகலாம். உட்காரு."

"இல்லை. வழியில் தாசப் பிரகாசில் இறங்கி விடுகிறேன். இரவு எட்டுமணி வண்டிக்குப் போய்விடலாம் என்றிருக் கிறேன். இதோ, இதுதான் நான். வாங்கிய துணிகள்" என்று கூலியாள் சுமக்க முடிந்து கொண்டு வந்த ஒரு சிறு மூட்டையைக் காட்டினான்.

"பரவாயில்லை! வீட்டுக்கு வந்து போகலாம்."

"நான் எழுதிய கடிதம் வந்ததா.....?"

"ம்....ம். அதெல்லாம் தபாலாபீஸார் கடமையைச் சரியாகச் செய்கிறார்கள்."

"கட்டாயம் வரவேண்டும். அதுவும் உன்னை நேரில் பார்த்துச் சொல்லிவிட்டுப் போகவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் பட்டணம் வந்தேன். வழியிலேயே உன்னைச் சந்திக்க முடிந்தது."

"சொல்லவேண்டியது சொல்லியாகிவிட்டது. ஆபீசில் எவ்வளவோ வேலை. அன்றைக்கு விடுமுறை கிடைக்கும் என்று சொல்லுவதற்கில்லை."

"கல்யாணம் ஞாயிற்றுக்கிழமைதான். மூன்றாவது சனிக்கிழமை வேறு விடுமுறை. அடுத்த நாள் திரும்பி விடலாம். கட்டாயம் வந்தாக வேண்டும்."

"என்னை வற்புறுத்தாதே. ஆபீஸில் நிறைய வேலை..... வீட்டிலிருந்தேனும் செய்தாக வேண்டும்."

"அதற்கென்ன. அந்தக் கட்டுகளை ஊருக்குக் கொண்டு வந்தால் அங்கே நிதானமாகப் பார்த்துச் செய்து கொண்டால் போகிறது."

ஏறுவதற்கு மனமில்லாமல் சுவர் ஓரத்தில் சாய்ந்து கொண்டு நின்ற 'பஸ் கண்டக்டர்' காலம் அவனைத் தள்ள அவன் பஸ்ஸில் ஏறியதும் கையில் வைத்திருந்த டிக்கெட்டுகளை ஒழுங்காக அடுக்கி வைத்துக்கொண்டான். டிரைவரும் முன்சீட்டில் ஏறி உட்கார்ந்துகொண்டு புறப்படக் கண்டக்டரின் கட்டளையை எதிர்பார்த்த வண்ணம் அசதியாகச் சாய்ந்துகொண்டிருந்தான். போகும் இடம் கேட்டு டிக்கட் கொடுக்கத் தொடங்கினான். நீதிமன்றத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'கருப்புச் சட்டைக்காரர்கள்' சிலர் பஸ் நோக்கி வந்தார்கள். ஆபீஸில் நாள் முழுதும் வேலை செய்து அலுத்துப்போன குமாஸ்தாக்களும், சைனா பசாரில் சாமான் வாங்கிக்கொண்டு வீடு திரும்பும் குடும்பஸ்தர்களும் இன்னும் பல்வேறு தொழில் செய்யும் வீடு திரும்ப விழையும் தொழிலாளர்களும் ஏறி இடம் பிடித்தனர்.

கண்டக்டரின் அனுமதியின் பேரில் பஸ் அந்த இடத்தை விட்டு ஐந்து மைல் வேகத்தில் நகரத் தொடங்கியது. பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட தனி இடம் தவிர மற்றைய இடம் எல்லாம் நிரம்பிவிட்டது. அடுத்த நிலையம் வந்தது. மீண்டும் விழுந்தடித்துக் கொண்டு இடம் பிடித்தவர்கள் கைப்பிடியைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு நின்றார்கள்.

“நீங்கள் எங்கே சார் போகவேண்டும்?”

“அமைந்தகரைக்கு. இரண்டு டிக்கட் கொடுங்கள்.”

“வேண்டாம். ஒன்று தாசப்பிரகாசுக்குக் கொடுங்கள்.”

இரண்டு தனி டிக்கெட்டுகள் வாங்கப்பட்டன.

“ஏன்..... மாணிக்கம்! வீட்டுக்கு வா! தங்கிப்போகலாம்.”

“நீங்கள் கட்டாயம் திருமணத்திற்கு வருவதாக இருந்தால் நானும் வருகிறேன்.”

“என்னை வற்புறுத்த வேண்டாம்.”

“அதைத்தான் நானும் உங்களுக்குச் சொல்வது. என்னையும் உங்கள் வீட்டுக்கு வரச்சொல்லி வற்புறுத்த வேண்டாம்.”

அதற்குள் பஸ் பழைய டிராம் ஷெட்டைக் கடந்து சென்றது. அதைத்தள்ளி அடுத்த நிலையத்தில் நின்றது. இரண்டு இளங் கிறித்துவப் பெண்கள் இறங்கி விடுதி நோக்கி நடந்தனர். அவர்கள் இருந்த இடத்தைக் கொஞ்சம் கனத்துப் பருத்த உடம்புடைய வடநாட்டுக்காரி ஒருத்தி பிடித்துக் கொண்டாள். வயது ஐம்பதானாலும் வெண் நரை மறைக்கக் கறுப்பு நிறம் தீட்டி இருந்தமை அவள் ஜாக்கெட்டின் கழுத்தில் பட்டிருந்த செம்பட்டை நிறக்கறை காட்டியது.

பஸ் நகர்ந்தது. இன்னும் சிறிது நேரத்தில் தாசப் பிரகாஷ் வரக் காத்துக் கிடந்தது.

“என்ன! கடைசி முறையாகக் கேட்கிறேன். கட்டாயம் நீங்கள் திருமணத்திற்கு வரவேண்டும்.”

“இறுதியாகச் சொல்கிறேன். அந்தத் திருமணத்திற்கு நான் வரத் தேவையில்லையென்று” இவர்கள் பேசும் குரல் கொஞ்சம் அதிகமாகியது. அக்கம்பக்கத்தினரின் செவிகள் கூர்ந்து கேட்கலாயின. அதனால் நாவடக்கம் தானாக மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

கார்கள் சில வெளியே காத்துக் கிடந்தன. மின்சார விளக்குகளின் பேரொளி கட்டிடத்தை அலங்கரிக்க, வெண் சட்டை அணிந்த காவலாளி காத்துக் கிடக்கத் ‘தாசப் பிரகாஷ்’ தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டிருந்தது.

“நான் வருகிறேன்” என்று கூறி அருகில் சிறிது தூரம் பஸ் தள்ளி நின்றதும் கீழே இறங்கினான் மாணிக்கம். கையிலிருந்த துணிக் கட்டை வெளியே நின்று கொண்டிருந்த சிறுவன்

ஒருவன் தூக்கிவர மாணிக்கம் அந்தப் பெருங் கட்டிடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

பஸ் அவனைப் 'பொருட்படுத்தாத சிவராமனைப் போலவே' தனக்கே சொந்தமான பத்துமைல் வேகத்தில் அடுத்த நிலையம் நோக்கிச் சென்றது. பஸ் நிலையத்தில் பிரயாணிகளுக்கு வழிகாட்டியாக விளங்கிய தொப்பியணிந்த இன்ஸ்பெக்டர், ஒரு பக்கமாக எடுத்து வைத்திருந்து புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை வாயில் வைத்தார். அது இனி அவர்கள் வாழ்வில் ஏற்படப் போகும் புகைச்சலுக்கு முன்னறிவிப்பைப் போல இருந்தது.

## 14

**வீ**டு கலகலப்பாக இருந்தது. வெள்ளைக் கோலம் வீட்டை அலங்கரித்தது. அண்ணி வீட்டுக்கு வந்தது முதல் வீடு கலகலப்பாக இருந்தது. சுவரெல்லாம் வெள்ளையடித்திருந்தது. கதவுகளுக்கெல்லாம் பச்சை நிறம் பூசப்பட்டிருந்தது. வாசற் படிக்கு, முன்னிருந்த மஞ்சள் குங்குமத்தை விட இப்போது இரண்டு மடங்கு அதிகமாக இட்டிருந்தது. சிறிது குங்குமத் தூள் வாசற்படியின் கீழும் சிதறிக் கிடந்தது.

அண்ணி சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங் கினாள். அண்ணியின் பூத்த மலர்போன்ற புது வாழ்வு பார்வதியின் பழைய வாழ்வைப் பற்றிய சிந்தனைக்குக் கொண்டு சென்று விட்டது. தானும் தன் அண்ணியைப் போலத் தான் புக்ககம் புகுந்த அந்தப் பழம்வாழ்வைப் பற்றி எண்ணத் தொடங்கினாள். வெள்ளிக்கிழமை வந்தால் வீடு பெருக்கித் தெரு நடையில் கோலம் போட்டு வாசற்படியை மங்கலமாக அலங்கரித்த அந்த மங்கல வாழ்வு நினைவிற்கு வந்தது.

"பார்வதி! பொழுதுவிடிந்தால் இந்தக் குங்குமத்தை அப்பி வாசற்படியைப் பாழாக்குவதுதான் உன் வேலை."

உள்ளுக்குள்ளே சிரித்துக்கொண்டு மேலும் அதைச் செம்மைப்படுத்தும் வேலையில் ஈடுபட்ட தன் பழைய நாட்களை நோக்கியது அவள் சிந்தனை.

தானும் தன் அண்ணிக்கு உதவ வேண்டும் என்று விரும்பினாள். பக்கத்திலிருந்து தானும் மற்றொரு வாசலுக்குக் குங்குமமிடத் தொடங்கினாள்.

வெளியே பாம்பாட்டி ஒருவன் பாம்புப் பெட்டி ஒன்று கொண்டு வந்திருந்தான். பாம்பு அப்பெட்டியில் அடங்கி யிருந்தது. அதைத் திறந்து வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான். பாம்பு படமெடுத்து ஆடியது. 'புஸ்' என்று சீறியது.

பக்கத்தில் அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்து கொண்டு குங்குமம் இட்டுக் கொண்டிருந்த தன் அண்ணி சீறியது போல இருந்தது.

"நீ குங்குமம் இட வேண்டிய இடம் இதுவல்ல. அலங்கரிக்க வேண்டிய இடம் பட்டணத்தில் இருக்கிறது..." என்று கையில் இருந்த குங்குமத்தை வாங்கிக் கொண்டாள்.

பார்வதிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. எதிரே தெருவில் அழகான பாம்பு ஆடிக் கொண்டிருந்தது. ஒன்றும் பேசாமல் அந்த இடத்தை விட்டு எழுந்தாள். சற்றுத் தொலைவில் வந்து நின்றாள். அந்த வாசலையே நோக்கிய வண்ணம் நின்றாள். அதனின்றும் பார்வை வேறு திசைக்குத் திரும்பவில்லை. அந்த வாசற்படி மங்கலாகக் காட்சியளித்தது. அவள் உள்ளம் வருத்தத்தில் ஆழ்ந்தது.

அழகான ரோஜா மலர். முள்ளில் கிடந்த மலர்தான். அது அந்த இடத்தை விட்டுப் பறிக்கப்பட்டது. முள்ளை விட்டு நீங்குகிறோமே என்ற அற்ப சந்தோஷம் அதற்கு உண்டாயிற்று. பிரிந்த பிறகு மெல்லத் தன் பொலிவு குன்றத் தொடங்கியது. ஓரிரண்டு நாட்கள் சென்றன. அதன் இதழ்கள் மெல்ல உதிரத் தொடங்கின. உதிரும் ரோஜா இப்படிச் சிந்திக்கத் தொடங்கியது. அவள் கூந்தலை அவிழ்த்தாள். அதிலிருந்து விழுந்து பொல பொலவென்று உதிர்ந்த ரோஜா மலர் ஒன்று தன் கதையைச் சொல்வது போலப் பார்வதிக்கு விளங்கியது. அண்ணி குங்குமம் இட்டுவிட்டு அந்த இடத்தை விட்டு நீங்கினாள்.

"அந்த வாழ்வு முட்கள் பொருந்தியதுதான். அதை விட்டு வந்திருக்கக்கூடாது. எவ்வளவு திட்டினாலும் வீட்டை விட்டுப் போ என்று விரட்டினாலும் அந்த இடத்தை விட்டு வந்திருக்கக் கூடாது. பணத்தை அடிப்படையாக வைத்து அவர் அனுப்ப எண்ணியிருக்கலாம். ஆனால் வாழ்வை அடிப்படையாக வைத்து நான் அதை எதிர்த்திருக்க வேண்டும். அணைக்க உரிமை உடையவர்க்கு அதட்டிப் பேச ஏன் உரிமை இல்லை? என் வாழ்வை மலர்விக்கும் கணவனைவிட்டு

வந்திருக்கக் கூடாது. அளவுக்கு மீறிச் செலவு செய்ததால் அவர் வாழ்வு ஆடி மாதக் காற்றுக்கு ஆட்டங் கொடுக்கும் மரத்தைப் போல அசையத் தொடங்கியது. அதில் வீற்றிருக்கும் பறவை அதற்காக அந்தக் கிளையை விட்டுப் போகக் கூடாது. அப்படி வந்ததற்குக் காரணம்: அவர்தானே பத்தாயிரம் கொண்டு வந்தால் வா, இல்லை என்றால் பிறந்தகத்துக்குப் போ என்று கட்டளையிட்டவர். அதை மீறுவதால் அவருக்குத்தானே கேடு சூழ்கிறேன். நான் வந்ததில் தவறு இல்லை.

அப்படியானால் அண்ணி சொன்னது1 அதில் மட்டும் என்ன தவறு இருக்கிறது. என் எதிர்கால வாழ்வை நினைப் பூட்டினாள். நான் நிரந்தரமாக வாழ வேண்டிய இடம் இதுவல்ல என்பதை உணர்த்தினாள். உன்னுடைய கடமை அங்கே இருக்கிறது என்பதைச் சுட்டினாள். அதில் என்ன தவறு? ·

ஏன் தவறு இல்லை? வந்து சில நாட்கள் ஆகவில்லை. அதற்குள் இவ்வளவு உரிமையா என் அண்ணிக்கு? நான் அண்ணனோடு உடன் பிறக்கவில்லையா? உடன் வளர வில்லையா? இந்த வீட்டின் ஒவ்வொரு கல்லும் என் பெயரைக் கேட்டால் சொல்லுமே. இங்கே வளர்ந்திருக்கும் செடிகள் எல்லாம் நான் நீர் ஊற்றி வளர்த்தவைகள் தாமே. நான்தானே அண்ணனிடம் இவளை மணக்கும்படி கூறினேன். மறுத்த அண்ணனை நான்தானே வற்புறுத்தினேன். இந்த வாசற்படிக்கு இதுவரை மஞ்சளும் குங்குமமும் பூசி அணி செய்தது யார்? வீட்டின் மூலை முடுக்குகளையெல்லாம் பெருக்கிச் சீர் செய்தது யார்? அண்ணன் இட்ட வேலைகளை யெல்லாம் இதுவரை தட்டாமல் செய்து வந்தது யார்? முடியாது; இனி அரைக்ஷணம் கூட இங்கே இருக்க முடியாது; அப்படியானால் எங்கே போவது? அங்கே போவதற்கு வழி செய்து கொடுத்தார்களா? வீட்டில் இருந்த சொத்து, நிலமெல்லாம் கலியாணத்திற்குத்தானே கொட்டித் தொலைத் தார்கள். அப்பா எனக்காக இனி எங்கே பொருள் தேடப் போகிறார்? அவர் முயன்றால் மட்டும் அவரால் சாதிக்க முடியுமா? அப்படியானால் என் வாழ்வு? கருகிய மலராகப் போவதற்குக்கூட ஓர் இடம் வேண்டுமே. குப்பையைக் கொட்டி வைக்கக்கூட ஓர் இடம் வேண்டுமே? இல்லா விட்டால் வருவார் போவார் எல்லாம் தூற்றிப் "தொலைப் பார்களே......"

வாழ்வைப் பற்றிச் சிந்திக்கிறாயா? பெண்ணாகப் பிறந்தாலே வாழ்வு சீராக அமையச் சிந்திக்க வேண்டியதுதான்.

ஒரே வீட்டில்தான் பிறந்தோம். அண்ணனுக்குச் சீரான வாழ்வு. அவனை அண்டி வந்த அண்ணிக்கு உரிமையான வாழ்வு. அதே வீட்டில் பிறந்த ஓர் மகளுக்குச் சீரான வாழ்வு ஏன் கிடைக்கக் கூடாது? இயற்கை இரண்டு கண்களைக் கொடுத்திருக்கிறது. ஒன்று பார்வை மங்கி இருளடைந் திருக்கிறது. மற்றொன்று ஒளியுடன் திகழ்கிறது. ஒளியுள்ள கண்ணை ஒளியிழக்கச் சொல்லவில்லை. வாழ்க அண்ணன்; நன்றாக வாழட்டும்; ஆனால் என் வாழ்விலும் அந்த ஒளி உண்டாக்க வேண்டாமா? ஒரு மரத்தில் இரண்டு கிளைகள் வளர்ந்தன. ஒன்று மட்டும் பட்டுப் போவதில் என்ன நியாயம் இருக்கிறது? அசையாமல் அந்த வாசலை நோக்கிய வண்ணம் நின்ற பார்வதியின் உள்ளத்தில் எண்ண அலைகள் பாய்ந்தன. ஒன்றும் தோன்றாதவளைப் போல அதையே சற்று உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அந்த வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த வேலைக்காரி, கலியாணத்துக்காக எடுத்துக் கொடுத்திருந்த கைத்தறி சேலையைக் கட்டியிருந்தாள். ஒரே சேலையைப் பலமுறை தோய்த்துக் கட்டி வந்ததால் அந்தச் சேலை மிகவும் வாட்டம் உற்றிருந்தது. ஓய்வு இல்லாமல் பணி செய்து வந்ததால் அந்த வேலைக்காரியின் ஒட்டிய கன்னங்களைப் போலவே ஒளியிழந்து வதங்கிக் கிடந்தது.

'ஏன்'மா ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? அவர் கலியாணத்திற்கு வரவில்லையே என்று.... அதற்காக வருந்து கிறீர்களா....?

அதற்காக வருத்தப்பட்ட நாட்கள் பார்வதியின் நினைவிற்கு வந்தன. நெஞ்சில் ஒரு குறை இருந்து அரித்துக் கொண்டே இருந்தது. பெரிய அவமானமாக ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அங்கே வந்தவர்களுக்கெல்லாம் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிய அந்த நினைவுகள் வரத் தொடங்கின. அந்த நினைவுகள் எல்லாம் நெஞ்சின் அலைகளின் ஆழத்தில் அமிழ்ந்து வாழ்வின் அப்போதைய நிலைமை நெஞ்சின் மேல்பாகத்தில் அலைமோதிக் கொண்டிருந்தது.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. அது அவர் விருப்பம்."

"ஆமாம்'மா, அதைத்தான் நானும் சொல்லலாம் என்று நினைத்தேன். இதற்கெல்லாம் வீணாக வருந்திக் கொண்டி ருக்கக் கூடாது அம்மா!" என்றாள் வேலைக்காரி.

மறுபடியும் அவள் துடைப்பத்தை எடுத்துச் சேர்த்து வைத்த குப்பையை ஒரு முறத்தில் அள்ளிக் கொண்டிருந்தாள். பார்வதி அந்த இடத்தைவிட்டு எழுந்தாள். உள்கூடத்தில் வந்து உட்கார்ந்தாள். தான் இனி அந்த வீட்டில் எந்த வேலையும் செய்ய உரிமை இல்லாமையை உணர்ந்தாள். நேரே அம்மாவின் மடியில் விழுந்து விக்கி விக்கி அழுது ஆறுதல் பெறலாமா என்று எண்ணியது அவள் மனம். அம்மா எதிரே வந்து கொண்டிருந்தாள்.

அம்மாவிடத்தில் அழுது ஆறுதல் பெறுவதைவிட அப்படியே சீறி விழலாமா என்ற எண்ணம் தோன்ற ஆரம்பித்தது. "நீ உண்மையில் பெற்ற அன்னைதானா? உனக்கு உணர்வு என்பதே இல்லையா? நீ உரிமையிழந்து அப்பாவின் அதிகாரத்திற்கு அடங்கி அடிமை போல வாழ்க்கை நடத்திய உனக்கு உணர்வு எங்கே இருக்கப் போகிறது? உரிமைக் குரல் உன்னிடத்திலிருந்து எங்கே எழப்போகிறது?" என்று கேட்டு விடலாம் போல அவளுக்குத் தோன்றியிருக்க வேண்டும். அத்துணையும் அவள் தன் அன்னையைப் பார்த்த அந்தக் கோபமான பார்வையில் அடங்கி இருந்தது. ஒரு பெரிய கேள்வி அந்தப் பார்வையில் எழுதி ஒட்டியிருந்தது போல இருந்தது.

அதற்குள் "மாமி! மாமி!" என்று மீனாட்சியின் குரல் கேட்டது.

"அண்ணி கூப்பிடுகிறாள். வர்ரே'ம்மா இரு" என்று அந்த இடத்தில் அதிகநேரம் இல்லாமல் எழுந்து விட்டாள்.

"பார்வதி! பார்வதி!" என்று குரல் கொடுத்துக் கொண்டே சிவக்கொழுந்து கூடத்திற்கு வந்தார்.

"நான் அவனுக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்து விடலாம் என்று நினைக்கிறேன்'ம்மா. மகளை வைத்து வாழாவிட்டால் ஜீவனாம்சம் கேட்டு விடலாம் என்று நினைக்கிறேன்....."

"ஏனப்பா! ஒரு பிடி சோறு எனக்கு இந்த வீட்டில் இல்லையா அப்பா? அதற்குக் கூட உங்களிடத்தில் வழியில்லை என்று வெளிப்படையாகச் சொல்லி விடுங்களேன்'பா! இந்த அரைசாண் வயிற்றுச் சோற்றுக்காக நான் போய் அவரிடம் மன்றாட வேண்டுமா....? அதற்கு நான் நீதிமன்றம் போக வேண்டுமா? வேண்டாம்'பா வேண்டாம்."

"இல்லே'மா. அவனுக்கு அப்பத்தான் உணர்ச்சி வரும். நம்ம கலியாணத்திற்கு வராமல் நாலுபேரு மத்தியிலே

அவமானப்படுத்திய அவனுக்கு அதுதான் சரியான வழி. நாலுபேரு மத்தியிலே வைத்து வாழ வக்கு இல்லை என்று சொல்லட்டுமே. அதற்கப்புறம் இந்த வீட்டிலே உனக்கென்ன ஒரு பிடி சோறு இல்லாமலா போய்விடும்? நம்ம கவுரவத்தை நிலைநாட்டக் கட்டாயம் 'நோட்டீசு' கொடுத்துத்தான் ஆகவேண்டும்".

"அவர் வைத்து வாழ வழியில்லை என்று எங்கே சொன்னார்? நீங்கள் தானே கூட்டிக்கொண்டு வந்தீர்கள்.... அண்ணனுக்குப் பெண் பார்க்க நான் அவசியம் என்று சொல்லித்தானே அழைத்துக்கொண்டு வந்தீர்கள். இப்போது நீங்கள் தானேப்'பா அழைத்துக்கொண்டு போய்விடவேண்டும். அதுதானே முறை."

"அவன் பொல்லாதவனாக இருக்கிறானே. போனால் சொன்ன சொல்லைக் காப்பாற்றினாயா என்று கேட்பானே. அவனுக்கு நான் என்ன பதில் சொல்வது? எங்கே பத்தாயிரம்—? எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவானே! அவனிடம் நான் நேரில் போனால் பலனில்லை. அண்ணன் வேறே, நம்மை மதிக்காதவன் வீட்டுக்கு நாம் போகவே கூடாது என்கிறான்; அவனே வந்து அழைத்துப்போகட்டும். நான் செய்தது எல்லாம் தப்புத்தான்'மா. இனிமேல் நான் என்ன செய்வது? சொல்லேன்; எனக்கு ஒன்றும் புரியவில்லை யம்மா."

"எல்லாம் பொறுங்கள் அண்ணனுக்கு ஆஸ்தி வரும். அதில் அண்ணி இந்தா பத்தாயிரம் என்று எடுத்துக் கொடுப்பாள். அப்போது நீங்கள் அவருக்குக் கடிதம் எழுதினால் அவர் வந்து அழைத்துப் போவார்.... எல்லாம் கவுரவமாக முடிந்து விடும்."

"போதும்'பா போதும். நீங்கள் இனிச் சும்மா இருந்தால் போதும். என்னைப் பேசாமல் பாழுங்கிணறு ஒன்று காட்டி அதில் விழச் சொல்லுங்கள். அதுதான் சரி."

மௌனம் நிலவியது. அவர் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அந்த இடத்தைவிட்டு எழுந்து போனார். தனியாக விடப்பட்ட பார்வதி சன்னல் வழியாகத் தெருவை நோக்கினாள். வெறிச் சென்று இருந்தது. நடமாட்டமே இல்லை. தன்னைப் போலவே அந்தத் தெரு தனிமையாக இருப்பதை உணர்ந்தாள்.

"ஏன் பார்வதி! சாப்பிடாமல் இருக்கிறாய்" என்று கேட்டு அவள் அன்னை அழைத்தாள்.

"சாப்பிடுகிறேன்" என்று சொல்லிப் பேசாமல் அடுக்களை நோக்கி நடந்தாள்.

இலையில் போட்ட கறி இன்னதென்று கூடப் பாராமல் ஏதோ கைபோன வழியில் உணவு அருந்தி இரண்டு குவளை நீர் குடித்து எழுந்தாள்.

அப்போதுதான் தெருவில் ஒரு பிச்சைக்காரன் வந்து நின்றான். கையில் தடியூன்றி நின்றான். வயிறு கொஞ்சம் பெருத்து இருந்தது. கைகால்கள் மெலிந்து சோம்பிக் கிடந்தன. கிழிந்த கந்தல் அவன் உடலை மறைக்க மறுத்து விட்டது. உலராத வியர்வை அவன் உடலை நனைத்துக் கொண்டிருந்தது. வெயிலில் வந்து நின்றவன் அழுக்குப் படிந்த மேல் துணியால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

உள்ளேயிருந்து அண்ணி தட்டில் பாதியளவு சோறு கொண்டு வந்து போட்டதும் அவன் குறுகிய பார்வை விரிவடைந்தது.

இதற்கு முன்னால் அதே பிச்சைக்காரன் அந்த வீட்டுக்குப் பலமுறை வந்து கேட்டது நினைவுக்கு வந்தது. அவன் வந்து நின்றதும் அடுக்களைக்குச் சென்று தான் உணவு கொண்டு வந்து போட்ட அந்தப் பழைய நினைவுகள் வர ஆரம்பித்தன. இப்போது அதே தட்டில் அவனுக்குச் சோறு போடத் தனக்கு உரிமை இல்லாத அந்த நிலைமை அவளுக்கு வருத்தம் தர ஆரம்பித்தது.

"அவன் வயிற்றுப் பசிக்காக இரந்து உண்கிறான். நான் ஏன் என் வாழ்வுக்காக அவரிடம் இரந்து கேட்கக் கூடாது! சே! மானம் இழந்து வாழ்வும் ஒரு வாழ்வா?"

"காதல், பிச்சை எடுத்துப் பெறுவது அல்ல. அன்பு இரந்து கேட்டுப் பெறுவது அல்ல. உரிமை அழுது பெறுவது அல்ல. ஒருவரின் இரக்கத்தால் நான் வாழவேண்டிய நிலைமை வருவதைவிட இறப்பதேமேல்" என்று எண்ணத் தொடங்கினாள்.

அவளுக்குப் பொழுது போவதே துன்பமாக இருந்தது. சாயுங்காலம் அண்ணனும் அண்ணியும் சினிமா பார்க்கப் புறப்பட்டபோது,

"நீயும் வருகிறாயா?" என்று அண்ணன் கேட்ட கேள்வியில், "நீ வர வேண்டாம்" என்று சொல்லுவது தெளிவாகத் தெரிந்தது.

பார்வதி அதை அவ்வளவாகப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. "அவர்கள் வெளியே போனது புழுக்கமான அறையில் சன்னல்கள் திறந்து வைத்தது போல இருந்தது.

"ஏன் பார்வதி இன்று ஒருமாதிரியாக இருக்கிறாய்?"

"உண்மையான ஞானம் பெறுவதற்கு இன்றுதான் வழி ஏற்பட்டது. இந்த வீட்டில் இருப்பதற்கு எனக்கு உரிமை கிடையாது என்று ஒருவர் ஞானோபதேசம் செய்தார். அதிலிருந்து அதைப்பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக் கிறேன். அம்மா."

"யாரம்மா அந்த ஞானகுரு? உன் மானத்தை இந்த வயதில் அப்படிக் கலைத்துவிட்டது?"

"அவர் ஒன்றும் கலைக்கவில்லை. உண்மையை உணர்த்தினார்."

"ஏன் பார்வதி? இப்படிச் சுற்றி வளைத்துப் பேசுகிறாய்? தெளிவாகச் சொல்லேன்."

"சொல்'றேன். வீட்டுக்கு விளக்கு வைத்து விட்டுவா. நிதானமாகப் பேசலாம்."

அவள் தாயார், வீட்டில் முன்னரே துடைத்துவிட்டுப் போன விளக்கை ஏற்றிவைத்தாள். சிறிது வத்தியை இறக்கி வைத்துவிட்டுத் திரும்பவும் பார்வதி உட்கார்ந்து கொண்டிருந்த தெருப்பக்கம் வந்து உட்கார்ந்தாள். உள்ளே இருந்த விளக்கு இவள் மனம் விட்டுப்பேசத் தொடங்குவது போலவே ஒளிவிட்டு எரியத் தொடங்கியது.

"ஏன்'மா. எத்தனை நாளைக்கு இப்படியே நான் இருக்க முடியும்? பார்க்கிறவர்கள் என்ன சொல்லுவார்கள்?"

"மாமியார் வீட்டுக்குப் போக வேண்டுமென்று இந்தக் காலத்துப் பெண்கள் வாய்விட்டுச் சொல்கிறார்கள். அந்தக் காலத்திலே காற்றடித்ததோ, மழை பெய்ததோ எப்படி எப்படியோ வாழ்ந்தோம்."

"உங்கள் கதையைக் கேட்கவில்லையம்மா. என்னமோ இங்'கு இருந்தால் என் கதை நல்ல தங்காள் கதையாக மாறி விடுமே என்று அஞ்சுகிறேன். அதைவிடப் பொல்லாத தங்கையாகவே இருந்து உயிர் வாழலாம் என்று ஆசைப் படுகிறேன். எவ்வளவு சீக்கிரம் நான் இந்த இடத்தை விட்டுப் போய் விடுகிறேனோ அவ்வளவும் நல்லது என்று

நினைக்கிறேன். அதுதான் நான் பிறந்த அகத்திற்குச் செய்யக் கூடிய கடமை என்று எண்ணுகிறேன்."

"போயேன்'மா. உன்னை யாரம்மா வேண்டாம் என்று சொல்லுவது. இதோபாரு! மாப்பிள்ளை தானாக வந்து அழைத்துப் போவான். கட்டின மனைவியை விட்டு விட்டுக் காலந்தள்ள அவன் என்ன காஷாயம் போட்ட சந்நியாசியா என்ன? கேட்டுப் பார்ப்போம். கிடைத்தால் நல்லது என்று எண்ணி இருப்பான். இதைப் போல எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கிறேன் அனுபவத்திலே. பெண்டாட்டியை அனுப்புகிறாயா இல்லையா என்று அவனே ஒரு நாளைக்குச் சண்டை போடப் போகிறான். நீயும் பார்க்கத்தான் போகிறாய்."

"எனக்கு அதில் நம்பிக்கை இல்லையம்மா. அங்கே அவருக்குக் கடன்காரர் தொல்லை சொல்லி முடியாது. பணம் தான் அவருக்கு மிகவும் முக்கியமானது. அண்ணன் எப்படி யாவது இந்தப் பேச்சை எடுத்துப் பேசவேண்டும். எஞ்சி இருக்கிற நிலபுலன்களையாவது என்மேலே எழுதச் செல்விடேன்'மா. அண்ணனுக்குத்தான் அவர்கள் முப்பதாயிரம் கொடுக்கப் போவதாகச் சொல்கிறார்களே, அண்ணிக்கு நகை நட்டு இருபதாயிரம் செய்து வைத்தீர்கள். எனக்குக் கொடுப்பதிலே இனிமேல் என்னம்மா கஷ்டம் இருக்கிறது? பத்தாயிரம் என்பது ஒரு நாலாயிரமாவது கொடுத்தால் அவர் கஷ்டம் தீர்ந்துவிடும். இதுதான்'மா நீ எனக்குச் செய்ய வேண்டியது. பெற்ற மகளுக்கு இதுகூடச் செய்யாவிட்டால்—"

"என்னமோ— மாணிக்கத்திடம் சொல்லிப் பார்க்கிறேன். அவன் கட்டாயம் உனக்குச் செய்வான். நீ ஏன் கவலைப் படுகிறாய்? ஒன்றுக்கும் கவலைப்படாதே. எல்லாம் அண்ணன் கவனித்துக் கொள்வான்."

"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்ற இந்தப் பாட்டுத்தான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அண்ணியின் மனம் எப்படி இருக்கிறதோ?"

"அவள் என்ன சொல்வது? மாணிக்கம் படித்த பையன். அவன் பெண்டாட்டிப் பேச்சு கேட்டுக்கொண்டு நடக்கமாட்டான். நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே." இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள். மணி ஒன்பது அடித்தும் அந்த இடத்தைவிட்டு எழுந்ததாகத் தெரியவில்லை. எந்த முடிவுக்கும் வரவில்லை என்பது முடிவில்லாது அவர்கள் பேசிக்கொண்டிருந்த பேச்சு எடுத்துக் காட்டியது.

## 15

"சார்! ஐயா இருக்கிறாரா?"

இருக்கிறார் என்று சொல்லுவதா அல்லது இல்லை யென்பதா என்று தெரியாமல் சிறிது நேரம் தயங்கினாள். சிவராமனைத் தேடி வந்தவர் பெரும்பாலோர் கடன்காரர்க ளாகவே இருந்ததால் கொஞ்ச நாளையில் பொய் சொல்வது சிவகாமிக்கு அவசியமான தேவையாகி விட்டது. 'இருக்கிறார்' என்று சொன்னால் உடனே அவர்கள், எப்பொழுது கொடுக்கப் போகிறீர்கள்? எத்தனை நடை நடப்பது? உண்டா, இல்லையா என்று சொல்லி விடுங்கள்? என்பதும் இவன் 'நாளைக்கு இதே நேரத்தில் வந்துவிடுங்கள்' என்று சொல்வதும் அவர்கள் மீண்டும் அவன் சொற்களைக் கொஞ்சம்கூட அலட்சியப்படுத்தாமல் வருவதும், அதே நேரத்தில் சிவராமன் இல்லாமல் போவதும், அவர்கள் 'பெரிய மனுஷனுங்க நடத்தையெல்லாம் இப்படித்தான் இருக்கும்' என்று வாழ்க்கையை ஆராய்ந்து உடனே முடிவு கட்டுவதும் வழக்கமான நிகழ்ச்சிகளாய் விட்டன.

அதனால்தான் வருகிறவர்களின் தன்மை தெரிந்து, உண்டு, இல்லை என்று சிவராமனைக் கேட்டுச் சொல்ல வேண்டிய நிலைமையில் சிவகாமி பழக்கப்பட்டுப் போய் விட்டாள்.

"சிவா! யாரோ வந்திருக்கிறார்கள்."

விஷயம் தெரிந்தவளைப் போல,

"இல்லை என்று சொல்லி விடு" என்று சுருக்கமாய்ச் சொல்லி விட்டான்.

வந்து நின்றவரிடத்தில், "இல்லை. வெளியே போய் இருக்கிறார்" என்று சொல்லிக் கதவை மூடிவிட்டு உள்ளே வந்தாள்.

"எந்த நேரமும் வீட்டில் இருப்பது இல்லை. சரியான ஆள்தான்" என்று முணுமுணுத்து விட்டு அந்த வீட்டை ஒரு முறைப்பு முறைத்து விட்டுச் சலிப்போடு திரும்பினான் வந்து விசாரித்தவன்.

"ஏன் தம்பி! இவனுக்கு ஏதாவது பாக்கி கொடுக்க வேண்டுமா?"

"இல்லாவிட்டால் நம்மிடத்தில் அவனுக்கு என்ன வேலை? வீட்டை வைத்து மூவாயிரம் வாங்கியிருந்தேன். அதற்கு இரண்டு மாதமா வட்டி கொடுக்கவில்லை...."

"வீட்டை வேறு வைத்து விட்டாயா?" சரிதான். நாளைக்கு நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான்.

"கட்டினவர்களுக்கு ஒரு வீடு. கட்டாதவர்களுக்கு ஆயிரம் வீடு. இதற்கெல்லாம் கவலைப்பட்டால் முடியுமா?" என்று சொல்லிக்கொண்டே தன் சட்டையில் விழுந்திருந்த தூசைத் தட்ட ஆரம்பித்தான்.

"அப்போது.... ஏலத்துக்கு நிச்சயம் கொண்டு வந்திடுவானோ?"

"அப்படி அவன் கொண்டு வராவிட்டால் அவனுக்குப் பொறுமைசாலி என்ற பட்டம் கட்டாயம் கொடுக்கணும்."

"அப்படித்தான் அவன் கொஞ்சம் பொறுத்துக் கொண்டால்கூட அவனை நம்பிப் பிழைக்கும் 'வக்கீல்' சும்மா இருப்பானா? எரியும் கொள்ளியை ஏறவிட்டால் தானே அதில் அவன் குளிர்காய முடியும்?"

"இந்த மாதிரி நிலைமை வருகிறவரையிலும் நான் இந்த வீட்டில் இருக்கமாட்டேன். முதலிலே அவரை வந்து அழைத்துப் போகச் சொல்லிக் கடிதம் எழுது. அல்லது நீயாவது என்னைக் கொண்டு போய் பம்பாயில் விட்டுவிடு."

"அதுதான் நானும் யோசிக்கிறேன். பேசாமல் வீட்டை விற்றுவிட்டுக் கடன்காரர்களுக்குப் பங்கு போட்டுக் கொடுத்துவிட்டு நிம்மதியா, எங்காவது ஒரு அறை எடுத்துக் கொண்டு தங்கிவிடலாம் என்று நினைக்கிறேன். வேளா வேளைக்கு 'ஹோட்டலிலே' அதிகாரமாகச் சாப்பிட்டு விட்டுக் காலம் தள்ளலாம் என்று இருக்கிறேன்."

கூடத்தில் உயரமான ஓர் இடத்தில் குருவிகள் இரண்டு கூடு ஒன்று கட்டியிருந்தன. வைக்கோலால் கட்டியிருந்த அச்சிறுகூடு பெருங்காற்று ஒன்று வீசிய போது கீழே வீழ்ந்து விட்டது. குருவிகளும் 'கிரீச்' என்று கத்திக்கொண்டு வெளியேறின. மீண்டும் பறந்துவந்து விழுந்த சிறகுகளை யெல்லாம் பொறுக்கிக் கொண்டு போய் வைத்தன. மீண்டும் பழைய கூடு நிலைபெற்றது. குருவிகள் இரண்டும் 'ஜோடியாக' உட்கார்ந்து கொண்டு கீழே சிவராமனைப் பார்த்துச் சிரிப்பது போல இருந்தது.

"எனக்கு இறக்கைகள் கொடுக்கவில்லையே! நான் என்ன செய்யமுடியும்?" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ போய் அவளை அழைத்துக்கொண்டு வா. உள்ள நிலைமையை எடுத்துச் சொல். கடன் தொல்லையை எடுத்துச் சொல்லி இருக்க நிழலில்லாமல் வீடு பறிபோய் விடும் என்பதையும் எடுத்துச் சொல்லு. ஏதோ கேட்டுப்பார். கொடுப்பதை வாங்கிக் கொண்டு வா. கிடைப்பதைக் கொண்டு திருப்தி அடை. வந்ததைக்கொண்டு வாழ வழிசெய். எனக்கென்னவோ இங்கு இருக்கக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. இந்த வீடு இனிச் சீர்பெறும் என்ற நம்பிக்கையும் சிறிது கூட இல்லை. அவர் வாரந்தோறும் வரச் சொல்லிக் கடிதம் எழுதுகிறார். நான் இருக்கவே மாட்டேன்."

"என்னமோ! சரி. இன்று நிலைமையை விளக்கிக் கடிதம் எழுதுகிறேன். ஐந்தாயிரமாவது கொடுத்தால் போதும் என்பதையும் விளக்கி எழுதுகிறேன். நிலைமை சரிப்பட்டால் அழைத்து வருகிறேன்" என்று சொல்லிய வண்ணம் எழுந்தான்.

மறுபடியும் தனக்குப் பழக்கமான சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். சிவகாமியும் புகைந்து கொண்டிருந்த அடுப்பை ஊத அடுக்களைக்குச் சென்றாள்.

அந்தச் சிட்டுக் குருவியின் சீரான வாழ்க்கை அவன் மனக் கண்முன் வந்து நின்றது. நான் மட்டும் ஏன் வாழ்க்கையைச் சீர் செய்யக் கூடாது என்று எண்ணத் தொடங்கினான். பணம் இல்லாமல், ஏன் பார்வதியை வைத்துக் கொண்டு குடித்தனம் செய்ய முடியாது என்று எண்ணினான்.

"சிட்டுக் குருவிகளின் வாழ்க்கை வேறு. மனிதரின் வாழ்க்கை அமைப்பு வேறு. அவை இயற்கை நியதிகளைத் தவிர வேறு செயற்கைச் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை. அவை எத்தனை முட்டைகள் வேண்டுமானாலும் இடலாம். குஞ்சுகள் எத்தனை வேண்டு மானாலும் பொறிக்கலாம். வாழ்வதற்கு எந்த இடமும் வாய்ப்பு அளிக்கும். ஆனால் மனிதரின் வாழ்வு அத்தகையதல்ல. பணத்தின் சட்டதிட்டங்கள் மனிதரின் விருப்பப்படி வாழ விடுவதில்லை. சூழ்நிலைக்கு அஞ்சி அதற்குத் தகுந்தவாறு வாழ வேண்டியிருக்கிறது. பணம் வரும் என்று எதிர்பார்த்த இத்திருமணத்தில் தோல்வியடைவது என்றால் என் வாழ்க்கையே தோல்வி என்றுதானே பொருள். மணவாழ்வு என்றால்: எங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் அவர்

களுடைய எதிர்காலம், நான் விட்டுச்செல்லும் இடத்திலிருந்து அவர்கள் தொடர்ந்து நடத்தும் வாழ்க்கை, அப்போது அவர்கள் நிலைமை இவை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தானே வாழவேண்டும். என் நிலைமையையே சமாளிக்க முடியாத இந்நிலையில் மனைவியோடு எப்படி வாழ முடியும்? அதற்கு அவள் தந்தை மட்டும் ஏன் பொறுப்பில்லாதவர் போல் இருக்கவேண்டும்? தன் மகள் அமைதியாக வாழவேண்டும் என்ற ஆவல் அவருக்கும் மட்டும் ஏன் இருக்கக்கூடாது? நான் மட்டும் ஏன் சோர்ந்து பின் வாங்கவேண்டும்? அதெல்லாம் முடியாது. பணம் இல்லாமல் அவளை அழைத்து வரக்கூடாது. முடியாது.... போகட்டும், பத்தாயிரம் கொடுக்கிறேன் என்ற அவர், பாதியாவது கொடுக்க ஏன் முன்வரக் கூடாது? ஆறின கஞ்சி, பழங்கஞ்சி என்பார்களே பழங்கஞ்சியும் இல்லாமல் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? நான் எப்படியும் ஐந்தாயிரமாவது பெற்றே தீர வேண்டும்" என்று அவன் முடிவுக்கு வரும்வரை அந்தச் சிகரெட்டும் எரிந்து கொண்டே இருந்தது.

சாம்பலும் ஒருபக்கம் சோர்ந்து நின்று விழலாமா வேண்டாமா என்று தயங்கிக் கொண்டிருந்தது. சாம்பலைத் தட்டிவிட்டு மறுபடியும் ஓர் இழுப்பு இழுத்துவிட்டு அதற்காக என்று வைக்கப்பட்டிருந்த சிறு கோப்பையில் போட்டுவிட்டு எழுதுவதற்கு முனைந்தான்.

யாருக்கு எழுதுவது என்று சிந்திப்பதில் சிறிதுநேரம் வீணாயிற்று. பிறகு பார்வதிக்கே அவன் எழுதத் தொடங்கினான் என்பது 'அன்புள்ள' என்று ஆரம்பித்ததி லிருந்து தெரிந்தது. எழுதிய கடிதத்தை உறையுள் இட்டு மேஜை மேல் வைத்தான். மறுபடியும் தன் கடமைகளை முடித்துக் கொண்டு வேலைக்குப் புறப்பட வெளியே வந்து நின்றான். அவன் புறப்படும் நேரத்தில் அவனுக்காக வைக்கப்பட்ட காப்பியைக் குவளையில் ஊற்றி வெளியே கொண்டு வந்து கொடுத்தாள் அவன் தமக்கை.

"கடிதம் எழுதினாயா? அப்படியே அவருக்கும் ஒரு கடிதம் எழுதிவிடு. என்னைப் பம்பாய்க்கு அழைத்துப் போகச் சொல்லி எழுது."

"சரி, நீயே எழுதிக்கொள்" என்று ஒரு தபால் உறையை அவளிடத்தில் கொடுத்துவிட்டுத் தெரு நோக்கி நடந்தான்.

"கட்டாயம் அவளை அழைத்துக் கொண்டு வர வேண்டும். அழைத்து வராவிட்டால் நான் சும்மா இருக்க

மாட்டேன்" என்று அவன் அந்த இடத்தைவிட்டுப் போன கொஞ்ச நேரம் பொறுத்தும் விடாமல் சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் தலையை ஆட்டிக்கொண்டு சென்றது "போதும் நிறுத்து" என்று சொன்னானா அல்லது கட்டாயம் அழைத்து வருகிறேன் என்று சொன்னானா என்பது தெரியாமல் அப்படியே நின்றாள். உள்ளே மீதியிருந்த காப்பி ஆறிவிடுமே என்ற எண்ணம்வர வீட்டுக்குள் நுழைந்தாள்.

## 16

அண்ணி வரவரத் தன்னிடத்தில் முகம் கொடுத்துப் பேசாமல் இருப்பதை எண்ணிப் பார்வதி மிக வருந்தினாள். எப்படியாவது மனக்கசப்பு நீளாமல் பிறந்த அகத்தை விட்டுப் போய்விட வேண்டும் என்ற நோக்கம் நாளொரு மேனியும் பொழுதொரு சிந்தனையுமாக வளர்ந்தது.

முன்னெல்லாம் அண்ணி சினிமாவிற்குப் போய் வந்தால் அந்தக் கதையில் வரும் நிகழ்ச்சிகளையும் நடிகைகளின் நடிப்பையும், நகைச்சுவைப் பேச்சுகளையும் சொல்லிச் சொல்லிச் சிரித்துக்கொண்டிருப்பாள். இப்போது சென்று பார்த்த சினிமாவின் பெயரைச் சொல்லுவதையும் நிறுத்திக் கொண்டது அவளுக்கு அண்ணியிடம் என்ன பேசுவது என்று தெரியாத நிலைக்குக் கொண்டு வந்து விட்டது. மீனா! என்று கூப்பிட்ட வண்ணம் மாணிக்கம் வெளியிலிருந்து வந்தான். மீனாட்சிக்குப் பிடித்தமான வாரப் பத்திரிகைகளையும், சினிமாப் புத்தகங்களையும் வாங்கிக் கொண்டு வந்தான். நேரே சமையல் அறைக்குள் நுழைந்து அவள் எதிரில் போட்டான்.

"என்ன சமையல் மீனா?"

"அவியல் குவியல் ஒன்றும் இல்லை இந்தச் சமையலில்" என்று வேடிக்கையாக ஆரம்பித்தாள். "ஓகோ..... நேற்றுப் பார்த்த சினிமா வசனத்தை அப்படியே ஒப்பிக்கின்றாயோ."

அப்போது அடுப்பில் முருங்கைக்காயும் கத்திரிக்காயும் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டு வெந்து கொண்டிருந்தன.

"நீ மடைத் தொழிலில் வல்லவள். அதனால் நீ ஒரு மடையள்."

"மடையளின் கணவன் ஆண்பாலில் சொன்னால்...."

"மடையன். கெட்டிக்காரி நீ! வா மீனா; அடுப்பங் கரையை கட்டிக்கொண்டு எப்பொழுது பார்த்தாலும் அழவேண்டியதுதானா?"

"அடுப்பு ஊதினால் என் மூச்சுக் காற்றையும் ஏற்கும். உங்களிடத்தில் ஓதினால் என் பேச்சுக்கூட ஏற்காதே."

"மீனா! நீ பேசு. பேசிக்கொண்டேயிரு. மூச்சு உள்ள வரை பேசு. கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள். மீண்டும் பேசு. பேசு. பேசுவாய் நீ."

"பேசுகின்ற வாயா? நான் வாயாடி என்று இப்படி மறைமுகமாகப் பேசுகிறீர்கள். நீங்கள் வாயாடி, உங்கள் தங்கை வாயாடி, உங்களைப் பெற்று வளர்த்த தாய் இருக்கிறாளே அவள் வாயாடி" என்று சொல்லியவண்ணம் பேதமறக் கலந்து வெந்துகிடந்த கத்திரிக்காய் முருங்கைக்காயை அடுப்பிலிருந்து எடுத்து இறக்கி வைத்தாள்.

இறக்கி வைத்த அந்தக் கருகிய கடாயினின்று புகை மெல்ல மேல் நோக்கி எழுந்து கொண்டிருந்தது. அவர்கள் பேசிய சொற்கள் ஒன்றும் பாதியுமாகக் காதில் விழுந்து கொண்டிருந்த காரணத்தால் பார்வதியின் மனத்தில் வேதனை புகைந்து கொண்டிருந்தது. ஆனால் புகைச்சல் வெளிவராமல் அடங்கிக் கிடந்தது.

"பேசா மடந்தையின் பின்வந்த பேரழகி! கூசாமல் பேசும் நின் உரைதான் கேட்டால் என் மனம் வருந்தும்; கேளாவிட்டால் நீ வருந்துவாய். என் செய்வேன் இனிநான் சொல்" என்று கவிதையைப் போல வேடிக்கையாகப் பேச ஆரம்பித்தான்.

இளமையின் துள்ளலில் வரும் பேச்சுரையோ, சினிமாவைப் பார்த்துவிட்டு வந்து பேசும் வசன உரையோ என்று பார்வதியால் முடிவு கட்ட முடியவில்லை. அண்ணன் பேசிய வேடிக்கைப் பேச்சில் அவளால் தவறு காண முடிய வில்லை. அண்ணி ஏன் தன்னையும், தன் அன்னையையும் அவர்கள் வேடிக்கைப் பேச்சில் இழுக்க வேண்டும் என்பதை எண்ணும் பொழுது அவளுக்கு ஆறவில்லை.

அதற்குள் 'தபால்' என்று சொல்லி இரண்டு கடிதங்களை உள்ளே போட்டு விட்டுச் சென்றார் தபால்காரர். தபால் என்ற சிறு ஒலி கேட்டு வெளியே வந்தான் மாணிக்கம். அதே சமயம் அது 'அவரிடத்திலிருந்து' வந்திருக்குமோ என்ற ஆவலால்

அதை அவாவிய உள்ளத்தோடு வரவேற்றாள் பார்வதி. மாணிக்கம் கையில் வந்த கடிதத்தை உற்றுப் பார்த்தான்.

"இந்தா! உனக்குத்தான் வந்திருக்கிறது" என்று பார்வதியிடம் ஒரு கடிதம் கொடுத்துவிட்டு மற்றும் ஒன்றை எடுத்துக்கொண்டு சமையல் அறைக்குச் சென்றான்.

"அன்புள்ள....." என்று ஆரம்பித்த கடிதம் தேனும் பாலும் கலந்த சுவை போல இனித்தது. பார்வதியின் உள்ளம் தழைத்தது. ஐந்தாயிரமாவது கேள். அதையும் மறுத்தால் ஒப்புக்கொள்ள முடியாது என்பதையும் சொல்லி விடு" என்று முடித்திருந்த கடிதத்தைப் பலமுறை படித்தாள். களைத்து நடந்துகொண்டிருக்கிற ஒருவனுக்கு பஸ்ஸில் நிற்கவாவது இடம் கிடைத்ததைப் போன்றிருந்தது அவள் நிலைமை. இனி எப்படியும் தன் வாழ்வு சீர்படும் என்ற சிந்தனையில் அவள் உள்ளம் மிதந்து கொண்டிருந்தது. அதனால் அவள் நடையில் உற்சாகமும், செயலில் ஊக்கமும் பிறந்தது.

"அம்மா! கடிதம் வந்திருக்கிறது."

"வந்து அழைத்துப் போகிறேன் என்று சொல்லி எழுதி யிருக்கிறதா!"

"ஆமாம். ஆனால் ஐந்தாயிரமாவது வேண்டுமாம்."

அதே நேரம் அவள் அப்பாவும் அலுத்துக் களைத்து 'அப்பாடா' என்று வந்து உட்கார்ந்தார்.

"ஏன், உங்களைத்தான். மருமகன் கடிதம் எழுதி இருக்கிறான்."

"நல்லது... என்னவாம். வந்து அழைத்துப் போகிறேன் என்று ஏதாவது..."

"எழுதியிருக்கிறான். ஆனால் ஐந்தாயிரமாவது வேண்டுமாம்."

"ஆமாம்பா. வீடு ஏலத்திற்கு வர இருக்கிறதாம். ஐந்தாயிரமாவது இருந்தால்தான் சுற்று முற்றும் கடன் கொடுத்து நிம்மதியாக வாழ முடியுமாம். கடன்காரர்கள் வீட்டை ஏலம் போட்டு எடுத்துக் கொண்டால் அப்புறம் நிற்க நிழலில்லாமல் போய்விடும். இருக்க வீடு இல்லாமல் அந்தச் சென்னையில் என்ன செய்வது? எப்படியாவது இந்தப் பணமாவது கொடுத்துவிடப்பா."

"அவன் வீட்டுக் கடனைக் கொடுக்க நம் வீட்டுச் சொத்தை விற்க வேண்டுமா! நன்றாக இருக்கிறது அவன் கேட்பதும் அதற்கு நீ பரிந்து பேசுவதும்."

"என்னப்பா, எதுக்காவது பயன் படுத்திக் கொள்ளட்டுமே.

நீங்கள் கொடுப்பதைக் கொடுத்துவிட்டால் அப்புறம் அவர் பாடு."

அப்பொழுதுதான் பேச்சின் நடைமுறையைக் கேட்டுக் கொண்டிருந்த மாணிக்கம் கூடத்திற்கு வந்தான்.

"ஆமாம். அவர் செய்கிற ஊதாரித்தனத்திற்கு எல்லாம் நாம் பணம் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டுமா? அவர் செய்கிற வீண் செலவால்தானே கடன் ஆகியிருக்க வேண்டும்? மேலும் மேலும் அவர் கடன் வாங்காமல் இருப்பார் என்பதில் என்ன உறுதி இருக்கிறது?"

"அண்ணா, நீ கூடவா இப்படி மாற வேண்டும்."

"இல்லை. உண்மையைத்தான் சொல்கிறேன். எவ்வளவு கொடுத்தாலும் அவர் அதைக் காப்பாற்றமாட்டார். அதற்குக் காரணம் எனக்குத் தெரியும். சொன்னால் உன்மனம் புண்படும். அதற்காகத்தான் நான் சொல்லத் தயங்குகிறேன்."

"உங்களுக்கு அவரைப்பற்றி இங்கிருந்துகொண்டு என்ன தெரியும்? அவரிடம் உள்ள ஒரே குறை வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமை. அந்த ஒரு குறையால்தான் அதிக வட்டிக்குக் கடன்வாங்கி, அதைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் அவசரத்திற்குக் கிடைத்த இடத்தில் கடன் வாங்கி விடுகிறார். இந்த ஒரு குறையால்தான் அவர் உங்கள் கண்களுக்குச் செலவாளியாகத் தோன்றுகிறார்."

"இல்லை பார்வதி. உனக்குத் தெரியாது. சும்மா இரு. பிறகு பார்த்துக் கொள்ளலாம். பணத்தைப் பாழ்படுத்த வேண்டாம். இதுதான் நான் சொல்ல விரும்புவது."

அடங்கியிருந்த அன்னை கொஞ்சம் தடைநீங்கிப் பேச ஆரம்பித்தாள்.

"ஏன்'டா. நீ வந்து குறுக்கே நிற்கிறாய். சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி குறுக்கே நிற்கிறாப் போலத்தானே இருக்கிறது நீ பேசுவது. உங்கள் அப்பாவுக்கு மகளுக்குக் கொடுக்க மனம் வராது. போதாக் குறைக்கு நீ வேறு காரணம் சொல்ல வந்து விட்டாய். மாட்டேன், கொடுக்கமாட்டேன். எல்லாச் சொத்தும் எனக்குத்தான் வேண்டும் என்று வெளிப் படையாகச் சொல்லிவிடேன். இதிலே வேறு காரணம் இருக்கிறது அப்படி இப்படி என்று சொல்லி வீண்வார்த்தை பேசி ஏன் தடுக்கிறாய்?

பார்வதி வாழா வெட்டி ஆவதைவிட ஐந்தாயிரம் நஷ்டம் அடைந்தால்தான் போவுது. அவள் பச்சைப் பசேல் என்று வாழ, வேண்டாமா? காலா காலத்திலே கணவன் வீட்டுக்குப் போகாமல் கண் கலங்கி நிற்க வேண்டுமா? ஊரார் எல்லாம் என்ன சொல்லுகிறார்கள். வாழ்கிற பெண்ணை வாழாமல் வைத்திருக்கிறார்கள் என்ற பெயர் நமக்குத்தானே. ஊரில் இருக்கிற பெண்கள் மகளை அனுப்ப வில்லையா என்று என்னைத்தானே கேட்கிறார்கள். உங்களுக்கென்ன! ஆண் பிள்ளைகள் வெளியே போய்விட்டால் இதெல்லாம் எப்படித் தெரியப் போவுது? முதலிலே அவளை அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள். அதற்காக ஐந்தாயிரம் என்று பார்க்காதீர்கள்" என்று எப்பொழுதுமே எதிர்த்துப் பேசாத பார்வதியின் தாய் விடாமல் பேசித் தான் சொல்ல விரும்பிய அனைத்தையும் ஒரே மூச்சில் கொட்டிவிட்டாள்.

சிறிது நேரம் அமைதி நிலவியது. எப்பொழுதும் அடங்கி அப்பாவை எதிர்த்துப் பேசாத தாய் இவ்வளவு தூரம் பேசியதால் பார்வதி மகிழ்ச்சி அடைந்தாள். தனக்கு உதவிக்குத் தன் அன்னை இருப்பது அவளுக்கு அளவற்ற உற்சாகத்தைக் கொடுத்தது.

அம்மா சொன்னதற்கு அண்ணன் இனி ஒன்றும் பதில் சொல்ல முடியாது என்ற முடிவுக்கு வந்தாள். மௌனம் நிலவியது. ஆனால் அது நீடித்திருக்கவில்லை.

"ஆமாம், அவள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. போய்த் தொலைகிறான். ஏதாவது கொடுத்துத் தொலைப்போம்" என்று அவள் தந்தை பேசத் தொடங்கியது கேட்டு என்றுமில்லாத மகிழ்ச்சி அடைந்தாள்.

"என்னப்பா! நானா தர வேண்டாம் என்கிறேன். தாராளமாய்க் கொடுங்கள். இருப்பதை விற்று அவர் கையில் கொடுங்கள். தாராளமாகச் செலவு செய்யட்டும். அவர் வழிபடுகின்ற மோகினித் தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்யட்டும். நானா வேண்டாம் என்கிறேன். எப்படியாவது போங்கள்'' என்று சொல்லி மீண்டும் கூடத்தைவிட்டு உள்ளறைக்குள் போய் விட்டான்.

அவன் குறிப்பிட்ட மோகினித் தெய்வம் யாரென்று யாருக்கும் புலப்படவில்லை. அவன் சொல்லியதும் சரியாக விளங்கவில்லை.

"என்ன அது அவன் சொல்கிறான். எனக்கும் ஒன்றும் விளங்க வில்லையே."

"அதுதான் அவன் கோவில் குளங்களுக்குப் போவான். பூஜை வழிபாடு செய்வான். அது இவனுக்குப் பிடிக்கவில்லை. மாணிக்கம் இந்தப் புதியகட்சி. தெய்வமில்லை என்று பேசும் கட்சியைச் சேர்ந்தவன். அதனாலே அவன் தெய்வத்திற்குப் பூஜை செய்வது இவனுக்குப்பிடிக்கவில்லை. எல்லாம் கட்சி வேற்றுமை. அவ்வளவுதான். அப்படித்தான் அதற்குச் செலவு செய்தால் என்ன நாலு ஐந்துதானே செலவு செய்வான். அதற்குப் போய் இவன் அங்கலாய்க்கிறான்" என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள் அவள் தாய். பார்வதிக்கு மனத்தில் ஒருவகைக் குழப்பம் உண்டாக ஆரம்பித்தது. அண்ணன் சுட்டிக் காட்டியது அவர் நடத்தையைத்தான் என்பதை அவளால் நன்றாக உணர முடிந்தது. அப்படி உண்மையில் அவர் நடக்கிறாரா என்ற கேள்விக்குறி அவள் உள்ளத்தில் எழுந்தது. அதற்கு விடை தருவது போலக் கடந்த கால நிகழ்ச்சிகள் ஒன்று இரண்டு மீண்டும் அவள் உள்ளத்தில் உலவ ஆரம்பித்தன.

"நான் எங்கே போகிறேன் என்று உனக்குச் சொல்ல முடியாது. அதைக் கேட்க உனக்கு உரிமை கிடையாது"- அந்தச் சொற்கள் பார்வதியின் காதில் ஒலிக்க ஆரம்பித்தன. சிவராமன் நேரம் கழித்து வந்த இரவுகள், அப்பொழுது, கண்ணாடியின்முன் தலைவாரிக்கொண்டு சென்ற காட்சிகள் இவையெல்லாம் மனக்கண் முன் வந்து நின்றன.

அவர் பணத்திற்காகத் தன்னை அனுப்பியது பொய் என்று அவள் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது.

என்னை ஏதாவது சாக்கு போக்குச் சொல்லி அனுப்பத் தக்க காரணம் அவர் மனத்தில் பணமாகப் பட்டிருக்க வேண்டும். அப்படியானால் இப்பொழுது ஏன் என்னை அழைக்க வேண்டும்? அவர் யாருக்காவது அவசரமாகப் பணம் கொடுக்க வேண்டியிருக்கும். அவர் ஆடும் களியாட்டத்திற்கு நான் இப்படியும் அப்படியும் அகற்றி வைக்கப்படும் காயாக அமைந்துவிட்டேன். அவ்வளவுதானா என் நிலைமை.

அப்படியிருந்தாலும் நான்தானே சென்று திருத்த வேண்டும். திருத்த வேண்டும்... உண்மைதான். ஆனால் அவர் பாழாகுவதற்குப் பக்கத் துணையாக நான் இருக்க வேண்டுமா? அதற்குத் தக்க பண உதவி நான் செய்ய வேண்டுமா? கூடாது. அண்ணன் சொல்வது உண்மையாக இருந்தால் நான் கொடுக்கும் பணம் விழலுக்கு இறைக்கும் நீராகப் போகுமே. பணம் எல்லாம் ஒழிந்த பிறகு மட்டும் வாழ்வு சீர்படும் என்று

எப்படிச் சொல்ல முடியும்? ஒரு வேளை அண்ணன் கோபத்தில் இப்படிச் சொல்லியிருப்பாரா? வீணாகச் செலவு செய்கிறார் என்ற வருத்தத்தில் வேகமாகச் சொல்லும் போது அப்படி வந்திருக்குமோ! அப்படிதான் அது உண்மையாக இருந்தாலும் அண்ணனுக்கு எப்படித் தெரிய முடியும்?

யாராவது அண்ணனிடம் சொல்லியிருக்கக் கூடாதா! ஏன்...? சொல்லியும் இருக்கலாம்.

அவர்கள் சொன்னது தவறாகவும் இருக்கலாம். ஒரு வேளை அது உண்மையானால்...?

இருக்காது. கேட்டு விடலாம். பணம் கொடுக்கத்தட்டிக் கழிப்பதற்கு இதுவும் ஒரு வழியாக இருக்கலாம்.

இது போன்ற எண்ணங்கள் பார்வதியின் மனத்தில் தோன்றி மறைந்தன. யாராவது தொடர்ந்து பேசியிருந்தால் இவ்வளவு எண்ணங்களும் தோன்றியிருக்க முடியாது. அவள் அப்பாவும், அம்மாவும் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்.

இந்த அமைதி பார்வதியின் தாயாருக்குப் பிடிக்க வில்லை.

“ஏன், உங்களைத்தானே. கல்லுப் பிள்ளையார் மாதிரி ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்களே. ஏதாவது முடிவு செய்து எழுதுங்களேன்.”

“அதெல்லாம் முடியாது. மாணிக்கம் சொல்வதிலே கூட உண்மை இருக்கிறது. நெருப்பு இல்லாமல் புகை வராது. அப்படித்தான் கடன்காரர் வீட்டை வளைத்துக் கொண்டால் அதற்கு என் பணம்தானா பயன்பட வேண்டும்? அப்படித் தான் நான் ஏதாவது கொடுப்பதாய் இருந்தால் அதைத் தனிச் சொத்தாக வைத்தால் நாளைக்கு என்பேரு இருக்கும். பேரன் பேர்த்தி தலைமுறையாக இருக்கும்.”

“இதோ பாரு, இப்படி எல்லாம் திருப்பித் திருப்பிப் பேசாதீர்கள். அவனுக்குச் சொன்ன சொற்படி ஏதாவது கொடுத்து நம் மானத்தைக் காப்பாற்றுங்கள். நீங்கள் ‘கொடுக்கிறேன்’ என்று சொல்லாவிட்டால் அவன் ஏன் கேட்கிறான். உங்கள் மேலே தவறு வைத்துக்கொண்டு அவன் மேலே தவறு காண்கிறீர்கள். இதற்கு மகன் வேறு பக்கத் துணை.”

“சே, நீ சும்மா இரு. உனக்கு என்ன தெரியும்? அதுவா விஷயம். கோவிலிலே பூஜை பண்ணுகிறான் என்று

சொல்கிறானே அதை முதலிலே விளக்கிக் கொண்டு அப்புறம் பேசு. தெரியாத்தனமாய்ப் பேசு'றே."

"அம்மா! அவர் தவறான நடத்தையில் பொருளைச் செலவு செய்கிறாராம். அண்ணன் இப்படிச் சொல்கிறான்."

"அப்படிச் சொல்லு! அவன் மேலே அபாண்டமான பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்துச் சொன்னால் அதை அப்படியே நம்பி இந்த மனுஷன் வேறு ஆடுறாரு" என்று சொல்லிவிட்டு அதைத் தீர விசாரித்துத் தெரிந்து கொள்ள மாணிக்கத்தைக் கூப்பிட்டாள்.

"மாணிக்கம்! உன்னைத்தான் மோகினித் தெய்வம் பிடித்துக்கொண்டு அவள் சொல்லுகிறதை நீ கேட்டுக் கொண்டு ஆடுகிறாய். அதை விட்டுவிட்டு அவனைப் போய் மோகினித் தெய்வம் பிடித்து ஆட்டுகிறது. அவன் ஆடுகிறான் என்கிறாயே...உடன் பிறந்த தங்கைக்குக் கொடுக்க மனம் இல்லையானால் அவளை வைத்துக்கொண்டு இங்கே வாழவாவது உன்னால் முடியுமா? அப்படித்தான் காலத்துக்கும் வைத்துக்கொண்டு வாழ்ந்தால் உன்மோகினிதான் விடுவாளா உன்னை? இதெல்லாம் கொஞ்சம் கூடச் சிந்தித்துப் பார்க்காமல் வாயில் வந்தபடி பேசிவிட்டாய்" என்று கொஞ்சம் கூட யோசியாமல் வாயில் வந்தபடி பேசத் தொடங்கினாள்.

எங்கே மீனாட்சி இந்தச் சொற்களைக் கேட்டுவிடு கிறாளோ என்ற அச்சம் அவனுக்குத் தோன்றியது என்பது அவன் திரும்பிப் பார்த்த பார்வையிலிருந்து நன்கு தெரிந்தது. அதைப்பற்றிப் பார்வதியின் தாயார் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அலட்சியமான பார்வையோடு மருமகள் இருந்த திக்கைப்பார்த்தாள். தாயைப்பற்றி நினைக்கும்போது அவனுக்கு அந்தச் சமயத்தில் தெருவில் அம்மன் கோயிலில் இருந்த காளியின் வடிவம் கவனத்திற்கு வந்தது. அஞ்சாமல் அலட்சியமாகப் பார்த்த அந்தப் பார்வையில் காளியின் கண்களைப்போல் தோற்றம் இருந்தது. மாணிக்கமும் சிறிது நடுங்கிவிட்டான். அவள் எங்கே அம்மா சொன்னதைக் கேட்டுவிடப் போகிறாளோ என்று சிறிது அஞ்சினான். அவன் குரலில் கொஞ்சம் தாழ்மை ஏற்பட்டது.

"அம்மா! நீ இப்படிச் சீறி விழுவாய் என்று நான் எதிர் பார்க்கவில்லை. உண்மையைச் சொன்னால் உங்களுக்கு ஏன் உள்ளம் நோகிறது?"

“என்னடா, உண்மை? அதை சொல்லித் தொலை. யார் சொன்னது? என்ன விஷயம் சொல்லேன். உங்கள் அம்மாதான் கேட்கட்டும்” என்று இடையில் குறுக்கிட்டார்.

“யாரோ தெரியவில்லை. அவள் ஆபீசில் வேலை செய்கிறவளாகத்தான் இருக்க வேண்டும். அவளும் அவரும் சைனாபசாரில் சுற்றிக்கொண்டிருந்தார்கள். அவளை ‘பஸ்ஸில்’ ஏற்றிவிட்டுப் பிறகுதான் அவர் பஸ்ஸில் ஏறினார். நான் முன்னால் பட்டணத்துக்குத் துணி வாங்கப் போனபோது இதைக்கண்டேன். கண்டுங் காணாததைப் போல நடந்துகொண்டேன். அதனால்தான் அவர் வீட்டுக்குப் போக மனம் இல்லை. பார்வதிக்குச் சொல்லக் கூடாது; சொன்னால் மனம் வருத்தப்படுவாளே என்று சொல்லாமல் இருந்தேன்” என்று அமைதியாகப் பற்றற்ற துறவிபோல நடந்த நிகழ்ச்சியைச் சொல்ல ஆரம்பித்தான்.

“சரிதான் போதும். இதுக்குமேலே பார்வதியை வைத்துக் கொண்டு அவன் வாழ்ந்தாற் போல்தான். கொடுக்கிற பணத்தைத் தாறுமாறாகச் செலவு செய்துவிட்டுப் பிறகு அவளை வைத்துக்கொண்டு அவன் வாழப்போவதில்லை” என்று மிகச் சுருக்கமாக முடிவு சொல்லப்பட்டது. கொஞ்ச நேரம் வருத்தம் கலந்த நிலைமையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

“செங்கல்பட்டிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. மீனாட்சி யையும் அழைத்துப் போகிறேன். யாரோ எம்.எல்.ஏ. வைப் பார்த்து வேலைக்குச் சிபாரிசு செய்ய வேண்டுமாம். உடனே புறப்படும்படி எழுதியிருக்கிறது” என்று சொல்லிய வண்ணம் அந்த இடத்தை விட்டுத் தன் பயணத்துக்குச் சித்தமானான்.

“ஏதாவது பதில் எழுதுங்க, சும்மா இருந்தால் எப்படி.”

“அதுதான் யோசிக்கிறேன். மருமகள் வீட்டில் இல்லை. இன்னும் ஒருமாதம் கழித்துப் பார்வதியை அனுப்பி விடுகிறேன் என்று எழுதலாமா என்று நினைக்கிறேன்.”

பார்வதிக்கு அப்பா சொல்வது கொஞ்சங்கூடப் பிடிக்காமல் இருந்தது.

“அப்பா நீங்கள் எழுதவேண்டாம். நான் எழுதி விடுகிறேன். ‘ஐந்தாயிரம் கிடையாது; விருப்பமிருந்தால் அழைத்துப் போங்கள்’ என்று எழுதுகிறேன். இனிமேல் நீங்கள் எனக்காகக் கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டியதில்லை. என்னைப்பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை. எனக்காக

இரக்கங் காட்ட வேண்டியதில்லை. எனக்காக ஒரு துளி கண்ணீர் யாரும் சிந்தவேண்டியதில்லை. இது செய்தால், போதும்" என்று விடு விடு என்று பேசத் தொடங்கினாள். அசையாத கல்லைப்போலவே அப்படியே இருவரும் உட்கார்ந் திருந்தார்கள்.

"அப்பா! போய் வருகிறேன்."

"மாமி! சீக்கிரம் வந்துவிடுகிறோம்."

"போய் வருகிறேன்" என்ற இந்தச் சொற்களோடு வெளியே வந்து நின்றுகொண்டிருந்த 'ஒற்றை' மாட்டு வண்டியில் பெட்டியும் ஒரு பையும் துணையாக இருவரும் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

வண்டி புறப்பட்ட ஒலி கேட்டது. அமைதி நிலவியது. அதற்குமேல் அவர்கள் பேசுவதைப் பார்வதி கேட்க மனமில்லாமல் உள்ளறைக்குச் சென்று பழம் பாயைப் போட்டுப் படுத்துக்கொண்டு விக்கி விக்கி அழுத குரல் மட்டும் கேட்டது.

சிவராமனைப் பிடித்த மோகினித் தெய்வத்தைப்பற்றி அவள்மனம் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தது.

## 17

வெளியே தெருவில் அங்கொருவர் இங்கொருவராகப் போய்க்கொண்டிருந்தார்கள். 'சாவு' விழுந்த வீட்டைப் பார்ப்பது போல் பழக்கமானவர்கள் சிவராமன் வீட்டைப் பார்த்துக்கொண்டு சென்றனர். அந்த வீட்டின் திண்ணையில் ஒருவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். குழி விழுந்த கண்கள், மெலிந்த உடல், அழுக்குப் படிந்த தலைப்பாகை ஒன்று மாட்டிக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவர்கள் அந்த வீட்டை ஒருமுறை பார்த்தார்கள். எல்லாம் விஷயம் தெரிந்தவர்கள் போல ஏதோ ஒருவரைப் பார்த்து ஒருவர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இவன் அப்பன் வயிற்றுக்குக் கூடச் சரியாகச் சாப்பிட மாட்டான். எப்படி எப்படியோ வயிற்றைக் கட்டி,வாயைக் கட்டி இந்த வீட்டைக் கட்டினான். ஒரே பிள்ளை என்று படிக்க வைத்தான். மகன் ஊதாரி; வீண் செலவாளி. எல்லா வற்றையும் அழித்து விட்டான்." என்றார் ஒருவர்.

“இந்தப் பையன் சமுசாரம் கூட இவனோடு வாழ்வது இல்லையாம். அடித்துத் துரத்தி விட்டானாம்” என்றார் மற்றொருவர்.

“அப்பப்பா! இவன் பிடிக்கிற சிகரெட்டுக்கு அளவே கிடையாது. எப்பொழுது பார்த்தாலும் சிகரெட்டும் கையுமாகத்தான் இருப்பான். கொஞ்சம் ஆள் கூட ஷோக்காளி.”

“என்ன இருந்தாலும் வாங்கின கடனைக் கொடுக்கவே மாட்டான். அவர்களைத் திருப்பியடிப்பான். இன்றைக்கு வா, நாளைக்கு வா என்று இழுத்தடிப்பான். அவனுங்கதான் எத்தனை நாளைக்குப் பொறுப்பானுங்க?”

“என்னய்யா ஈட்டிக்காரன் கிட்டே கடன் வாங்கி எவன்’யா முன்னுக்கு வர முடியும்...? அவன் கிட்டே கூட கடன் வாங்கியிருக்கிறானாம். அவன் வேறே இவனை விடாமல் அடிக்கடி சுற்றிக்கொண்டு இருக்கான்.”

“மன்னன் வட்டிக்கு அஞ்ச மாட்டான். எவ்வளவு கொடுப்பதற்கும் பின்வாங்க மாட்டான். பணம் கொடுத்தால் போதும்.”

“ஆமாம். அதைத் திருப்பிக் கொடுப்பதாய் இருந்தால் தானே அஞ்ச வேண்டும்.”

“இந்த வீட்டை ரூபா மூவாயிரத்துக்கு அடமானம் வைத்தானாம். வைத்த பிறகு ஒரு மாத வட்டிகூடக் கொடுக்க வில்லையாம். எவன் தான்’யா சும்மா இருப்பான்?”

“ஆமாம். கடன்காரனும் கேட்டுப் பார்த்தானாம். இதோ வருது, அதோ வருது, மாமியார் வீட்டிலே தருகிறார்கள், அப்படி இப்படி என்று எவ்வளவோ ‘சால் ஜாப்பு’ சொல்லி வந்திருக்கிறான். கடைசியிலே கடன்காரன் சும்மா விடுவானா?”

“படித்தபிள்ளை. அப்பன் பேரைக் கெடுக்கப் பிறந்தான்.”

“பாவம்! அவனுக்கு உடன் பிறந்தாள் ஒருத்தி இருக்கிறாள். இவனுக்காக அவள், கட்டிக் கொடுத்த வீட்டுக்கும் போகாமல் இங்கேயே இருந்து எவ்வளவோ புத்தி சொல்லியிருக்கிறாள். கேட்டால்தானே! அய்யோ! அந்த அம்மாள் கதிகலங்கி நிற்கிறாள்.”

“இப்படிக் கூடவா நல்லாயிருந்த குடும்பம் அழியும்?”

''அப்பப்பா! என்ன டாம்பீகமாகக் கல்யாணம் நடத்தினார்கள் தெரியுமா? கல்யாணம் ஆகி இரண்டு வருடம் கூட ஆகவில்லை.''

"என்ன இருந்தாலும் மன்னன் இதற்கெல்லாம் அஞ்ச மாட்டான். கவலைப்படவேமாட்டான். நாம்தான் இதைப் பற்றிப் பேசவேண்டும்."

இதைப்போன்ற காற்றிலே மிதக்கும் கவிதைகளை அந்தத் தெருவில் விஷயம் தெரிந்தவர்கள் புனைந்து கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் 'ஐயோ பரிதாபம்! என்று பாராட்டுரை வழங்கினார்கள். சிலர் தலையை மட்டும் அசைத்துக்கொண்டிருந்தார்கள்.

கையில் தமுக்கு வைத்திருந்தவன் ஒருவன் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றான். சிவராமனின் தமக்கை சிவகாமி வெளியில் தலைகாட்டவில்லை. கதவைத்தாளிட்டுத் தூணின் மேல் சாய்ந்துகொண்டு, 'சிகரெட்டை' ஒன்றன்பின் ஒன்றாகச் சங்கிலிபோலத் தொடர்ந்து ஓய்வில்லாமல் ஊதிக் கொண்டிருந்தான்.

"இந்த வீடு இந்த நிலைமைக்கு வரும் என்று நான் எதிர் பார்க்கவில்லை."

"நீ எதிர்பாராதது. ஆனால் நான் எதிர்பார்த்தது நடந்து விட்டது. அதை எப்படி எதிர்பாராதது என்று சொல்ல முடியும்?"

''பேசக்கற்றுக் கொண்டாய்! வீட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டாய்."

"இந்த வீடு இனிமேல்தான் சீர்பெறப் போகிறது. இதற்கு இனிமேல்தான் வெள்ளையடித்து, வர்ணம்பூசி போனது வந்தது பழுதுபார்த்துப் புத்தம் புதிதாக ஆகப்போகிறது. வாங்கினவன் சும்மா இருப்பானா? கடனை உடனே வாங்கி இந்த வீட்டைச் செப்பனிட்டு உடனே அவன் கடன்காரனா வான். இந்த வீடு சீர்படவில்லை, சீர்படவில்லை என்று பேசுகிறாயே, அப்புறம் வந்து பார். இந்த வீடு சீர்ஆகி இருக்கிறதா என்று."

''சரிதான். இந்த வீட்டைத் தாரைவார்த்துவிட்டு அப்புறம் இது சீர்பட்டால் என்ன, குட்டிச்சுவர் ஆனால் எனக்கென்ன?"

"அதுதான் கூடாது. நாம் கெட்டாலும் வீடு நன்றாக இருக்கவேண்டும். இந்த வீட்டில்தான் எங்கள் தாயும்

தந்தையும் இருந்து நல்லறம் ஆற்றினார்கள். இங்கேதான் நான் இருந்து வாழ்ந்து உள்ளதை எல்லாம் அழித்தேன். இங்கேதான் என் தமக்கை வந்து இந்தத் தூணில் சாய்ந்து கொண்டு கண்ணீர்விட்டாள் என்று சொல்லவாவது இந்த வீடு இடியாமல் குட்டிச்சுவராகாமல் எங்கள் சரித்திரத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படி ஒரு நல்ல வாழ்த்து வாழ்த்திவிட்டுப் போவதுதான் நல்லது."

"சரிதான். நீ வாழ்த்திக்கொண்டிரு. என்னைமட்டும் வண்டி ஏற்றி அனுப்பிவிடு. இந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டு இங்கு இருக்கமுடியாது."

"அக்கா! எனக்கு ஒரு பாட்டு ஞாபகம் வருகிறது.

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப் – போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்ன அழகான பாட்டு! இந்தப் பாட்டின் பொருளுரையை உணரும்போது இந்தப் பாட்டு எவ்வளவு சுவைக்கிறது தெரியுமா?

"ஆமாம், சுவைக்கும்! எவனோ ஒருவன் ஊர் பற்றி எரியும்போது புல்லாங்குழல் ஊதினானாமே. அந்த மாதிரி இருக்கிறது உன் கதை."

"அத்தகைய மனம்தான் வேண்டும். அழியட்டும் என் குடும்பம். அழியட்டும் என் பழைய வாழ்வு. மாறட்டும் ஒரு புதிய வாழ்வு. இந்த வீட்டோடு என் கடன் தொல்லை தீரட்டும். எத்தனை நாட்கள், எத்தனை இரவுகள் இந்தக் கடன் காரர்களுக்கு அஞ்சி அஞ்சி நான் வாழ முடியும்.

எத்தனை முறை அவர்களைக் கண்டு என் உள்ளம் நடுங்கியிருக்கிறது தெரியுமா? அட்டை போல் வட்டிக்கு வட்டி வாங்கி என் வாழ்வை உறிஞ்சியவர்கள் எத்தனையோ பேர். ஏதோ ஒரு முறை தவறு செய்தேன். அதற்குமேல் தலை தூக்கி வாழ முடியவில்லை. இந்த உலகம் என்னை யோக்யதை அற்றவன், நாணயம் அற்றவன் என்று கூறிப் பழிச்சொல் சொல்லிச் சொல்லிப் பழகி விட்டது. எதற்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லைதான் இன்றைய ஏல விளம்பரம். இன்று தான் எனக்கு விடுதலை கிடைக்கும் நல்ல நாள். எதற்காகக் கவலைப்பட வேண்டும்."

"கட்டிய வீட்டைக் கடன்காரர்களுக்குக் கொட்டித் தொலைக்க எத்தனை நாள் காத்துக்கிடந்தாயோ தெரிய வில்லையே."

"நான் காத்துக் கிடக்கவில்லை. அவன்தான் காத்துக் கிடந்தான் பகிரங்கமாக ஏலம் போட. நான் என்ன செய்ய முடியும்? நீயும் கூடத்தானே இருந்தாய்! மாமனார் வீட்டில் பத்தாயிரம் கொடுப்பதாகச் சொன்னது உனக்குத் தெரியாதா? இப்படிக் காலை வாரி விடுவார்கள் என்று யார் எதிர்பார்த்தார்கள்?"

"ஐந்தாயிரத்திற்காவது பதில் வந்ததா?"

"அதுவும் வரவில்லை. ஐந்தாயிரம் கிடையாது. விருப்பம் இருந்தால் வந்து அழைத்துப் போகவும்" என்று அவளே எழுதி விட்டாள். அந்த மனுஷன் ஒரு சொல் கூடப் பதில் எழுதவில்லை."

"சரியான சம்பந்தம். அப்பொழுதே எங்களவர் வேண்டாம் இந்த இடத்தில் சம்பந்தம் என்று சொல்லி வந்தார். கேட்டால்தானே."

"ஆமாம். நான்கூட அதுதான் சொல்கிறேன். இனிமேல் அவர்கள் சம்பந்தம் வேண்டாம். பெண்ணை வைத்து அவர் களே வாழட்டும். எனக்கு வேளைக்கேற்ற உணவு உண்டு; விரும்பித் தங்குவதற்கேற்ற விடுதி உண்டு; பார்ப்பதற்கேற்ற சினிமா உண்டு. உண்டு உண்டு என் பொழுது போக்குவதற்கு ஏற்ற சிகரெட்டுத் துண்டு" என்று சிகரெட்டுத் துண்டை வாயில் வைத்துக் கொண்டே கிளம்பினான்.

அந்தப் பிரியும் வீட்டை ஒரு முறை பார்த்தான். "அக்கா! உன் சொந்த சாமான்களை எல்லாம் தனியாக எடுத்து வைத்து விடு. உன்னை வண்டியில் ஏற்றி அனுப்பி விடுகிறேன். மற்ற சாமான்களை அவர்களிடத்தில் ஒப்பு வித்துவிட்டு விடுதலை கீதம் பாடி இந்த வீட்டைவிட்டு வெளியே போகப் போகிறேன்."

சிவகாமி கண்கலங்கி நின்றாள்.

"இதற்குத்தானா நான் இத்தனை நாள் இந்த வீட்டில் இருந்தது? இந்தக் குடும்பம் பாழாகும் காட்சியைப் பார்ப்பதற்கா நான் இங்கு இருந்திருக்கவேண்டும்? எங்கே யாவது கண் மறைவாக பம்பாயில் இருந்தால் இந்தக் காட்சி களைக் காணவேண்டியிருக்காதே."

"கேட்கவேண்டியிருக்கும். அவ்வளவுதான் வித்தியாசம். புறப்படு. வண்டி அழைத்து வந்துவிடுகிறேன். அதற்குள் எடுத்து வைத்துக்கொள். வீணாக மனத்தை அலட்டிக்கொள்ளாதே. பேசாமல் பம்பாய்க்குப் போய்ச் சேர். நான் நிம்மதியாக இருக்கிறேன் என்று அவரிடம் சொல். வேறு ஒன்றும் சொல்லி அவர் மனத்தைக் குழப்பாதே."

சிவகாமி இருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. சிவராமனே வலிய தன் தமக்கையின் துணிமணிகளை எடுத்து ஒரு பெட்டியில் வைத்தான். கவரின்மேல் மாட்டியிருந்த தன் அப்பா அம்மாவின் படத்தை எடுத்து அவள் பெட்டியில் வைத்தான். மற்றொரு பெட்டியில் தன் துணி சட்டைகளை மடித்து வைத்தான். 'ஷேவிங்' பெட்டி சிகரெட்டு டப்பா இவை போன்ற இன்னபிற அவன் இன்றியமையாப் பொருள்களை எடுத்து வைத்துக்கொண்டான். தன் போட்டோவையும் பார்வதியோடு இருந்த மற்றொன்றையும் எடுத்து வைத்துக் கொண்டான். எஞ்சி நின்ற பீரோ, கட்டில், வெள்ளி, பித்தளை பாத்திரங்களையெல்லாம் ஒரு பார்வை பார்த்துவிட்டு விடை பெற்றான்.

அதற்குள் வெளியே கதவு தட்டும் சப்தம் கேட்டது. வெளியே 'டாக்ஸி' காரில் மூன்று பேர் வந்து இறங்கினார்.

போவதற்குத் தயாராக இருந்த காலி டாக்ஸியை இருக்குமாறு கை காட்டினான் சிவராமன். அவனும் சிவராமனின் வருகைக்காக நிறுத்தி வைத்தான்.

"நான்தான் அமீனா" என்று கையில் சில பழுப்பு நிறக் கடிதங்கள் வைத்துக்கொண்டிருந்த ஒருவர் தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டார். சிறுக வெட்டிய கிராப்பும் அதில் வெள்ளை மயிர்கள் ஆங்காங்கு ஊடுருவிப் பாய்ந்து வயது நாற்பது இருக்கும் என்று அறிமுகப்படுத்தியது அவர் தோற்றம். மற்றொருவர் இவன் வீட்டிற்கு வந்து போகும் பழக்கமான கடன்காரர் என்பது இவனுக்கு யாரும் சொல்லத் தேவையில்லை. வாய் மூடி மௌனியாக இருந்த அவரோடு இருந்த மற்றொருவர் வக்கீலாகத்தான் இருக்க வேண்டும் என்பதைச் சிவராமன் தெரிந்து கொண்டான்.

"சார்! உங்களுக்கு வருத்தமான செய்தி ஒன்று சொல்லப் போகிறேன்" என்று எடுத்தான் சிவராமன். "என்ன சார் செய்வது! படித்த நீங்களே இப்படிக் கவலைப் பட்டால் மற்றவர்கள் என்ன செய்வார்கள்! எல்லாம் சட்டப்படித்தான் நடக்கும்" என்று ஆறுதல் சொல்ல ஆரம்பித்தார் வக்கீல்.

"ஆமாம் சார்! அதைத்தான் நானும் சொல்ல வந்தேன் சட்டப்படி நீங்கள் அடையப் போகிற வருத்தத்தைச் சுட்டிக் காட்ட ஆரம்பிக்கிறேன்."

"என்ன?"

"ஆமாம். நான் இன்சால்வென்ட் கடிதம் கோர்ட்டில் வாங்கியிருக்கிறேன். இந்த வீட்டில் உள்ள சாமான்களை நீங்களும் மற்றக் கடன்காரர்களும் சமபாகமாகப் பெற்று உள்ளதைக் கொண்டு திருப்தி அடைய வேண்டியது" என்று சொல்லிவிட்டுக் கையில் இருந்த கோர்ட்டுக் கடிதம் ஒன்றைக் காட்டினான்.

அதே சமயம் சைக்கிளில் இவனுக்குப் பழக்கமான ஈட்டிக்காரன் வந்து நின்றான். அவனுக்குப் பக்கத்துணையாகத் துணிக் கடைக்காரன், பால்காரன், இன்னும் சிவராமனுக்கு அறிமுகமான வியாபாரிகள், கைப்பதிலாகக் கடன் கொடுத்தவர்கள் இன்னும் எல்லாக் கடன்காரன்களும் வழியனுப்ப வந்தவர்கள் போல் வழியில் வந்து நின்றார்கள்.

ஆள் இன்சால்வெண்ட் ஆகிவிட்டான் என்ற செய்தி கேட்டு அவரவர் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டிருந் தார்கள். சிவராமனிடம் யாரும் நெருங்கிப் பேச வரவில்லை.

எடுத்து வைத்த இரண்டு பெட்டிகளையும் அமீனாவிடம் திறந்து காட்டினான். இவை என் சொந்த உபயோகத்திற்குரிய சாமான்கள். இவை என் தமக்கையின் சாமான்கள் என்று சொல்லிவிட்டு அப்பெட்டிகளை மூடினான். சிவகாமி கவிழ்த்த தலையை எடுக்காமல் இருந்தாள். கண்களிலிருந்த நீர் கன்னத்தைக் கனத்துக் கொண்டிருந்தது.

"அக்கா! எழுந்திரு" என்று கூப்பிட்டான். கண்களைத் துடைத்துக் கொண்டாள். அந்த வீட்டை ஒருமுறை பார்த்தாள். அவளுடைய உள்ளத்தில் எவ்வளவோ எண்ணங்கள் பழையநினைவுகள் வேகமாக வரத்தொடங்கின. அவற்றைப்பற்றிச் சிந்திக்க நேரமில்லாமையால் அவை மொத்தமாகப் பாரமாகக் கிடந்தன. அந்த இடத்தைவிட்டு எழுந்தாள். அவளுக்குப் பழக்கமான அடுப்பங்கரையை ஒரு முறை பார்த்தாள். சட்டி, பானைகள் கறுத்துக் காணப்பட்டன. சொட்டு சொட்டென்று சொட்டிக்கொண்டிருந்த குழாய் ஒன்றுதான் இவர்களுக்காகக் கண்ணீர் வடிப்பதைப் போல் இருந்தது. துடைப்பமும் பழைய முறமும் தனிமையை அனுபவித்தன.

கூடத்தில் கூடு கட்டியிருந்த சிட்டுக் குருவிகள் 'கிரீச் கிரீச்' என்று கத்தின. அவை இவர்கள் வாழ்க்கையைக் கண்டு சிரித்தனவா, படும் துன்பம்கண்டு அழுதனவா என்று தெரியவில்லை. சிவராமன் வழக்கமாக உட்கார்ந்து கொண்டிருக்கும் சாய்வு நாற்காலியின் சட்டம் உடைந்து சாய்ந்து கிடந்தது. கீழே போட்ட சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. நிழற் படங்கள் மாட்டியிருந்த இடத்தில் ஆணிகள் மட்டும் கொஞ்சம் வெள்ளையாய் இருந்தது. அந்த இடத்தில் அப்பொழுதுதான் ஒரு மூட்டுப் பூச்சி இருட்டான இடத்தைத் தேடிக்கொண்டிருந்தது. வெளிச்சத்தைக் கண்டு கூசுவது போல அதன் உடலில் சிறிது நடுக்கம் காணப்பட்டது.

இவர்கள் வீட்டில் வேலை செய்துவந்த வேலைக்காரி ஒரு பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். அம்மை வடு நிறைந்த அவள் முகத்தில் இந்தத் துன்ப வடுக்களும் இடம் பெற்றன. அந்த இரண்டு பெட்டிகளையும் எடுத்து வெளியேயிருந்த டாக்ஸியில் வைத்தாள்.

அவளிடத்தில் மட்டும், "போய் வருகிறேன்" என்று சொல்லி சிவகாமி விடை பெற்றாள். சிவராமன் ஒன்றும் சொல்லாமல் அவளிடத்தில் வட்ட வடிவமான எட்டணா ஒன்றை எடுத்துக் கொடுத்தான். 'வேண்டாம்' என்று சொல்லி அவள் வாழ்க்கையில் முதல் தடவையாக மறுத்துவிட்டாள். "இந்த வீட்டைப் பார்த்துக்கொள்" என்று பழக்கமாகப் பிறக்கும் சொற்கள் சிவகாமியின் வாயில் வரவில்லை.

டாக்ஸியில் இருவரும் ஏறி உட்கார்ந்தார்கள். சிவராமன் முதல் இடத்தில் உட்கார்ந்து கொண்டான். அமீனா, வக்கீல் கடன்காரர்கள் இவர்களைத் தவிர மற்ற எல்லோரும் இவர்கள் காரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிவகாமி தலை குனிந்தபடியே உட்கார்ந்து கொண்டிருந்தாள். சிவராமன் "வருகிறேன், நன்றி!" என்று கண்ணியமாக அங்கிருந்த வக்கீலிடம் சொல்லிவிட்டு விடை பெற்றான்.

டாக்ஸி புறப்பட்டது. பிறகு அங்கு என்ன நடந்தது என்பதைப் பற்றிச் சிவராமன் கவலை கொள்ளவில்லை.

## 18

பார்வதியைப் பற்றி எதையும் கேட்பதற்கு இப்பொழு தெல்லாம் அவள் தாயாருக்குத் தைரியம் வருவதில்லை.

அன்று சொன்ன இறுதி மொழிகளுக்குமேல் எந்தமொழியும் அவள் வாயில் வரவில்லை. "ஐந்தாயிரம் வேண்டாம்" என்று மறுத்த அந்தச் சொற்கள் இன்னும் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன.

"விருப்பமிருந்தால் வந்து அழைத்துப் போகட்டும்" என்று சொல்லியதன் ஆழ்ந்த பொருள் ஒன்றும் அவள் தாய்க்கு விளங்கவில்லை.

"அது எப்படி அவன் வந்து அழைத்துப் போவான்?"

"ஏன்? தானாக ஒருநாளைக்கு வந்து அழைக்காமலா போய் விடுவான்?"

"நிச்சயமாக அழைக்கமாட்டான். அவனைத்தான் யாரோ ஒருத்தி வலையில் போட்டிருக்கிறாளே."

"இப்படிக் கூடவா இந்த மனுஷன் மகளின் வாழ்வைப் பாழ்படுத்துவான்."

"பெற்ற மகளிடம் பாசம் இல்லாமல் மகனிடம் மட்டும் பற்று வைப்பது ஏன்? எதிர் காலத்தில் அவன் மட்டும் இவரைத் தாங்குவான் என்பது என்ன உறுதி? வந்துள்ள மருமகள் பார்வதியை ஆதரிப்பாள் என்று சொல்வதற்குக் கூட இடமில்லையே." அவள் மனத்தில் பார்வதியைச் சுற்றி எழுந்த கவலையின் காரணமாக இந்த எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் கட்டை வண்டியின் கலகலத்த ஒலி சலசலத்துக் கொண்டிருந்தது. அண்ணியும் அண்ணனும் வருகிறார்கள் என்பதைப் பார்வதி உணர்ந்தாள். அவர்கள் இறங்கி வீட்டிற்குள் வருவதற்குள் அவர்கள் கொண்டுவந்த சிறு கூடையும் அதற்குள் இருந்த பலகாரங்களும் வீட்டின் தாழ்வாரத்தில் ஏறின. மாணிக்கம் பின்னும் மீனாட்சி முன்னும் வீட்டிற்குள் நுழைந்தனர். 'காஞ்சிபுரத்துப் பட்டுப் புடைவை' அவள் அண்ணியை அலங்கரித்தது. அந்தப் பச்சை நிறப்புடைவை அவள் தோற்றத்திற்கு எடுப்பாக இருந்தது. அவள் தாயார் வீட்டில் எடுத்துக் கொடுத்த புடைவை என்பதை அவள் தெரிந்து கொண்டாள். இதற்கு முன்னால் அண்ணி தன்னிடம் புடைவைகளின் தொகை, நிறம், வயது, விலை, சரித்திரம் இவையெல்லாம் கூறக் கேட்டிருந்ததால் இது புதுப் புடைவை என்பதைத் தெரிந்து கொண்டாள்.

அமைதியாக 'ஐஸ்' போல சில்லென்றிருந்த வீடு காப்பி போலச் சூடாக ஆயிற்று. மறுபடியும் வீட்டில் கல கலப்பும்

ஆரவாரமும் நிரம்பின. கொண்டுவந்திருந்த பலகாரங்களை யெல்லாம் மீனாட்சி ஒரு புறம் அறையில் கொண்டு போய் வைத்தாள். அக்கம் பக்கத்தவரின் மதிப்பைப் பெறுவதற்காக அவற்றையெல்லாம் பங்கிட்டு வெற்றிலை பாக்குடன் ஒவ்வொரு வீட்டிற்கும் கொடுத்தனுப்பத் தட்டில் எடுத்து வைத்தாள் அண்ணி.

"பார்வதி! இதைக் கொஞ்சம் கொண்டு போய்க் கொடுத்து விடேன்."

பார்வதிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. போகின்ற வீடு தோறும்,

"ஏன் பார்வதி! இன்னும் புக்ககம் புகவில்லை" என்ற அந்தச் சொற்கள் காதில் ஒலிக்கத் தொடங்கின. ஆகையால் சிறிது தயங்கினாள்.

"ஒன்றும் குறைந்துவிட மாட்டாய், கொண்டு போய்க் கொடுத்தால்" என்று வெடுக்கென்று பேசினாள். மறுபடியும் அந்த இடத்தில் இருக்க அவளுக்குப் பிடிக்கவில்லை.

நல்ல காலமாக, "பார்வதி!" என்று அவள்தாய் கூப்பிட்ட குரல் அவளுக்கு அபயம் அளித்தது.

"அம்மா கூப்பிடுகிறார்கள்" என்று சொல்லிக் கொண்டு அந்த இடத்தைவிட்டு வெளியேறினாள். அதற்குள் வீடு பெருக்க வந்த வேலைக்காரி அந்த அறையுள் வந்தாள். "மரகதம்! இங்கே வா! இதை நான் கொடுத்தேன் என்று எதிர் வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் கொடுத்துவிட்டு வா."

"நீங்கள் கொடுத்தனுப்பக் கூடாது அம்மா. உங்கள் மாமியார்தான் வீட்டுக்கு வீடு கொடுத்தனுப்ப வேண்டும். அதுதான் மரியாதை."

"ஆமாம். அவர்களுக்கு மரியாதை என்ன தெரியப் போகிறது. இங்கே வைத்தால் பாதி அவர்கள்தான் சாப்பிடுவார்கள். பாதிகூட வெளியாருக்குக் கொடுக்க மாட்டார்கள்."

இந்தச் சொற்கள் ஒன்றும் பாதியுமாக அவள் மாமியாருக்குக் கேட்க ஆரம்பித்தது. அவளால் பொறுக்க முடியவில்லை. இருந்தாலும் வந்த கோபத்தை அடக்கிக் கொண்டாள். நேரே உள்ளே வந்தாள்.

"மரகதம்! இந்தப் பலகாரங்களை ஒன்றுகூட இங்கே வைக்காமல் ஒவ்வொரு வீட்டுக்கும் பங்கிடச் சொல்லு" என்று

விறுவிறுப்பாகச் சொல்லிவிட்டு அந்தத் தட்டுகளை எடுத்துக் கொண்டு போகும்படி உத்தரவு இட்டாள்.

"மாமியார் அதிகாரம் எல்லாம் இங்கே செல்லாது என்று சொல்லி வை. மரகதம்! உன்கிட்டேதான் சொல்லுகிறேன். என்ன... தெரியுதா?"

"அந்த அதிகாரத்தை எல்லாம் அங்கேயே அடக்கி வைக்கச் சொல்லு முதலில். போகப் போக எங்களை இங்கே வைக்கக்கூட மாட்டார்கள் போலிருக்கிறதே."

"பிடிக்காவிட்டால் வீட்டை விட்டுப் போ'றது. வாழாவெட்டி மகள் ஒருத்தியை வைத்துக் கொண்டு ஜம்பம் பேசுகிறாள். இவளுக்கும் இவள் மகளுக்கும் உழைக்கத்தான் சரியா இருக்கிறது இந்த வீட்டிலே."

"கேட்டியா அவள் துடுக்குத்தனத்தை. எல்லாம் அவன் கொடுக்கிற செல்லம்தான். அவள் இதுவும் பேசுவாள், இன்னமும் பேசுவாள். எதைத்தான் பேசமாட்டாள்! நாங்கள் ஏன் இந்த வீட்டை விட்டுப் போகணும்? பிடிக்காவிட்டால் அவள் புருஷனை அழைத்துக் கொண்டு தனியாய்ப் போகச் சொல்லு. என்ன குத்து உலக்கையாட்டம் நிற்கிறே. சொல்லேண்டி மரகதம் அவளிடம்."

"என்ன சொல்வது? இன்று அனுப்பச் சொல்லு உடனே போகிறேன். இவளுக்கும் இவள் மகளுக்கும் வேளா வேளைக்கும் வடித்துக் கொட்டுகிறேனே, சாப்பிட்டு விட்டு இதுவும் பேசுவார்கள் இன்னமும் பேசுவார்கள். இதோ மூட்டை கட்டுகிறேன். அவர்கள் நிம்மதியாக வாழட்டும்" என்று சொல்லிக் கொண்டுவந்த மூட்டையை எடுத்துக் கட்டினாள். பெட்டியை எடுத்து வைத்தாள்.

"ஆமாம் இவள் எடு என்றால் அவன் பிடி என்கிறான். இவள் ஆட்டி வைத்தால் அவன் ஆடுகிறான். அந்தத் தைரியத்திலேதான் அவள் இப்படிப் பேசுகிறாள். இந்த மனுஷனுக்குப் புத்தி இருந்தால் இப்படி எல்லாவற்றையும் மகன் கலியாணத்திற்குச் செலவு செய்துவிட்டு நடுத்தெரு சந்தி சிரிக்க வைப்பாரா?" என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்.

இந்தச் சண்டையைக் கேட்டுக்கொண்டிருந்த பார்வதி அம்மாவைக் கையைப் பிடித்து இழுத்துக் கூடத்திற்கு அழைத்துச் சென்றாள்.

மீனாட்சி பரபரப்பாகச் சாமான்களையெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு புறப்படத் தயாரானாள். "அவள் கிடக்கிறாள். அவளுக்கு நான் இங்கே அடங்கி ஒடுங்கிக் கிடப்பேனா? உன்னைக் கண்ணால் பார்க்க மாட்டேன் என்கிறாள். அவளுக்கென்ன மட்டுமரியாதை" என்று தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தாள் அவள்தாய். அப்பொழுது தான் அமைதியாக அப்பனும் மகனும் பேசிக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

"அப்புறம்...அந்த எம்.எல்.ஏ. என்ன சொன்னார்?"

"அதெல்லாம் இப்பொழுது இவரை மதிக்கிறது இல்லை. தேர்தலுக்கு முன்னெல்லாம் அவர்கள் இவர்களைத் தேடி வந்தார்களாம். இப்பொழுது இவர்கள் அவர்களைத் தேடிப் போகிறார்கள். அவ்வளவுதான் வித்தியாசம்."

"போனகாரியம் காயா பழமா?"

"எம்.எல்.ஏ. சிபாரிசு எல்லாம் இப்பொழுது எடுபடுவதில்லையாம். பேசாமல் வந்து சேர்ந்துவிடச் சொல்கிறாரு. வீட்டோடு இருக்கச் சொன்னார். உத்தியோகம் எதற்கு என்று சொல்கிறார்."

"அதற்குத்தானா உன்னைப் படிக்க வைத்தது?"

"அதற்கு நான் என்ன செய்யமுடியும். நிலபுலன்களைப் பார்த்துக்கொள்வதற்கு அவருக்குப்பிறகு ஆள் இல்லையாம். அங்கேயே வந்துவிடச் சொல்கிறார்."

"அதெல்லாம் முடியாது என்று தெளிவாகச் சொல்லி விட்டாயா?"

"அதெப்படியப்பா சொல்லமுடியும்? அங்கே அந்த மாதிரி பேச முடியுமா? பெரிய வீட்டில் விரோதம் செய்து கொள்ளலாமா?"

"என்னடா அது. எங்கள் கதி?"

"அதுக்குத்தான் எதுவும் சொல்லாமல் வந்து விட்டேன். அதுக்கென்ன மெல்ல பார்த்துக் கொள்ளலாம் என்று வந்து விட்டேன்." அவர்கள் பேசும் பேச்சுக் கூடத்தில் உட்கார்ந்த பிறகும் தொடர்ந்து கொண்டிருந்தது.

"ஆமாம். எல்லாம் பேசிக்கொண்டுதான் வந்திருக் கிறார்கள்" என்று குறுக்கிட்டாள் பார்வதியின் தாயார்.

"ஆமாம். பேசாமல் வருவார்களா? அவர்கள் எப்படி யாவது வருகிறார்கள். உனக்கு என்ன?"

"ஆமாம். எனக்கென்ன! அதோ உங்கள் மருமகள் மூட்டை கட்டி வைத்துக்கொண்டாள். இவனும் அவள் பின்னாலேயே போகப்போகிறான். அப்புறம் எனக்கு என்ன என்று கேட்பீர்கள்."

மாணிக்கத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. நேரே மீனாட்சி இருந்த அறைக்குப் போனான். அவள் கொண்டு வந்த பலகாரங்கள் எல்லாம் சிதறிக்கிடந்தன. பெட்டியும் மூட்டையும் மீண்டும் கட்டிவைக்கப் பெற்றிருந்தன.

"என்ன மீனா!"

"இந்தவீட்டில் அரைக்ஷணம் கூட இருக்கமுடியாது. என்னை உயிரோடு பார்க்கவேண்டுமானால் முதலில் என்னை என் அப்பா வீட்டிற்கு அழைத்துப் போகவேண்டும். இல்லா விட்டால், அவரை வந்து அழைத்துப் போகும்படி தந்தி கொடுக்கவேண்டும்."

"என்ன நடந்தது மீனா?"

"நடந்தது நடக்கவேண்டியது. இந்த வீட்டில், மருமகளை வைத்து வாழ மனமில்லாதவர்கள் வீட்டில் நான் இருக்க முடியாது. வேலைக்காரி முன்னால் அவமானமாகப் பேசிய பிறகு ஒரு நிமிடம் இந்த வீட்டில் எப்படி இருக்க முடியும்? நாளைக்கு அந்த வேலைக்காரி என்ன மதிப்பாள்? நாலுபேர் கிட்டே அவள் என்னைப்பற்றிப் பேசினால் யாருக்கு அவமானம்? நான் சொல்லிக்கொடுத்து நீங்கள் மாறி விட்டீர்களாம். நான் ஆட்டிவைக்கிறேனாம். நீங்கள் ஆடுகிறீர்களாம் நான் இந்த வீட்டைவிட்டுப் போக வேண்டுமாம். உங்களை அழைத்துக்கொண்டு தனிக் குடித்தனம் நடத்த வேண்டுமாம். உங்களைச்சொல்லி என்ன பலன். எல்லாம் என் தலைவிதி. எங்கள் அப்பாவிடம் அப்போதே கலியாணமே..."

"ஆமாம், நீ வேண்டாம் என்றாய். அவர் வேண்டும் என்றார். எல்லாரும் வேண்டாம் என்று சொல்லித்தான் பிறகு வேண்டும் என்று கலியாணம் செய்துகொள்வது. அதைப்பற்றி என்ன ஆராய்ச்சி இப்பொழுது?"

"முதலிலே வண்டியைக் கூப்பிடுங்கள். நான் இங்கே இருக்கவே முடியாது."

"மீனா! அவசரப்படாதே. கொஞ்சம் பொறுத்துக் கொள். என் பேச்சைக்கேள். இந்தத் தடவைமட்டும் பொறுத்துக்கொள்.

பிறகு உனக்கு விரோதமாக இந்த வீட்டில் எதுவும் நடக்காதபடி நான் பார்த்துக்கொள்கிறேன்."

"ஆமாம். உங்களுக்காகத்தான் நான் இதுவரை அடங்கி இருந்தது. இல்லாவிட்டால் இந்தத் தெரு சந்தி சிரித்து இருக்கும். நான் கொண்டுவந்த பலகாரங்களைத் தெருவில் கொண்டுபோடு, இங்கே ஒன்றுகூட வைக்காதே என்று சொன்னால் எனக்கு எப்படி இருக்கும். என்னைச் சொல்லட்டும். நான்பொறுத்துக் கொள்கிறேன். நான் கொண்டு வந்த பலகாரத்தின்மீது ஏன் கடிந்து கொள்ள வேண்டும்? அப்போது எங்கள் அப்பா அம்மாவை அவமதித்தது போலத்தானே ஆகிறது."

"மீனா! அப்படியெல்லாம் ஒன்றும் சொல்லியிருக்க மாட்டார்கள். நீ தப்பாக அர்த்தம் செய்து கொண்டாய்."

"ஆமாம். அவர்கள் பேசுவது ஆங்கிலம். அதற்கு அர்த்தம் தெரியாமல் தப்பாக அர்த்தம் செய்து கொண்டேன்." மாணிக்கம் அந்தப் பெட்டியையும் மூட்டையையும் எடுத்து வைத்தான். அவள் சமாதானம் அடைந்தாளா இல்லையா என்று சொல்ல முடியாத நிலையில் அந்த இடத்தைவிட்டு எழவில்லை. அங்கேயிருந்த பலகாரங்கள் மீது அவள் கோபத்தைக் காட்டினாள். அவை இருந்த தட்டுகள் குப்புறக் கவிழ்ந்து லட்டுகள் பந்துபோல் உருண்டு பெரிய பெட்டிகளின் அடியில் அடைக்கலம் புகுந்தன. அவற்றையெல்லாம் தேடிப் பிடித்துத் தட்டில் வைக்கத் தொடங்கினான். அவற்றைச் சமாதானப்படுத்தி உருண்டு போகாமல் ஒரு நிலையில் வைத்து வெளியே வந்தான்.

"என்ன இருந்தாலும் அவள் நம்ம மருமகள். அவள் கூட சண்டைபோட்டால் நமக்குத்தானே அவமானம். தெரியாத் தனமாகப் பேசிவிட்டால் நாம்தான் சரிப்படுத்திக் கொண்டு போகணும். நம் கண்ணை நாமே குத்திக் கொண்டால் நமக்குத் தானே கஷ்டம்."

"ஆமாம், கஷ்டம். பார்வதி வாழ்ந்தால் இவளுக்கென்ன, வாழா வெட்டியாக இருந்தால் இவளுக்கு என்ன இவளா அவள் தாயார் வீட்டிலிருந்து கொண்டு வந்து போடுகிறாள். அதுதான் எனக்குப் பொறுக்கவில்லை. அவள் அதை அடிக்கடி சுட்டிக் காட்டிப் பேசுவதை நான் பொறுக்க முடியாது."

"அவன்வேறே போகிறேன் என்கிறான். மாமனார் வீட்டிலே சேர்ந்து விடுகிறேன் என்று சொல்லுகிறான். நீ வேறு

மருமகளிடம் சண்டை போடுகிறாய். நல்லா இருக்குது. இந்தக் குடும்பம் சீர்பட்டால் போலத்தான்."

"பிறந்த வீட்டில் பெற்ற மகள் கண்ணீர் சிந்தினால் இந்த வீடு சீர் பெற்ற மாதிரிதான்."

"அம்மா! நீங்கள் எனக்காகப் பேசவும் வேண்டாம். வீட்டில் சமாதானம் கெடவும் வேண்டாம்" என்று இடை மறித்தாள் பார்வதி.

"அம்மா! 'அவள்' தான் புத்தியில்லாமல் பேசினால் நீயாவது அடங்கி இருக்கக் கூடாதா?" என்று தாழ்ந்த குரலில் பேசத் தொடங்கினான்.

"ஆமாம். அடங்கியிருக்க வேண்டியதுதான். அல்லி அரசாட்சியிலே எல்லோரும் அடங்கியிருக்க வேண்டியதுதான். அவள் கொண்டுவந்த பலகாரத்தை நாங்கள் எல்லோரும் சாப்பிட்டு விடுகிறோமாம். அப்படியானால் ஏன் அவள் கொண்டுவர வேண்டும்? எங்களை இப்படிக் குறைவுபடப் பேசவேண்டும்."

"என்னமோ, ஆனது ஆகி விட்டது. இனிமேல் அதெல்லாம் மறந்து விடுங்கள்" என்று மீணடும் அமைதியை நிலைநாட்ட முயற்சித்தான்.

"ஆமாம், மறப்போம். இந்த உயிர் இந்த உடலைவிட்டு மறைகிற வரையும் மறக்க முடியாது. நீ அவள் பக்கம் பேசாமல் எங்கள் பக்கமா பேசுவாய்? அவள் பேச்சைக்கேட்டு நீ ஆடாமல் வேறு என்ன செய்ய முடியும்? பெரிய வீட்டுப்பெண். அவளுக்கு அடங்கி வாழாமல் வேறு எப்படி நீ வாழ முடியும்? நான் அப்பவே சொன்னேன். அடக்கமா நம்ம நிலைக்கு ஏற்றபடி நமக்குக் கீழான இடத்திலே சம்பந்தம் செய்து கொண்டால்தான் அவள் அடக்கமா ஒடுக்கமா இருப்பாள்; மாமியார் ஆச்சே, நாத்தனார் ஆச்சே என்ற மரியாதை கொடுப்பாள். கேட்டால் தானே, இந்த மனுஷன். இப்பொழுது படுவது யார்? அவரா? நாங்களா?

"ஆமாம். உனக்கு அடக்கமா, ஏழையா, நாட்டுப் புறமா பார்த்து ஒன்று கட்டிக் கொண்டால் நீ அவளை ஆட்டிப் படைக்கலாம். வீண் கதை எதுக்கு? வந்த மருமகளைச் சீராக வைத்து வாழக் கற்றுக்கொள். அது போதும்."

"ஆமாம். பெற்ற மகளைக் கணவன் வீட்டுக்குச் சீராக அனுப்பக் கற்றுக் கொள்ளுங்கள். அது போதும்."

"இதோ பாரு ஏன் இப்படிப் பேசுகிறாய். எல்லாம் அவரவர் தலைவிதி. அன்றைக்கு எழுதி வைத்தவன் மாற்றவா போகிறான்? பேசாமல் ஒரு மூலையில் கிட. வீண் விவகாரம் எல்லாம் உனக்கு எதற்கு."

"அதெல்லாம் முடியாது. பார்வதியை முதலிலே அவள் வீட்டுக்கு அனுப்பி வையுங்கள். அதற்கப்புறம் மருமகள் எவ்வளவு பேசினாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அடங்கிக் கிடக்கிறேன்."

"ஆமாம் என்றைக் கிருந்தாலும் பார்வதி அங்கேதான் போக வேண்டும். ஆனால் பார்வதிதானே அந்தப் பேச்சை எடுக்க வேண்டாம் என்று பிடிவாதம் செய்கிறாள்."

"மன வருத்தத்திலே ஆயிரம் சொல்லுகிறாள். என்னை அங்கே அனுப்பு என்று அவள் வேண்டுவாளா? பெற்றவர் களுக்கு அல்லவா அந்தக் கடமை உணர்வு வேண்டும்?"

"என்ன கடமையோ, கத்தரிக்காயோ! அவன் ஒன்றும் நிம்மதியாக வைத்து வாழ்வான் என்று எனக்குத் தெரியவில்லை. சுற்றிலும் ஏகப்பட்ட கடன். போதாக் குறைக்குக் கெட்ட பழக்கங்கள். இவள் போய் அங்கே என்ன செய்கிறது?"

"என்ன செய்கிறது...? அவனோடு சேர்ந்து கஷ்டப்படு கிறது. இங்கேதான் இவள் இருக்க நிழல் இல்லையே!"

"அங்கேமட்டும் என்னவாம்! இருந்த வீட்டைக்கூடக் கடன்காரன்கள் கைப்பற்றிவிட்டார்களாம். பெட்டி படுக்கை எல்லாம் சுற்றிக்கொண்டு வேறு எங்கேயோ இருக்கிறானாம். அவன் அக்காவைப் பம்பாய்க்கு அனுப்பி விட்டானாம். தனியாக அவன் விருப்பப்படி சுற்றிக் கெட்டுப்போகிறானாம். பட்டணத்திலேயிருந்து வந்த என் நண்பர் இதை ஒரு கதையாகச் சொன்னார்."

கதையைக் கேட்பது போல் அந்த நிகழ்ச்சிகளைப் பார்வதி கேட்கவில்லை. துன்பமான உண்மை நிகழ்ச்சியைக் கேட்பது போலத்தான் அவளுக்கு இருந்தது.

தான் இருந்துவந்த அந்த வீட்டைக் கடன்காரன் கைப்பற்றினான் என்ற செய்தி அவளுக்கு எல்லையற்ற துன்பம் தந்தது. தான் கொண்டு சென்ற வெள்ளித் தட்டுகள், குவளைகள், பித்தளைச் சாமான்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், கட்டில், பீரோ, இன்னும் அங்குச் சீர் என்னும் பெயரால் சீர்பெறாமல் ஒழிந்து போன சாமான்கள் இவை

எல்லாம் கவனத்திற்கு வந்தன. தான் அங்குக் குடித்தனம் செய்து வந்த சமையல் அறை, தோட்டம், அதிலிருந்த வாழைக் கன்றுகள், அதற்கு ஊற்றிய தண்ணீர், தான் பெருக்கிய முற்றம், கூடம், படங்கள் மாட்டியிருந்த கூடம், அவ்வப்போது சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்த இரும்புத் தூண்கள், உள்ளேயிருந்த படுக்கையறை, அவரோடு பேசி மகிழ்ந்த இடங்கள், அதற்குப் பக்கத்தில் இருந்த இரும்புக் கம்பி உடைந்த சன்னல், தெருப் பக்கச் சன்னல் இவையெல்லாம் அவள் மனத்தில் இடம் பெற்று நின்றன.

"போதாக்குறைக்கு அவன் இன்சால்வெண்ட் வேறு கொடுத்திருக்கிறானாம்" என்று எடுத்த கதைக்கு ஒரு முடிவும் கூறினார்.

"அப்படியென்றால் இனிமேல் கடன்காரர் தொல்லை இல்லாமல் அவன் வாழ முடியும்."

"ஆமாம். ஆனால் இந்த அவமானம் என்றும் மாறாது. அந்தப் பக்கம் நாம் யாரும் தலைகாட்ட முடியாது. இழந்த கவுரவத்தை மீண்டும் எந்தக் காலத்திலும் பெறமுடியாது. அவனை நாலு காசுக்கு எவனும் மதிக்க மாட்டான். அவனை நம்பிச் சல்லிக்காசு கொடுக்க மாட்டார்கள்."

"நல்லது தானே. இனிமேல் அவன் குடும்பம் சீர்படும். கடனில்லாமல் வாழ்ந்தாலும் கால் வயிறு கஞ்சியாவது நிம்மதியாகக் குடிக்கலாம்."

"இந்த அவமானம் நமக்குத்தான். நம்ம சம்பந்திகள் காதுகளுக் கெட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்."

"ஆமாம். எட்டினால் அப்படியே அள்ளிக் கொடுக்கப் போகிறார்கள்."

சிவராமனைப் பற்றிப் பேச்சு எழுந்தபோது மாணிக்கம் ஒன்றும் பேசாமல் இருந்தான். அவன் காதில் மட்டும் இந்தச் சொற்கள் விழுந்துகொண்டிருந்தன. தான் எது பேசினாலும் எதிர்ப்பு வரும் என்று அஞ்சி நாவைக் கடிந்து காத்துக் கொண்டான் என்பது அவன் சும்மா இருந்ததிலிருந்து தெரிந்தது.

பிறகு அவன் அந்த இடத்தைவிட்டு எழுந்து வெளியே போய் விட்டான். வெளியே போனலாவது அமைதி கிடைக்கும் என்ற நம்பிக்கையால் தான் அந்த இடத்தை விட்டுச் சென்றிருக்க வேண்டும். பிறகு அவர்கள் விடாமல் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்ததில் அவன் அக்கறை

காட்டாதது போலவே பார்வதியும் அக்கரை காட்டவில்லை. பார்வதி தெரு கடையில் வந்து உட்கார்ந்தாள். வீட்டில் நடந்த சண்டையைப் பற்றியே அவள்மனம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவள் பார்வை மட்டும் தெருவை நோக்கியே வண்ணம் இருந்தது. அவள் உள்ளம் சண்டையின் நிகழ்ச்சிகளிலும், அதை ஒட்டி அமையும் வாழ்விலும் அலைந்துகொண்டிருந்தது. தான் அங்கே இருப்பதால் தானே சண்டை உண்டாயிற்று என எண்ணினாள். அதே சமயம் தான் அங்கே போவதற்கில்லையே என்ற வருத்தம் அவளை வாட்டிற்று.

## 19

சிவராமன் தங்கியிருந்த அறை மாடியில் இருந்தது. சிறு அறையாக இருந்தாலும் நல்ல காற்று வசதி இருந்தது. அந்த அறையோடு சேர்ந்த சமையல் அறையும் இவனுக்கே விடப் பெற்றிருக்கிறது. ஆனால் அது இவனுக்கு உபயோகம் இல்லாமல்தான் இருந்தது. தான் இன்னான் என்று மற்றவர் களுக்கு அறிமுகமாகாமல் ஒதுங்கி வாழ்வதற்கு அத்தியாகராய நகர் பகுதியே பிடித்திருந்தது. கோடம்பாக்கம் நெடுஞ் சாலையும், தியாகராய நகர்ப் பகுதியும் சந்திக்கும் இடத்திலே தான் இவன் வீடு இருந்தது. அந்த வீடு இன்னும் சரியாகக் கட்டி முடியாமல் வெளிப்பக்கம் வெள்ளை பூசாமல் இருந்தது. கீழே அந்த வீட்டுக்குரியவர்கள் வசித்து வந்தார்கள் என்பது அந்த வீட்டில் இருந்த மாடும் கொட்டகையும் எடுத்துக் காட்டின.

அமைந்தகரையில் தான் வாழ்ந்த பகுதியில் தனக்கு அறிமுகமானவர்கள் யாரையும் சந்திக்க நேராது என்ற காரணத்தால்தான் அந்த இடத்தைத் தேடிப் பிடித்திருக்க வேண்டும். அந்தப் பகுதியில் வாழ்பவர்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் கவலை கொள்ளாமல் பற்றற்றவர்கள் போல் வாழ்ந்து வந்தமையும் அவனுக்கு அந்த இடத்தைத் தேடிப்பிடிக்க ஒரு காரணமாக இருக்கவேண்டும். அங்கே தங்கிய இரண்டொரு நாட்கள் அவனுக்கு மனம் நிம்மதியாக இருந்தது. அவன் இருந்த அறையைத் தன் பழைய போட்டோக்களைக் கொண்டு அலங்கரித்தான். பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவின்போது எடுத்த படம் மேஜைமேல் இருந்தது. கையில் அந்தச் சுருண்ட கடிதம் பளிச்சென்று காட்சியளித்துக்

கொண்டிருந்தது. அந்தச் சதுரமான தொப்பியும் கருப்புக் கோட்டும் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் செய்து விட்டது.

அவன் உட்கார்ந்திருந்த இடத்திற்கு நேர் பின்புறம் அவன் திருமணத்தின் போது பார்வதியோடு சேர்ந்து எடுத்துக் கொண்ட படம் மாட்டப் பெற்றிருந்தது. அது கொஞ்சம் உயரத்தில் சாய்ந்து கிடந்தது. அன்றாடம் கிழிக்கும் காலண்டர் ஒன்று புதிதாக மாட்டியிருந்தான். அந்த வீட்டுக்காரர் கொடுத்துதவிய மேசையும் நாற்காலியும் அந்த அறையை அலங்கரிப்பதற்குப் பதிலாக அந்த அறையை அடைத்துக் கொண்டிருந்தன. அது பல தலைமுறைகளைக் கண்டு அனுபவம் பெற்று ஆட்டம் கொடுத்துக் கொண்டிருந்தது.

அறையில் உட்கார்ந்திருந்த வண்ணம் தனக்குப் பழக்கமான பொழுது போக்காகிய சிகரெட்டைப் பிடித்துக் கொண்டிருந்தான். யாரோ கீழே கதவு தட்டும் சப்தம் கேட்டது. அந்த வீட்டுக்குரியவரைத் தவிர அவனுக்கு யாரும் அறிமுகமானவர்கள் இல்லாததால் அவராகத்தான் இருக்க வேண்டும் என்று உணர்ந்து கொண்டான்; கையிலிருந்த சிகரெட் துண்டைக் கீழே போட்டான். அப்போதும் அது அணையாமல் இருந்தது. தன் காலால் அதை நசுக்கி அணைத்து ஒருபுறம் தள்ளிவிட்டுக் கதவைத் திறக்கச் சென்றான்.

கதவு திறந்ததும் வீட்டுக்குரியவர் மாடியில் இருந்த இவன் அறைக்கு வந்தார். "மூன்று காலே போதும்" என்று நின்று கொண்டிருந்த உடைந்த அவருக்குப் பழக்கமான நாற் காலியில் வந்து உட்கார்ந்தார்.

"சார்! எப்போது உங்கள் குடும்பத்தை அழைத்துக் கொண்டு வரப் போகிறீர்கள்?"

"எழுதியிருக்கிறேன். இன்னும் சில நாட்களில் அனுப்பி விடுவார்கள். அவளுக்கு உடம்பு சரியாக இல்லை. நாட்டு வைத்தியம் நல்லது என்று சொன்னார்கள். அதற்குத்தான் அனுப்பியிருக்கிறேன்."

"சீக்கிரம் அழைத்து வந்து விடுங்கள். தனியாக இருந்தால் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. இந்த ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு ஆயுளை 'இன்ஷ்யூரன்ஸ்' செய்து கொண்டால் சீக்கிரத்தில் பலன் கிடைக்கும்."

சிவராமன் சிரிக்கத் தொடங்கினான்.

"அதுவும் நல்லதுதான். அவர்கள் சாப்பாடு மோசமாக இருப்பதால்தான் இந்தக் காலத்திலே பலபேர் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். ஹோட்டல் சாப்பாடு நன்றாக இருந்து விட்டால் எவன் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படப் போகிறான்."

அவரும் அதை ஒப்புக் கொள்வதைப் போல் ஒரு சிரிப்புச் சிரித்தார்.

"இதுதான் உங்கள் கலியாணத்திலே எடுத்த படமா?"

"ஆமாம் சார்...? ஏன்...? நல்லா இல்லைங்களா?"

"என்ன சார்...? நிரம்ப நாள் கூட ஆகவில்லை போல் இருக்கிறது. நீங்கள் அப்படியே மாறாமல் இருக்கிறீர்கள். கொஞ்சம் இளைத்திருக்கிறீர்கள். அவ்வளவுதான். அந்த அம்மா, மூக்கும் முழியும் அழகாகத்தான் இருக்கிறார்கள். முகத்தில் லக்ஷிமி தாண்டவமாடுகிறது."

"ஆனால் கையிலேதான் லக்ஷிமி தாண்டவமாட வில்லை... படத்திலே இருக்கிறாப் போல அவ்வளவு அழகாக இருக்கமாட்டாள். கொஞ்சம் மாநிறமாக இருப்பாள்."

"சரிதான். சாக்ஷாத் சிவபெருமான் மனைவி பார்வதி கூட மாநிறந்தான் சார்."

"என் மனைவி பெயர்கூட பார்வதிதான். அதனால் தான் அவளும் மாநிறமாக இருக்கிறாள் போல இருக்கிறது" என்று வேடிக்கையாகச் சொல்ல ஆரம்பித்தான்.

"நிறம் மாநிறமா இருந்தால் என்ன சார்? குணம்தான் தங்கமாக இருக்க வேண்டும். நிறம் தங்கமாக இருந்து குணம் கறுத்து விட்டால்..."

"அவன் பரோபகாரி ஆகிறான்" என்று சொல்ல வாயெடுத்தவன், முன்பின் பழகாதவர்களிடம் நகைச்சுவை சில சமயங்களில் பகைமையை உண்டாக்கிவிடும் என்று நாவை அடக்கிக்கொண்டான்.

"வீடு எல்லாம் சௌகரியமாயிருக்கிறதா?" -எந்தக் குறை சொல்லலாம் என்று யோசித்தான்.

வீட்டைப்பற்றி அடிக்கடிக் குறைகள் சொன்னால் அவர் அடிக்கடித் தொந்தரவு செய்யமாட்டார். இதைச் செய்து கொடு, அதைச் செய்து கொடு, வீட்டு ஜன்னலுக்கு கொக்கி இல்லை, மேலே ஒரு பக்கம் ஒழுகுகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தால்தான் அவர் அடிக்கடி வந்து பேசுவதை

நிறுத்துவார் என்று எண்ணினான். ஆனால் அதே சமயத்தில் அதே காரணமாகக் காலி செய்யச் சொன்னால் என்ன செய்வது என்று தயங்கினான். அதனால் வீட்டைப்பற்றி ஒரு குறையும் சொல்ல முன்வரவில்லை.

"பாவா இல்லை சார்! எப்படியிருந்தால் என்ன? நேர்ந்து கொண்டுதான் போக வேண்டும்."

"ஆபீசுக்குப் போகவில்லைங்களா?"

"ஒரு வாரம் லீவு எடுத்திருக்கிறேன். இன்னும் இரண்டொரு நாட்களில் அந்த லீவும் முடிந்துவிடும்."

"சார்! இப்படியெல்லாம் கேட்கிறேன் என்று வருத்தப் படாதீர்கள். கொஞ்சம் பழகிவிட்டால் அந்நியோந்நியமாகப் பழகுவது என் சுபாவமாகிவிட்டது."

"அதனால் என்ன! அந்த மாதிரி பழகுகிறவர்கள் வர வரக் குறைந்து விட்டார்கள். தாம் என்னமோ, வேலை என்னமோ, வீடு என்னமோ என்று இருக்கிறவர்கள்தாம் இந்தக் காலத்திலே அதிகம் இருக்கிறார்கள். பக்கத்திலே யார் குடித்தனம் நடத்துகிறார்கள் என்று கேட்டால் தெரியாத 'துறவிகள்' தாம் இந்தப் பட்டணத்தில் இருக்கிறார்கள். நாகரிகம் வளர வளர மனிதன் ஒதுங்கி வாழக் கற்றுக் கொள்கிறான். திண்ணை போட்ட வீடுகளை எல்லாம் சிறைக் கம்பிகள் போல் அடைக்கக் கற்றுக் கொண்டார்கள். நீங்கள் அதற்கு விதி விலக்காக இருக்கிறீர்கள்" என்று சொல்லிய வண்ணம் ஜேபியில் இருந்த சிகரெட் பெட்டியை எடுக்க அவன் கைகள் விழைந்தன. சட்டென்று அவர் முன்னிருக்கும் நினைவு வரவே சிகரெட் எடுக்காமல் சாவியை எடுத்து மேஜைமேல் வைத்தான்.

"எங்கேயாகிலும் வெளியே போகிறீர்களா?"

"இல்லை சார். கொஞ்ச நேரத்திலே போகலாம் என்று இருக்கிறேன். 'பாண்டிபஜார்' வரையிலும் போய்க் காப்பி சாப்பிட்டு வரலாம் என்றிருக்கிறேன்."

"அதற்குத்தான் குடும்பம் வேண்டும் என்பது. இந்த மாதிரி ஹோட்டலுக்குப் போனால் சம்பாதிக்கிற காசு நாலு மிச்சப்படுத்த முடியுமா! என்ன இருந்தாலும் வீட்டிலே இருந்து சாப்பிடுகிற வழி வராது சார்."

"அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. சுற்றிச் சுற்றிக் குடும்பத்தோடுதான் அங்கே இருக்க முடியும் என்ற கருத்தை வற்புறுத்துவதை உணர்ந்து கொண்டான்.

சிவராமனுக்கு அந்த ஆள் வெளியே போனால் போதும் என்றாகிவிட்டது. அந்த ஆளை வெளியே அனுப்புவதற்காவது காப்பி குடிக்கச் செல்லலாமா என்று கூட யோசிக்க ஆரம்பித்தான்.

"சரி! நான் வருகிறேன். ஏதாவது குறை இருந்தால் சொல்லுங்கள்" என்று சொல்லிய வண்ணம் வெளியே புறப்பட்டார்.

"அப்பாடா! சரியான மனுஷன்! என்று சொல்லிக் கொண்டு ஜேபியில் இருந்த சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான்.

"ஒரு வேளை நம்மைப் போல ஆசாமியாக இருப்பானோ...! கடன் கேட்டுப் பழக்கம் இருக்குமோ? அதற்காகவாவது இந்தப் பீடிகையும் விசாரிப்பும் அவ்வப் போது நடை பெறுகிறதா...?" என்று சிந்திக்க ஆரம்பித்தான்.

"சே! இருக்காது. அவருடைய எண்ணம் எல்லாம் நான் குடும்பத்தோடுதான் இருக்க வேண்டும் என்பது தான்" என்று முடிவுக்கு வந்தான்.

"சார்! தனி ஆளாக இருந்தால் இங்கே வீடு கொடுக்க முடியாது."

"இல்லை சார். நான் திருமணமானவன். மனைவிக்கு உடம்பு சுகமில்லை. இன்னும் கொஞ்ச நாளில் வந்து விடுவாள்."

"அப்படியானால் பரவாயில்லை சார்! நீங்கள் வந்து குடியேறலாம்." இந்தப் பேச்சு வார்த்தைகள் அவன் நினைவில் எழுந்தன. அதே சமயம் அதற்கு முன்னால் தான் வீடு தேடும் படலத்தில் அவதிப்பட்ட நாட்கள் கவனத்திற்கு வந்தன.

"நீங்கள் என்ன சாதி?"

"நான் மனித சாதி."

"உங்களுக்குத் திருமணமாகி இருக்கிறதா?"

"ஆகவில்லை."

"அப்படியானால் தனியாகத்தான் இருக்கிறீர்களா?"

"ஆமாம்."

"அப்படியானால் உங்களுக்கு வீடு கிடையாது."

இந்த வாசகங்களைக் கேட்டுப் பழகிப் போன காரணத்தால்தான் இவரிடம் வரும்போது மணமான

செய்தியைத் தெரிவிக்க வேண்டியதாயிற்று. அதை அடுத்து அவரைத் திருப்பிபடுத்துவதற்காகவே திருமணப் போட்டோவையும் அங்கே மாட்டி வைக்க வேண்டியதாயிற்று.

சரியான மனிதர்தான்! இவருக்காகவாவது குடும்பம் நடத்த வேண்டியிருக்கிறது. எப்படியும் வேறு வீடு பார்த்துத்தான் தீரவேண்டும். இங்கே இருந்து காலம் தள்ள முடியாது. அதுவரையும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிக் காலம் தள்ள வேண்டியதுதான். பார்வதியிடமிருந்து வந்தது போல ஏதாவது கடிதம் நானாவது எழுதி அவர் கேட்கும் போது, "இதோ, அவள் எழுதியது" என்று ஏதாவது சொல்லிக் காலத்தைத் தள்ளலாம்" என்று சிந்திக்க ஆரம்பித்தான்.

முடிந்த சிகரெட்டுத் துண்டை அணைத்துப் போட்டு விட்டு வெளியே வந்தான். அது அவர் கண்ணில் படக் கூடாது என்பதற்காகக் கொஞ்சம் அக்கரை காட்டி அதை ஒரு புறமாக எடுத்துப் போட்டான். சின்ன இடமாக இருந்தாலும் அந்த மாடியறைகள் அவனுக்கு ஓர் நிம்மதி தந்தன. அதனால் அந்த வீட்டை விட மனமில்லாத காரணத்தால் இந்த மாதிரி எல்லாம் எண்ண வேண்டி இருந்தது. பரந்த வானமும் திறந்த வெளியும் அந்த அறையிலிருந்து காட்சி தந்து அவனுக்கு அமைதியைத் தந்தது. அவனுக்கு முன் இருந்த காலண்டர் காலத்தின் அளவை அறிவித்துக்கொண்டிருந்தது. இன்னும் இரண்டொரு நாளில் அவன் போக வேண்டிய அலுவலகம் அவன் கண்முன் வந்து நின்றது. அடுக்கடுக்காகச் சேர்ந்திருக்கும் குறிப்பேடுகள் அவன் மனக்கண் முன் வந்து நின்றன. ஆனால், கவலையில்லா மனத்தோடு எதையும் சீக்கிரம் செய்ய முடியும் என்ற எண்ணம் அவனுக்கு ஆறுதலைத் தந்தது.

பழைய நினைவுகளும் அவன் மனத்திரையில் ஓடின. வெளியே சில சமயங்களில் வந்து நிற்கும் ஈட்டிக்காரனின் இரக்கமற்ற பார்வையும், அந்தப் பார்வையைக்கண்டு அவன் நடுங்கிய நடுக்கமும், அந்த நடுக்கத்தைப் போக்கிய சாரதாவின் இரக்கமும், அவள் செய்த உதவியும், அவளோடு தொடர்ந்து சென்ற அந்த ஓரிரு நாட்களும், அவளுடைய உதவி செய்யும் தூய உள்ளமும் அவன் நினைவுக்கு வந்தன. அதே சமயம் சாரதாவைப் பார்க்கவேண்டும், அவளுக்கு நன்றி கூறவேண்டும் என்ற உணர்வும் அவ்வப்போது அவன் மனதில் தோன்றியது. காலியாக இருந்த அவன் உள்ளத்தில் எப்படியோ

அவள் அழகிய வடிவம் மெல்லக் குடிகொள்ளவும் ஆரம்பித்தது. அந்த ஒரு நாள் கழிந்தால் மறுநாள் அலுவலகத்திற்குப் போகலாமே என்ற ஆர்வம் அவனை உந்திக்கொண்டிருந்தது.

மேஜையின்மேல் இருந்த கோழி முட்டை வடிவமான கண்ணாடியின்முன் நின்று தலை வாரிக் கொண்டான். பெட்டியில் இருந்து வெள்ளை ஜுப்பாவை அணிந்து கொண்டான். அவன் உடுத்தியிருந்த வேஷ்டியும் அழுக்கில் லாமல் சுத்தமாக இருந்தது. மறுபடியும் கலைந்த தலைமயிரை வாரிக் கொண்டான்.

கவனமாக மணி பர்சையும், சிகரெட் டப்பியையும் எடுத்து ஜேபியில் போட்டுக் கொண்டான். கைக் குட்டையை எடுத்துக் கொண்டு அறையின் வெளிப்பக்கத்தைப் பூட்டிக் கொண்டு வீட்டை விட்டு வெளியே நடந்தான்.

## 20

மூன்று பெண்களும் ஒன்றாக உட்கார்ந்து பேசும் காட்சியை அந்த வீடு இழந்து விட்டது. தாயும் மகளும் ஒரு கட்சி; மருமகள் மற்றொரு கட்சி என்பது போலத் தனித் தனியே கட்சிகள் உண்டாகியது என்பதை அவர்கள் பழகிய விரதம் காட்டியது.

"நாவினால் சுட்ட வடு ஆறாது" என்ற நிலையில் அவர்கள் பழகி வந்தார்கள் என்பது அவர்கள் கலந்து பேசாத நிலைமையே காட்டியது.

வெளியே மாணிக்கத்தின் தந்தை உட்கார்ந்திருந்தார். அவர் நெற்றியின் சுருக்கங்கள் இரண்டு மூன்று 'விபூதி' பட்டை போட்டது போல் அமைந்திருந்தன. பற்கள் சில விழுந்து விட்ட காரணத்தால் கன்னத்தில் இருபுறமும் குழிகள் விழுந்து இருந்தன. முகக்ஷவரம் செய்யாத காரணத்தால் முட்கள் போல வெள்ளைமயிர்கள் நீண்டு வளர்ந்திருந்தன. அவற்றைத் தடவிக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையில், சாய்ந்த திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தார். தலையில் ஒரு தலையணை அவர் நரைத்த தலைக்குப் பாதுகாப்பு அளித்தது.

மகன், மாமனார் வீட்டைச் சார்ந்து விட்டால் தன் நிலைமை என்ன ஆவது என்ற கவலை அவர் நெஞ்சில் வேர்கொள்ள ஆரம்பித்தது. அந்தக் கவலையின் காரணமாக

அவர் மனத்தில் பல எண்ணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

“ஏழை, பணக்காரன் வீட்டில் சம்பந்தம் செய்து கொண்டால் ஏழை அதிகாரம் பெற முடியாது. அந்தக் குடும்பத்தின் ஒரு கருவியாகத்தான் இருந்து வாழலாமேயன்றி முழு உரிமையும் பெறமுடியாது. அவன் மாமனார் வீட்டுக்குப் போய் விட்டால் தன்னிந்தனியனாக என் இறுதி நாட்களைக் கழிப்பது எவ்வாறு? எஞ்சியுள்ள நிலங்களைக் கொண்டு கஞ்சியாவது குடிப்பது எப்படி? அந்திய காலத்தில் கூப்பிட்ட குரலுக்கு எடுக்கப் பிடிக்க யார் வருவார்கள்” என்ற இத்தகைய சிந்தனைகள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

“அப்பா! அப்பா!” என்று கூப்பிட்ட குரலுடன் பார்வதி வெளியே வந்தாள்.

“அம்மாவுக்கு மார்புவலி ரொம்ப அதிகமாக இருக்கிறதாம்.”

“அவளுக்கு ஒன்றும் வேலை இல்லை. ஏதாவது நினைத்துக் கொண்டு வேதனை பட்டுக்கொண்டு இருப்பாள்” என்று சொல்லிய சொற்களில் மனவேதனையோடு மற்றவர் போல அந்த இடத்தைவிட்டு எழுந்து உள்ளே போனார்.

கூடத்தில் பழம்பாய் ஒன்றில் கந்தல் புடைவை ஒன்றை விரித்துப் பார்வதியின் தாய் படுத்திருந்தாள். பார்வதி கழுத்திலும் மார்பிலும் நெற்றியிலும் தேய்த்த அமிருதாஞ்சனத்தின் நெடி அடித்துக் கொண்டிருந்தது.

“என்ன உடம்பு? ஏன்? என்ன செய்கிறது.”

“உடம்புக்கு ஒன்றும் இல்லை. நெஞ்சுதான் வலிக்கிறது. பாரமாக இருக்கிறது.”

“உனக்கு ஒன்றும் வேலை இல்லை. மகளைப் பற்றி நினைத்துக் கொண்டு வேதனை படுவாய். அதனால்தான் இந்த நெஞ்சுவலி மார்புவலி தலைவலி எல்லா வலியும். செடி வைத்தவன் தண்ணீர் ஊற்றாமலா போய் விடுவான்.”

“அப்படி ஊற்றவில்லையே என்ற கவலைதான் என்னை அரிக்கிறது. பெற்ற மகளைப் பெருமையோடு வாழச் செய்ய வில்லையே என்கிற ஏக்கம்தான் என் தூக்கத்தைக் கலைக்கிறது. துக்கத்தைப் பெருக்குகிறது.”

பார்வதி அடுப்பில் வெந்நீர் வைக்கச் சென்றாள். குடிப்பதற்கு நீர் கொணர அடுப்பில் தண்ணீர் வைத்து அதை வெந்நீர் ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டாள்.

"ஏன் மனதை இப்படி அலட்டிக் கொள்கிறாய்? நடந்தது நடந்து விட்டது. நம்மால் பார்வதிக்கு அரைவயிற்றுச் சோற்றுக்கு வழி இல்லாமலா போய்விடும்?"

"நாம் எத்தனை நாளைக்குச் சதம் என்று எண்ணி இப்படிப் பேசுகிறீர்கள். நாளைக்கு மாணிக்கம் ஆதரிப்பான் என்று நம்பிகிறீர்கள்?"

"அவன் இன்றைக்கே ஆதரிக்கும் நிலையில் இல்லை என்பதை நான் எப்பொழுதோ உணர்ந்து கொண்டேன்."

"அப்படியானால் எஞ்சி இருக்கிற நிலங்களை அவள் பேரில் எழுதிவைத்து அவளை அவள் வீட்டிற்கு அனுப்பக் கூடாதா?"

"மாணிக்கம் நம்மை மட்டும் ஆதரிப்பான் என்ற உறுதி என்ன இருக்கிறது? இருப்பதை மகளுக்கு எழுதி வைத்து விட்டால் நாளைக்கு நமக்கு யார் ஆதரவு? யாரை நம்பி நாம் வாழ முடியும்?"

சிறிது நேரம் அவர் மனைவியாலும் பதில் சொல்ல முடியவில்லை.

"என்னமோ போங்கள். எப்படியாவது செய்யுங்கள்" என்று மனச் சோர்வோடு பேச ஆரம்பித்தாள். உடம்பைத் தொட்டுப் பார்த்தார். கொஞ்சம் சூடாக இருந்தது.

"ஏதாவது கஷாயம் போட்டுச் சாப்பிடு. சரியாகப் போய்விடும்.

அதற்குள் பார்வதி வெந்நீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

"ஏன்; மா உடம்பை அலட்டிக் கொள்கிறாய்?"

"என் உடம்புக்கு ஒன்றும் இல்லை."

"இதோ வெந்நீர் கொண்டு வந்திருக்கிறேன்."

"சரி! இங்கே வை."

அந்த வெந்நீர் கொஞ்ச நேரம் பொறுத்துச் சூடு ஆறிவிட்டது அங்கேயே குடிக்காமல் வைத்திருந்த காரணத்தால், கம்பளி ஒன்றை எடுத்து அம்மாவின்மீது போர்த்த ஆரம்பித்தாள்.

அதற்குள் வெளியே சுற்றிவிட்டு வீடு திரும்பிய மாணிக்கம் தன்தாய் படுத்திருப்பதைக் கண்டான்.

"அம்மாவுக்கு என்ன உடம்பு?"

"நெஞ்சுவலியாம். தலை சூடாக இருக்கிறது."

"ஏதாவது தைலம் போட்டுத் தேய். சரியாகப் போய் விடும்" என்று சொல்லிய வண்ணம் மீனாட்சி இருந்த அறையை நோக்கிச் சென்றான்.

"ஆமாம். இரவெல்லாம் என்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தால் நெஞ்சு வலி இருக்காதா?

"எல்லாம் அவரவர் வினையை அவரவரே அனுபவிப் பார்கள்" என்று எடுத்த குரலில், ஆனால் அடுத்திருந்தவர்கள் கேளாதபடி வெடுக்கென்று பேசினாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதே மீனா! வயதானவர்கள் அப்படித்தான் எதையாவது பேசிக்கொண்டிருப்பார்கள்."

"பேசட்டும். யார் வேண்டாம் என்பது? இன்று வந்த சினிமாப் படத்தைப் பற்றிப் போட்டும், என்றுமுள்ள இராமாயாண புராணக் கதைகளைப் பேசட்டும். நானா வேண்டாம் என்கிறேன்? என்னைப் பற்றி இவர்கள் ஏன் பேச வேண்டும்?"

"நீ இந்த வீட்டில் ரொம்பவும் முக்கியமானவளாக இருப்பதால் உன்னைப் பற்றிப் பேசி இருக்கலாம். அதனால் உனக்குப் பெருமைதானே."

"எனக்கு இருக்கிற பெருமை என்னிடம் இருக்கிறது. ஒருவர் பெருமை கொடுத்து நான் பெரியவள் ஆகப் போவதில்லை. ஒருவர் சின்னவள் என்று சொல்லுவதாலே நான் சின்னவள் ஆகப் போவதில்லை."

"பெருமையும் சிறுமையும் பிறர் தர வாரா—."

"இந்த மாதிரி எல்லாம் என்னைத் தூக்கி வைத்துப் பேசி இறக்கினால்..."

"ஆமாம். அப்பா வீட்டுக்குப் போய் விடுவேன் என்று சும்மா சொல்லி வை. யார் வேண்டாம் என்பது. ரஷியா அமெரிக்கா உறவிலே சமாதானம் ஏற்பட்டால்கூட மாமியார் மருமகளுக்கு எந்தக் காலத்திலும் ஒற்றுமை ஏற்படும் என்று நினைக்க முடியாது."

"ஆமாம். அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் எங்கள் வீட்டுக்குத்தானே போவேன். கடிதம் எழுதியிருக்கிறேன். நான் வேண்டுமானால், நீங்கள் அங்கே வாருங்கள்."

"அம்மா வேண்டுமானால் இங்கேயே இருந்துவிடு. அதுதானே! சொல்லாமல் சொல்லி வைக்கும் குறிப்பில், சனகாதி முனிவர்க்கு உபதேசம் செய்த அந்தக் கடவுள் உன்னிடம் தோற்றுவிட வேண்டியதுதான்."

"இருதலைக் கொள்ளி எறும்புப்போல் நான் இப்படியும் இல்லாமல் அப்படியும் இல்லாமல்..."

"அதெல்லாம் இல்லை. வேலையில்லாமல் நீங்கள் சுற்றி வருவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் உங்களைக் குறைவாகமதிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. ஏதோ மரியாதைக்காக நான் இங்கே வந்து குடித்தனம் செய்தாகி விட்டது. இந்த ஊரில் என்ன இருக்கிறது? நல்ல சினிமா என்பது இந்தப் பக்கம் வருவதே இல்லை. ஆடி ஓடித் தேய்ந்து போன படங்கள்தாம் இந்த ஊரை நாடி வருகின்றன. நினைத்தால் கார் தெருவில் வந்து நிற்கும். திருப்பினால் நேயர் விருப்பப்படி ரேடியோ பாடும். உங்களுக்கு உங்கள் அப்பா அம்மா மீது இருக்கும் பாசம் எனக்கு இருக்காதா? நான் எனக்குக் கல்யாணம் ஆகும் போதே. என் அப்பாவிடம் சொன்னேன். மாமியார் வீட்டில் சென்று குடித்தனம் நடத்த எனக்குத் தெரியாது. நாலுபேருக்கு ஆக்கிப் போட அனுபவம் கிடையாது என்று சொன்னேன். அவரும், கொஞ்ச நாளையில் நீ இங்கே வந்து விடலாம். படித்த மாப்பிள்ளை சொன்ன சொல் கேட்பார். மீறி நடக்க மாட்டார் என்று அவர் உறுதி மொழிகள் தந்த பிறகுதான் நான் சம்மதித்தேன். நான் ஒன்று கேட்கிறேன். ஏன் நான் மட்டும் உங்கள் வீட்டில் வந்து வாழ்க்கைப் பட வேண்டும். நீங்கள் மட்டும் எங்கள்..."

"ஆமாம். உங்கள் வீட்டில் வந்து ஏன் வாழ்க்கைப் படக்கூடாது என்று கேட்கிறாய். சரியான கேள்விதான் எனக்கு வேலை கிடைக்காவிட்டால் உனக்கு நான் வாழ்க்கைப்பட வேண்டியதுதான்."

"இல்லே வேடிக்கையாகச் சொன்னேன். கோபித்துக் கொள்ளாதீர்கள். எனக்கு என்னமோ இங்கு இருக்கப் பிடிக்க வில்லை. உங்கள் அம்மா என்னோடு பேசுவதில்லை. உங்கள் தங்கை என்னை மூளி அலங்காரி போல் நினைக்கிறாள். சிறு சொற்களால் பதில் சொல்லித் தன் வெறுப்பைக் காட்டுகிறாள். நான் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால்...வாழ்வு..."

"அந்தரங்கத்தில் பறக்கும் ஆகாய விமானம் போல் வட்டமிட்டுச் செல்ல வேண்டுமானால்...சொல்லு. எதை வேண்டுமானாலும் சொல்லு. நான் மறுத்தால் எந்தக் காரியம் என்னால் சாதிக்க முடியும்?"

"அடேயப்பா! உங்கள் அம்மாவிடம் ஒரு வார்த்தை யாவது அன்று எதிர்த்துப் பேசினீர்களா? நீங்கள் எல்லாம் ஒரு பக்கம். இந்த வீட்டில் நான்தான் தனி."

"நீ ஒருத்தியே போதும், கவலைப்படாதே. போகட்டும். கொஞ்சம் பொறுத்துக்கொள். அம்மாவுக்கு உடம்பு சௌகரியம் இல்லையாம். அப்படி என்று சொல்லுகிறார்கள். இந்தச் சமயத்திலே இந்த இடத்தைவிட்டுப் போனால் அவ்வளவு நன்றாக இருக்காது."

"அவர்கள் உடம்பு சரியாக ஆகாமல் இருந்தால் நான் இங்கேயே இருக்க வேண்டுமா? நான் போகிறேன். நீங்கள் நிதானமாக அவர்கள் உடம்பைப் பார்த்துக் கொண்டு வந்து சேருங்கள்."

"கொஞ்சம் கூட விட்டுக்கொடுக்க மாட்டேன் என்கிறாயே."

"விட்டுக்கொடுத்தால் ஏன் இந்தச்சண்டை வருகிறது. பேசாமல் அப்பா கடிதம் போட்டால் நீங்கள் வரவேண்டியது. அவ்வளவுதான்."

அந்த அழகிய மோகன உருவத்தினிடம் அவனுக்கு எதிர்க்கும் ஆற்றல் இல்லாமல் போய்விட்டது. அவள் கண்களில் சிறிது நீர் தாங்கினாலும் தாங்கும் இதயம் இல்லாமல் போய்விட்டது. அவள் முடிவுக்குச் செவி சாய்த்துத் தலையும் சாய்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்தத் தனியறையில் அவர்கள் பேசிய பேச்சு அவர்கள் இருவருக்குத்தான் கேட்டது. கூடத்தில் கவலையோடு இருந்த பார்வதிக்கும் தூங்கிக்கொண்டு இருந்த அவள் அன்னைக்கும் இந்தச் சொற்கள் கேட்கவில்லை. தனிமையில் பேசிய இனிய சொற்கள் அந்த அறையை விட்டு வெளியே வரவில்லை.

ஆறியிருந்த வெந்நீர் தண்ணீராக மாறியது. தொட்டுப் பார்த்தால் 'சில்' லென்று இருந்தது.

"ஏன்'மா தண்ணீர் கொண்டுவந்து வைத்தாய்?"

"வெந்நீர்தான். இப்போது குளிர்ந்து விட்டது."

"சூடாக இருந்தால் நன்றாக இருக்கும்."

மறுபடியும் அடுப்பில் இருந்த வெந்நீரைப் பெரிய ஜோடு தவலையில் கொண்டுவந்து வைத்தாள். அந்தப் பழைய வெந்நீரைக் கொட்டிவிட்டு அந்தக் குவளையில் சூடாக இதை ஊற்றினாள்.

அதைக் குடித்தபிறகு உடம்பு வியர்த்தது. பனித்துளி போன்று வியர்வைத் துளிகள் உடம்பை நனைத்தது. மறுபடியும் கம்பளி விரித்து நன்றாக மூடினாள்.

"பார்வதி, நீ போய்த் தூங்கு."

"இருக்கட்டும் அம்மா. நீ கஞ்சி குடித்த பிறகு நான் தூங்குகிறேன், அடுப்பில் 'பார்லி' அரிசி கஞ்சி போட்டிருக் கிறேன். சுரத்திற்கு நல்லது."

"எனக்குச் சுரம் ஒன்றும் இல்லைம்மா. உடம்பெல்லாம் ஒரே வலியாக இருக்கிறது. அவ்வளவுதான்."

"நீ போய்ப் படுத்துக் கொள். பசி எடுத்தால் எழுப்பு கிறேன்." மிகவும் பலஹீனமான குரலில் இப்பேச்சு வந்தது. அம்மாவைத் திருப்திபடுத்துவதற்காகப் பார்வதி சற்றுத் தொலைவில் பாயைப் போட்டுப் படுக்கத் தொடங்கினாள்.

"வழக்கமான தபால்காரன் கடிதம் ஒன்று கொண்டு வந்து கொடுத்தான். ஆவலாக அதைப் பிரித்துப் படித்தாள்:

"நீ உடனே வர வேண்டியது. என்னால் உன்னைப் பிரிந்திருக்க முடியவில்லை. உடனே அப்பாவை அழைத்துக் கொண்டு வர வேண்டியது." **உன் அன்பும் பிரியமும் உள்ள,**

**சிவராமன்.**

என்று இறுதியில் கையொப்ப மிட்டிருந்தது.

"அப்பா! அப்பா! உடனே புறப்படுங்கள்."

"நீ போம்மா. நான் வர்ரேன்."

பார்வதி மட்டும் சென்னையை அடைந்தாள்.

"பார்வதி! இப்படிக் கூடவா நீ வைராக்கியம் பிடிப்பாய்.?"

"உங்களைத்தான் மோகினித் தெய்வம் பிடித்து ஆட்டுகிறது. அதனால்தான் என்னை அடியோடு மறந்து விட்டீர்கள்."

"அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. பார்வதி! அருகில் வா ஏன். வெட்கப்படுகிறாய்? அந்தப் பழைய வெட்கம் உன்னை இன்னும் விடவில்லையே!"

நாணித் தலைகுனிந்து நின்றாள்.

"பார்வதி! இப்படி வெட்கப்படாதே." அவன் அன்புக் கரங்கள் அவளைத் தழுவ விழைந்தன. விண்ணிலே பிறைச் சந்திரன் சிறிது வெளிச்சம் தந்து கொண்டிருந்தான். மீன்கள் எல்லாம் வழக்கம் போல் மின்னிக்கொண்டிருந்தன. தென்றல் மெல்ல அவள் உடலைத் தடவிக் கொடுத்து அவளை இன்துயிலில் ஆழ்த்தியது."

"பார்வதி! பார்வதி!"

சட்டென விழித்தாள். அம்மாவின் குரல் என்பதைத் தூக்கத்திலிருந்து விழித்து உணர்ந்தாள். அவரைச் சந்தித்தது அவ்வளவும் கனவு என்று தூக்கம் கலைந்ததும் உணர ஆரம்பித்தாள். வாசலில் ஆகாயத்தைப் பார்த்தாள். விண்மீன்கள் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல இருந்தன. பிறைச் சந்திரன் புன்முறுவல் பூத்தது போல அதன் வளைவு காணப்பட்டது. தென்றல் சிரிப்பது போல இருந்தது.

"இதோ கஞ்சி கொண்டு வருகிறேன்" என்று எழுந்து அடுப்பங்கரைக்குச் சென்றாள். கனவுலகத்திலிருந்து உண்மை உலகம் வரக் கொஞ்ச நேரம் பிடித்தது.

## 21

அன்று ஆபீசில் சிவராமன் கொஞ்சம் சுறுசுறுப்பாகவே இருந்தான். மலை போல் குவிந்திருந்த குறிப்பேடுகளைக் கண்டு அவன் மலைத்ததாகத் தெரியவில்லை. அவன் மனம் மிகவும் இலேசாக இருந்தது. அவனால் அது ஆபீஸ் என்று மறக்க முடியுமானால் வாய்விட்டுப் பாடச் சொன்னாலும் பாடி இருப்பான். எந்தப் பாட்டும் தெரியாவிட்டாலும்

"வாக்குண்டாம் மாமலராள் நோக்குண்டாம்"

என்றாவது இளமையில் மனப்பாடம் செய்திருந்த பழைய பாட்டைத் தனிப்பொருள் படப் பாடியிருக்க முடியும்.

தலைமை குமஸ்தா தணிகாசலம் ஒருவாரம் சிவராமன் வராததால் விசாரிக்க ஆரம்பித்தார்.

"எப்பொழுதும் அதிகமாக லீவு போடாத ஆள் இப்பொழுது மனம் வந்து எப்படியப்பா லீவு போட்டாய்?"

"நீங்கள் மனம்வந்து கொடுத்தால் நான் மனம் உவந்து எடுக்கிறேன்."

"என்ன உடம்பு...? ஏதாவது சரியாக இல்லையா?"

"அதுதான் காரணம் என்று எழுதியிருந்தேன். இந்த உடம்பு என்ற ஒன்று. இருப்பதால்தான் லீவு கேட்பதற்கு வசதியாக இருக்கிறது. ஆபீசில் லீவு கேட்பதற்கு வேறு எந்தக் காரணத்தைச் சொல்ல முடியும்?"

"எந்தக் காரணத்தைச் சொல்லுவையோ, எப்படியும் அந்த வேலையெல்லாம் நீதான் செய்தாக வேண்டும்."

"அது தெரியும். சுமக்கிற கழுதை சுமந்துதான் தீர வேண்டும்."

புருவத்தை நெரித்துக் கொண்டு கொஞ்சம் தலையை மேலே தூக்கிப் பார்த்தார்.

"என்னப்பா! அவரவர்களுக்குப் பழக்கமான வேலையை அவரவர்கள்தானே செய்ய முடியும்? புதியதாக வேறு யாருக்காவது போட்டால் மறுபடியும் அதைத் திருத்த உனக்குத்தானே இரட்டிப்பு வேலையாகும்?"

"நான் ஒன்றும் குறை சொல்லவில்லை. உள்ளதைச் சொன்னேன். அவ்வளவுதான்."

தணிகாசலம் தன் வேலையில் ஆழ்ந்து விட்டதால் மேலும் பேச்சுத் தொடராமல் நின்று விட்டது.

சிவராமனுக்குச் சாரதாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவனையும் அறியாமல் எழுந்தது. அவனுக்கு முன்னால் ஆங்கில இந்திய மாது ஒருத்தி உட்கார்ந்து அவளை மறைத்துக்கொண்டிருந்தாள். டக், டக் என்ற அச்சு இயந்திர ஒலி இடைநேரம் விட்டு விட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

சாரதாவுக்கு முன்னால் இருந்த இயந்திரம் மட்டும் வேலை நிறுத்தம் செய்திருந்தது.

அவள் செவிகள் சிவராமன் பேச்சில் ஈடுபட்டு விட்டதால் அவள் கைகள் தம் கடமையைச் சரிவரச் செய்ய மறுத்துவிட்டன. சிவராமனுக்கு உடம்பு ஒன்றும் இல்லை என்ற செய்தியைக் கேட்ட பிறகுதான் அவள் கைவிரல்கள் அந்தக் கருவியை அசைக்கத் தொடங்கின. ஓய்வெடுத்துக் கொண்ட நாட்களில் மனம் ஓய்வில்லாமல் சுற்றி வட்ட மிட்டுக் கொண்டிருந்த உருவத்தைக் காண அவன் கண்கள் அவாவின. உள்ளத்தில் எண்ண வடிவமாக ஒளிபெற்றிருந்த

வடிவத்தை உருவடிவமாகக் காண வேண்டும் என்ற ஆவலால் அவன் கண்கள் அவளைப் பார்த்தன. அவள் விழிகளும் அவன் பார்வையைச் சந்தித்தன.

உண்மையில் தாராளமாகப் பழகிய சாரதாதானா என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றும்படி அவள் நாணத்தால் தலைகுனிந்து தன் வேலையில் ஈடுபட்டாள். அவ்வப்போது ஆபீஸ் பியூன் இவன் மேஜைமேல் இருந்த கட்டுகளை எடுத்து அவ்வப்போது மேனேஜர் அறைக்குக் கொண்டு செல்வதும் திருப்பிக் கொண்டு வருவதுமாகவும் இருந்தான். கூப்பிட்ட மணிக்கு உள்ளே போவதும் வருவதுமாக இருந்தான்.

சிவராமனைப் பார்த்த அவன் பார்வை சாராதாவையும் பார்த்து விட்டுத்தான் நீங்கியது. நாடகத்தின் இரண்டாவது மூன்றாவது தொடரும் காட்சிகளை அவன் மனம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தது. இடைவேளை விட்டது போல ஆயிற்று சிவராமன் லீவு எடுத்த 'ஏழு' நாட்களும்.

கடிகாரத்தின் முள் ஒரே தன்மையாய் இயங்கிக் கொண்டு இருந்தது. காலை பகல் ஆயிற்று. பகல் மாலை யாயிற்று. இவனுடைய கண்கள் கடிகாரத்தின் முள்ளில் சென்றது. அது ஐந்து மணி அடிக்கும் நேரத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். மறுபடியும் வெளி முற்றத்தில் வந்து நின்றான். அதற்கு முன்னால் ஈட்டிக்காரன் உட்கார்ந்திருந்த இடத்தைப் பார்த்தான். அரச மரத்தின் இலைகள் அலைந்து கொண்டிருந்தன. அதன் இலைகள் உதிராமல் இருந்தன. காற்று அரசமரத்தின் கிளைகளை அசைத்துக் கொண்டிருந்தது. அதன் இலைகள் கிலுகிலுப்பை போல ஒலி செய்தன. இலை தளிர் காலமாக இருந்ததால் இலைகள் தளிர்விட்டுக் கொண்டிருந்தன. மயிலின் தோகையில் இருக்கும் பளபளப்பு அந்த இலைகளில் காணப்பட்டது. முன்கண்ட இலைக் குப்பைக் காணப்படவில்லை. அந்த ஈட்டிக்காரன் உட்கார்ந்திருந்த இடம் காலியாக இருந்தது.

வாயில் வைத்த சிகரெட்டை அதன் நீளத்தைக் குறைத்து அதைத் துண்டு சிகரெட்டாகி அதைக் கிழே போட்டான். அதற்காகவே காத்திருந்தது போல் தெருவில் ஒரு சிறுவன் அதை அணையாமல் அதற்குப் புத்துயிர் ஊட்டி அதைப் பிடித்துக் கொண்டிருந்தான். கைக்குட்டையால் வாயைத் துடைத்துக்கொண்டு தான் உட்கார்ந்திருந்த இடத்திற்குப் போனான். அந்தக் கட்டுகளை அலமாரியில் எடுத்து வைத்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மணி ஐந்தடித்தது. எங்கே போவது, என்ன செய்வது என்று திட்டமில்லாமல் கொஞ்ச நேரம் அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

மறுபடியும் தனக்குப் பழக்கமான அந்தப் பழைய அறை; வயதும் அனுபவமும் வாய்ந்த மேசை, நாற்காலிகள், கிழிந்து கிடந்த காலண்டர், பழக்கமான தன் போட்டோக்கள், காலியான சுவர்கள், வர்ணம் பூசாத கதவுகள் இவற்றின் மத்தியில் திட்டமில்லாத தன் தனிவாழ்க்கை, அந்த வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்படும் தனிமையுணர்வு, அதனால் ஏற்படும் வெறுப்பு, இவ்வளவும் அவன் மனத்தில் ஒரு சிறு படம் போலக் காட்சி அளித்தது. அதனாலேயே சாரதாவொடு கொஞ்ச நேரம் பேசவேண்டும் என்ற ஆசை அவனிடம் குடிகொண்டது. அதைச் செயலாற்றக் காத்துக் கொண்டிருந்தவனைப் போல் மற்றவர்கள் எல்லோரும் போகும்வரை காத்துக்கொண்டு இருந்தான்.

சாராதாவும் எந்திரத்தை மூடிவிட்டுத் தன் கைப் பையைத் தோளில் மாட்டிக்கொண்டு புறப்பட எழுந்தாள். எழுந்து சிவராமனைப் பார்க்கச் சிறிது நாணங் கொண்ட வளாகக் காணப்பட்டாள். இந்தப் புதுமை சிவராமனுக்கு வியப்பாக இருந்தது. வெட்கம் கொள்ளாமல் பேசும் அவள் இயல்பு மாறக் காரணம் என்ன என்று ஆராய்ந்தான். ஆனால் அவனால் அவ்வளவு சீக்கிரத்தில் விடை காணமுடியவில்லை. இதற்கு முன்னால் தான் பார்த்த அந்தப் பார்வை பொது நோக்கமாக இருந்ததையும், இப்போது பார்க்கும் பார்வையில் ஏதோ உணர்ச்சி கலந்து இருப்பதையும் உணர முடிந்தது. அதனால்தான் அந்த நாணம் அவளை வந்தடைந்திருக்க வேண்டும் என்று ஒரு வகையாக உணர்ந்தான்.

ஆபீசை விட்டு இருவரும் வெளியே சென்றனர். இவர்கள் சென்றதைப் பார்த்த ஆபீஸ் பியூன் இனிமேல் யாரும் உள்ளே இருக்கமாட்டார்கள் என்று தெரிந்து கொண்டு கதவுகளை மூடினான். இவர்கள் இருவரும் ஆபீசை விட்டு வெளியே வந்து விட்டால் இனி யாரும் அங்கே இருக்க மாட்டார்கள் என்பதுதான் அவன் நம்பிக்கை. அவன்மனம் பெண்களே இல்லாதிருந்த அந்த ஆபீஸ் நாட்களைப் பற்றி எண்ணத் தொடங்கியது. பெண்கள் ஓரிருவர் ஆபீசில் இருந்தால்தான் ஆபீஸ் கொஞ்சம் களையாக இருக்கும்; வேலையும் கொஞ்சம் சுறுசுறுப்பாக நடக்கும் என்பது அவன் அனுபவத்தில் தெரிந்துகொண்ட உண்மையாக இருந்தது. அந்த

நாட்களில் ஆபீசுக்கு வந்தவர்கள் சரியாகத் தலைவாராமல் தலைக்கு எண்ணெய் ஸ்நானம் செய்துவிட்டுக் குடுமியை ஆறப் போட்டுக்கொண்டு பித்தான் இல்லாத சட்டை போட்டுக்கொண்டு வந்த நிலைமையும் இப்பொழுதெல்லாம் புஷ் ஷர்ட்டும் மடிப்புக் கலையாத பேண்ட்டும் ஒழுங்காக வாரிவிட்ட கிராப்பும் சுறுசுறுப்பான பார்வையும் கொண்ட நிலைமையும் இந்த மாறுதலால் ஏற்பட்டது என்று அவனுக்கு அவன் அனுபவம் உணர்த்தத் தொடங்கியது. தனக்கே இப்பொழுதுதெல்லாம் ஆபீஸ் வேலையில் கொஞ்சம் சுறுசுறுப்பு ஏற்பட்டிருப்பது கூட இந்த மாறுதலினால் தானோ என்று சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் தான் இந்த நிலையெல்லாம் கடந்து இருப்பதாகத் தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டான். அவனுக்கு இப்படி ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகுவது பிடிக்காமல் இருந்தது என்பது அவன் கொஞ்சம் வேகமாகச்சாத்திய கதவுகளின் சப்தம் எடுத்துச் சொல்வது போல் இருந்தது.

வெளியே வந்த இருவரும் கொஞ்சதூரம் பேசாமல் நடந்து சென்றனர். சிவராமனே அந்த அமைதியைக் கலைக்க முடிவு கொண்டான்.

"ஆபீசில் இந்த ஒரு வாரமாக ஏதாவது விசேஷம் உண்டா?"

"நீங்கள் வராதிருந்தது ஒரு விசேஷம்" என்று சொல்ல இருவரும் ஒரு சேரச் சிரித்தனர்.

"ஏன் உங்களுக்கு உடம்பு சரியாக இல்லையா?"

"சும்மா லீவு எடுப்போமே என்று எடுத்து வைத்தேன். வேறு ஒன்றும் இல்லை."

"ஒரு வேளை ஈட்டிக்காரன் ஏதாவது ஆபீசில் வந்து தொந்தரவு கொடுப்பான் என்று..."

"அதற்குத்தான் நீ இருக்கிறாயே" என்று சொல்லிச் சிரித்தான்.

"ஏதாவது கஷ்டம் இருந்தால் சொல்லுங்கள். நான் வேண்டுமானால் அவன் மொத்த பாக்கியையும் கொடுத்து விடுகிறேன்."

"நிரம்ப நன்றி. எனக்குத் தேவையில்லை. நீ செய்த உதவியே போதும். அவனுக்கு இனி நான் ஒன்றும் கொடுக்கத் தேவையில்லை."

"அப்பொழுது இனிமேல் என்னைப் பற்றி..."

"நினைக்காமல் எப்படியிருக்க முடியும். நீயும் நானும் ஒரே ஆபீசில் வேலை செய்கிறோம். நான் எழுதுகிற குறிப்பை நீ 'டைப்' அடிக்க வேண்டும். நீ 'டைப்' பண்ணியதை நான் பார்த்துக் கையெழுத்திட வேண்டும். நம் உறவு எப்பொழுதும் நீடித்து இருக்கும்."

"நீடித்து இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை."

"ஏன்? ஆபீஸ் வேலையை விடப் போகிறாயா?"

"ஆமாம். என்னைச் சினிமாவில் நடிக்கக் கூப்பிடு கிறார்கள். என் முகவெட்டு நன்றாக இருக்கிறதாம். எங்கள் அப்பாவுக்கு ஒரு சில டைரக்டர்கள் தெரியுமாம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்!"

"நான் என்ன சொல்வது? நீ அகில உலக சினிமா நட்சத்திரம் ஆக மாறி விட்டால் நான்கூடப் பெருமையாகச் சொல்லிக் கொள்வேன். இப்பொழுது 'ரதா' என்பவளின், பூர்வ ஜென்மப் பெயர் 'சாரதா' என்பது. எங்களோடு ஆபீசில் வேலை செய்து வந்தாள். நானும் அவளோடு நெருங்கிப் பழகினவன்" என்று பெருமைக்காவது சொல்லி வைப்பேன்."

'நெருங்கிப் பழகினவன்' என்று சொன்னபோது சாரதாவிற்கு என்னமோ மாதிரி இருந்தது.

அத்தகைய வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை தோன்றிக்கொண்டிருந்தது. அதற்குள் ஜன நடமாட்டம் நெருக்கமாக இருந்த 'பிராட்வே' பகுதியை வந்தடைந்து விட்டார்கள். பேச்சை நிறுத்திக் கொண்டு நெடுஞ் சாலையைக் கடக்கும் கட்டத்திற்கு வந்தார்கள். துன்பம் நீங்கியது. சட்டக் கல்லூரியின் பாதையோரமாக மெல்ல நடந்து சென்றனர். சட்டக் கல்லூரியின் பாதையில் அதே ஜோஸ்யன் சந்தனப் பொட்டின் நடுவில் சிறிது குங்குமம் கூடுதலாக வைத்துக் கொண்டு தன் திறமையால் மற்றவர்களின் எதிர்காலத்தை ஊடுருவிப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தான்.

"இதோ பாரு! இந்த ஜோஸ்யனைக் கேட்டால் சொல்லி விடுகிறான்."

"அவன் கிடக்கிறான். நீங்கள் சொன்னால் போதும் எனக்கு அந்தத் தகுதி இருக்கிறதா என்று."

அவள் முகத்தை மறுபடியும் பார்த்தான். கரிய விழிகள் அவன் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தன. மின்னல் ஒன்று தாக்கியதைப் போல் அவன் எண்ணங் கொண்டான். அவர்கள் நாடிய பஸ் நிலையம் வந்து சேர்ந்தது. சாராதா ஒன்பதாம் எண் பஸ்ஸில் ஏறினாள். அவனும் உடன் ஏற ஆரம்பித்தான். சாரதாவின் வியப்பை எதிர்பார்த்தான். அவள் வியப்புடன் இவனைப் பார்த்தாள்.

"நானும் தி. நகருக்குத்தான் வருகிறேன்."

"எங்கள் வீட்டுக்கா?" அதில் அவளுக்கு அச்சம் சிறிது கலந்திருந்தது."

"இல்லை, என் வீட்டுக்கு, நான் தி. நகருக்கு வீடு மாற்றிக் கொண்டேன்."

"ஏன்? அமைந்தகரையில் வீடு...?"

"சௌகரியப்பட வில்லை."

இருவருக்கும் சேர்த்து சிவராமனே டிக்கட் வாங்கினான். ஒன்றை அவளிடம் கொடுத்து விட்டு மற்றொன்றைத் தன் புஷ் ஷர்ட் ஜேபியில் போட்டுக் கொண்டான். 'பனகல் பூங்கா'வில் சாரதா முன் பக்கம் இறங்கினாள். அவளைத் தொடர்ந்து சிவராமனும் பஸ்ஸை விட்டுக் கிழே இறங்கினான். அவள் பையை எடுத்துத் தோளில் சரியாக மாட்டிக் கொண்டாள். சிவராமனுக்கு அருகிலிருந்து "பனகல் பூங்கா"வில் சிறிது நேரம் உட்கார்ந்து சாரதாவிடம் பேசிக் கொண்டே யிருக்கலாம் போலத் தோன்றியது. அந்தச் சுற்றுப் புறத்தில் அவனுக்கு அறிமுகமானவர்கள் இல்லாத காரணத்தால் அங்கே அமைதியாக ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு பொழுது போகப் பேசிக் கொண்டிருப்பதில் அவனுக்கு விருப்பம் இருந்தது.

பூங்காவில் பாக்கு மரங்கள் அழகாக இருந்தன. மாலை மயங்கும் நேரமாக இருந்தது. கேட்பார் அற்று வானொலி பாடிக்கொண்டிருந்தது. கர்நாடக சங்கீதம் வானொலிக் கருவியின் கரகரப்பு ஒலியோடு கலந்து கேட்டுக் கொண்டிருந்தது.

"ஏன் வீட்டை மாற்றிக் கொண்டு வந்து விட்டீர்கள்?"

"அந்த 'வீட்டுச் சொந்தக்காரன்' அந்த வீட்டிற்குக் குடி வர வேண்டும் என்று கேட்டான். சரி, ஒழிந்து போகிறான் என்று காலி செய்து விட்டேன். உங்கள் வீடு எங்கே இருக்கிறது."

"இதோ அந்தப் பக்கம். அந்தப் பெண் பாடசாலையை அடுத்திருக்கிறது."

"வானொலி கொஞ்சம் நன்றாக இருக்கிறது அல்லவா!"

"ஆமாம், கொஞ்சம் கேட்டுவிட்டுத்தான் போங்களேன்."

"நீயும் வருகிறாயா? கொஞ்ச நேரம்..."

எப்படியோ வாய் விட்டு வெளி வந்துவிட்டன. அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. மின்சாரம் தாக்கியது போல இருந்தது சாரதாவுக்கு. பக்கத்திலிருந்த பாக்கு மரங்கள் 'சலசல' வென்று ஆட ஆரம்பித்தன. இரண்டு பஸ்கள் எதிர் எதிரே ஓடிக்கொண்டிருந்தன. அவள் கால்கள் அவள் மனத்தை அறிந்து பூங்காவினுள் நுழைந்தன. பூங்காவின் உட்பகுதியில் ஆங்காங்கு போடப்பட்டிருந்த சிமெண்ட் நாற்காலிகளில் கொஞ்சம் ஒதுங்கி ஒரு புறமாகப் போடப் பட்டிருந்த நாற்காலியே அவர்களுக்கு வரவேற்பு அளித்தது. கைக் குட்டையால் அதைத் துடைத்து விட்டு அதில் அவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள். ஓங்கிவளர்ந்த செடிகள் சில அடர்த்தியாக இருந்தன. சிறுவர்கள் ஓடியாடி விளையாடிக் கொண்டு இருந்தார்கள். ஒரு சிறுவன் இவர்கள் உட்கார்ந்து கொண்டு இருந்த சிமெண்ட் நாற்காலியின் கீழ் ஓடி வந்து ஒளிந்து கொண்டான். அடிக்கடி அவன் கூச்சல் போட்டுக் கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தான். அங்கங்கே போடப்பட்டிருந்த நாற்காலி களில் சில இளைஞர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். வயது வந்தவர்களும் ஒருசிலர் உட்கார்ந்து கொண்டு கடந்த கால அனுபவங்களைச் சிந்தித்துக் கொண்டு இருந்தனர். இளைஞர்களின் விழிகள் துரு துரு என்று புதுமையை நாடிக் கொண்டிருந்தன.

அந்த விழிகளுக்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுத்தவர் போலச் சிறிது இடம் விட்டே சிவராமனும் பார்வதியும் உட்கார்ந்தார்கள்.

"நான் கேட்டதற்கு ஒன்றும் முடிவு சொல்ல வில்லையே?"

என்ன சொல்வது என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவன் பேசாமல் இருந்தான்.

"ஏன்? நான் சினிமாவில் சேர்வதில் உங்களுக்கு விருப்பமில்லையா? அப்படி உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் நான் சேரவில்லை."

இப்பொழுதுதான் அவள் கேட்ட கேள்வி ஞாபகத்திற்கு வந்தது. நின்று போன இருதயம் மறுபடியும் வேலை செய்யத் தொடங்கியது போல இருந்தது. அவள் எதிர் காலத்தையே தன் வெறுப்பு விருப்புகளை அடிப்படையாக வைத்து நிர்ணயிப்பது கண்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஓ! அதுவா! இந்த வேலையை விட அது பன்மடங்கு மேல். இது தொழில். அது கலை."

அவள் சிரிக்க ஆரம்பித்தாள்.

"இந்தத் தி.நகர் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?"

"நான் இருப்பது கோடம்பாக்கமா, தி.நகரா எனக்குத் தெரியாது. நான் இந்தக் கூட்டுச் சாலையில் இருக்கிறேன். தனியாக இருப்பது கஷ்டமாக இருக்கிறது."

"அதற்குத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும்" என்று சொல்லி விட்டுப் பேசாமல் இருந்தாள். அதற்கு அவன் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சிறிது நேரம் சும்மா இருந்தான்.

வானொலி தமிழ்ச் செய்தி சொல்லி முடிந்துவிட்டது. மின்சார விளக்குகள் இரவு நேரம் வந்து விட்டதை அறிவித்தன. சிவராமன் பதில் ஒன்றும் பேசாமல் இருந்தான். அதற்குள் நாற்காலியின் கீழ் ஒளிந்து கொண்டு விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைப் பிடிக்க நான்கைந்து சிறுவர் சிறுமியர் வந்து சூழ்ந்து கொண்டார். அவனைப் பிடித்து வெளியே இழுத்தனர்.

"நீ தாண்டா பிடிக்க வேண்டும். கண்ணை மூடிக் கொள்."

அந்தச் சிறுவன் சிவராமனிடம் வந்தான்.

"மாமா! கொஞ்சம் கண்ணை மூடுங்களேன்."

அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் இருந்தான். அதற்குள் அந்தச் சிறுவனுக்குப் பொறுக்க நேரமில்லை.

சாரதாவிடம் வந்து,

"மாமி! கொஞ்சம் கண்ணை மூடுங்களேன்."

அவளால் மறுக்க முடியவில்லை.

கண்ணை மூடிவிட்டாள். அந்தச் சிறுவன் மற்றவர்களைப் பிடிக்க ஓடினான். அதற்குள் மற்றும் யாரோ

ஒரு ஆள் அதே நாற்காலியில் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். அழுக்கடைந்த ஆடையும், வளர்ந்திருந்த தாடியும், வாரிவிடாத தலையும் எல்லாம் சேர்ந்து ஆதியும் அந்தமும் இல்லா அனாதை எனச் சுட்டிக் காட்டியது.

இனிமேல் அங்கே தனிமை கிடைக்காது என்ற முடிவுக்கு வந்தவனாய்ச் சிவராமன்,

"வா! எழுந்திரு போகலாம்" என்றான்.

அவளும் அந்த இடத்தை விட்டு எழுந்தாள். திருமணத்தைப் பற்றிக் கேட்டது மிக்க அவசரம் என்று எண்ணியவளாய் இனி அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதியாக நடந்தாள். அவனும் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தள்ளிப் போடுவது என்ற எண்ணத்தோடு பேச்சை மெல்ல மாற்றானான்.

"உனக்கு இந்தக் கர்நாடக சங்கீதம் பிடிக்குமா?"

"எனக்குப் பயிற்சியும் உண்டு. பாடவும் கொஞ்சம் தெரியும்."

"அப்படியானால் உன்னிடத்தில் ஒரு வரம் கேட்கலாம் என்று நினைக்கிறேன்."

"எப்பொழுதும் பாடக் கூடாது என்றா...?"

"இல்லை. பாடினால், தமிழ்ச் சொல்லின் உச்சரிப்புத் தெளிவாகத் தெரியுமாறு பாட வேண்டும்."

அதற்குள் பூங்காவின் வெளிப்புறம் கண்களுக்குத் தெரிந்தது. பக்கத்தில் இருந்த நடை பாதையில் காய்கறி விற்பவர்களிடம் காய்கறி வாங்கிக் கொண்டு கைகளில் பைகளைச் சுமந்து கொண்டு போய்க்கொண்டிருந்தனர். ரிக்ஷாக்காரன் ஒருவன் தன் "சைக்கிள் ரிக்ஷாவை"க் கொண்டு வந்து முன்னால் நிறுத்தினான்.

"ஏறிக் கொள்ளுங்க. இரண்டு பேரும் ஏறிக் கொள்ளலாம் ஏறுங்க சாமி." தாராளமாக அவன் அனுமதி கொடுத்தான். சிவராமன் என்ன செய்வது என்று தெரியாமல் தயங்கினான். அவன் அவளைப் பார்த்தான். அவள் அவனைப் பார்த்தாள். ரிக்ஷாக்காரன் இருவரையும் பார்த்தான்.

"எண்ணிக்கொண்டிருக்க நேரமில்லை" என இருவரும் உணர்ந்தனர்.

"கோடம்பாக்கம் கூட்டு ரோடு" என்று சொல்லிய வண்ணம் சிவராமன் ரிக்ஷாவில் ஏறினான். சாரதாவும் உடன் ஏறினாள். அந்த மங்கலான வெளிச்சத்தில் ரிக்ஷா மெதுவாகச் சென்றது.

## 22

"அம்மா! கடிதம் வந்திருக்கிறது."

"படித்துச் சொல்லேன்."

"சொல்வதற்கு என்ன இருக்கிறது. புறப்பட வேண்டியது தான். அவர் கட்டாயம் வரச் சொல்கிறார்."

"வரமுடியாது என்று உனக்குச் சொல்லத் திறமை இருந்தால் அவர்கள் எப்படி உன்னை வரச்சொல்லுவார்கள்."

"இல்லாவிட்டால் மீனாட்சி என்னையாவது அனுப்பி விடுங்கள் என்று வற்புறுத்துகிறாள். நாங்கள் புறப்பட்டுத்தான் ஆக வேண்டும். அவள் மூட்டை எல்லாம் எடுத்து வைத்து விட்டாள்."

இவ்வாறு மாணிக்கமும் அவன் தாயும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்த பார்வதி. "என்ன அண்ணா! அம்மாவை விட்டுவிட்டு இப்போது போகிறாயே. அவர்களை நீதானே காப்பாற்ற வேண்டும்."

"பார்வதி! அவனைத் தடுக்காதே. மருமகன் மாமனார் வீட்டிற்குச் சென்று வாழ்க்கைப் படட்டும்."

இச்சொற்கள் அவன் காதில் 'சுருக்கென்று' தைப்பது போல இருந்தது. எதிர்த்துப் பேசி ஆகும் செயல் ஒன்றும் இல்லை என்று அவன் அனுபவம் அறிவுறுத்தியது.

"அம்மாவுக்கு உடம்பு சரியாகப் போய்விடும். வேளா வேளைக்குக் கஷாயம் போட்டுக் கொடு. அப்பா இருக்கிறார். பார்த்துக் கொள்வார். நான் என்ன செய்ய முடியும்? அவள் தான் விடாப் பிடியாக இருக்கிறாளே! அவளை மட்டும் அனுப்பினால் அவர்தான் என்ன நினைத்துக் கொள்வார்... கூப்பிட்ட கடிதத்திற்குப் போகவில்லையே என்று கோபித்துக் கொள்ள மாட்டாரா...? அனாவசியமாக அவர் விரோதத்தை ஏன் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்...? நான் மட்டும் இங்கு இருந்து என்ன செய்யப்போகிறேன்...? நான் என்ன வைத்தியப் படிப்பா படித்திருக்கிறேன். அம்மாவுக்கு மருந்து கொடுக்க" என்று பார்வதியிடம் சொல்லிய வண்ணம் தன்பெட்டியை எடுத்து வெளியே வைத்தான்.

மழையின் சிறு தூரல் வெளியே கொட்டுவது போல இருந்தது அவன் பேச்சு.

அதை அந்த வீட்டில் யாரும் பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை. அவன் தந்தை அசையாமல் முக்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். என்ன செய்வது என்று முடிவுக்கு வராமல் தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்து எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்.

"பார்வதி! கொஞ்சம் காப்பி போட்டுக் கொடேன்."

மெல்லிய குரலில் அம்மாவின் ஆணை பிறந்தது.

"போம்மா! அவளுக்குக் காப்பி போடு. அடுப்புப் பற்றவை" என்று அவர் பார்வதியை நோக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார். பார்வதி அடுப்பங்கரைக்குச் சென்று அடுப்புப் பற்றவைக்கும் சிறு தொழிலில் ஈடுபட்டாள்.

மாணிக்கம் வீட்டைவிட்டு அந்த நேரத்தில் போவது பார்வதிக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. தனக்கு மாணிக்கம்தான் ஆறுதலாக இருப்பான் என்று எண்ணிய அந்த நினைவு எல்லாம் வெறும் கனவாக முடிந்ததே என்று அவள்மனம் வருந்த ஆரம்பித்தது.

'திக், திக்' என்று அடுப்புப் பற்றி எரிந்தது. வறட்டி கொஞ்சம் ஈரமாக இருந்தது. மண்ணெண்ணெய் இருந்த வரையிலும் எரிந்தது. மறுபடியும் எண்ணெய் ஊற்றியதும் பற்றிக்கொண்டது. 'மளக் மளக்' என்று விறகு கட்டை வெடித்து எரிய ஆரம்பித்தது.

"போய் வருகிறோம்" என்று இருவர் சார்பிலும், மாணிக்கம் பெட்டி யெல்லாம் எடுத்து வைத்துவிட்டு வந்து சொன்னான். அந்த மாதம் தாய் வீட்டிற்குச் சென்ற போது எடுத்துக் கொடுத்த புதுப் புடைவையைக் கட்டிக் கொண்டிருந்தாள். ஓரம் இல்லாமல் முழுவதும் சிகப்பாக இருந்தது. வயலட் ஜாக்கெட் சிகப்புக்கு ஈடு செய்யாமல் இருந்தது. முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்க, சிடு சிடு என்று வைத்துக்கொண்டு யாரிடமும் பேசாமல் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டாள் மீனாட்சி. மறுபடியும் அந்தத் திக்கையே பார்க்காமல் எருது நின்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள். மாணிக்கமும் வண்டியின் பின் பக்கத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டான்.

பின் கம்பியை எடுத்து மாட்டினான். வண்டியும் 'கடக்' என்ற ஒலியோடு ஆட்டம் கொடுத்து அந்த இடத்தை விட்டு நகர்ந்தது.

எதிர் வீட்டில் சில பெண்கள் நின்ற இடத்திலிருந்தே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். பக்கத்து வீட்டுப் பெண்கள் இவ் வண்டி வரும் வழிமேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்தனர்.

நடவாத ஒன்று நடப்பது போல அவர்கள் அந்த வண்டியைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"இப்படிக் கூடவா இருப்பார்கள். மாமியார் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாள். அப்படியே விட்டுவிட்டுப் போகிறாளே. நாளைக்குத் திடீர் என்று எதுவாவது ஆனால்..."

"ஆனால், அவளுக்கு என்ன?"

"அவள் பேச்சைக் கேட்டு அவனும் நடக்கிறானே. படித்த பையன். சொந்த புத்தி இருக்கிறதா?"

"இல்லே! இல்லே! மாமியாரும் இலேசு பட்டவள் அல்ல. அவள் செய்கிற கொடுமையைத் தாங்க மாட்டாமல் தான் அந்தப் பெண், பாவம்! தாய் வீட்டிற்குப் போகிறாள்."

"ஆமாம். இன்னொரு வாழாவெட்டி ஒன்று வீட்டிலே உட்கார்ந்துகொண்டு இருக்கிறதே, அது பூனை மாதிரி கலகம் செய்துவிட்டு ஒன்றும் தெரியாதவளைப் போல் இருக்கும்."

"என்ன இருந்தாலும் பணக்கார சம்மந்தம் வைத்துக் கொண்டால் இப்படித்தான், மருமகளுக்கு மாமியார் பயந்து தீர வேண்டும்."

"மீனாட்சிக்கு என்ன தலைவிதி, இந்தக் குப்பைக் காட்டிலே வந்து குப்பை கொட்ட வேண்டுமென்று. அவர்கள் வீட்டு நாய் தின்கிற சாப்பாட்டை இங்கே நாலு பேர் சாப்பிடலாம்."

வண்டி சென்றுகொண்டிருந்தது. வானொலியில் சில சமயங்களில் முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்தால், உடனுக்குடன் விமரிசனம் செய்வது போல இருந்தது இவர்கள் போகும் வண்டியைப் பார்த்துப் பேசியது.

அந்த வண்டி நின்ற இடம் காலியாக இருந்தது. வண்டி சென்று மறையும்வரை தெருவில் பெண்கள் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தார்கள். புளிய மரத்தின் பக்கமாக வண்டி திரும்பியதும் அதன் உருவம் மறைந்தது. தெருவில் நின்றிருந்த பெண்களின் உருவமும் வாசலுக்குள் மறைந்தன.

மறுபடியும் அந்தத் தெருவில் மந்தமான வாழ்வே இருந்தது. மந்தமான அந்தக் கிராம வாழ்வில் இந்நிகழ்ச்சிகள்

எல்லாம் பெரிய அதிர்ச்சிகளாக இருந்தன. கட்டை வண்டிகள் ஒன்றிரண்டு சென்று கொண்டு இருந்தன. கோழி ஒன்று தன் குஞ்சுகளுடன் சுற்றிக்கொண்டு கிச்கிச் என்ற ஒலியொடு சிந்திய நெல்களைப் பொறுக்கித் தின்று கொண்டிருந்தன. எருமை என்று தலை நிமிர்ந்து பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தது. சில, வேலை செய்யும் பெண்கள் வெற்றிலை பாக்குப் புகையிலையைப்போட்டு மென்ற வண்ணம் வயல் வெளியிலிருந்து வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தனர்.

அடுப்பில் இருந்து இறக்கி வைத்த காப்பியில் பாலை ஊற்றி ஆறவைத்துக் கொண்டிருந்தாள். வீட்டில் அமைதி நிலவிக் கொண்டிருந்தது. சிவக்கொழுந்து முகத்தில் வியர்வைத் துளிகள் சில துளிர்த்தன. ஆற்றிய காப்பியைக் குவளை ஒன்றில் ஊற்றிக்கொண்டு வந்து கொடுத்தாள்.

"அம்மா! காப்பி கொண்டுவந்து வைத்திருக்கிறேன்."

"அண்ணன் போய் விட்டானா?" என்று மூடிய தன் கண்களைத் திறந்து கேட்டாள்.

"நான் பார்க்க வில்லையம்மா. தெருவில் வணடியில்லை. அண்ணி வீட்டில் இல்லை."

"போகட்டும். அவன், அங்கேயாவது நிம்மதியாக வாழட்டும். அவன் என்ன செய்வான். வந்தவள் அவனை இங்கே வைத்து வாழ்ந்தால் தானே... அவனிடத்தில் அவள் அன்பாக இருக்கிறாள். அது போதும்" என்று மிகவும் தாழ்ந்த குரலில் பேசி ஆறுதல் பெற முயன்றாள்.

அப்பொழுதுதான் தாயின் உள்ளம் இன்னது என்று பார்வதியால் உணர முடிந்தது. அண்ணன் மீது அம்மா கொண்டிருந்த அன்பு அப்பொழுதுதான் நன்றாகப் புலப் பட்டது.

"எல்லாம் என் தவறுதான்" என்று சுருக்கமாகச் சொல்லி விட்டு மேலே தொடர்ந்து பேசாமல் நிறுத்திக் கொண்டார் அவள் தகப்பனார்.

"தெருவில் தபால்காரர் ஏதோ ஒரு கடிதம் போட்டு விட்டுச் சென்றது அவர் கண்களை ஈர்த்தது. உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து வெளியே எழுந்து சென்றார்.

"என் உடம்பு இந்தமாதிரி இருந்தால் நான் பிழைக்க மாட்டேன். மார்பில் அவ்வப்போது வலி அதிகமாக இருக்கிறது. உடம்பெல்லாம் ஒரே வலியாக இருக்கிறது" என்று சொல்லி விட்டு ஊற்றி வைத்த காப்பியை எடுத்துக் குடித்தாள்.

படுக்கையை விட்டு மெல்ல எழுந்திருக்க முயன்றாள். முகத்தில் சில வியர்வைத் துளிகள் அரும்பி இருந்தன.

"பட்டணத்திலிருந்து கடிதம் வந்திருக்கிறது" என்று ஆர்வம் நிறைந்த குரலில் அவர் அறிவிப்பு அமைந்திருந்தது.

பார்வதியின் விழிகள் அந்த எழுத்துக்களைக் கவனித்தன. அது அவர் எழுந்து அல்ல என்பதை உணர்ந்தாள். அதில் அவளுக்கு ஆர்வம் தோன்றவில்லை.

பார்வதியின் தாயின் கண்களில் சிறிது ஒளி தோன்றியது.

"என்ன எழுதியிருக்கிறான் மருமகன்?"

"மருமகன் எழுதவில்லை."

மறுபடியும் அவள் கண்கள் அந்தப் புத்தொளியை இழந்தன.

"அவன் குடியிருக்கிற வீட்டுக்காரர் எழுதியிருக்கிறார்." பார்வதியின் பார்வையில் அச்சமும் வியப்பும் கலந்திருந்தன.

"சிவராமனுக்கு உடல் நலம் சரியாக இல்லை. நீங்கள் உடனே உங்கள் மகளை அனுப்பி வைக்க வேண்டியது."

சட்டென்று மயக்கம் வந்து பார்வதி கீழே விழுந்து விட்டாள். பார்வதியின் தாயின் முகத்தில் பீதி கலந்து இருந்தது. தலைமயிர் பரவிக் கிடந்தன. படுத்த படுக்கையி லிருந்து எழுந்திருக்க முயன்றாள். முடியவில்லை. சிவக் கொழுந்துக்குக் கையாடவில்லை, காலாடவில்லை, மனம் ஓட வில்லை, என்ன செய்வது என்று தெரியவில்லை. பிறகு அந்தக் கடிதத்தைக் கை நழுவ விட்டு விட்டுக் குவளையில் நீர் கொண்டு வந்து பார்வதியின் முகத்தில் தெளித்தார்.

கண்களை மெல்லத் திறந்தாள். அவள் இருதயம் வேகமாக அடித்துக்கொண்டிருந்தது. குவளையில் எஞ்சியிருந்த நீரைக் கொடுத்துக் குடிப்பித்தார். அவள் அணிந்திருந்த ஜாக்கெட்டின் முன்பக்கம் நனைந்திருந்தது. அவள் மெலிந்த கண்களில் இரத்த ஓட்டம் இல்லாமல் வெளிறி இருந்தன. சுய நினைவுக்கு வரச் சிறிது நேரம் பிடித்தது.

"நான் போகிறேன்" பா! நீங்கள் அம்மாவைப் பார்த்துக் கொள்ளுங்கள்."

"இடிமேல் இடிவிழும் என்று எதிர் பார்க்கவில்லை. பட்ட காலிலே படும்."

"இந்தப் பழமொழி எல்லாம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். குழந்தை போகட்டும். அங்கே போய் அவரைக்

கவனிக்கட்டும். அவருக்கு உடம்பு என்னமோ ஏதோ, அவர் நல்லாயிருந்தால் போதும்."

அவர்கள் பேசும் பேச்சைப் பார்வதி ஒன்றும் பொருட் படுத்தவில்லை. சாதாரண நூல் சேலை ஒன்றைக் கட்டிக் கொண்டு நெற்றியில் குங்குமம் வைத்துக்கொண்டு கூடத்தில் இருந்த சுவாமி படத்தின் முன்னால் நின்று மனத்தை ஆறுதல் செய்து கொண்டு சிறு பையில் நாலைந்து சேலைகளை எடுத்து வைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

"வர்ரேன்' பா. அம்மாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்."

"ஒண்டியா எப்படியம்மா போக முடியும்? மரகதத்தை யாவது துணைக்கு அனுப்பட்டுமா?"

"அவள் குழந்தை குட்டிக்காரி. அவள் எப்படிப் பட்டணத்திற்கு வர முடியும்? பஸ் நிலையம் வரையில் துணைக்கு வரட்டும். நான் ஒண்டியாகப் போக முடியும். பயம் இல்லை." வீட்டில் இருந்த பத்து ரூபாயை வழித் துணைக்கு எடுத்துக்கொண்டாள்.

மறுபடியும் அம்மாவின் முகத்தைப் பார்த்தாள். அம்மாவின் முகத்தில் கொஞ்சம் தெம்பு ஏற்பட்டதை அவளால் கவனிக்க முடிந்தது.

"என்னமோ அவர் உடம்பு குணமாகி உன்னை நல்லபடி வைத்திருந்தால் அதுவே போதும்" என்று அந்த அம்மாவின் இறுதிச் சொற்கள் அவளை வழி கூட்டி அனுப்பின.

அவரே ஏன் கடிதம் எழுதவில்லை? என்ற இந்தச் சந்தேகம் பார்வதிக்கு வரத் தொடங்கியது. கடிதம் எழுதும் நிலையில் இல்லாமல் அவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறாரா! அந்த எண்ணம் அவளுக்கு அச்சத்தைத் தந்தது. இல்லை, வைராக்கியத்தால் எழுதாமல் விட்டு இருப்பார். இந்த எண்ணம் அவளுக்கு ஆறுதல் அளித்தது.

சிவக்கொழுந்து சிறிது தூரம் வந்தார். மரகதம் பையை எடுத்துக் கொண்டு வழித்துணையானாள். வழக்கமாகப் பார்க்கும் சகுனம் ஒன்றும் தீமையாகக் காணப்படவில்லை என்பது சிவக்கொழுந்துக்குத் திருப்தி அளித்தது.

பார்வதி போனதும் வீடு வெறிச் சென்று ஆகிவிட்டது. போர்வை போர்த்திக் கொண்டு ஒரு பக்கமாகச் சாய்ந்து கொண்டாள் தாய். கழுவி வைக்காமல் சில பாத்திரங்கள் அப்படியே கிடந்தன. வாசலில் கட்டப்பட்டிருந்த கொடிக்

கயிற்றில் பார்வதியின் சேலை உலர்ந்து கொண்டிருந்தது. நனைந்துவிட்ட ஜாக்கெட் காயவைக்கப்பட்டிருந்தது. பார்வதி இல்லாத வெறும் வீடு அவள் கவனத்திற்கு வந்து தனிமையை உண்டாக்க முயன்றது.

"பஸ் வந்தது, ஏற்றிவிட்டு வந்தேன்" என்று சொல்லிய வண்ணம் சிறிது நேரத்திற்கெல்லாம் சிவக்கொழுந்து மறுபடியும் அந்தப் பழைய முக்காலியில் வந்து உட்கார்ந்தார். கழுவாத காப்பிப் பாத்திரங்கள் கறுத்துக் காணப்பட்டன. அடுப்பில் நெருப்பு அணையாமல் எரிந்து கொண்டிருந்தது. வெந்நீரை எடுத்து வைத்துவிட்டு என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்துக்கொண்டிருந்தார்.

"ஊம், ஊம்" என்று இரண்டு துன்ப ஒலிகள் அவ்வன்பு மனைவியின் நோயினின்றும் பிறந்தன.

"என்ன, வலி அதிகமாக இருக்கிறதா?"

"இல்லை. உங்கள் எதிர்காலம் பற்றித்தான் எனக்குக் கவலையாக இருக்கிறது. நான் போய் விட்டால் உங்களைக் கவனிப்பார் யார்? என்ற கவலைதான் என்னை வாட்டுகிறது."

அந்தக் கிழவரின் இரண்டு கண்களிலும் நீர் தளும்பி நிறைந்தன. துன்பம் அவர் நெஞ்சத்தைக் கவ்வியது. உலகத்தில் தான் தனிமையாக நிற்பது போல் காணப்பட்டது.

## 23

கோடம்பாக்கம் கூட்டுச் சாலையில் இருந்த சிவராமனின் அறை மூடியிருந்தது. வீட்டில் யாரும் இல்லை என்பதற்கு அடையாளமாகப் பூட்டுப் போட்டிருந்தது. அந்த வீட்டின் பின் பக்கத்தில் இருந்த மாடு வைக்கோல் தின்று கொண்டிருந்தது. பக்கத்தில் வேப்ப மரத்தில் ஒரு சேங்கன்று கட்டப்பட்டிருந்தது. அப்பொழுதுதான் மாட்டுக்கு வைக்கோல் போட்டு விட்டு வந்த வீட்டுக்காரரின் பார்வை வெளியே மாடிக் கதவிலிருந்து இறங்கு வரும் பார்வதி மீது சென்றது.

விரைவாக வந்து, "யாரது! என்று கண்டிப்பான குரலோடு கேட்டுக் கொண்டு வந்தார்.

"நான் தானுங்க. இவருக்கு உடம்பு எப்படியிருக்கிறது? இவர் எங்கே? ஆஸ்பத்திரியில் இருக்கிறாரா? என்ன

உடம்புக்கு?" என்று கவலையும் விரைவும் தோய்ந்த குரலில் கேட்டாள்.

"ஓகோ நீங்களா? நீங்கள்தானா பார்வதி அம்மாள்? அவருக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை. வாங்க நிதானமாப் பேசலாம்" என்று தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

"இங்கே வா! இவர்கள்தாம் அந்தப் போட்டோவில் இருக்கிறவர்கள். இந்தம்மாதான் சிவராமனின் மனைவி" என்று அங்கு இருந்த சுமார் நாற்பது வயதுடைய அம்மையாரிடம் அறிமுகப்படுத்தினார். அவ்வம்மையார் நாற்பது வயதானாலும் நல்ல தெளிவான முகமும், பருமனான உடலும் கொண்டு விளங்கினார்கள். அநேகமாகக் குழந்தையில்லாத குடும்பமாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் தோற்றம் தெரிவித்தது. கூடத்தில் நிறைய சாமி படங்கள் மாட்டப் பெற்றிருந்தன.

"நான் வேண்டாம் என்று சொன்னேன். இவர்தான் கேட்கவில்லை" என்ற பீடிகையோடு ஆரம்பித்து, "உட்காருங்கள்" என்று வரவேற்றார்கள். வெள்ளிக் குவளையில் மோர் ஊற்றிக் கொண்டு வந்து வைத்தார்கள்.

"இது நம் வீட்டுப் பசுமோர், குடியுங்கள்" என்று அன்பாகச் சொன்னார்கள்.

"அவருக்கு உடம்பு எப்படி இருக்கிறது. நான் அவரைப் பார்க்க வேண்டும்" என்று ஆவலாய்த் துடித்தாள்.

"அது தான்'மா நான் சொல்ல வந்தேன். அவர் உடம்புக்கு ஒன்றும் இல்லை. இவர்தான் அப்படி எழுதி உங்களை அழைத்தார்."

அந்தச் சொற்களைக் கேட்ட அந்த வீட்டுக்காரர் அவர்கள் தாராளமாகப் பேசுவதற்கு உரிமை தருவதற்காக அந்த இடத்தை விட்டுத் தெருப் பக்கம் வந்தார்.

"ஏன்'மா, இந்தமாதிரி நீ ஊரிலே உட்கார்ந்து கொண்டிருந்தால் உன் புருஷன் கண்டவங்களோடு சுற்றிக் கெட்டுப்போக மாட்டாரா? இந்த மாதிரி தாய் வீட்டில் இருந்தால் அவர் தவறான வழியில் போவதற்குக் காரணமாக இருக்காதா?"

பார்வதிக்கு ஒன்றும் விளங்கவில்லை. தன் கணவரின் நடத்தையைப் பற்றி அவர்கள் தவறு சொல்வது மட்டும் ஓரளவு விளங்கிற்று. "இதற்காகவா, இவர்கள் என்னை அழைக்க வேண்டும்" என்று சிந்தித்தாள்.

"இப்பொழுது அவர் எங்கே?"

"அவர் ஆபீசுக்குப் போயிருக்கிறார். சாயுங்காலம் வருவார். வந்தால் அவரைக் கண்டித்து நல்ல வழியில் திருப்ப வேண்டியது உன் கடமை. அதற்காகத்தான் எங்களவர் உனக்குக் கடிதம் எழுதினார். இதெல்லாம் எப்படி விபரமாகக் கடிதம் எழுதமுடியும்? அதற்குத்தான் இந்த மாதிரி கடிதம் எழுத வேண்டியதாயிற்று."

"அங்கே அம்மாவுக்கு உடம்பு சௌகரியமில்லை. அதனால்தான் தங்க நேர்ந்து விட்டது" எனது உண்மை கலந்து நாகரிகமாகப் பேசினாள்.

"யாரோ ஒருத்தி சினிமா நடிகை போல் இருக்கிறாள். ஒரு நாள் சாயுங்காலம் வீட்டுக்கே அழைத்து வந்து விட்டார். எங்களுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. இதற்குத் தானா வீடு விட்டது? வீடு விடும்பொழுதே நல்ல நடத்தையுள்ளவர் களுக்குத்தான் வீடு விடுவது என்றிருந்தோம். கேட்டதற்குத் திருமணம் ஆனது, உங்கள் விலாசம் எல்லாம் கூடச் சொன்னார். நம்பினோம். அதனால்தான் வீடு விட்டோம். இப்படிச் செய்வார் என்று நாங்கள் எதிர் பார்க்கவில்லை. தெரிந்திருந்தால் இப்படிப் பட்டவர்களுக்கு வீடு விட்டிருக்கவே மாட்டோம். அவர் உங்களோடு குடித்தனம் செய்வதாய் இருந்தால் இங்கு இருக்கட்டும். நீங்கள் ஊருக்குப் போய் விடுவதாய் இருந்தால் அவர் இந்த வீட்டைக் காலி செய்து விடட்டும். மேலும், உங்களைப் போன்றவர்களின் நல்ல வாழ்வு பாழாய்விடுவது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்க வில்லை."

பார்வதிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. மாணிக்கம் சொல்லிய மோகினித் தெய்வம் இவளாய்த் தான் இருக்க வேண்டும் என்று எண்ணினாள். அவள் அழகில் மயங்கிய அவர் இங்கு எப்படித் தன்னைத் தங்க விடுவார்? அவரைக் கண்டிக்கத்தான் உரிமை கிடையாது என்று அந்த நாட்களில் சொல்லி இருக்கிறாரே என்று எண்ணினாள்.

பேசாமல் வந்தவழி பார்த்துக்கொண்டு ஊருக்குப் போனாலும் அம்மாவையாவது பார்த்துக் கொள்ளலாம். இங்கே வந்து இருக்கும் நிம்மதியையும் இழக்க வேண்டியது தான். அவர்களுக்கு எப்படித் தெரியும்? என்னை எதற்காக அனுப்பி வைத்தார் என்று அவர்களிடம் விவரம் சொல்ல முடியாது; சொல்லவும் கூடாது. இந்த நிலைமையில் என்ன செய்வது! என்று சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

"ஏன்'மா, இன்னும் மோர் சாப்பிடாமல் வைத்திருக்கிறாய்? குடி'ம்மா வந்த களைப்புத் தீரும்."

வெள்ளிக் குவளையில் இருந்த மோரைக் குடித்தாள்.

"நன்றாக இருக்கிறது. நல்ல மணம்."

"ஆமாம், அதிகமாகப் புளித்திருக்காது. வெயிலில் அவர் அடிக்கடி மோர் வேண்டும் என்பார். அதற்குத்தான் அதை அளாவி வைப்பது."

"நீங்கள் வீட்டை மிகவும் சுத்தமாக வைத்திருக்கிறீர்கள்."

"அதுதான் எங்களுக்கும் பிடிக்கவில்லை. இந்த வீட்டுச் சாமான்களைக் கலைக்க ஒரு குழந்தை இல்லை. அதுதான் எங்களுக்குக் கவலை. ஆண்டவன் கண் திறந்து பார்க்கவில்லை."

"சிலருக்கு அளவுக்கு மீறிக் குழந்தைகள் பிறக்கின்றன."

மாலையில் அவர் வந்ததும் எப்படிச் சந்திப்பது! யார் உன்னை வரச்சொன்னது என்று அவர்கள் முன்னால் எரிந்து விழுந்தால் என்ன செய்வது என்று எண்ணினாள். அவர்கள் முன்னால் எரிந்து விழ மாட்டார் அக்கம் பக்கத்திற்கு அஞ்சியாவது கொஞ்சம் பண்பாடுடன் நடந்து கொள்வார். மேலும் அவர்களிடமும், ஓரளவு தன்னைப் பற்றிச் சொல்லி இருப்பதால் அவ்வளவு தூரம் எரிந்து விழமாட்டார் என்று தனக்குள்ளே பார்வதி ஆறுதல் கொண்டாள்.

சிவராமனைப் பார்க்கவேண்டும், பார்த்துவிட்டுத்தான் போகவேண்டும் என்ற ஆசை அவளை அங்கேயே இருக்கத் தூண்டியது. மேலும், மீண்டும் ஊருக்குப் போவதால் தன் எதிர்கால வாழ்வு என்னாகும்? என்ற அச்சம் அவளைத் திரும்பிப் போகத் தடுத்தது "ஒருக்கால் அவர் நன்மைக்காவது நான் இருக்க வேண்டி வந்தாலும் வரும். நானில்லா விட்டால் வீட்டைக் காலி பண்ணச் சொன்னால் அவர் நிலைமை என்ன ஆகும்? அதற்காகவாவது நான் இருந்தால் அவருக்குப் பயன்படமுடியும்" என்று சுயநலமற்ற தன்மையிலும் அவள் மனம் எண்ணியது.

"ஏன்'மா என்ன யோசிக்கிறே? நாங்கள் உன்னை வரவழைத்தது தவறா? இல்லாவிட்டால் உன்குடி முழுகிப் போய்விடும். பட்டிக் காட்டிலே அப்பா அம்மாவை நினைத்துக்கொண்டு நீ அங்கே இருந்தால் அவர் இங்கே தனியாகக் கெட்டுப் போகமாட்டாரா? நான் கூடத்தான் அந்தக் காலத்தில் கலியாணம் ஆன புதிதில் அம்மா வீடே கதி

என்று இருந்தேன். இப்பொழுது யார் என்னைச் சட்டை செய்கிறார்கள்? எல்லாம் கூடப் பிறந்தவர்களுக்குக் கலியாணம் ஆகிவிட்டால் உடன் பிறந்தவளைக் கவனிக்க மாட்டார்கள்."

ஏதோ அந்த அம்மையார் தன் கதையையே சொல்வது போல இருந்தது.

"அது எல்லாம் இல்லை. ஏன் திடீர் என்று வந்தாய் என்று கேட்டால் என்ன சொல்வது என்று சிந்திக்கிறேன்."

"சரிதான். புருஷனை மனைவி சந்திக்கிறதுக்கு முன் கூட்டித் தெரிவிக்க வேண்டுமா! நல்லாயிருக்கிறது நீ சொல்வது. நீ அதற்குக் கவலைப் படாதே. நாங்கள்தான் வரவழைத்தோம் என்று சொல்லுகிறோம். இரண்டில் ஒன்று தெரிய வேண்டும். இந்த மாதிரி தவறான நடத்தையையுடைய குடித்தனம் எங்களுக்கு வேண்டியதில்லை" என்று மீண்டும் மீண்டும் தன் முடிவை எடுத்துரைத்தாள்.

அவர்களிடத்தில் தன் வாழ்வின் கதையை எடுத்துச் சொல்லி ஆறுதல் பெறலாமா என்று எண்ணியது அவள் உள்ளம். 'சே' என்ன இருந்தாலும் குடும்பக் குறைகளைப் பிறருக்கு எடுத்துச் சொல்வது தவறு என்று அவள் அறிவு உணர்த்தியது.

"இல்லே'ம்மா தனியாக வந்தாயே என்று அவர் கேட்டால் என்ன சொல்வது" என்று வேறு விதமாகப் பதில் அளித்தாள்.

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அப்பா வரமுடியவில்லை என்று சொல்வது."

"சரி. நான் இருக்கிறேன்'மா. ஆனால் நான் இங்கே இருந்தால் அவர் திருந்துவார் என்று சொன்னீர்களே அதிலே எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை" என்று மனம் விட்டுப் பேசி விட்டாள். பிறகு அதுகூட ஏன் பேசினோம், அவ்வாறு பேசியிருக்கக் கூடாது என்று எண்ணினாள். பிறகு எழுந்து கொண்டுவந்த துணிப் பையை அவர்கள் காட்டிய ஒரு தனியறையில் வைத்து விட்டு பஸ்ஸில் வந்த தூசுபோகக் குளிக்கச் சென்றாள்.

அவர்கள் பேச்சு முடிந்தது என்று தெரிந்ததும் அந்த வீட்டுக்காரர் உள்ளே வந்தார்.

"என்ன...எல்லாம் எடுத்துச் சொன்னாயா?"

"விளக்கிச் சொன்னேன். அவரைப் பார்க்கவே பயப்படுகிறாள். அவர் ஏன் வந்தாய்? என்று கேட்டால் என்ன பதில் சொல்வது என்று பயப்படுகிறான்."

"அவர் அப்பாதான் அழைத்துக் கொண்டு வந்தார் என்று சொன்னால் போகிறது. அவசரமாகத் திரும்பிப் போக வேண்டி இருந்ததால் போய் விட்டார் என்று சொல்வது. நாம் கடிதம் எழுதிய விஷயம்கூட அவனுக்கு ஏன் சொல்ல வேண்டும்? அவன் நடத்தையை நேரில் கண்டித்தால் அவன் எப்படித் திருந்துவான்? விரோதம்தான் வரும். அவன் திருந்து வதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். உன் நடத்தை எங்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னால் நீ யார் கேட்பதற்கு என்று எதிர்த்துக் கேட்டால் நாம் என்ன செய்யமுடியும்? 'போய்யா! உன் வீட்டைக் காலி செய்து விடுகிறேன்' என்று சொல்லிவிட்டால் பிறகு நாம் அவனை எப்படித் திருத்த முடியும்? பாவம், அந்தப் பெண்ணைப் பார்த்தால் எனக்கும் பரிதாபம் ஏற்படுகிறது. ஒன்றும் தெரியாதவள். அவளுக்கு நாம் உதவவேண்டுமானால் அவசரப்பட்டு எதுவும் பேசிவிடக் கூடாது. நாம்தான் அவன் மனைவியை வரவழைத்தோம் என்று சொன்னால் நம்மீது பகை கொள்வான். கடிதம் எழுதும்போது அவன் பகைக்கு நான் பயப்படவில்லை. இந்த வீட்டைக் காலி செய்விக்க வேண்டும் என்று பகையை வரவேற்றேன். இந்தப் பெண்ணைப் பார்த்த பிறகு இவளை வாழ்விக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதனால் அவன் பகை இல்லாமலேயே அவனைத் திருத்த வேண்டும். அதுதான் நல்லது. இந்தச் சிறு பொய்யைச் சொன்னால் நல்லது என்று நினைக்கிறேன்."

"ஏதோ அவர்களுக்குள் வேறு தகராறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அதனால்தான் அவள் அவனைச் சந்திக்கப் பயப்படுகிறாள். இங்கே தங்குவதற்குத் தயங்குகிறாள். அவள் பேசிய பேச்சிலிருந்து தெரிகிறது."

"இருக்கலாம். அதைப் பற்றி அந்தப் பெண் ஏதாவது சொன்னாவா?"

"இல்லை."

"சரி. அதை ஒன்றும் கண்டுகொள்ள வேண்டாம். அப்பாவே அழைத்துக் கொண்டு வந்து விட்டதாகச் சொல்லச் சொல். இந்த ஒரு சிறு பொய் நமக்காகச் சொல்லும்படி செய். அதுதான் நல்லது."

பார்வதி மாற்றுப் புடைவை ஒன்று கட்டிக் கொண்டு வந்து நின்றாள். நெற்றிக்குக் குங்குமம் கேட்பதற்கு முன்னால் அவ்வம்மையார் சிறு, வெண் கிண்ணத்தை நீட்டினாள். தந்தத்தால் செய்யப்பட்ட அக்கிண்ணம் சித்திர வேலைப்பாடு பெற்றிருந்தது. குங்குமம் இட்டுக் கொண்டு சிதறிக் கிடந்த தலைமுடியை வாரி முடித்துக் கொண்டாள்.

"நாங்கள் ஒரு தவறு செய்து விட்டோம். அதனால் அவர் கோபம் கொண்டால் வீண் தகராறுதான் வளரும். அதற்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும்."

இவ்வம்மையார் சொன்னதன் கருத்துப் பார்வதிக்கு விளங்கவில்லை.

"என்னம்மா. என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"

"அவருக்கு உடம்பு சரியாக இல்லை. அதனால் புறப்பட்டு வரவும் என்று உங்களுக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி அவரிடம் பேசக் கூடாது."

"பின் ஏன் வந்தாய் என்று கேட்டால்...?'

"அதுதான் சொல்ல வந்தேன். நீயே வந்ததாகச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் எங்கள் மேல் வீண்பகை உண்டாகும். இந்தப் பகையைத் தவிர்க்க வேண்டும் என்று நினைத்தால் நீ இந்த உதவி செய்யவேண்டும். பகை உண்டானால் பொருந்தி வாழ முடியாதே என்பதற்காக 'எங்களவர்' கவலைப்படுகிறார். மேலும் எங்கள் வற்புறுத்தலால் உன்னோடு வாழும் வாழ்க்கை நீடித்திராது; இயற்கையானதும் அல்ல; வற்புறுத்தி ஒருவரைத் திருத்த முடியாது என நினைக்கிறார். அதனால்தான் நீ அப்படிச் சொல்ல வேண்டும்."

"ஏன் தனியாக வந்தாய் என்று கேட்டால்...?"

"அப்பாவோடுதான் வந்தேன். அவர் அவசரமாகத் திரும்ப வேண்டியிருந்ததால் திரும்பி விட்டார் என்று சொல்லிவிடு."

பார்வதி சிறிதுநேரம் தயங்கினாள். அப்பா அழைத்துக் கொண்டு வந்தார் என்றால், அது அவர் முரட்டுத்தனம் வளரக் காரணமாக இருக்குமே என்று சிந்தித்தாள்.

"இல்லை, நானே வந்தேன் என்று சொல்லி விடுகிறேன். நீங்கள் கவலைப் படாதீர்கள்."

ஏன் வந்தாய் என்று கேட்டால் என்ன சொல்வது என்ற எண்ணம் அவளிடம் நிலைபெற்றது. எப்படி அவரிடம் முதலில் பேசுவது, பழையபடி பணத்தைக் கேட்டால் என்ன செய்வது என்பதுபற்றிச் சிந்திக்கலானாள்.

மாலை, மணி ஆறாகியும் சிவராமன் வீட்டுக்கு வரவில்லை. இவள் கற்பனை அந்த மோகினித் தெய்வத்தின் மீது சென்றது. எப்படியும் அவள் பின்னால்தான் சுற்றிக் கொண்டிருப்பார் என்று அவள்மனம் அவரைப் பின்சுற்றிக் கொண்டு இருந்தது.

வெளியே செருப்பு ஒலி கேட்டது. மனம் திக் திக் என்று அடித்துக் கொண்டது. ஒரு வேளை அவரோடு அந்த மோகினித் தெய்வம் வருகிறாளா என்ற அச்சத்தால் அவள் விழிகள் அவனைப் பின் தொடர்ந்து பார்த்தன. மனம் திக், திக் என்று அடித்துக் கொண்டது. அவன் நிழலைத் தவிர வேறு யாரும் அவனைப் பின் தொடரவில்லை யென்பது அந்த மின்சார விளக்கு வெளிச்சத்தில் அவளால் தெரிந்து கொள்ள முடிந்தது.

டக் என்று கதவு மூடிய சப்தம் கேட்டது.

## 24

சிவராமன் உள்ளே உட்கார்ந்து கொண்டிருந்தான். உட்கார்ந்திருந்த நாற்காலியின் எதிரே அவன் மாட்டி வைத்த படம் இருந்தது. இவன் விழிகள் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. பார்வதியின் அமைதியான கண்கள் இவனைப் பார்த்துக்கொண்டிருந்தன. இவன் அந்த விழிகளின் வழியாக அவள் உள்ளத்தை அளந்து கொண்டிருந்தான்.

வெளியே சிறு தூரல் தூரிக்கொண்டிருந்தது. வானத்தில் இடியும் மின்னலும் கலந்து ஒலித்து ஒளித்துக் கொண்டிருந்தது. மினுக் மினுக் என்று அவ்வப்போது உள்ளே வெளிச்சம் திடீர் திடீர் எனத் தோன்றிக் கொண்டிருந்தது. வெளியே ஒரு விளக்கு விளக்கமாக ஒளிவீசிக் கொண்டிருந்தது. மழைத் துளிகள் விட்டு விட்டு அந்த வெளிச்சத்தில் காட்சியளித்தது. புல்லினின்றுவிழும் பனித் துளிகளைப் போல அந்த விளக்கைச் சுற்றியிருந்த மூடியிலிருந்து விட்டு விட்டுச் சில மழைத்துளிகள் விழுந்து கொண்டு இருந்தன. சளசள வென்ற சப்தம் அவ்வப்போது சென்ற கார்களால் ஒலித்துக்

கொண்டிருந்தது. அவன் இருந்த அறையிலிருந்து இந்தக் காட்சி களைக் காண முடிந்தது.

அவன் மேஜையின் முன்னால் கிழிக்கப்பட்ட கவர் ஒன்று இருந்தது. அதில் ஒரு கடிதம், படித்த பின் மீண்டும் வைக்கப்பட்டு இருந்தது. ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிரண்டு அலங்கோலமாய்க் கிடந்தன.

சிறிது நேரத்திற்கெல்லாம் மழை நின்று அமைதியாக இருந்தது. மழையின் காரணமாகப் போக்குவரத்துக் குறைவாக இருந்ததால் தெருவிலும் அமைதி குடிகொண்டிருந்தது. அவன் மனமும் மழைக்குப்பின் காணும் அமைதியைப் போலக் குழப்பத்திற்குப் பின் தெளிவு பெற்றிருந்தது.

வெளியே கதவு தட்டும் சப்தம் கேட்டது. எதிர்பார்த்த ஒருவரை வரவேற்பதைப் போல வேகமாகச் சென்று கதவை மெல்லத் திறந்தான்.

பார்வதி தலைகவிழ்ந்து நின்றாள். அவளுக்குப் பக்கத்தில் வேறு யாரும் இல்லை.

"வா பார்வதி! உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன். நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்."

நடப்பது அனைத்தும் உண்மை தானா? என்று அவள் உள்ளம் எண்ணியது. விண்ணிலே மிதக்கும் வெண்முகில் போல இலேசாக இருந்தது அவள் மனம்.

பேசாமல் உள்ளே சென்றாள். சிவராமன் உட்தாட்பாள் போட்டான்.

அந்த அறையிலிருந்த சாமான்களை வேகமாக அளக்கத் தொடங்கின அவள் கண்கள். சுவரில் பழைய படம் அவள் கண்களுக்குத் தெரிந்தன. வீடு பெருக்காமல் தூசும் துப்புமாக இருந்தது.

"எப்படித் தெரியும் நான் வருவேன் என்று...?"

"தெரியும். உன்னை நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த வீட்டுக்காரர் கட்டாயம் உன்னை வர வழைத்து விடுவார் என்று எனக்குத் தெரியும்."

"அவர் உங்களிடம் சொன்னாரா?"

"இல்லை. இருந்தாலும் இரண்டு, மூன்று நாட்களாக அவர் பேசாமல் இருந்தது கண்டு தெரிந்து கொண்டேன். நானும் இங்குத் தங்க வேண்டுமானால், இந்த வீட்டை விட்டுக்

காலி செய்யாமல் இருக்க வேண்டுமானால் நீ கட்டாயம் தேவை. நானே உனக்கு எழுதலாம் என்று இருந்தேன்."

அவள் செவிகளை அவளால் நம்ப முடியவில்லை.

"ஏன்! நான்தான் உங்களுக்குப் பணம் கொண்டுவர முடியாதே."

"பணம் எனக்கு இப்பொழுது தேவையில்லை. அடுத்த அறையைத்திற! அதுதான் உன் சமையல் அறை. இது தான் நம் வீடு. இந்த இடம் போதும். இந்த வீட்டுக்காரர் ரொம்பவும் நல்லவர். இந்த இடத்திலேயே நம் நிகழ்காலம், எதிர்காலம் எல்லாக் காலத்தையும் அமைத்து விடலாம்."

இனி, அவரிடம் என்ன பேசுவது என்று அவளுக்குத் தோன்றவில்லை. எதிர்பாராதவிதமாய்க் கிடைத்த இந்த அன்பு வரவேற்பு அவளைத் திகைக்கச் செய்தது.

"நான் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டது அவ்வளவும்."

"ஓரளவு மெய். கண்ணால் காண்பது காட்சி. காதால் கேட்பது கேள்வி. நெருங்கிப் பழகினால்தான் உண்மை தெரியும்."

"அப்படியானால் உங்களை இதுவரை ஆட்டிப் படைத்த மோகினித் தெய்வம்...?"

"அதோ!" என்று சொல்லிப் பெட்டியிலிருந்த குதிரைப் பந்தய குறிப்புப் புத்தகங்களை எடுத்து வெளியே போட்டான். இந்த நண்பர்களோடு ஆடும் சீட்டாட்டத்திற்குத்தான் அப்பொழுதெல்லாம் இரவில் உன்னைப் பிரிந்து சென்றது. வாழ்க்கையை ஒரு சூதாட்டமாகக் கருதினேன். உன் திருமணத்தையும் ஒரு சூதாட்டமாகக் கருதினேன். என் வாழ்வே ஒரு சூதாட்டம். நீ அதில் வைக்கப்படுகின்ற காயாக அமைந்தாய்."

அவளைப் பிரிந்து அவன் சென்ற கடந்த காலத்தின் சில இரவுகள் அவள் கவனத்திற்கு வந்தன. தன்னிடம் அவர் கேட்ட பொன் சரடும், அதைக் கழற்றிக் கொடுத்த காட்சியும் கவனத்திற்கு வந்தன. இருந்தாலும் மாணிக்கம் சொன்ன மோகினித் தெய்வம் யார்? கீழே வீட்டுக்கார அம்மாள் அறிமுகப்படுத்திய சினிமா நட்சத்திரம் யாராக இருக்கக் கூடும்? என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவளை அமைதி கொள்ளாமல் தடுத்தது.

"என்னிடம் நீங்கள் இன்னும் மறைக்கப்பார்க்கிறீர்கள். நீங்கள் தொடர்பு கொண்ட அந்த மோகினித் தெய்வம்."

"அவள் பெண் தெய்வம். நீ கேட்பது மோகினித் தெய்வம். அந்தப் பெண் தெய்வத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதோ மேஜைமேல் இருக்கிறதே, அந்தக் கடிதத்தைப் படி. அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

"இந்தக் குப்பைப் புத்தகங்களை அடுப்புப் பற்றவை" என்று குதிரைப் பந்தயப் புத்தகங்களை எடுத்துக் கொடுத்து உடன் எரித்தான். அந்தப் பழைய வாழ்வு கருகிச் சாம்பலாகியது.

காய்ச்சிய காப்பியைக் கொண்டுவந்து வைத்தாள்.

கீழே இருக்கும் வீட்டுக்காரர் மேல் மாடிக்கு ஒரு வேலைக்காரப் பையன் மூலம் கொடுத்தனுப்பிய பாலை ஊற்றிக் கொடுத்தாள். அவன் அதைக் குடித்துக்கொண்டு ஆறுவதற்காக அந்தக் குவளையை மேஜைமேல் வைத்தான். அதில் அந்தக் குளிரில் புகை மென்மையாக வந்து கொண்டிருந்தது.

மேஜை மேல் இருந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தான்.

"படித்துக்கொள். நான் தடை சொல்லவில்லை."

**அன்புமிக்க நண்பர் அவர்களுக்கு,**

அன்றையதினம் நான் திடீரென்று உங்கள் வீட்டிலிருந்து சொல்லாமல் வந்து விட்டது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். நான் அங்கு அடைந்த விழிப்பின் காரணமாகத் தான் அந்த இடத்தை விட்டு வந்துவிட்டது.

நான் உங்களை மனமாரக் காதலித்தேன். உங்கள் அழகில் ஈடுபட்டேன். உங்கள் அழகு என்னைக் கவர்ந்தது, அதை நான் மறுக்கவில்லை. அதைப் போலவே நீங்களும் என்னைக் கண்டு கவர்ச்சி கொண்டீர்கள் என்பதை நீங்கள் மறுக்க முடியாது.

நான் உங்களிடத்தில் முதலில் கொண்ட பரிவு பிறகு காதலாக மாறியது. ஆனால் நீங்கள் ஒரு நோக்கும் இல்லாமல் பழகிப் பிறகு ஒரு நோக்கத்தோடு என்னைப் பயன்படுத்த நினைத்தீர்கள். அது தவறு என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நான் உங்களைத் திருமணம் செய்து கொள்ளவே விரும்பினேன். காதல் கனிந்து மணம் எனும் கட்டால் சிறப்புறுவோம் என்று கனவு கண்டேன். ஆனால் உங்கள் அறையில் இருந்த படம் என்னிரண்டு கண்களையும் திறந்து விட்டது. நான் செல்லும் பாதை தவறானது என்பதை உணர்த்தியது.

அழகு, நிறை இரண்டும் பெண்களின் இரண்டு கண்கள். என் வெளித் தோற்றத்தை மட்டும் தான் உங்களால் காண முடிந்தது. என் உள்ளத்தையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் உங்களுக்கு இக் கடிதம் வரைகிறேன்.

பெண்கள் உங்கள் சூதாட்டத்தின் கருவிகள் அல்ல. உண்மையில் உங்களோடு பழகிய எனக்கு ஏதேனும் நன்மை செய்யவேண்டும் என்று நினைப்பீர்களானால் உங்கள் மனைவியை அழைத்து வந்து செம்மையாக வாழ்க்கை நடத்துங்கள். அதுவே நீங்கள் என்னிடம் வைத்துள்ள அன்பிற்கு அறிகுறியாகக் கருதுவேன்.

பெண்கள் உரிமையாக வாழ வேண்டும் என்பதுதான் என் குறிக்கோள். தொழில் செய்தாலும் சரி, நீங்கள் சொல்வது போல் நடிகைத் தொழிலுக்கு நான் சென்றாலும் சரி, நான் வாழ்க்கையில் தவற மாட்டேன் என்பதை உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். மறுபடியும் உங்களைச் சந்திக்க விரும்பவில்லை. அதனாலேயே நான் வேலையை இராஜிநாமா செய்து விட்டேன்.

முறிந்து விட்ட காதலால் நான் மனம் முறியவில்லை. வாழ்க்கை, அனுபவத்தின் அடிப்படைமீதுதான் அமைவது. உங்கள் வாழ்வைச் செம்மையாக அமைத்துக் கொண்டால் அதுவே என்னோடு பழகிய அனுபவத்தின் பயனாகும் என்று கருதுகிறேன்.

இப்படிக்கு: உண்மையுள்ள

**'சாரதா'**

“ஆம், அவள் பெயர் சாரதாதான். அவளைக் கண்டது வெறும் காட்சிதான். அதைப்பற்றி உலகம் தெரிந்து கொண்டதும் கேள்விதான். பழகித் தெரிந்து கொண்டது தான் உண்மை” என்று விளக்கம் கூறி முடித்தான்.

□